உங்களுக்குத் தமிழ் தெரியுமா? ஆசிரியரின் உதவி இல்லாமல் பள்ளியிலோ கல்லூரியிலோ சேராமல் கன்னடம் கற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா? அதற்கென ஒரு புத்தகம் இதோ இருக்கிறது. தமிழ் தெரிந்தவர்கள் தனக்கு ஓய்வு கிடைக்கும்போது தமிழ் மூலம் கன்னடம் கற்பதற்கெனச் சிறப்பாக உருவாக்கப்பட்ட புத்தகம் இது. இந்தப் புத்தகத்தில் இடம்பெறும் பாடங்கள் எளிமையானவை; எளிதாகப் புரியக்கூடியவை; அறிவியல் முறைப்படி நிரல்படுத்தப்பட்டவை. அருமுயற்சி எதுவுமின்றிக் கன்னடத்தில் பேசவும் எழுதவும் வாசிக்கவும் துணைபுரியும் நூல் இது. இது முழுக்க முழுக்க ஒரு சுய போதினி. உங்கள் கருத்துப் பரிமாற்றத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் பாடங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

**கன்னடம்**
**ஒரு சுய போதினி**

கன்னடம் ஒரு சுய போதினி

# கன்னடம்
## ஒரு சுய போதினி



ಕನ್ನಡ ಅಭಿವೃದ್ಧಿ ಪ್ರಾಧಿಕಾರ
ಬೆಂಗಳೂರು

# கன்னடம் : ஒரு சுயபோதினி

ஆங்கில மூலம் : லிங்கதேவரு ஹளெமனெ

மொழிபெயர்ப்பு : பேரா. நஞ்சுண்டன்
புள்ளியியல் துறை
பெங்களூர்ப் பல்கலைக்கழகம்

கர்நாடக அரசு
கன்னட வளர்ச்சி ஆணையம்
பெங்களூர்

**Kannadam : Oru Suya Bodhini :** Tamil Translation of the Original 'Kannada : A Self Instructional Course' by Lingadevaru Halemane, C.I.I.L., Mysore. Translation by Prof. Nanjundan, Dept. of Statastics, Bangalore University ; Published by Kannada Development Authority, Bangalore.

**Pages :** xvi + 188

**First Edition :** 2003

© Author

**Price : Rs. 40/-**

*Authorised Distributor*
**Kannda Pustaka Pradhikara**
(Kannada Book Authority)
Pampa Mahakavi Road,
Chamarajapet, Bangalore - 560 018.

*Printer :*
**Sri Rajendra Printers & Publishers**
Behind Evening Bazar, Shivarampet, Mysore - 570 001. ☎ : 2476019

# முன்னுரை

ஒரு மொழியைக் கற்பதிலுள்ள அடிப்படைத் திறன்களான பேசுதல், படித்தல், மற்றும் எழுதுதல் ஆகியவற்றைக் கற்கப் பயன்படும் வகையில் இந்தச் சுயபோதினி எழுதப்பட்டுள்ளது. இது தமிழறிந்த வயது வந்தோர் கன்னடம் கற்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுயபோதினியை அடிப்படையாக வைத்துக்கொண்டு இதில் கொடுத்துள்ள மூல வாக்கிய அமைப்புகள் மற்றும் சொற்களின் உதவியால் கன்னடம் கற்பவர்கள் புதுப் புது வாக்கியங்களைக் கட்டமைப்பார்கள் என்று நம்புகிறேன். அதைப் போலவே, இதிலுள்ள உரையாடல்களின் அடிப்படையிலும் அவற்றின் உதவியாலும் எந்தவொரு சூழ்நிலையிலும் உள்ளூர் மொழியில் உரையாடக் கன்னடம் கற்பவர்களை இந்நூல் தயார்படுத்தும் என்றும் நம்புகிறேன்.

முடிந்த வரைக்கும் பாடங்கள் ஓர் ஒழுங்குமுறையோடு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இதில் எடுத்தாளப்பட்டுள்ள மொழியும் சூழ்நிலைகளும் தேர்ந்தெடுத்துத் தரவாரியாக வரிசைப்படுத்தும் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளன. உலகெங்கிலும் இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே மொழிகள் கற்பிக்கப் படுகின்றன. இங்குள்ள பாடங்கள் எளிமையிலிருந்து கடினமானதை நோக்கியும், தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும் படிப்பவர்களை இட்டுச் செல்லும் பொருளடக்கத்தைக் கொண்டுள்ளன. உரையாடல்கள் மற்றும் விளக்கங்கள் மூலம் மொழிப் பயிற்சியளிக்க இதில் முயற்சி செய்யப்பட்டுள்ளது. இங்கு அறிமுகப்படுத்த விருக்கிற வாக்கிய அமைப்புகள் ஒருவர் தினசரி வாழ்வில் எதிர்கொள்ளும் சூழல் களுக்கான பேச்சில் பயன்படும். அதோடு அவற்றின் விவரிப்புகள் கற்றுத்தரும் பாணியிலும் உள்ளன.

இந்தப் புத்தகத்தில் இரண்டு பாகங்கள் உள்ளன. முதல் பாகம் கன்னடச் சொற்களையும் வாக்கிய அமைப்புகளையும் அறிமுகப்படுத்துகிறது. இரண்டாம் பாகம் கன்னட எழுத்துகளைக் கற்றுத்தருகிறது.

முதல் பாகத்தில் 25 பாடங்கள் உள்ளன. இவை தரவாரியாக வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. இப்பாடங்களின் உரையாடல்களில் எடுத்தாளப்பட்டுள்ள மொழி தரமான கன்னடப் பேச்சு மொழி. பொதுவாகப் பெங்களூர் – மைசூர்ப் பகுதியில் பேசப்படும் கன்னடம் தரமான கன்னட வகையாகக் கருதப்படுகிறது. இதில் பேச்சு வழக்குக்கும் எழுத்து வழக்குக்கும் குறிப்பிடத்தகுந்த வேறுபாடு இல்லை. ஆனால் உச்சரிப்பு அளவில் சில வேறுபாடுகளைக் காணலாம். எடுத்துக்காட்டாக,

பேசும்போது சொல்லின் இரண்டாம் எழுத்தின் ஒலி குறைவது துலக்கமாகத் தெரிகிறது. இந்தப் புத்தகத்தில் ஒரு சில இடங்களில் இரண்டு வழக்குகளும் கலந்திருப்பதைக் காணலாம்.

ஒவ்வொரு பாடத்திலும் ஐந்து பகுதிகள் உள்ளன. அவை, (1) உரையாடல்/விளக்கம், (2) மாதிரிப் பயிற்சி, (3) குறிப்புகள், (4) பயிற்சி, (5) சொற்களஞ்சியம். ஒவ்வொரு பாடமும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்குப் பொருத்தமான வார்த்தைகளையும் வாக்கியங்களையும் உள்ளடக்கிய ஓர் உரையாடலைக் கொண்டுள்ளது. இப்புத்தகத்தில் பெரும்பாலான பாடங்கள் உரையாடல் வடிவில் அமைந்திருப்பதற்கான காரணம் அவை கற்பவர்களிடம் 'தூண்டல் - எதிர்வினை' பாங்கைத் தோற்றுவிக்கும் என்பதே. இந்த நூலைக் கற்பவர்கள் உரையாடல்களில் இடம்பெறும் பாத்திரங்களின் இடத்தில் தங்களை இருத்தி அதே போன்ற உரையாடல்களை நடத்த முயற்சிக்க வேண்டும். இந்நூலின் கடைசி நான்கு பாடங்கள் விவரணை வகையில் அமைந்துள்ளன. அவைகளை வாய்விட்டுப் படிக்கும் பாடங்களாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இங்குள்ள பாடங்கள் தினசரி வாழ்வில் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளையும் கர்நாடகத்தின் பண்பாட்டுத் தகவல்களையும் பொருளடக்கமாகக் கொண்டுள்ளன. முதல் பத்துப் பாடங்கள் தமிழ் எழுத்துகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

பாடங்களைத் தொடங்குவதற்கு முன்பாக உச்சரிப்புக் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பதினொன்றாம் பாடத்திலிருந்து பாடங்கள் கன்னட மொழியிலும் குறிப்புகளும் பயிற்சிகளும் கன்னடம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் அமைந்துள்ளன. இப்புத்தகத்தைக் கற்பவர்கள் முதல் பத்துப் பாடங்களில் உள்ள வாக்கிய அமைப்புகளைக் கற்கும் அதே நேரத்தில் கன்னட எழுத்துகளைப் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். பாடங்கள் மற்றும் மாதிரிப் பயிற்சிகளின் தமிழாக்கங்களும் தரப்பட்டுள்ளன.

பயிற்சிகள் அந்தப் பாடங்களில் அறிமுகப்படுத்தப்படும் வாக்கிய அமைப்புகளை வெவ்வேறு சூழல்களுக்குத் தகுந்தாற்போல் மீண்டும் பயன்படுத்த வாய்ப்பளிக்கின்றன. வாக்கிய அமைப்புகளுக்குத் தகுந்தபடி மாதிரிப் பயிற்சிகளுக்கும் பயிற்சிகளுக்கும் சிறு வேறுபாடுகள் இருக்கும். கற்பவர்கள் தாங்களே வாக்கிய அமைப்புகளைக் கட்டமைக்கும் பழக்கத்தை உண்டாக்கும் நோக்கில் மாதிரிப் பயிற்சிகள் அமைந்துள்ளன. இன்னும் விளக்கமாகச் சொல்வதென்றால், அவை தீவிரப் பயிற்சியின் மூலம் தன்னிச்சையான எதிர்வினையைத் தூண்டும் முறையில் அமைந்துள்ளன. அது மட்டுமல்லாமல், தொடர்புடைய வாக்கிய அமைப்புகளுக்கு இடையிலுள்ள ஒப்புமைகளை அறிந்துகொள்ளவும் மாதிரிப் பயிற்சிகள் உதவுகின்றன.



இப்புத்தகத்தில் உள்ள பயிற்சிகள் அவற்றின் உண்மையான அர்த்தத்தில் பயன்படு செயல்பாடுகள். ஒரு பாடத்தின் பயிற்சியில் அப்பாடத்தில் அறிமுகமாகாத புதிய வாக்கிய அமைப்புகள் இல்லை. கற்பவர்கள் ஏற்கனவே கற்றுள்ள வாக்கிய அமைப்புகளைச் சரியாகக் கற்றுள்ளார்களா என்பதைச் சோதித்துக்கொள்ள இப்பயிற்சிகள் உதவுகின்றன.

சொற்களஞ்சியத்தில் அந்தந்தப் பாடத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சொற்களும் அவற்றின் தமிழ்ப் பொருள்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இது இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது. பாடத்தில் எடுத்தாளப்பட்டுள்ள சொற்களின் ஒரு பட்டியல். அதோடு மாதிரிப் பயிற்சியில் பயன்படுத்தப்பட்ட சொற்களின் இன்னொரு பட்டியல். முதலாவது சொற்களஞ்சியம் என்றும் இரண்டாவது துணைச் சொற்களஞ்சியம் என்றும் அழைக்கப்படுகின்றன. இவற்றில் சொற்கள் கன்னட எழுத்து வரிசைப்படி கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்புகள் என்னும் பகுதியில் அப்பாடத்தில் அறிமுகமாகும் வாக்கிய அமைப்புகளின் இலக்கணத்தைச் சுருக்கமாகத் தருகின்றன. கூடுமானவரைக்கும் மொழியியல் சார்ந்த கடினமான சொற்களைப் பயன்படுத்தாமல் எடுத்துக்காட்டுகளின் மூலம் இக்குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் பாகத்தில் கன்னட எழுத்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இங்குக் 'கன்னட அரிச்சுவடி'யை மரபான முறையில் அறிமுகப்படுத்தவில்லை. மாறாக, எழுத்துகளின் வடிவ ஒற்றுமை, வேற்றுமைகளின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால், கற்பவர்கள் எழுத்துகளைத் தனித்தனியாகவும் பிற எழுத்துகளுடன் ஒப்பிட்டும் விரைவாகக் கற்றுக்கொள்வார்கள். ஓர் உயிர் எழுத்து அறிமுகமாகும்போதே, மெய்யெழுத்துகளுடன் அது எப்படி இணைகிறது என்பதும் கற்பிக்கப்படுகிறது. கூட்டெழுத்துகளும் அவற்றின் வடிவ ஒற்றுமையின் அடிப்படையில் அறிமுகமாகின்றன. கற்பவர்களுக்கு உதவும் வகையில் அடிப்படை எழுத்துகளின் ஒலிக்குறிப்புகளும் தமிழில் தரப்பட்டுள்ளன. இந்தப் புத்தகத்தின் மூலம் கன்னடம் கற்பவர்கள் ஒரே சமயத்தில் பேச, படிக்க, எழுதப் பயிற்சி செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

இதுவரை கூறிய விளக்கங்கள் வழிகாட்டுதல்கள் மட்டுமே. உண்மையான கற்றல் என்பது கற்பவரின் நோக்கம், தேவை ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. ஒரு மொழியைக் கற்பதைக் கருத்தார்ந்த தீவிரச் செயல்பாடாகக் கருதக்கூடாது. அதை ஒரு மகிழ்வூட்டும் விளையாட்டாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு புதிய வார்த்தையையும் வாக்கியத்தையும் விளையாட்டுப் பொருள்களாகக் கையாள வேண்டும். அவற்றைத் திறந்த மனத்தோடு அனுகுங்கள். அதல்லாமல், கன்னடம் பேசுகிறவர்கள், சுற்றியுள்ள சூழல் குறித்துக் கன்னடம் கற்பவர்கள் கவனத்துடன்

இருக்க வேண்டும். ஒரு மொழியைக் கற்க வேண்டுமானால் எந்தக் கூச்சமும் இல்லாமல் அதைப் பேச வேண்டும். கன்னடம் பேசுகிறவர்களுடன் பேசுங்கள். அவர்கள் உங்களது தவறான உச்சரிப்பு, தவறான வாக்கிய அமைப்பு ஆகியவற்றைக் கேட்டுச் சிரிக்கலாம். நீங்களும் அவர்களோடு சேர்ந்து சிரித்துவிடுங்கள். ஆனால், மனம் தளராதீர்கள். அவர்களோடு பேசும்போது என்ன தவறு செய்தீர்கள் என்பதை இந்தப் புத்தகத்தின் உதவியாலும் கன்னடம் அறிந்தவர்களின் உதவியாலும் தெரிந்துகொள்ளுங்கள். தவறைத் திருத்திக்கொள்ளுங்கள்.

இந்தப் புத்தகத்தின் மகத்துவத்தை அறிந்து இதன் மூலப் பிரதியை மறு அச்சாக்கம் செய்வதோடு இதை வெவ்வேறு மொழிகளுக்கு மொழிபெயர்க்கும் திட்டத்தைத் தொடங்கிய கன்னட வளர்ச்சி ஆணையத்தின் முன்னாள் தலைவர் பேரா. பரகூரு ராமச்சந்திரப்ப அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி. இந்நூலை வெவ்வேறு மொழிகளுக்கு மொழியாக்கம் செய்யும் நண்பர்களுக்கும் நன்றி. இத்திட்டம் தொடங்கியதிலிருந்து நூல்கள் அச்சாகும் வரை அலுவலகம் சார்ந்த பணிகளை ஆர்வத்தோடு ஒருங்கிணைத்தவர் கன்னட வளர்ச்சி ஆணையத்தின் செயலர் திரு. ஏ.வி. ப்ரஸன்ன. இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, நூல்களின் வெளியீட்டுக்கு ஏற்பாடு செய்தவர் கன்னட வளர்ச்சி ஆணையத்தின் தற்போதைய தலைவர் திரு. பி.எம். இதினப்ப. இவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

கன்னடம் கற்கும் உங்கள் முயற்சிக்கு இப்புத்தகம் உதவும் என்று நம்புகிறேன்.

– லிங்கதேவரு ஹளெமனெ

## உங்களோடு . . .

பல்வேறு காரணங்களால் மக்கள் தாம் பிறந்து வளர்ந்த இடங்களிலிருந்து வேறு இடங்களுக்குக் குடிபெயர்வது உலகெங்கிலும் காலங்காலமாக நடைபெற்று வருகிறது. ஊர், மாநிலம், நாடு, கண்டம் என்று பல எல்லைகளையும் கடந்து குடிபெயர்வு நிகழ்கிறது. குடிபெயர்வின் காரணமாகப் புதிய மொழியை எதிர்கொள்ள நேரிடுகிறது. குடியேறிய இடத்தில் புழங்கும் மொழியைக் கற்க வேண்டியது அவசியம். குடியேறும் இடத்தைச் சார்ந்த மக்கள் பேசும் மொழியைக் கற்காமல் அவர்கள் பண்பாட்டை முழுமையாக அறியமுடியாது. மேலும், புதிய மொழிகளைக் கற்றால் நம் அறிவு மட்டுமல்ல மனமும் விசாலமடையும். ஒரு புதிய மொழியைக் கற்பது சுவாரசியமான அனுபவமும்கூட. வேறொரு மொழியைக் கற்கும்போதுதான் தாய்மொழி அறிவு ஆழப்படும்.

அண்டை மாநிலங்களிலிருந்து மட்டுமல்லாமல் இந்தியா முழுவதிலிருந்தும் கர்நாடகத்திற்கு - குறிப்பாகப் பெங்களூருக்கு - பலதரப்பட்ட மக்கள் வசிக்க வருகிறார்கள். கூலித் தொழிலாளர்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவோர், வணிகர்கள் எனப் பலரும் தமிழகத்திலிருந்து கர்நாடகத்திற்குக் குடியேறுகிறார்கள். கணினி யுகத்தில் பெங்களூருக்குக் குடியேறுவோர் எண்ணிக்கை அதிகம். அவ்வாறு குடியேறுகிற அனைவரும் கன்னட மொழியைக் கற்பது அவசியம். அவர்களுக்காகவே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

பேராசிரியர் லிங்கதேவரு ஹளெமனெ அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள கன்னடம் கற்பிக்கும் நூலை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் படைக்கப் பட்டுள்ளது. இந்நூல் வெறும் மொழியாக்கம் மட்டுமல்ல. பேராசிரியர் ஹளெமனெ அவர்கள் ஆங்கில மொழியில் தந்துள்ள இலக்கண விளக்கங்களை வெறுமனே மொழியாக்கம் செய்யாமல், உயர்நிலைப் பள்ளி அளவில் தமிழ் இலக்கணம் படித்தோரை மனத்தில் கொண்டு தமிழ்க் கலைச்சொற்களால் குறிப்புகளை எழுதியுள்ளேன்.

இந்நூல் கன்னட மொழியைக் கற்பிக்கும் நோக்கத்தில் எழுதப்பட்டுள்ளதால், கன்னடத்திற்கும் தமிழுக்கும் பொதுவான சொற்களுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளேன். எடுத்துக்காட்டாக, ‘நண்பன்’ என்பதற்குப் பதில் ‘ஸ்னேகிதன்’ என்பதை எடுத்தாண்டுள்ளேன். இந்நூலிலுள்ள சில தமிழ் வாக்கியங்களின் அமைப்பு முதல் வாசிப்பில் விசித்திரமாகத் தோன்றலாம். அவை கன்னட வாக்கிய அமைப்புகளைக் கற்றுத்தரும் நோக்கில் எழுதப்பட்டவை. இரண்டாம், மூன்றாம் வாசிப்புகளில் அவை எளிதாகத் தோன்றும்.

இந்நூலை எழுதும் வாய்ப்படை எனக்களித்தவர் கன்னட வளர்ச்சி ஆணையத்தின் தலைவர் பேராசிரியர் பரகூரு ராமச்சந்திரப்ப. இந்தப் புத்தகத்தை எழுத என்னை ஊக்கப்படுத்தி, அவ்வப்போது எழுந்த ஐயங்களைத் தீர்த்துவைத்தவர் மொழியியல் அறிஞர் லிங்கதேவரு ஹளெமனெ. இவர்கள் இருவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

கன்னட வளர்ச்சி ஆணையத்தின் செயலர் திரு. பிரஸன்ன நிர்வாகம் சார்ந்த பல்வேறு உதவிகளையும் இப்புத்தகம் எழுதப்பட்டபோது திறம்படச் செய்துகொடுத்தார். இந்நூலின் முக்கியத்துவத்தையும் தேவையையும் உணர்ந்து, இதை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டவர் கன்னட வளர்ச்சி ஆணையத்தின் தற்போதைய தலைவர் திரு. பி. எம். இதினப்ப. இப்புத்தகத்திலுள்ள முதல் சில பாடங்களைப் படித்துப் பயனுள்ள யோசனைகளைத் தெரிவித்தவர் என் பள்ளி ஆசிரியர் திரு. எம். பழனிச்சாமி. மெய்ப்புத் திருத்துவதில் உதவியவர்கள் இளம் தோழர்கள் கனகராஜ், கோவிந்தராஜ். கன்னட ஒளியச்சு செய்தவர் திரு. நாகராஜ். இந்நூல் முழுவதையும் வடிவமைத்தவர் கீழ்வேளூர் பா. ராமநாதன். இவர்கள் அனைவருக்கும் என் நன்றி.

நூலின் முதல் படிவத்தைச் செம்மைப்படுத்த உதவிய சென்னைப் பல்கலைக்கழகக் கன்னடப் பேராசிரியர் ராமசாமி அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

கன்னட மொழியைத் தமிழ் மூலம் கற்பிக்கும் முழுநிறைவான நூலை உருவாக்குவதில் முதல் அடி இது. இதன் மூலம் கன்னடம் கற்கும் உங்களுக்கு இதைச் செம்மைப்படுத்தப் பல யோசனைகள் தோன்றலாம். அவற்றை அறிந்துகொள்ள ஆவலோடு காத்திருக்கிறேன். உங்கள் யோசனைகளைத் தெரிவிக்க வேண்டிய முகவரி: Nanjundan, Department of Statistics, Bangalore University, Jnanabharathi, Bangalore 560 056. மின்னஞ்சல் முகவரி: nanzu@rediffmail.com.

கன்னடம் - தமிழ் நட்புறவுக்கான என் சிறு பங்களிப்பாக இந்நூலைக் கருதுகிறேன். கன்னட மக்களுடனான நட்பு என்றதும் என் நினைவுக்கு வரும் பேராசிரியர் ஆர். எம். ரங்கநாத், திரு. நிஜகுணய்ய இருவருக்கும் இந்நூலை அர்ப்பணிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தோழமையுடன்,

**– நஞ்சுண்டன்**

## தலைவர் உரை

கர்நாடகத்தில் நிரந்தரமாக நிலைகொண்டுள்ள வெவ்வேறு தாய்மொழிகளைக் கொண்ட மக்கள் கன்னடத்தைக் கற்று, கன்னடர்களோடு கலந்து பழக வேண்டும் என்பது நம் ஆசை. கன்னட மண்ணிலிருந்துகொண்டு, இங்குள்ள எல்லா வசதிகளையும் அனுபவித்துக்கொண்டு கன்னட மொழியைப் பேசாத, எழுதாத, படிக்காத மக்கள் கன்னடர்களின் அபிமானத்தைப் பெறுவது சாத்தியமில்லை. அதனால், அப்படிப்பட்டவர்கள் எல்லோரும் எளிதாகக் கன்னடத்தைக் கற்க 'கன்னடச் சுயபோதினி'களை தயார்செய்து, குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கன்னட வளர்ச்சி ஆணையம் தீர்மானித்தது.

முதலாவதாகப் பேராசிரியர் லிங்கதேவரு ஹளெமனெ அவர்களது ஆங்கிலப் புத்தகத்தைத் தேர்ந்தெடுத்து, அதை மலையாளம், மராத்தி, தமிழ், மற்றும் தெலுங்கு மொழிகளுக்கு மொழிபெயர்க்க ஏற்பாடாயிற்று. இந்த மொழியாக்க வேலையை முறையே முனைவர் மோஹன் குண்டார், பேராசிரியர் டி. எஸ். சௌகலெ, பேராசிரியர் நஞ்சுண்டன், மற்றும் முனைவர் மோஹன் ஆகியோர் செய்து தந்துள்ளார்கள். பேராசிரியர் லிங்கதேவரு ஹளெமனெவுக்கும் எல்லா மொழிபெயர்ப்பாளர்களுக்கும் கன்னட வளர்ச்சி ஆணையத்தின் நன்றி.

கர்நாடகத்தில் நிலைகொண்டுள்ள வேற்று மொழிக்காரர்கள் கன்னட மொழியைக் கற்று, கன்னடர்களோடு ஒன்றாகக் கலந்து, கன்னட நாடு – மொழியின் மீது அபிமானம் கொண்டு பெரும்பான்மையினரோடு கலந்து பழக இப்புத்தகங்கள் பயன்படுமென்று நம்புகிறேன்.

இப்புத்தகங்களின் வெளியீடு தொடர்பாக ஆலோசித்து, இத்திட்டத்தைத் தொடங்கிய கன்னட வளர்ச்சி ஆணையத்தின் முன்னாள் தலைவரான பேராசிரியர் பரகூரு ராமச்சந்திரப்ப அவர்களுக்கு என் பாராட்டுகள். இத்திட்டத்தில் உதவி புரிந்த கன்னட வளர்ச்சி ஆணையத்தின் செயலரான திரு. ஏ. வி. ப்ரஸன்ன, என் நெருங்கிய செயலரான திரு. கே. முகுந்தன், மற்றும் ஆணையத்தின் எல்லா ஊழியர்களுக்கும் என் வாழ்த்துகள். இப்புத்தகங்களை அச்சாக்கம் செய்வோருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இவை கன்னட நாட்டின் வேற்றுமொழிக்காரர்களுக்கு உதவியாயிருக்கும் என்று நம்புகிறேன்.

*பெங்களூர் – 560 001.*

*22 ஜூலை 2003.*

**பி. எம். இதினப்ப**

## கன்னட அபிவிருத்தி ப்ராதிகார, பெங்களூர்
## (கன்னட வளர்ச்சி ஆணையம், பெங்களூர்)

1. திரு. பி. எம். இதினப்ப, தலைவர்

### உறுப்பினர்கள்

2. திரு. சி. ஸ்ரீனிவாசராஜு
3. திரு. எ. கே. ராமேஷ்வர
4. திரு. தொட்டரங்கேகௌட
5. திரு. ப்ரதீப் குமார் கல்கூர்
6. திருமதி. அந்தனூரு ஷோப
7. திருமதி. சுகன்ய மாருதி
8. திரு. பி. ஆர். ஸ்ரீனிவாசமூர்த்தி
9. திரு. ஏ. வி. ப்ரஸன்ன, செயலர்

## உச்சரிப்புக் குறிப்புகள்

தமிழும் கன்னடமும் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவையானாலும், கன்னடத்தில் வரிவடிவங்கள் அதிகம். தமிழில் க, ச, ட, த, ப ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு வரிவடிவம். முன்னும் பின்னும் அமையும் எழுத்துகளைப் பொருத்து இவற்றின் உச்சரிப்பு அமைகிறது. ஆனால், கன்னடத்தில் க, ச, ட, த, ப வரிசையில் ஒவ்வொன்றுக்கும் நான்கு வரிவடிவங்கள். எனவே, கன்னடத்தில் எழுத்துகளின் உச்சரிப்பை அவற்றின் வரிவடிவங்களே தீர்மானிக்கின்றன. இந்த எழுத்துகளை உச்சரிக்க வேண்டிய முறையும் இந்நூலில் அவை எவ்வாறு குறிக்கப்பட்டுள்ளன என்பதும் கீழே விளக்கப்பட்டுள்ளன.

க கட்டடம் என்பதில் உள்ள க

க$^{2}$ க் + ஹ

க$^{3}$ கங்கை என்பதில் உள்ள க

க$^{4}$ க்$^{3}$ + ஹ

ச சக்கரம் என்பதில் உள்ள ச

ச$^{2}$ ச் + ஹ

ஜ$^{3}$ தமிழில் உச்சரிப்பதுபோலவே இதுவும்

ஜ$^{4}$ ஜ்$^{3}$ + ஹ

ட பட்டம் என்பதில் உள்ள ட

ட$^{2}$ ட் + ஹ

ட$^{3}$ மடம் என்பதில் உள்ள ட

ட$^{4}$ ட்$^{3}$ + ஹ

த தந்தை என்பதில் உள்ள த

த$^{2}$ த் + ஹ

த$^{3}$ தர்மம் என்பதில் உள்ள த அல்லது இந்த என்பதிலுள்ள த

த$^{4}$ த்$^{3}$ + ஹ

ப பக்கம் என்பதில் உள்ள ப

ப$^{2}$ ப் + ஹ

ப$^{3}$ இன்பம் என்பதில் உள்ள ப

ப$^{4}$ ப்$^{3}$ + ஹ.

தமிழில் உள்ளதுபோலவே கன்னடத்திலும் டண்ணகரம் (ண), தந்நகரம் (ந) உண்டு. ஆனால், கன்னடத்தில் றகரமும் இல்லை; றன்னகரமும் (ன) இல்லை. ஆனால் இந்நூலில் தந்நகரம் றன்னகரம் இரண்டையும் பயன்படுத்திக் கன்னட வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளன. 'முந்தெ', 'முன்தெ' இரண்டும் கன்னடத்தில் ஒன்றே. பழங்கன்னடத்தில் சிறப்பு ழகரம் இருந்தது. ஆனால், தற்காலக் கன்னடத்தில் சிறப்பு ழகரம் இல்லை.

கன்னட 'ஸ' தமிழின் சரி என்பதில் உள்ள 'ச'வுக்கு நிகர். தமிழில் கிரந்த எழுத்தான 'ஷ'வுக்கு ஒரே வரிவடிவம். ஆனால், கன்னடத்தில் 'ஷ'வுக்கு இரண்டு வரிவடிவங்கள். இந்நூலில் 'ஷ' என்று குறிக்கப்பட்டுள்ள எழுத்தை உச்சரிக்கும்போது 'ச'வை உச்சரிக்கப் பொருத்தும் முறையில் நாக்கை வைத்து ஒலி எழுப்ப வேண்டும். அதேபோல 'ஷ$^{2}$'வை உச்சரிக்கும்போது 'ட'வை உச்சரிக்கப் பொருத்தும் முறையில் நாக்கை வைத்து ஒலி எழுப்ப வேண்டும்.

# பொருளடக்கம்


| பாட எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | மாற்றுப் பெயர்ச்சொற்கள் | 1 |
| 2. | மாற்றுப் பெயர்ச்சொற்களின் அடிப்படையில் கேள்வி, பதில்கள் | 5 |
| 3. | பெயர்ச்சொற்களின் உடமை/ உரிமைப் பொருள் வேற்றுமை | 12 |
| 4. | பெயரடைகள் | 18 |
| 5. | பெயர்ச்சொற்கள், மாற்றுப் பெயர்ச்சொற்கள், பெயரடைகளின் வினா வடிவங்கள் | 23 |
| 6. | நான்காம் வேற்றுமை, எண்ணுப் பெயர்கள் | 32 |
| 7. | எண்ணுப் பெயரடைகள், உயர்திணைப் பன்மைகள் | 41 |
| 8. | வண்ணப் பெயர்கள், குறிப்பு வினைமுற்றுகள் | 49 |
| 9. | இறந்தகாலம் அல்லாத வினை வடிவம் | 56 |
| 10. | தனி வினைச்சொற்கள் | 62 |
| 11. | ஒப்புமை உருபு மற்றும் உடன்பாட்டு, எதிர்மறை வடிவங்கள் | 70 |
| 12. | தொழிற்பெயர்கள் | 76 |
| 13. | செய்வினை, செயப்பாட்டுவினைகள் | 84 |
| 14. | இறந்தகால வினை வடிவங்கள் | 91 |
| 15. | அயற்கூற்று வாக்கியங்கள் | 99 |
| 16. | வினையெச்சங்கள் | 107 |
| 17. | தொடர்வினை வடிவங்கள் | 115 |
| 18. | முழுநிறைவினை வடிவங்கள் | 121 |
| 19. | பெயரெச்சங்களும் வினையாலணையும் பெயர்களும் | 127 |
| 20. | எளிய நிபந்தனை வடிவங்கள் | 141 |
| 21. | நிறைவடையாத நிபந்தனை வடிவங்கள் | 147 |
| 22. | ಕರ್ನಾಟಕ (வாசிப்புப் பயிற்சி) | 154 |
| 23. | ಕನ್ನಡ ಭಾಷೆ (வாசிப்புப் பயிற்சி) | 160 |
| 24. | ಮಾನ ತರುವ ಸಂಗತಿ ಅಲ್ಲ (வாசிப்புப் பயிற்சி) | 163 |
| 25. | ಬೇಕು ಬೇಡಗಳು (வாசிப்புப் பயிற்சி) | 166 |
| பாகம் 2 | கன்னட அரிச்சுவடி | 169 |

# கன்னடம்: ஒரு சுயபோதினி

# பாகம் 1

## பாடம் 1

**1. உரையாடல்**

| | |
|---|---|
| மனோஹர்: நமஸ்கார ஸார். | வணக்கம் சார். |
| மஹாதே$^3$வ: நமஸ்கார. நீவு யாரு? | வணக்கம். நீங்கள் யார்? |
| மனோஹர்: நானு கன்னட$^3$ வித்$^3$யார்தி$^2$. | நான் கன்னட மாணவன் |
| மஹாதே$^3$வ: நிம்ம ஹெஸரு ஏனு? | உங்கள் பெயர் என்ன? |
| மனோஹர்: நன்ன ஹெஸரு மனோஹர். நீவு யாரு, ஸார்? | என் பெயர் மனோகர். நீங்கள் யார், சார்? |
| மஹாதே$^3$வ: நானு கன்னட$^3$ அத்$^3$யாபக. | நான் கன்னட ஆசிரியர். |
| மனோஹர்: நிம்ம ஹெஸரு ஏனு, ஸார்? | உங்கள் பெயர் என்ன, சார்? |
| மஹாதே$^3$வ: நன்ன ஹெஸரு மஹாதே$^3$வ. நிம்ம ராஜ்ய யாவுது$^3$? | என் பெயர் மகாதேவா. உங்கள் மாநிலம் எது? |
| மனோஹர்: நன்ன ராஜ்ய தமிளுநாடு$^3$. | என் மாநிலம் தமிழ்நாடு. |
| மஹாதே$^3$வ: நிம்ம மாத்ருப$^4$ாஷெ$^2$ யாவுது$^3$? | உங்கள் தாய்மொழி எது? |
| மனோஹர்: நன்ன மாத்ருப$^4$ாஷெ$^2$ தமிளு. இவரு யாரு, ஸார்? | என் தாய்மொழி தமிழ். இவர் யார், சார்? |
| மஹாதே$^3$வ: இவரு கன்னட$^3$ அத்$^3$யாபகி. | இவர் கன்னட ஆசிரியை. |
| மனோஹர்: இவர ஹெஸரு ஏனு, ஸார்? | இவர் பெயர் என்ன, சார்? |
| மஹாதே$^3$வ: இவர ஹெஸரு ஷீல. அவரு யாரு மனோஹர்? | இவர் பெயர் ஷீலா. அவர் யார், மனோஹர்? |
| மனோஹர்: அவரு ராபர்ட். நன்ன ஸ்னேஹிதரு. | அவர் ராபர்ட். என் சினேகிதர். |

**2. மாதிரிப் பயிற்சி**

| | | |
|---|---|---|
| 2.1 | நீவு யாரு? | நீங்கள் யார்? |
| | அவரு யாரு? | அவர் யார்? |
| | இவரு யாரு? | இவர் யார்? |
| 2.2 | நானு அத்$^4$யாபக. | நான் ஆசிரியர். |
| | அவரு வைத்$^3$ய. | அவர் மருத்துவர். |

| | | |
|---|---|---|
| | இவரு கு$^{3}$மாஸ்த. | இவர் குமாஸ்தா. |
| | அவரு அத்$^{4}$யாபகி. | அவர் ஆசிரியை. |
| | நானு வ்யாபாரி. | நான் வியாபாரி. |
| 2.3 | நிம்ம ஹெஸரு ஏனு? | உங்கள் பெயர் என்ன? |
| | அவர ஹெஸரு ஏனு? | அவர் பெயர் என்ன? |
| | இவர ஹெஸரு ஏனு? | இவர் பெயர் என்ன? |
| 2.4 | நன்ன ஹெஸரு மோஹன்? | என் பெயர் மோகன். |
| | அவர ஹெஸரு கமல. | அவர் பெயர் கமலா. |
| | இவர ஹெஸரு ராஜு. | இவர் பெயர் ராஜு. |
| 2.5 | அவர ஊரு யாவுது$^{3}$? | அவர் ஊர் எது? |
| | இவர ராஜ்ய யாவுது$^{3}$? | இவர் மாநிலம் எது? |
| | நிம்ம ஜில்லெ யாவுது$^{3}$? | உங்கள் மாவட்டம் எது? |
| 2.6 | நன்ன தே$^{3}$ஷ ப$^{4}$ாரத. | என் நாடு பாரதம். |
| | நன்ன ராஜ்ய கர்நாடக. | என் மாநிலம் கர்நாடகம். |
| | அவர ஊரு மைஸூரு. | அவர் ஊர் மைசூர். |
| | இவர ஜில்லெ தும்கூரு. | இவர் மாவட்டம் தும்கூர். |
| 2.7 | அவனு நன்ன ஸ்னேஹித. | அவன் என் சினேகிதன். |
| | அவளு நன்ன ஸ்னேஹிதி. | அவள் என் சினேகிதி. |

## 3. குறிப்புகள்

3.1 'நமஸ்கார' தமிழின் வணக்கம் என்பதற்கு நிகர்.

3.2 'அ' உடமைப் பொருளில் அமையும் வேற்றுமையின் உருபு. தமிழைப்போலக் கன்னட எழுத்து வழக்கில் 'அது$^{3}$' என்னும் வேற்றுமை உருபையும் 'உடைய' என்னும் சொல்லுருபையும் தவிர்த்துத் தொகைநிலையாக எழுதுவதில்லை. பேச்சு வழக்கில் தொகைநிலை உண்டு. இந்நூலில் தமிழில் எழுதும்போது குழப்பமில்லாத இடங்களில் பெரும்பாலும் தொகைநிலையாகவே எழுதப்பட்டுள்ளது. சில இடங்களில் விரிநிலையாகவும் எழுதப்பட்டுள்ளது.

3.2 'நானு', 'நீவு', 'அவரு', 'இவரு' என்பவை மூவிட மாற்றுப் பெயர்ச்சொற்கள். 'நான்', 'நீ', 'அவர்', 'இவர்' போன்றவை தமிழில் செயல்படுவதைப்போலவே கன்னடத்திலும் செயல்படுகின்றன.

## 4. பயிற்சி

4.1 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள தமிழ்ச் சொற்களுக்கு நிகரான கன்னடச் சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 ராஜா நன்ன . . . . . . . . . . (சினேகிதன்)



4.1.2 அவர . . . . . . . . . . . தமிளு. (தாய்மொழி)

4.1.3 . . . . . . . ஹெஸரு கமல. (என்)

4.1.4 அவர ராஜ்ய . . . . . . . ? (எது)

4.2 கீழ்க்கண்டவற்றில் கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

4.2.1 நிம்ம ஹெஸரு . . . . . . ?

4.2.2 அவர ஹெஸரு . . . . . . ?

4.2.3 நீவு . . . . . . ?

4.2.4 இவரு கன்னட$^{3}$ . . . . . . ?

4.2.5 நிம்ம ராஜ்ய . . . . . . . . . ?

4.3 'நானு' என்பது 'நன்ன' என மாறினால், கீழ்க்கண்டவை எவ்வாறு மாறும்?

4.3.1 நீவு

4.3.2 அவரு

4.3.3 இவரு

4.4 கீழ்க்கண்ட சொற்களை உங்கள் சொந்த வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக.

4.4.1 அத்$^{4}$யாபகி

4.4.2 ராஜ்ய

4.4.3 ஹெஸரு

4.4.4 நானு.

4.5 கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.5.1 நான் கன்னட மாணவன்.

4.5.2 கோபால் என் சினேகிதன்.

4.5.3 என் மாநிலம் தமிழ்நாடு.

4.5.4 அவள் பெயர் ஜெயா.

4.6 கீழ்க்கண்ட வினாக்களுக்குக் கன்னடத்தில் விடை எழுதுக.

4.6.1 நீவு யாரு?

4.6.2 நிம்ம ஹெஸரு ஏனு?

4.6.3 நிம்ம தே$^{3}$ஷ யாவுது$^{3}$?

4.6.4 நிம்ம ராஜ்ய யாவுது$^{3}$?

4.6.5 நிம்ம ஜில்லெ யாவுது$^{3}$?

4.6.6 நிம்ம ஊரு யாவுது$^{3}$?

4.6.7 நிம்ம மாத்ருப$^{4}$ாஷெ$^{2}$ யாவுது$^{3}$?

**5. சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| அத்$^{4}$யாபக | ஆசிரியர் |
| அத்$^{4}$யாபகி | ஆசிரியை |
| அவரு | அவர் |
| அவர | அவருடைய (அவரது) |
| இவரு | இவர் |
| இவர | இவருடைய (இவரது) |
| ஏனு | என்ன |
| நன்ன | என் (என்னுடைய, எனது) |
| நமஸ்கார | வணக்கம் |
| நானு | நான் |
| நிம்ம | உங்களுடைய (உங்களது) |
| நீவு | நீங்கள் |
| மாத்ருப$^{4}$ாஷெ$^{2}$ | தாய்மொழி |
| யாரு | யார் |
| யாவுது$^{3}$ | எது |
| ராஜ்ய | மாநிலம் |
| வித்$^{3}$யார்தி$^{2}$ | மாணவர் |
| ஸ்னேஹித | சினேகிதன் |
| ஹெஸரு | பெயர். |

**5. துணைச் சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| கு$^{3}$மாஸ்த | குமாஸ்தா, எழுத்தர் |
| ஜில்லெ | மாவட்டம் |
| தே$^{3}$ஷ | நாடு |
| அத்$^{4}$யாபகி | ஆசிரியை |
| வைத்$^{3}$ய | மருத்துவர் |
| வ்யாபாரி | வியாபாரி |
| ஸ்னேஹிதி | சினேகிதி. |



## பாடம் 2

**1.1 உரையாடல்**

| | |
|---|---|
| மனோஹர்: இது$^{3}$ ஏனு புஸ்தக? | இது என்ன புத்தகம்? |
| கே$^{3}$ாபால்: இது$^{3}$ காத$^{3}$ம்ப$^{3}$ரி. | இது நாவல். |
| மனோஹர்: இத$^{3}$ர ஹெஸரு ஏனு? | இதன் பெயர் என்ன? |
| கே$^{3}$ாபால்: இத$^{3}$ர ஹெஸரு 'சிரஸ்மரணெ'. | இதன் பெயர் 'சிரஸ்மரணெ'. |
| மனோஹர்: இது$^{3}$ யார காத$^{3}$ம்ப$^{3}$ரி? | இது யாருடைய நாவல்? |
| கே$^{3}$ாபால்: இது$^{3}$ நிரஞ்சன அவர காத$^{3}$ம்ப$^{3}$ரி. | இது நிரஞ்சன அவர்களுடைய நாவல். |
| மனோஹர்: இது$^{3}$ நின்ன புஸ்தகானா? | இது உன் புத்தகமா? |
| கே$^{3}$ாபால்: அல்ல. இது$^{3}$ நன்ன புஸ்தக அல்ல. இது$^{3}$ நன்ன ஸ்னேஹிதரு அஷோக் அவர புஸ்தக. | இல்லை. இது என் புத்தகம் அல்ல. இது என் சினேகிதர் அசோக் அவர்களுடைய புத்தகம். |
| மனோஹர்: அது$^{3}$ யார பென்னு? நின்ன பென்னா? | அது யாருடைய பேனா? உன் பேனாவா? |
| கே$^{3}$ாபால்: ஹவ்து$^{3}$. அது$^{3}$ நன்ன பென்னு. | ஆமாம். அது என் பேனா. |
| மனோஹர்: அத$^{3}$ர ஹெஸரு ஏனு? | அதன் பெயர் என்ன? |
| கே$^{3}$ாபால்: அத$^{3}$ர ஹெஸரு 'ஹீரோ'. | அதன் பெயர் 'ஹீரோ'. |

**1.2 உரையாடல்**

| | |
|---|---|
| மனோஹர்: நீனு யாரப்ப? | நீ யாருப்பா? |
| மோஹன்: நானு ஆனந்த்$^{3}$ அவர மக$^{3}$. | நான் ஆனந்த் அவர்களுடைய மகன். |
| மனோஹர்: நின்ன ஹெஸரு ஏனு? | உன் பெயர் என்ன? |
| மோஹன்: நன்ன ஹெஸரு மோஹன். | என் பெயர் மோஹன். |
| மனோஹர்: இவனு யாரு? நின்ன தம்மானா? | இவன் யார்? உன் தம்பியா? |
| மோஹன்: அல்ல. இவனு நன்ன தம்ம அல்ல. இவனு நன்ன அண்ண. | இல்லை. இவன் என் தம்பி அல்ல. இவன் என் அண்ணன். |
| மனோஹர்: இவன ஹெஸரு ஏனு? | இவன் பெயர் என்ன? |
| மோஹன்: இவன ஹெஸரு ஸுரேஷ். | இவன் பெயர் சுரேஷ். |
| மனோஹர்: அவனு யாரு? | அவன் யார்? |

| | |
|---|---|
| மோஹன்: அவனு நன்ன ஸ்னேஹித. | அவன் என் சிநேகிதன். |
| மனோஹர்: அவன ஹெஸரு ஏனு? | அவன் பெயர் என்ன? |
| மோஹன்: அவன ஹெஸரு ராஜு. | அவன் பெயர் ராஜு. |
| மனோஹர்: ஆ ஹுடு$^{3}$கி$^{3}$ யாரு? | அந்தச் சிறுமி யார்? |
| மோஹன்: அவளு நன்ன தங்கி$^{3}$. | அவள் என் தங்கை. |
| மனோஹர்: அவள ஹெஸரு ஏனு? | அவள் பெயர் என்ன? |
| மோஹன்: அவள ஹெஸரு கமல. | அவள் பெயர் கமலா. |
| மனோஹர்: ஈ ஹுடு$^{3}$கி$^{3}$ யாரு? நின்ன தங்கி$^{3}$னா? | இந்தச் சிறுமி யார்? உன் தங்கையா? |
| மோஹன்: அல்ல. இவளு நன்ன தங்கி$^{3}$ அல்ல. இவளு நன்ன அக்க. | இல்லை. இவள் என் தங்கை அல்ல. இவள் என் அக்கா. |
| மனோஹர்: இவள ஹெஸரு ஏனு? | இவள் பெயர் என்ன? |
| மோஹன்: இவள ஹெஸரு லலித. | இவள் பெயர் லலிதா. |

## 2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | இது$^{3}$ ஏனு புஸ்தக? | இது என்ன புத்தகம்? |
| | அது$^{3}$ யாவ காலேஜு? | அது எந்தக் கல்லூரி? |
| | இது$^{3}$ யாவ. ஊரு? | இது எந்த ஊர்? |
| 2.2 | இது$^{3}$ கவன. | இது கவிதை. |
| | அது$^{3}$ கதெ$^{2}$. | அது கதை. |
| | அது$^{3}$ மனெ. | அது வீடு. |
| 2.3 | இத$^{3}$ர ஹெஸரு ஏனு? | இதன் பெயர் என்ன? |
| | அத$^{3}$ர ஹெஸரு ஏனு? | அதன் பெயர் என்ன? |
| 2.4 | இது$^{3}$ சது$^{3}$ரங்க அவர மனெ. | இது சதுரங்க அவர்களுடைய வீடு. |
| | அது$^{3}$ பை$^{3}$ரப்ப அவர அங்க$^{3}$டி$^{3}$. | அது பைரப்பா அவர்களுடைய கடை. |
| 2.5 | இது$^{3}$ நின்ன அங்கி$^{3}$னா? | அது உன் சட்டையா? |
| | அது$^{3}$ அவர மனெனா? | அது அவர் வீடா? |
| 2.6 | ஹவ்து$^{3}$. இது$^{3}$ நன்ன புஸ்தக. | ஆமாம். இது என் புத்தகம். |
| | ஹவ்து$^{3}$. அது$^{3}$ அவர மனெ. | ஆமாம். அது அவர் வீடு. |
| 2.7 | அல்ல. இது$^{3}$ அவர பென்னு அல்ல. | இல்லை. இது அவர் பேனா அல்ல. |



| | | |
|---|---|---|
| | அல்ல. அது$^{3}$ நன்ன கார் அல்ல. | இல்லை. அது என் கார் அல்ல. |
| 2.8 | நீனு யாரு? நின்ன ஹெஸரு ஏனு? | நீ யார்? உன் பெயர் என்ன? |
| 2.9 | இவனு யாரு? | இவன் யார்? |
| | இவனு ஜவான. | இவன் வேலைக்காரன். |
| | இவன ஹெஸரு ஏனு? | இவன் பெயர் என்ன? |
| | இவன ஹெஸரு நஞ்ஜப்ப. | இவன் பெயர் நஞ்சப்பா. |
| 2.10 | அவனு யாரு? | அவன் யாரு? |
| | அவனு காவலுக$^{3}$ார. | அவன் காவல்காரன். |
| | அவன ஹெஸரு ராமய்ய. | அவனுடைய பெயர் ராமைய்யா. |
| 2.11 | அவளு யாரு? | அவள் யார்? |
| | அவளு ஜவானி. | அவள் வேலைக்காரி. |
| | அவள ஹெஸரு லக்ஷ்மி. | அவள் பெயர் லட்சுமி. |
| 2.12 | இவளு யாரு? | இவள் யார்? |
| | இவளு நன்ன தங்கி$^{3}$. | இவள் என் தங்கை. |
| 2.13 | இவனு நின்ன தம்மானா? | இவன் உன் தம்பியா? |
| | அல்ல. இவனு நன்ன தம்ம அல்ல. | இல்லை. இவன் என் தம்பி அல்ல. |
| | இவனு நன்ன அண்ண. | இவன் என் அண்ணன். |
| 2.14 | அவளு நின்ன அக்கானா? | அவள் உன் அக்காவா? |
| | ஹவ்து$^{3}$. அவளு நன்ன அக்க. | ஆமாம். அவள் என் அக்கா. |

## 3. குறிப்புகள்

3.1 தமிழில் உள்ளது போலவே கன்னடத்திலும் 'இது', 'அது' அஃறிணையைச் சுட்டும் சொற்கள். உச்சரிப்பிலும் வேறுபாடு இல்லை.

3.2 பால் வேறுபாடு காட்டாத இச்சுட்டுச் சொற்களுடன் 'அ' என்னும் வேற்றுமை உருபைச் சேர்த்து விரிவுபடுத்தப்படுகின்றன.

அது$^{3}$ + அ = அத$^{3}$ர

இது$^{3}$ + அ = இத$^{3}$ர.

'அ' என்னும் வேற்றுமை உருபு 'உடைய' என்னும் பொருளைத் தருகிறது. அதோடு தமிழின் 'இன்', 'அது' போன்ற உருபுகளுக்கும் இணை கன்னட 'அ'.

3.3 பெயர்ச்சொற்களுடன் 'ஆ' சேர்த்து வினாப் பொருளைப் பெறலாம். கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகளைக் கவனிக்க.

3..3.1 காத$^3$ம்ப$^3$ரி + ஆ = காத$^3$ம்ப$^3$ரீனா

மனெ + ஆ = மனேனா

3.3.2 பென்னு + ஆ = பென்னா

அவரு + ஆ = அவரா

3.3.3 மக$^3$ + ஆ = மக$^3$ானா (மக$^3$னா)

ராம + ஆ = ராமானா (ராமனா)

ரவி + ஆ = ரவீனா (ரவினா)

ஒரு பெயர்ச் சொல்லோடு 'ஆ' சேர்க்கும்போது, பேச்சு வழக்கில் அதன் இறுதி எழுத்து நெடிலாவதோடு இடையில் 'ன்' தோன்றும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டவை எழுத்து வழக்குகள்.

3.4 'ஹவ்து$^3$' தமிழின் 'ஆம்', 'ஆமாம்' என்பவைகளுக்கு நிகர். 'அல்ல' என்பது தமிழின் 'அல்ல', 'இல்லை' என்பவைகளுக்கு நிகர். 'ஹவ்து$^3$', 'அல்ல' என்பவற்றை 'ஹவ்தா$^3$', 'அல்வா' எனப் பயன்படுத்தி வினாத்தொடர்களை அமைக்கலாம்.

3.5 நீனு நீ (முன்னிலை, ஒருமை)

இவனு இவன் (படர்க்கை, அண்மை, ஆண்பால், ஒருமை)

அவனு அவன் (படர்க்கை, சேய்மை, ஆண்பால், ஒருமை)

இவளு இவள் (படர்க்கை, அண்மை, பெண்பால், ஒருமை)

அவளு அவள் (படர்க்கை, சேய்மை, பெண்பால், ஒருமை)

'ஆத', 'ஆகெ', 'ஈத', 'ஈகெ' ஆகியன முறையே 'அவனு', 'அவளு', 'இவனு', 'இவளு' என்பவற்றுக்கு மாற்றுச் சொற்கள்.

3.6 மேற்கண்ட சுட்டுச்சொற்களுடன் 'அ' சேரும்போது 'உடைய' என்னும் அர்த்தத்தைத் தருகிறது.

நீனு + அ = நின்ன (உன்னுடைய)

இவனு + அ = இவன (இவனுடைய)

அவனு + அ = அவன (அவனுடைய)

இவளு + அ = இவள (இவளுடைய)

அவளு + அ = அவள (அவளுடைய)

3.7 'அப்ப' என்பது விளிவேற்றுமை. இது அன்னிய, நெருக்கமான, சமதையான ஆடவரை விளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. பெண்களை விளிக்க 'அம்ம' பயன்படுத்தப்படுகிறது.



3.8 'ஆ' (அந்த), 'ஈ' (இந்த) என்பவை பால் வேறுபாடு காட்டாத சுட்டுச் சொற்கள்.

ஆ மனெ — அந்த வீடு

ஈ மனெ — இந்த வீடு

ஆ ஹுடு$^3$கி$^3$ — அந்தச் சிறுமி

ஈ அத்$^4$யாபக — இந்த ஆசிரியர்.

4. பயிற்சி

4.1 பொருத்தமான சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 இது$^3$ நிரஞ்சன அவர . . . . . . . . . .

4.1.2 இந்தி$^3$ரா க$^3$ாந்தி$^4$ அவர . . . . . . . . . . . ராஜீவ க$^3$ாந்தி$^4$.

4.1.3 . . . . . . . . . . . ஹெஸரு சிரஸ்மரனெ.

4.1.4 . . . . . . . . . . . . அது$^3$ நன்ன புஸ்தக அல்ல.

4.2 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள சொற்களின் பொருத்தமான வடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.2.1. அது$^3$ . . . . . . . . . . . காரு. (அவனு)

4.2.2 இது$^3$ . . . . . . . . . . . ஆபீ$^2$ஸ்? (யாரு)

4.2.3 அவளு நின்ன . . . . . . . . . . ? (தங்கி$^3$)

4.2.4 . . . . . . . . . . ஹெஸரு காமாக்ஷி (இவளு)

4.3 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள தமிழ்ச் சொற்களுக்கு நிகரான கன்னடச் சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.3.1 அவளு . . . . . . . . . . . (சிறுமி)

4.3.2 ஸவித நன்ன . . . . . . . . . . . (அக்கா)

4.3.3 நிம்ம . . . . . . . . . . யாரு? (அண்ணன்)

4.3.4 நன்ன . . . . . . . . . . . கன்னட$^3$ அத்$^3$யாபக. (தம்பி)

4.4 கீழ்க்கண்டவைகளுக்குப் பொருத்தமான வினா வாக்கியங்களை எழுதுக.

4.4.1 அவனு வித்$^3$யார்தி$^2$.

4.4.2 அது$^3$ புஸ்தக.

4.4.3 நன்ன ராஜ்ய தமிளுநாடு$^3$.

4.4.4 ஹவ்து$^{3}$. அவனு நன்ன தம்ம.

4.5 கீழ்க்கண்டவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.5.1 நீ யார்?

4.5.2 அவள் உன் தங்கையா?

4.5.3 அந்தச் சிறுமி யார்?

4.5.4 இந்தச் சிறுவன் சதீஷின் மகன்.

4.5.5 அது உன் புத்தகமா?

4.5.6 இல்லை. அது என் பேனா அல்ல.

4.5.7 உன் ஊர் எது?

4.6 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

4.6.1. நிம்ம ஊரு திருச்சினா?

4.6.2 ஆ ஹுடு$^{3}$க$^{3}$ நிம்ம மக$^{3}$னா?

4.6.3 நிரஞ்சன அவர காத$^{3}$ம்ப$^{3}$ரி யாவுது$^{3}$?

4.6.4 நிம்ம மாத்ருப$^{4}$ாஷெ$^{2}$ கன்னட$^{3}$ானா?

5. **சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| அக்க | அக்கா |
| அது$^{3}$ | அது |
| அத$^{3}$ர | அதன், அதனுடைய |
| அண்ண | அண்ணன் |
| அவளு | அவள் |
| அல்ல | அல்ல, இல்லை |
| அவளு | அவள் |
| அவள | அவளது, அவளுடைய |
| அவனு | அவன் |
| அவன | அவனது, அவனுடைய |
| ஆ | அந்த |
| இது$^{3}$ | இது |
| இத$^{3}$ர | இதன், இதனுடைய |
| இவனு | இவன் |
| இவன | இவனது, இவனுடைய |
| இவளு | இவள் |
| இவள | இவளது, இவளுடைய |
| ஈ | இந்த |
| காத$^{3}$ம்ப$^{3}$ரி | நாவல், புதினம் |
| தங்கி$^{3}$ | தங்கை |
| தம்ம | தம்பி |
| நின்ன | உனது, உன்னுடைய |
| நீனு | நீ |
| மக$^{3}$ | மகன் |
| புஸ்தக | புத்தகம் |
| யாவ | எது, எந்த |
| ஹவ்து$^{3}$ | ஆம், ஆமாம் |
| ஹுடு$^{3}$கி$^{3}$ | சிறுமி. |

## பாடம் 3

### 1. உரையாடல்

| | |
|---|---|
| ராஜ: ராமாயணத$^3$ நாயக யாரு? | ராமாயணத்தின் நாயகன் யார்? |
| ராணி: ராமாயணத$^3$ நாயக ஶ்ரீராம. | ராமாயணத்தின் நாயகன் ஶ்ரீராமன். |
| ராஜ: ராம யார மக$^3$? | ராமன் யாருடைய மகன்? |
| ராணி: அவனு த$^3$ஶரத$^2$ன மக$^3$. | அவன் தசரதனுடைய மகன். |
| ராஜ: ராமன தாயிய ஹெஸரு ஏனு? | ராமனுடைய தாயின் பெயர் என்ன? |
| ராணி: ராமன தாயிய ஹெஸரு கௌஸல்யெ. | ராமனுடைய தாயின் பெயர் கௌசல்யை. |
| ராஜ: ராமன தம்மன ஹெஸரு ஏனு? | ராமனுடைய தம்பியின் பெயர் என்ன? |
| ராணி: ராமன தம்மன ஹெஸரு லக்ஷ்மண. | ராமனுடைய தம்பியின் பெயர் லட்சுமணன். |
| ராஜ: ராமன ஹெண்ட$^3$தி ஹெஸரு ஏனு? | ராமனுடைய மனைவியின் பெயர் என்ன? |
| ராணி: ராமன ஹெண்ட$^3$தி ஹெஸரு ஸீதெ. | ராமனுடைய மனைவியின் பெயர் சீதை? |
| ராஜ: அவளு யார மக$^3$ளு? | அவள் யாருடைய மகள்? |
| ராணி: அவளு ஜனகராஜன மக$^3$ளு. | அவள் ஜனக மன்னனுடைய மகள். |
| ராஜ: ராமன மக்கள ஹெஸரு ஏனு? | ராமனுடைய பிள்ளைகளின் பெயர்கள் என்ன? |
| ராணி: லவ, குஶ. | லவன், குஷன். |
| ராஜ: லவ ஹிரி மக$^3$னா? குஶ ஹிரி மக$^3$னா? | லவன் மூத்த மகனா? குஷன் மூத்த மகனா? |
| ராணி: லவ ஹிரி மக$^3$. குஶ கிரி மக$^3$. | லவன் மூத்த பிள்ளை. குஷன் இளைய பிள்ளை. |

### 2. மாதிரிப் பயிற்சி

| | |
|---|---|
| 2.1 கர்நாடகத$^3$ முக்ய மந்த்ரி யாரு? | கர்நாடகத்தின் முதலமைச்சர் யார்? |
| பா$^4$ரதத$^3$ ராஜத$^4$ானி யாவுது$^3$? | இந்தியாவின் தலைநகரம் எது? |
| 2.2 ஸுமதி ராஜுவின மக$^3$ளு. | சுமதி ராஜுவின் மகள். |
| அவனு ஈ கு$^3$ருவின ஶிஷ்$^2$ய. | அவன் இந்தக் குருவின் சிஷ்யன். |
| 2.3 ராமன தந்தெ$^3$ய ஹெஸரு த$^3$ஶரத$^2$. | ராமனுடைய தந்தையின் பெயர் தசரதன். |
| நன்ன தாயிய ஹெஸரு கமலம்ம. | என் தாயின் பெயர் கமலம்மா. |
| இவர நாயிய ஹெஸரு டாமி. | இவரது நாயின் பெயர் டாமி. |
| 2.4 ஸீதெய க$^3$ண்ட$^3$ன ஹெஸரு ராம. | சீதையினுடைய கணவனின் பெயர் ராமன். |
| அவர மக$^3$ன ஹெஸரு ராஜீவ். | அவருடைய மகனின் பெயர் ராஜீவ். |
| 2.5 ராமன மக்கள ஹெஸரு லவ, குஶ. | ராமனுடைய பிள்ளைகளின் பெயர் லவன், குஷன். |
| 2.6 நம்ம காலேஜின ஹெஸரு மஹாராஜ காலேஜு. | எங்கள் கல்லூரியின் பெயர் மகாராஜா கல்லூரி. |
| நிம்ம ஊரின ஹெஸரு ஏனு? | உங்கள் ஊரின் பெயர் என்ன? |
| 2.7 அவளு ராமராயர ஹிரி மக$^3$ளோ கிரி மக$^3$ளோ? | அவள் ராமராயரின் மூத்த மகளா இளைய மகளா? |



### 3. குறிப்புகள்

3.1 'இன்' என்னும் பொருளைத் தரும் 'அ' உருபு பெயர்ச்சொற்களுடன் சேர்க்கப்படுகிறது.

3.1.1 பா$^4$ரத + அ = பா$^4$ரதத$^3$ (பாரதத்தின்)

கர்நாடக + அ = கர்நாடகத$^3$ (கர்நாடகத்தின்)

பால் வேறுபாடு காட்டாத பெயர்ச்சொற்களுடன் 'அ' சேரும்போது இடையில் 'த்$^3$' தோன்றும்.

கீழ்க்கண்ட பெயர்ச்சொற்களுடன் 'அ' சேர்த்து எழுதுக.

| | |
|---|---|
| மர (மரம்) | புஸ்தக (புத்தகம்) |
| கி$^3$ட$^3$ (செடி) | ஸினிமா (சினிமா) |
| தி$^3$ன (தினம்) | ராஜ்ய (மாநிலம்). |

3.1.2 க$^3$ாந்தி$^4$ + அ = க$^3$ாந்தி$^4$ய (காந்தியின்)

ஸீதெ + அ = ஸீதெய (சீதையின்)

இகர, எகர ஈற்றுப் பெயர்ச்சொற்களுடன் 'அ' சேரும்போது, அஃறிணையாயினும் உயர்திணையாயினும் இடையில் யகர மெய் தோன்றும்.

கீழ்க்கண்ட பெயர்ச்சொற்களுடன் 'அ' சேர்த்து எழுதுக:

| | |
|---|---|
| ஸொஸெ | மருமகள் |
| கதெ$^{2}$ | கதை |
| ஹெண்ட$^{3}$தி | மனைவி |
| ஹு¬லி | புலி |
| கிடகி | ஜன்னல் |
| குர்சி | நாற்காலி. |

3.1.3 உகர ஈற்று அஃறிணைப் பெயர்ச்சொற்களுடன் 'அ' சேரும்போது, உகர ஈறு மறைந்து 'இன்' தோன்றும்.

காலேஜு¬ + அ = காலேஜின (கல்லூரியின்)

காடு$^{3}$ + அ = காடி$^{3}$ன (காட்டின்)

கீழ்க்கண்ட பெயர்ச்சொற்களோடு 'அ' சேர்த்து எழுதுக.

| | |
|---|---|
| ஊரு | ஊர் |
| பஸ்ஸு¬ | பஸ் |
| ப$^{3}$ாகி$^{3}$லு | கதவு |
| ஹாவு | பாம்பு |
| பென்னு | பேனா |
| ஹெங்க$^{3}$ஸு¬ | பெண். |

மேலே சொன்ன விதிக்கு அடங்காத பெயர்ச்சொற்களும் உள்ளன.

| | |
|---|---|
| ஹஸு¬ | பசு |
| கு$^{3}$ரு | ஆசிரியர் |
| கரு | கன்று |
| ப$^{3}$ந்து$^{4}$ | உறவினர் |
| மகு$^{3}$ | குழந்தை |
| ஷத்ரு | எதிரி. |

இப்படிப்பட்ட உகர ஈற்றுப் பெயர்ச்சொற்களோடு 'அ' சேரும்போது இடையில் 'வின்' தோன்றும். கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகளைக் காண்க:

ஹஸு¬ + அ = ஹஸு¬வின

கு$^{3}$ரு + அ = கு$^{3}$ருவின

கரு + அ = கருவின

ராஜு¬ + அ = ராஜு¬வின

நீது + அ = நீதுவின.



3.1.4 உகர ஈற்று எண்ணுப்பெயர்களோடு 'அ' சேரும்போது இடையில் ரகர மெய் தோன்றும்.

ஒந்து$^{3}$ + அ = ஒந்த$^{3}$ர (ஒன்றின்)

ஹத்து + அ = ஹத்தர (பத்தின்).

மகளு, மக்களு என்பவற்றோடு 'அ' சேரும்போது உகர ஈறு கெடும் என்பதைக் கவனிக்க.

மக$^{3}$ளு + அ = மக$^{3}$ள (மகளின், மகளுடைய)

மக்களு + அ = மக்கள (பிள்ளைகளின், பிள்ளைகளுடைய).

3.1.5 அகர ஈற்று உயர்திணைப் பெயர்ச்சொற்களோடு 'அ' சேரும்போது இடையில் 'ன்' தோன்றும்.

மக$^{3}$ + அ = மக$^{3}$ன

ராம + அ = ராமன

கமல + அ = கமலன

அக்க + அ = அக்கன.

3.5 ஒகாரம் ஐயப்பொருளைத் தரும்.

ஸஞ்ச$^{3}$ய் க$^{3}$ாந்தி$^{4}$ ஹிரி மக$^{3}$னோ கிரி மக$^{3}$னோ?

அவனு நின்ன அண்ணனோ தம்மனோ?

அது$^{3}$ அவர மனேனோ நின்ன மனேனோ?

3.3 உறவு முறைகளைக் குறிக்கும் சொற்கள் இப்பாடத்தில் அறிமுகம் செய்யப் பட்டுள்ளன.

4. பயிற்சி

4.1 பொருத்தமான சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 ப$^{4}$ரதத$^{3}$ . . . . . . . . தெ$^{3}$ஹலி.

4.1.2 ராமன . . . . . . . . ஸீதெ.

4.1.3 லவ குஷ ராமன . . . . . . . . .

4.1.4 ராஜீவ க$^{3}$ாந்தி$^{4}$ய . . . . . . . . பி$^{2}$ரோஜ் க$^{3}$ாந்தி$^{4}$.

4.2 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள தமிழ்ச் சொற்களுக்கு நிகரான கன்னடச் சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.2.1 ஷாலினிய . . . . . . . . ரஜனி. (மகள்)

4.2.2 நன்ன . . . . . . . . ராஜேஷ். (மூத்த மகன்)

4.2.3 ரவிய . . . . . . . . . ஸவித. (மனைவி)

4.2.3 இவர . . . . . . . . . ரம. (தாய்)

4.2 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள சொற்களின் பொருத்தமான வடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.3.1. நிம்ம . . . . . . . . . ஹெஸரு ஏனு? (மக$^3$)

4.3.2 ஷாலினிய . . . . . . . . . மனெ யாவுது$^3$? (ஸ்னேஹிதி)

4.3.3 . . . . . . . . . அண்ண ராஜீவ். (ஸஞ்ஜய்)

4.3.4 . . . . . . . . . ராஜத$^4$ானி தெ$^3$ஹலி. (பா$^4$ரத)

4.4. கீழ்க்கண்டவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.4.1 என் அம்மாவின் பெயர் சாரத.

4.4.2 அவளுடைய கணவன் யார்?

4.4.3 அர்பிதா என் இளைய மகள்.

4.4.4 ராமா ராவ் என் அப்பாவின் அப்பா.

4.5. கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டில் உள்ளபடி மாற்று வடிவங்களை எழுதுக.

4.5.1 (எ-டு) இந்தி$^3$ரா க$^3$ாந்தி$^4$ : இந்தி$^3$ரா க$^3$ாந்தி$^4$ய

ரஜனி

ரவி

நாயி

குர்சி

தந்தெ$^3$

கதெ$^2$

4.5.2 (எ-டு) ப$^3$ாரத : ப$^3$ாரதத$^3$

தே$^3$ஷ

புஸ்தக

மர

4.5.3 (எ-டு) மக$^3$ : மக$^3$ன

ஸஞ்ஜய

ரமேஷ

கமல

லலித



4.5.4 (எ-டு) நெஹரு : நெஹருவின

ராமு

நீலு

மகு$^3$

ஹஸு

கு$^3$ரு.

4.6 உங்கள் குடும்பத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கன்னடத்தில் கூறுக.

4.7 கீழ்கண்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

4.7.1 நிம்ம மக்கள ஹெஸரு ஏனு?

4.72 நிம்ம ஹெண்ட$^3$திய ஹெஸரு ஏனு?

4.73 நிம்ம தந்தெ$^3$ தாயிய ஹெஸரு ஏனு?

5. **சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| மக்களு | குழந்தைகள், பிள்ளைகள் |
| மக$^3$ளு | மகள் |
| ராஜத$^4$ானி | தலைநகரம் |
| ஹிரி மக$^3$ | மூத்த மகன் |
| ஹெண்ட$^3$தி | மனைவி. |

# பாடம் 4

## 1. உரையாடல்

| | |
|---|---|
| ராமு: ஸ்ரீராமபுர ஒள்ளெய ப$^3$ட$^3$ாவணேனா? | ஸ்ரீராமபுரம் நல்ல குடியிருப்பா? |
| சுரேஷ்: அல்ல. அது$^3$ ஒள்ளெய ப$^3$ட$^3$ாவணெ அல்ல. கெட்ட ப$^3$ட$^3$ாவணெ. | இல்லை. அது நல்ல குடியிருப்பு அல்ல. மோசமான குடியிருப்பு. |
| ராமு: ஒள்ளெய ப$^3$ட$^3$ாவணெ யாவுது$^3$? | நல்ல குடியிருப்பு எது? |
| சுரேஷ்: ப$^3$னஷங்கரி ஒள்ளெய ப$^3$ட$^3$ாவணெ. | பனசங்கரி நல்ல குடியிருப்பு. |
| ராமு: அது$^3$ ஹொஸ ப$^3$ட$^3$ாவணேனோ, ஹளெய ப$^3$ட$^3$ாவணேனோ? | அது புதிய குடியிருப்பா, பழைய குடியிருப்பா? |
| சுரேஷ்: அது$^3$ ஹளெய ப$^3$ட$^3$ாவணெ அல்ல. ஹொஸ ப$^3$ட$^3$ாவணெ. | அது பழைய குடியிருப்பு அல்ல. புதிய குடியிருப்பு. |
| ராமு: அதே$^3$னு தெ$^3$ாட்$^3$ட$^3$ ப$^3$ட$^3$ாவணேனோ சிக்க ப$^3$ட$^3$ாவணேனோ? | அதென்ன பெரிய குடியிருப்பா, சின்ன குடியிருப்பா? |
| சுரேஷ்: அது$^3$ தெ$^3$ாட்$^3$ட$^3$ ப$^3$ட$^3$ாவணெ. | அது பெரிய குடியிருப்பு. |
| ராமு: அது$^3$ என்த$^2$ா ப$^3$ட$^3$ாவணெ? ஸ்ரீமந்தர ப$^3$ட$^3$ாவணேனோ ப$^3$ட$^3$வர ப$^3$ட$^3$ாவணேனோ? | அது எப்படிப்பட்ட குடியிருப்பு? பணக்காரர்களின் குடியிருப்பா, ஏழைகளின் குடியிருப்பா? |
| சுரேஷ்: அது$^3$ தும்ப$^3$ா ஸ்ரீமந்தர ப$^3$ட$^3$ாவணேனூ அல்ல. து$^3$ம்ப$^3$ா ப$^3$ட$^3$வர ப$^3$ட$^3$ாவணேனூ அல்ல. | அது பெரும் பணக்காரர்களின் குடியிருப்பும் அல்ல. மிக ஏழைகளின் குடியிருப்பும் அல்ல. |
| ராமு: அது$^3$ தும்ப$^3$ா தூ$^3$ரானோ ஹத்திரானோ? | அது மிகத் தூரமா பக்கமா? |
| சுரேஷ்: அது$^3$ தும்ப$^3$ா தூ$^3$ரானூ அல்ல. தும்ப$^3$ா ஹத்திரானூ அல்ல. | அது மிகத் தூரமும் அல்ல. மிகப் பக்கமும் அல்ல. |

## 2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | மைஸூரு ஒள்ளெய நகர. | மைசூர் நல்ல நகரம். |
| | ரமேஷ் ஒள்ளெய ஹுடு$^3$க$^3$. | ரமேஷ் நல்ல பையன். |
| | மோஹன் ஒள்ளெய அதி$^4$காரி. | மோஹன் நல்ல அதிகாரி. |
| 2.2 | அது$^3$ கெட்ட புஸ்தக. | அது மோசமான புத்தகம். |
| | அவனு கெட்ட ஹுடு$^3$க$^3$. | அவன் மோசமான பையன். |
| | அது$^3$ கெட்ட ஊரு. | அது மோசமான ஊர். |



| | | |
|---|---|---|
| 2.3 | அது$^3$ என்த$^2$ பென்னு? | அது எப்படிப்பட்ட பேனா? |
| | அது$^3$ ஒள்ளெய பென்னு. | அது நல்ல பேனா. |
| | இது$^3$ என்த$^2$ காத$^3$ம்ப$^3$ரி? | இது எப்படிப்பட்ட நாவல்? |
| | இது$^3$ கெட்ட காத$^3$ம்ப$^3$ரி. | இது மோசமான நாவல். |
| | அவளு என்த$^2$ நடி? | அவள் எப்படிப்பட்ட நடிகை? |
| | அவளு கெட்ட நடி. | அவள் மோசமான நடிகை. |
| | அவனு கெட்ட நட. | அவன் மோசமான நடிகன். |
| 2.4 | அது$^3$ தெ$^3$ாட்ட மனெ. | அது பெரிய வீடு. |
| | பெ$^3$ங்க$^3$ளூரு தெ$^3$ாட்$^3$ட$^3$ பட்டண. | பெங்களூர் பெரிய நகரம். |
| | அவரு தெ$^3$ாட்$^3$ட$^3$ மனுஷ்$^2$ய. | அவர் பெரிய மனிதர். |
| 2.5 | அது$^3$ சிக்க அங்க$^3$டி$^3$. | அது சின்ன கடை. |
| | இது$^3$ ஸண்ண கதெ$^2$. | இது சிறிய கதை. |
| | அவளு ஸண்ண ஹெங்க$^3$ஸு. | அவள் சிறிய பெண்மணி. |
| 2.6 | மைஸூரு அரமனெ தும்ப$^3$ா தெ$^3$ாட்$^3$ட$^3$ அரமனெ. | மைசூர் அரண்மனை மிகவும் பெரிய அரண்மனை. |
| | அவரு பா$^3$ள ஒள்ளெ அத்$^4$யாபக. | அவர் மிகவும் நல்ல ஆசிரியர். |
| | அது$^3$ தீர கெட்ட நாயி. | அது மிக மோசமான நாய். |
| 2.7 | ராம ஸுமித்ரைய மக$^3$னோ? கைகேயிய மக$^3$னோ? | ராமன் சுமித்திரையின் மகனா? கைகேயின் மகனா? |
| | ராம ஸுமித்ரைய மக$^3$னூ அல்ல. கைகேயிய மக$^3$னூ அல்ல. | ராமன் சுமித்திரையின் மகனும் அல்ல. கைகேயியின் மகனும் அல்ல. |
| | அவனு கௌஸல்யெய மக$^3$. | அவன் கௌசல்யையின் மகன். |
| | அது$^3$ நின்ன பென்னோ நின்ன தம்மன பென்னோ? | அது உன்னுடைய பேனாவா, உன் தம்பியின் பேனாவா? |
| | அது$^3$ நன்ன பென்னூ அல்ல. நன்ன தம்மன பென்னூ அல்ல. நன்ன தங்கி$^3$ய பென்னு. | அது என்னுடைய பேனாவும் அல்ல. என் தம்பியின் பேனாவும் அல்ல. என் தங்கையின் பேனா. |

## 3. குறிப்புகள்

3.1 'ஒள்ளெய', 'கெட்ட' என்பவை பண்புப் பெயரடைகள். 'தெ$^3$ாட்$^3$ட$^3$', 'சிக்க', 'ஸண்ண' என்பவை அளவைக் குறிக்கும் பெயரடைகள். இந்தப் பெயரடைகள் எப்பொழுதும் பெயர்ச்சொற்களுக்கு முன் அமையும். 'தெ$^3$ாட்$^3$ட$^3$', 'சிக்க' என்பவை பொருள்களின் அளவையோ நபர்களின் தன்மையையோ குறிக்கும்.

| | |
|---|---|
| அது$^3$ தெ$^3$ாட்$^3$ட$^3$ மனெ. | அது பெரிய வீடு. |
| அவரு தெ$^3$ாட்$^3$ட$^3$ மனுஷ்$^2$ய. | அவர் பெரிய மனிதர். |

3.2 'தும்ப$^3$', 'ப$^3$ாள', 'தீர' என்பவை அழுத்தத்தைக் குறிக்கும் சொற்கள். இவை எப்போதும் பெயரடைகளுக்கு முன்பே அமையும்.

அவனு தும்ப$^3$ ஒள்ளெய மனுஷ்$^2$ய.

3.3 'ஊ' என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்களை இணைக்கப் பயன்படும் உருபு. கன்னட 'ஊ' தமிழின் 'உம்' என்பதற்கு நிகர்.

அவனு ரவிய அண்ணனூ அல்ல தம்மனூ அல்ல.

3.4 'என்த$^2$' (எப்படிப்பட்ட) என்பது வினாப்பொருளில் அமையும் பெயரடை.

## 4. பயிற்சி

4.1 கீழ்க்கண்டவற்றில் பெருத்தமான சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 அது$^3$ . . . . . . . . . . சினிமா.

4.1.2 பெ$^3$ங்க$^3$ளூரு . . . . . . . . . . பட்டண.

4.1.3 அவனு நன்ன . . . . . . . . . . அண்ண.

4.1.4 அவளு நன்ன தம்மன . . . . . . . . . . மக$^3$ளு.

4.2 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள தமிழ்ச் சொற்களுக்கு நிகரான கன்னடச் சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக:

4.2.1 ரேக$^2$ா . . . . . . . . . . ஒள்ளெய நடி. (மிக)

4.2.2 அது$^3$ . . . . . . . . . . க$^3$டி$^3$யார. (பெரிய)

4.2.3 அது தும்ப$^3$ா தெ$^3$ாட்$^3$ட$^3$ . . . . . . . . . . . (குடியிருப்பு)

4.3 கீழ்க்கண்ட சொற்களை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

4.3.1 மனெ

4.3.2 ஸொஸெ



4.3.3 தெ$^3$ாட்$^3$ட$^3$

4.3.4 என்த$^2$

4.3.5 ஸண்ண.

4.4 கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.4.1 அது மிகவும் நல்ல நாவல்.

4.4.2 இது யாருடைய கதை?

4.4.3 ஜெயநகர் நல்ல குடியிருப்பு.

4.4.4 அது பெரிய நகரம்.

4.4.5 அது நல்ல பழைய வீடு.

4.5 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

5.5.1 கர்நாடகத$^3$ ராஜத$^4$ானி யாவுது$^3$?

4.5.2 நிம்ம தெ$^3$ாட்$^3$ட$^3$ மக$^3$ன ஹெஸரு ஏனு?

4.5.3 அது$^3$ நின்ன ஹளெய மனெனோ ஹொஸ மனெனோ?

4.5.4 நிம்ம ப$^3$டா$^3$வணெய ஹெஸரு ஏனு?

4.5.5 நிம்ம ப$^3$ட$^3$ாவணெ தெ$^3$ாட்$^3$ட$^3$த$^3$ா?

## 5. சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| என்த$^2$ | எப்படிப்பட்ட |
| ஒள்ளெய | நல்ல |
| கெட்ட | கெட்ட, மோசமான |
| சிக்க | சின்ன, சிறிய |
| தூ$^3$ர | தூரம், தொலைவு |
| தெ$^3$ாட்$^3$ட$^3$ | பெரிய |
| ப$^3$ட$^3$ாவணெ | குடியிருப்பு |
| ஸண்ண | சிறிய |

| | |
|---|---|
| ஹத்திர | அருகில், பக்கம் |
| ஹளெய | பழைய |
| ஹொஸ | புதிய. |

**6. துணைச் சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| அரமனெ | அரண்மனை |
| நக$^{3}$ர | நகரம் |
| நட | நடிகன் |
| நடி | நடிகை |
| நாயி | நாய் |
| பட்டண | நகரம் |
| மனுஷ்$^{2}$ய | மனிதன் |
| ஹெங்க$^{3}$ஸு | பெண். |



# பாடம் 5

**1. உரையாடல்**

| | |
|---|---|
| ஸுவாமி: நிம்மது$^{3}$ பா$^{3}$டி$^{3}$கெ$^{3}$ மனேனா? | உங்களுடையது வாடகை வீடா? |
| ரங்க$^{3}$: அல்ல. நன்னது$^{3}$ பா$^{3}$டி$^{3}$கெ$^{3}$ மனெ அல்ல. ஸ்வந்த மனெ. | இல்லை. என்னுடையது வாடகை வீடு அல்ல. சொந்த வீடு. |
| ஸுவாமி: மனெ ஹொஸத$^{3}$ா? | வீடு புதியதா? |
| ரங்க$^{3}$: ஹவ்து$^{3}$. ஹொஸது$^{3}$. | ஆமாம். புதியது. |
| ஸுவாமி: தொ$^{3}$ட்$^{3}$ட$^{3}$தா? | பெரியதா? |
| ரங்க$^{3}$: ஸ்வல்ப தொ$^{3}$ட்$^{3}$ட$^{3}$து$^{3}$. | கொஞ்சம் பெரியது. |
| ஸுவாமி: மனெ எல்லி இதெ$^{3}$? | வீடு எங்கே இருக்கிறது? |
| ரங்க$^{3}$: ஜெயநக$^{3}$ரத$^{3}$ல்லி இதெ$^{3}$. | ஜெயநகரில் இருக்கிறது. |
| ஸுவாமி: அல்லி யாவுத$^{3}$ாத$^{3}$ரு பா$^{3}$டி$^{3}$கெ$^{3}$ மனெ இதெ$^{3}$யா? | அங்கே ஏதாவது வாடகை வீடு இருக்கிறதா? |
| ரங்க$^{3}$: இல்ல. யாவுதூ$^{3}$ இல்ல. | இல்லை. எதுவும் இல்லை. |
| ஸுவாமி: பே$^{3}$ரெ எல்லியாத$^{3}$ரு இதெ$^{3}$யா? | வேறு எங்காவது இருக்கிறதா? |
| ரங்க$^{3}$: ராஜாஜி நக$^{3}$ரத$^{3}$ல்லி இதெ$^{3}$. | ராஜாஜி நகரில் இருக்கிறது. |
| ஸுவாமி: ராஜாஜி நக$^{3}$ர தூ$^{3}$ர. ப$^{3}$னஷங்கரி ஹத்திர. அல்லி யாவதூ$^{3}$ இல்வா? | ராஜாஜி நகர் தூரம். பனசங்கரி பக்கம். அங்கே எதுவும் இல்லையா? |
| ரங்க$^{3}$: இல்ல. | இல்லை. |
| ஸுவாமி: ராஜாஜி நக$^{3}$ர மனெ யாருது$^{3}$? | ராஜாஜி நகர் வீடு யாருடையது? |
| ரங்க$^{3}$: நன்ன ஸ்னேஹிதனது$^{3}$. | என் சினேகிதனுடையது. |
| ஸுவாமி: எல்லி இதெ$^{3}$? | எங்கே இருக்கிறது? |
| ரங்க$^{3}$: நவ்ரங் தியேடர் ஹத்திர இதெ$^{3}$. | நவ்ரங் தியேட்டருக்குப் பக்கத்தில் உள்ளது. |
| ஸுவாமி: கு$^{3}$ருது ஏனாத$^{3}$ரு இதெ$^{3}$யா? | அடையாளம் ஏதாவது இருக்கிறதா? |
| ரங்க$^{3}$: மனெ முன்தெ$^{3}$ நவ்ரங் தியேடர் இதெ$^{3}$. ஹின்தெ$^{3}$ ஒந்து$^{3}$ அங்க$^{3}$டி$^{3}$ இதெ$^{3}$. | வீட்டுக்கு முன்னால் நவ்ரங் தியேட்டர் இருக்கிறது. பின்னால் ஒரு கடை இருக்கிறது. |
| மனெய எட$^{3}$ பக்கத$^{3}$ல்லி, ப$^{3}$ல பக்கத$^{3}$ல்லி தெங்கி$^{3}$ன மர இதெ$^{3}$. | வீட்டின் இடப் பக்கத்தில், வலப் பக்கத்தில் தென்னை மரம் உள்ளது. |

| | |
|---|---|
| ஸ்வாமி: ஆ மனெ தெ$^3$ாட்$^3$ட$^3$த$^3$ா? | அந்த வீடு பெரியதா? |
| ரங்க$^3$: ஹவ்து$^3$. ஸ்மாரு தொ$^3$ட்$^3$ட$^3$து$^3$. | சுமாராகப் பெரியது. |
| ஸ்வாமி: நிம்ம ஸ்னேஹிதரு எந்த$^2$வரு? | உங்கள் சினேகிதர் எப்படிப்பட்டவர்? |
| ரங்க$^3$: அவனு து$^3$ம்ப$^3$ா ஒள்ளெயவனு. | அவன் மிகவும் நல்லவன். |

2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | ஆ மனெ நன்னது$^3$. | அந்த வீடு என்னுடையது. |
| | ஈ புஸ்தக அவனது$^3$. | இந்தப் புஸ்தகம் அவனுடையது. |
| | ஹொஸ காரு இவரது$^3$. | புதிய கார் இவருடையது. |
| 2.2 | ஆ ஹுடு$^3$கி நன்னவளு | அந்தச் சிறுமி என்னுடையவள். |
| | ஈ ஹுடுக$^3$ நன்னவனு. | இந்தச் சிறுவன் என்னுடையவன். |
| 2.3 | நன்ன ஷர்டு ஹொஸது$^3$. | என் சட்டை புதியது. |
| | அவள ஸீரெ ஹளெயது$^3$. | அவள் புடவை பழையது. |
| | அவர காலேஜு தெ$^3$ாட்$^3$ட$^3$து$^3$. | அவருடைய கல்லூரி பெரியது. |
| | அவன ரூமு சிக்கது$^3$. | அவனுடைய அறை சின்னது. |
| 2.4 | நிம்ம சப்பலி ஹொஸத$^3$ா? | உங்கள் செருப்பு புதியதா? |
| | ஆ ஸினிமா ஹளெயத$^3$ா? | அந்தச் சினிமா பழையதா? |
| | ஈ ஸைகலு ஹொஸத$^3$ா? | இந்தச் சைக்கிள் புதியதா? |
| 2.5 | மனெ ஜெயநக$^3$ரத$^3$ல்லி இதெ$^3$. | வீடு ஜெயநகரில் இருக்கிறது. |
| | நாயி மனெயல்லி இதெ$^3$. | நாய் வீட்டில் இருக்கிறது. |
| | ஆனெ காடி$^3$னல்லி இதெ$^3$. | யானை காட்டில் இருக்கிறது. |
| | ப$^3$ஸ்ஸினல்லி ஜாக$^3$ இதெ$^3$. | பஸ்ஸில் இடம் இருக்கிறது. |
| | கர்நாடகத$^3$ல்லி சின்னத$^3$ க$^3$ணி இதெ$^3$. | கர்நாடகத்தில் தங்கச் சுரங்கம் இருக்கிறது. |
| 2.6 | நிம்ம காலேஜு எல்லி இதெ$^3$? | உங்கள் கல்லூரி எங்கே இருக்கிறது? |
| | அவர ஹாஸ்டல் எல்லி இதெ$^3$? | அவர் விடுதி எங்கே இருக்கிறது? |
| | க$^3$ணேஷன அங்க$^3$டி$^3$ எல்லி இதெ$^3$? | கணேசனின் கடை எங்கே இருக்கிறது? |



| | | |
|---|---|---|
| 2.7 | புஸ்தக அல்லி இதெ$^3$. | புத்தகம் அங்கே இருக்கிறது. |
| | கிடகி இல்லி இதெ$^3$. | ஜன்னல் இங்கே இருக்கிறது. |
| 2.8 | அவர ஹத்திர பெ$^3$ங்கிபட்டண இதெ$^3$. | அவரிடம் தீப்பெட்டி இருக்கிறது. |
| | அவர மனெ முன்தெ$^3$ ஆஸ்பத்ரெ இதெ$^3$. | அவர் வீட்டுக்கு முன்னால் ஆஸ்பத்திரி இருக்கிறது. |
| 2.9 | மேஜின மேலெ புஸ்தக இதெ$^3$. | மேஜையின் மீது புத்தகம் இருக்கிறது. |
| | மஞ்சத$^3$ கெளகெ$^3$ பெட்டிகெ$^3$ இதெ$^3$. | கட்டிலுக்குக் கீழே பெட்டி இருக்கிறது. |
| 2.10 | ஆ புஸ்தக நன்ன ஸ்னேஹிதனது$^3$. | அந்தப் புத்தகம் என் சினேகிதனுடையது. |
| | ஈ ஸீரெ ஸீதெயது$^3$. | இந்தப் புடவை சீதையினுடையது. |
| | ஈ ஹொஸ ஷர்டு ராமனது$^3$. | இந்தப் புதிய சட்டை ராமனுடையது. |
| 2.11 | அல்லி யாவுத$^3$ாத$^3$ரு ப$^3$ாடி$^3$கெ$^3$ மனெ இதெ$^3$யா? | அங்கே ஏதாவது வாடகை வீடு இருக்கிறதா? |
| | நிம்ம ஹத்திர யாவுத$^3$ாத$^3$ரு கதெ$^2$ புஸ்தக இதெ$^3$யா? | உங்களிடம் ஏதாவது கதைப் புத்தகம் இருக்கிறதா? |
| | இல்லி எல்லியாத$^3$ரு அங்க$^3$டி இதெ$^3$யா? | இங்கே எங்காவது கடை இருக்கிறதா? |
| 2.12 | கன்னட$^3$ அத்$^4$யாபகி எந்த$^2$வரு? | கன்னட ஆசிரியை எப்படிப்பட்டவர்? |
| | ஆ ஹுடுக$^3$ எந்த$^2$வனு? | அந்தச் சிறுவன் எப்படிப்பட்டவன்? |
| | நின்ன ஸ்னேஹிதி கமல எந்த$^2$வளு? | உன் சினேகிதி கமலா எப்படிப்பட்டவள்? |
| 2.13 | கன்னட$^3$ அத்$^4$யாபகி ஒள்ளெயவரு. | கன்னட ஆசிரியை நல்லவர். |
| | ஆ ஹுடுக$^3$ கெட்டவனு. | அந்தப் பையன் மோசமானவன். |
| | நன்ன ஸ்னேஹிதி கமல ஒள்ளெயவளு. | என் சினேகிதி கமலா நல்லவள். |

## 3. குறிப்புகள்

3.1. கன்னட வேற்றுமைத் தொடர்களை ஊன்றிக் கவனியுங்கள்.

3.1.1 பெயர்ச்சொற்களின் வேற்றுமைகள்:

இவை பெயர்ச்சொற்களுடன் பால் வேறுபாடு காட்டாத 'அது$^3$', 'அவு' போன்ற சுட்டுச்சொற்களைச் சேர்த்து உருவாக்கப்படுகின்றன.

ராமன + அது$^3$ = ராமனது$^3$

ராமன + அவு = ராமனவு.

இவ்வேற்றுமையில் 'அ' மறைவதைக் கவனியுங்கள்.

3.1.2 மாற்றுப் பெயர்ச்சொற்களின் வேற்றுமைகள்:

நன்ன + அவனு = நன்னவனு

நன்ன + அவளு = நன்னவளு

நன்ன + அவரு = நன்னவரு

நன்ன + அது$^3$ = நன்னது$^3$

நன்ன + அவு = நன்னவு

அத$^3$ர + அது$^3$ = அதரது$^3$

இத$^3$ர + அது$^3$ = இத$^3$ரது$^3$.

3.1.3 பெயரடை வேற்றுமைகள்:

இவை பெயரடைகளுடன் படர்க்கை மாற்றுப் பெயர்ச்சொற்களைச் சேர்த்துப் பெறப்படுகின்றன.

தெ$^3$ாட்$^3$ட$^3$ + அவனு = தெ$^3$ாட்$^3$ட$^3$வனு

சிக்க + அவளு = சிக்கவளு

ஒள்ளெய + அவரு = ஒள்ளெயவரு

கெட்ட + அது$^3$ = கெட்டது$^3$

கெட்ட + அவு = கெட்டவு

இந்த வேற்றுமைகள் பெயர்ச்சொற்களுக்கு முன்னால் ஒருபோதும் அமையமாட்டா என்பதைக் கவனியுங்கள். ஆனால், இவை வாக்கியங்களின் எழுவாய்களாக அமையலாம். (எ-டு). நன்னது$^3$ ஹொள்ளெய மனெ.

கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனியுங்கள்.

| | |
|---|---|
| இவளு நன்ன மக$^3$ளு. | இவள் என்னுடைய மகள். |
| ஈ மகு$^3$ நன்னது$^3$. | இந்தக் குழந்தை என்னுடையது. |



| | |
|---|---|
| இது$^3$ நன்ன மனெ. | இது என்னுடைய வீடு. |

3.2 வினாப்பொருளைக் குறிக்கும் 'ஆ' பெயரடையுடன் சேரும்போது, உகர ஈறு மறையும்.

ஹொஸது$^3$ + ஆ = ஹொஸத$^3$ா

கெட்டது$^3$ + ஆ = கெட்டத$^3$ா.

3.3 'அல்லி' என்பது இடத்தைக் குறிக்கும் சுட்டுச்சொல். இது தமிழின் 'இல்' என்பதற்கு நிகர்.

மனெ + அல்லி = மனெயல்லி

பெ$^3$ங்க$^3$ளூர் + அல்லி = பெ$^3$ங்க$^3$ளூரினல்லி.

3.4 பெயர்ச்சொற்களைத் தொடர்ந்து அமையும்

| | |
|---|---|
| முன்தெ$^3$ | முன்னால் |
| ஹின்தெ$^3$ | பின்னால் |
| பல பக்க | வலப் பக்கம் |
| எட$^3$ பக்க | இடப் பக்கம் |
| மேலெ | மேலே |
| கெளகெ$^3$ | கீழே |

என்பவையும் இடத்தைச் சுட்டும் சொற்கள்.

| | |
|---|---|
| மனெய முந்தெ$^3$ | வீட்டின் முன்னால் |
| மேஜின மேலெ | மேஜையின் மேலே. |

3.5 'ஆத$^3$ரு' என்பதைக் கீழ்க்கண்டவற்றுடன் சேர்த்து

| | |
|---|---|
| எல்லி | எங்கே |
| யாரு | யார் |
| ஏனு | என்ன |
| யாகெ | ஏன் |
| ஹேகெ$^3$ | எப்படி |

பின்வரும் வடிவங்கள் பெறப்படுகின்றன:

| | |
|---|---|
| எல்லியாத$^3$ரு | எங்கேயாவது |
| யாராத$^3$ரு | யாராவது |
| ஏனாத$^3$ரு | என்னவாவது (ஏதாவது) |

| | |
|---|---|
| யாகாத$^3$ரு | ஏனென்றாலும் |
| ஹேக$^3$ாத$^3$ரு | எப்படியாவது. |

3.6 கன்னட ‘இதெ$^3$’ தமிழில் ‘இருக்கிறது (உள்ளது)’ என்பதற்கு நிகர். ‘இதெ$^3$’ என்பதற்கு எதிர்ச்சொல் ‘இல்ல’.

4. பயிற்சி

4.1 பொருத்தமான சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 ஆ கிடகி . . . . . . . . . . .

4.1.2 நிம்ம மனெ . . . . . . . . . . இதெ$^3$?

4.1.3 நிம்ம ஷாலெய . . . . . . . . . . ஏனு?

4.1.4 நன்ன . . . . . . . . . . கண்ணடி$^3$ இதெ$^3$.

4.1.5 அவன . . . . . . . . . . பஸ்ஸு இதெ$^3$.

4.2 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள தமிழ்ச் சொற்களுக்கு நிகரான கன்னடச் சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.2.1 அவர மனெய . . . . . . . . . . சித்ரமந்தி$^3$ர இதெ$^3$. (பின்னால்)

4.2.2 இது$^3$ . . . . . . . . . . மனெ. (வாடகை)

4.2.3 இவளு நன்ன . . . . . . . . . . மக$^3$ளு. (சொந்த)

4.2.4 மனெ . . . . . . . . . . இதெ$^3$. (சற்றுத் தொலைவில்)

4.2.5. ஆ அத்$^4$யாபகி தும்பா$^3$ . . . . . . . . . . (நல்லவர்)

4.3 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள சொற்களின் பொருத்தமான வடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.3.1 அவர மனெ . . . . . . . . . . இதெ$^3$. (ஸரஸ்வதிபுர)

4.3.2 நிம்ம ஊரு . . . . . . . . . . ? (தொ$^3$ட்$^3$ட$^3$)

4.3.3 ஈ ஷர்டு நன்ன . . . . . . . . . . (சினெஹித)

4.3.4 நம்ம மனெ . . . . . . . . . . அங்க$^3$டி$^3$ இதெ$^3$. (பக்க)

4.4. எடுத்துக்காட்டில் உள்ளபடி மாற்று வடிவங்களை எழுதுக.

4.4.1 (எ – டு) சிக்க : சிக்கது$^3$

ஒள்ளெய



அவனு

ஹொஸ

ஹளெய

யாவ

4.4.2 (எ–டு) நீவு : நிம்ம

நானு

அவனு

அவளு

அவரு

அது$^3$

4.4.3 (எ–டு) ஸ்னேஹித : ஸ்னேஹிதனது$^3$

கமல

ராம

அண்ண

அக்க

4.4.5 (எ– டு) ரவி : ரவிய

தாயி

மனெ

நாயி

ரஜனி

4.4.5 (எ – டு) ஜெயநக$^3$ர : ஜெயநக$^3$ரத$^3$ல்லி

புஸ்தக

மனெ

ஜாலஹள்ளி

ஊரு

4.4.6 (எ – டு) ராமு : ராமுவினது$^3$

வேணு

ஹஸு

மகு$^3$

கு$^3$ரு

4.5 எடுத்துக்காட்டில் உள்ளபடி மாற்று வடிவங்களை எழுதுக.

(எ- டு) அது$^3$ தொ$^3$ட்$^3$ட$^3$ மனெ : ஆ மனெ தொ$^3$ட்$^3$ட$^3$து$^3$

4.5.1 அது$^3$ சிக்க புஸ்தக.

4.5.2 இது$^3$ ஹொஸ ஸ்த$^2$ள.

4.5.3 அவளு கெட்ட ஹுடு$^3$கி$^3$.

4.5.4 அது$^3$ நன்ன தங்கி$^3$ய மனெ.

4.5.5 அவனு ஹொள்ளெய ஹுடுக$^3$.

4.5.6 அது$^3$ என்த$^2$ மனெ?

4.6 கீழ்க்கண்டவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.61 மைசூர் பெரிய நகரம்.

4.6.2 என் வீட்டிற்குப் பின்னால் ஒரு கடை இருக்கிறது.

4.6.3 அது கமலாவின் புத்தகம்.

4.6.4 என் தந்தை எங்கள் சொந்த ஊரில் இருக்கிறார்.

4.6.5 உன் நாய் எங்கே?

4.7 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை எழுதுக:

4.7.1 நிம்ம மனெ எல்லி இதெ$^3$?

4.7.2 நிம்மது$^3$ ஸ்வந்த மனேனோ பா$^3$டி$^3$கெ$^3$ மனேனோ?

4.7.3 நிம்ம மனெய கு$^3$ருது ஏனு?

5. சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| எட$^3$ பக்க | இடப் பக்கம் |
| எல்லி | எங்கே |
| கு$^3$ருது | அடையாளம் |
| தெங்கி$^3$ன மர | தென்னை மரம் |
| தூ$^3$ர | தூரம், தொலைவு |
| ப$^3$ல பக்க | வலப் பக்கம் |
| பா$^3$டி$^3$கெ$^3$ | வாடகை |
| முன்தெ$^3$ | முன்னால் |
| ஸ்வந்த$^2$ | சொந்தம் |
| ஸ்வல்ப | கொஞ்சம், சிறிது |
| ஹின்தெ$^3$ | பின்னால். |



5.1. துணைச் சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| ஆனெ | யானை |
| காடு$^3$ | காடு |
| காலேஜு | கல்லூரி |
| கிடகி | ஜன்னல் |
| க$^3$ணி | சுரங்கம் |
| சப்பலி | செருப்பு |
| சின்ன | தங்கம் |
| ஜாக$^3$ | இடம் |
| பெட்டிகெ$^3$ | பெட்டி |
| பெ$^3$ங்கிபட்டண | தீப்பெட்டி |
| ரூமு | ரூம், அறை |
| ஸைகலு | சைக்கிள் |
| ஸீரெ | சேலை, புடவை |
| ஷ$^2$ர்ட்டு | சர்ட் , சட்டை. |

## பாடம் 6

### 1. உரையாடல்:

| | |
|---|---|
| ஷிவா: ஒன்து$^3$ கேஜி ப$^3$த$^3$னெகாயி எஷ்$^2$டு பெ$^3$லெ? | ஒரு கிலோ கத்தரிக்காய் என்ன விலை? |
| தரகாரி வியாபாரி: ஒன்து$^3$ கேஜி ப$^3$த$^3$னெகாயி எண்டுவரெ ரூபாயி. | ஒரு கிலோ கத்தரிக்காய் எட்டரை ரூபாய். |
| ஷிவா: நிம்ம அங்க$^3$டி$^3$யல்லி பெ$^3$லெ ஜாஸ்தி. | உங்கள் கடையில் விலை அதிகம். |
| த. வி.: இல்ல ஸார். ஈக$^3$ ஹப்$^3$ப$^3$த$^3$ ஸீஸனு, எல்லா தரகாரி பெ$^3$லேனு ஜாஸ்தி. | இல்லை சார். இது பண்டிகை சீசன். எல்லா காய்கறி விலையும் அதிகம். |
| ஷிவா: அர்த$^3$ கேஜி டொமேடோ ஹண்ணிகெ$^3$ எஷ்$^2$டு. | அரை கிலோ தக்காளிப் பழம் எவ்வளவு? |
| த. வி. : ஹத்துவரெ ரூபாயி. | பத்தரை ரூபாய். |
| ஷிவா: டொமேடோ பெ$^3$லெ அஷ்$^2$டு ஜாஸ்தினா? | தக்காளி விலை அவ்வளவு அதிகமா? |
| த. வி.: ஹவ்து$^3$ ஸார். மார்கெட்டினல்லி டொமேடோ ஹண்ணே இல்ல. | ஆமாம் சார். மார்க்கட்டில் தக்காளிப் பழமே இல்லை. |
| ஷிவா: ஆ கும்ப$^3$ளே காயி எஷ்$^2$டு? | அந்தப் பூசணிக்காய் எவ்வளவு? |
| த. வி.: தெ$^3$ாட்$^3$ட$^3$து$^3$க்கோ சிக்கது$^3$க்கோ? | பெரியதா சிறியதா? |
| ஷிவா: தெ$^3$ாட்$^3$டதுக்கெ எஷ்$^2$டு சிக்கது$^3$க்கெ எஷ்$^2$டு? | பெரியது எவ்வளவு சிறியது எவ்வளவு? |
| த. வி.: தெ$^3$ாட்$^3$ட$^3$து$^3$க்கெ ஏழு ரூபாயி. சிக்கது$^3$க்கெ நால்கு ரூபாயி. | பெரியது ஏழு ரூபாய். சிறியது நாலு ரூபாய். |
| ஷிவா: தெ$^3$ாட்$^3$ட$^3$து$^3$ கடி$^3$மெ இல்வ? | பெரியது விலை குறைவாக இல்லையா? |
| த. வி.: இல்ல ஸார். எல்லா தாஜா மாலு. ஒந்தே$^3$ பெ$^3$லெ. | இல்லை சார். எல்லாம் புதிய சரக்கு. ஒரே விலை. |
| ஷிவா: கோளி மொட்டெகெ$^3$ எஷ்$^2$டு? | கோழி முட்டை எவ்வளவு? |
| த. வி.: கோளி மொட்டெகெ$^3$ ஒந்து$^3$ ரூபாயி எப்பத்து பைஸ. | கோழி முட்டை ஒரு ரூபாய் எழுபது பைசா. |
| ஷிவா: கொத்தம்ப$^3$ரி ஸொப்பு? | கொத்துமல்லித் தழை? |
| த. வி.: ஒந்து$^3$ க$^3$ண்டிகெ$^3$ அய்வத்து பைஸ. | ஒரு கட்டுக்கு ஐம்பது பைசா. |



### 1.1 உரையாடல்

| | |
|---|---|
| போஸ்ட்மாஸ்டர்: நிமகெ$^3$ ஏனு பே$^3$கு ஸார்? | உங்களுக்கு என்ன வேண்டும் சார்? |
| ஷங்கர: நனகெ$^3$ அய்து$^3$ இன்லியாண்ட் லெட்டர் பே$^3$கு. ஒந்து$^3$ இன்லியாண்ட் லெட்டர்கெ$^3$ எஷ்$^2$டு? | எனக்கு ஐந்து இன்லேண்ட் லெட்டர் வேண்டும். ஒரு இன்லேண்ட் லெட்டர் எவ்வளவு? |
| போ.மா.: ஒந்த$^3$க்கெ எரடு$^3$ ரூபாய். ஆ மேலெ ஏனு பே$^3$கு ஸார்? | ஒன்று இரண்டு ரூபாய். பிறகு என்ன வேண்டும் சார்? |
| ஷங்கர: என்வலப் இதெ$^3$யா? | என்வலப் இருக்கிறதா? |
| போ.மா.: இல்ல ஸார். என்வலப் ஸ்டாக் இல்ல. ஸ்டாம்ப் இதெ$^3$. | இல்லை சார். என்வலப் ஸ்டாக் இல்லை. ஸ்டாம்பு இருக்கிறது. |
| ஷங்கரா: மூரு ரூபாய்து$^3$ ஆரு ஸ்டாம்ப் பே$^3$கு. அத்து பைஸேது$^3$ ஏழு ஸ்டாம்ப் பே$^3$கு. | மூன்று ரூபாய் ஸ்டாம்பு ஆறு வேண்டும். பத்துப் பைசா ஸ்டாம்பு ஏழு வேண்டும். |
| போ.மா. : இன்னேனு பே$^3$கு ஸார்? | வேறு என்ன வேண்டும் சார்? |
| ஷங்கர: ஹன்னெரடு$^3$ கார்டு$^3$ பே$^3$கு. | பன்னிரண்டு கார்டு வேண்டும். |
| போ.மா.: இன்னேனூ பே$^3$ட$^3$வா ஸார்? | வேறெதுவும் வேண்டாமா சார்? |
| ஷங்கர: பேட$^3$. | வேண்டாம். |
| போ.மா.: யாரிகெ$^3$ ஸார் இஷ்$^2$டொந்து$^3$ கார்டு$^3$? | யாருக்கு சார் இத்தனை கார்டுகள்? |
| ஷங்கர: நால்கு நன்ன சினேஹிதனிகெ$^3$, அய்து$^3$ நன்ன தங்கி$^3$ கமலகெ$^3$, மூரு நனகெ$^3$. | நான்கு என் சினேகிதனுக்கு, ஐந்து என் தங்கை கமலாவுக்கு, மூன்று எனக்கு. |

### 2. மாதிரிப் பயிற்சி

| | |
|---|---|
| 2.1 நிம்ம மனெகெ$^3$ பா$^3$டி$^3$கெ$^3$ எஷ்$^2$டு? | உங்கள் வீட்டுக்கு வாடகை எவ்வளவு? |
| பெ$^3$ங்க$^3$ளூரிகெ$^3$ சார்ஜு எஷ்$^2$டு? | பெங்களூருக்குக் கட்டணம் எவ்வளவு? |
| 2.2 ஒந்து$^3$ கிலோ ஹுரளிகாயிகெ$^3$ எண்டு ரூபாயி. | ஒரு கிலோ பீன்ஸ் எட்டு ரூபாய். |
| ஆ புஸ்தக மூரு ரூபாயி. | அந்தப் புத்தகம் மூன்று ரூபாய். |

| | | |
|---|---|---|
| | தெங்கி$^3$னகாயி எரட$^3$க்கெ ஹன்னெரடு$^3$ ரூபாயி. | இரண்டு தேங்காய்கள் பன்னிரண்டு ரூபாய். |
| 2.3 | அவனிகெ$^3$ ஏனு பே$^3$கு? | அவனுக்கு என்ன வேண்டும்? |
| | நனகெ$^3$ ஒந்து$^3$ சபாதி பே$^3$கு. | எனக்கு ஒரு சப்பாத்தி வேண்டும். |
| | நினகெ$^3$ எஷ்$^2$டு தோ$^3$ஸெ பே$^3$கு? | உனக்கு எத்தனை தோசை வேண்டும்? |
| | அவரிகெ$^3$ ஹன்னெரடு$^3$ ரூபாயி பே$^3$கு. | அவருக்குப் பன்னிரண்டு ரூபாய் வேண்டும். |
| | அவளிகெ$^3$ ஏனூ பே$^3$ட$^3$. | அவளுக்கு எதுவும் வேண்டாம். |
| 2.4 | ஸீதெகெ$^3$ ஆ ஸீரெ பே$^3$ட$^3$வா? | சீதைக்கு அந்தச் சேலை வேண்டாமா? |
| | ரஜனிகெ$^3$ ஹத்து ரூபாயி பே$^3$கு. | ரஜனிக்குப் பத்து ரூபாய் வேண்டும். |
| | ராமனிகெ$^3$ இப்பத்து ரூபாயி பே$^3$கு. | ராமனுக்கு இருபது ரூபாய் வேண்டும். |
| | ஆ காலேஜிகெ$^3$ ஒள்ளெய ஹெஸரு இதெ$^3$. | அந்தக் கல்லூரிக்கு நல்ல பெயர் இருக்கிறது. |

## 3. குறிப்புகள்

கன்னடத்தின் 'இகெ$^3$', 'அகெ$^3$', 'அக்கெ' என்பவை தமிழின் 'க்கு' என்பதற்கு நிகர்.

3.1 'இகெ$^3$'வின் பயன்:

3.1.1 பால் வேறுபாடு காட்டாத உகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள், உயர்திணைப் பெயர்ச் சொற்கள், உயர்திணைப் படர்க்கை மாற்றுப் பெயர்ச்சொற்கள் ஆகியவையுடன் 'இகெ$^3$' சேரும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காலேஜு | + இகெ$^3$ | = | காலேஜிகெ$^3$ | கல்லூரிக்கு |
| ஊரு | + இகெ$^3$ | = | ஊரிகெ$^3$ | ஊருக்கு |
| பஸ்ஸு | + இகெ$^3$ | = | பஸ்ஸிகெ$^3$ | பஸ்ஸுக்கு |
| ராம | + இகெ$^3$ | = | ராமனிகெ$^3$ | ராமனுக்கு |
| தம்ம | + இகெ$^3$ | = | தம்மனிகெ$^3$ | தம்பிக்கு |
| சரஸ | + இகெ$^3$ | = | சரஸனிகெ$^3$ | சரஸாவுக்கு |
| அவனு | + இகெ$^3$ | = | அவனிகெ$^3$ | அவனுக்கு |
| அவளு | + இகெ$^3$ | = | அவளிகெ$^3$ | அவளுக்கு |
| அவரு | + இகெ$^3$ | = | அவரிகெ$^3$ | அவருக்கு. |



3.1.1. எல்லா வகையான இகர, எகர ஈற்றுப் பெயர்ச்சொற்களுடனும் 'கெ$^3$' சேரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸுமதி | + கெ$^3$ | = | ஸுமதிகெ$^3$ | சுமதிக்கு |
| ராதெ$^4$ | + கெ$^3$ | = | ராதெ$^4$கெ$^3$ | ராதாவுக்கு |
| மனெ | + கெ$^3$ | = | மனெகெ$^3$ | வீட்டுக்கு |
| நாயி | + கெ$^3$ | = | நாயிகெ$^3$ | நாய்க்கு |
| தர்காரி | + கெ$^3$ | = | தர்காரிகெ$^3$ | காய்கறிக்கு. |

3.1.2 தன்மை, முன்னிலை மாற்றுப் பெயர்ச்சொற்களுடன் 'அகெ$^3$' சேரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| நானு | + அகெ$^3$ | = | நனகெ$^3$ | எனக்கு |
| நாவு | + அகெ$^3$ | = | நமகெ$^3$ | நமக்கு |
| நீனு | + அகெ$^3$ | = | நினகெ$^3$ | உனக்கு |
| நீவு | + அகெ$^3$ | = | நிமகெ$^3$ | உங்களுக்கு. |

3.1.3 பால் வேறுபாடு காட்டாத அகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள், பால் வேறுபாடு காட்டாத படர்க்கைப் பெயர்ச்சொற்கள், எண்ணுப் பெயர்கள் ஆகியவை 'அக்கெ' ஏற்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மர | + அக்கெ | = | மரக்கெ | மரத்துக்கு |
| காக$^3$த$^3$ | + அக்கெ | = | காக$^3$த$^3$க்கெ | கடிதத்துக்கு |
| அது$^3$ | + அக்கெ | = | அத$^3$க்கெ | அதற்கு |
| ஒந்து$^3$ | + அக்கெ | = | ஒந்த$^3$க்கெ | ஒன்றுக்கு |
| நூரு | + அக்கெ | = | நூரக்கெ | நூற்றுக்கு. |

3.2 இப்பாடத்தில் எண்ணுப் பெயர்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| ஒந்து$^3$ | ஒன்று |
| எரடு$^3$ | இரண்டு |
| மூரு | மூன்று |
| நால்கு | நான்கு |
| அய்து$^3$ | ஐந்து |
| ஆரு | ஆறு |
| ஏளு | ஏழு |
| எண்டு | எட்டு |
| ஒம்ப$^3$த்து | ஒன்பது |
| ஹத்து | பத்து. |

இந்த எண்ணுப் பெயர்களைக் கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகளைப்போல விரிவுபடுத்தலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஹத்து | + | ஒந்து$^{3}$ | = | ஹன்னொந்து$^{3}$ | பதினொன்று |
| ஹத்து | + | எரடு$^{3}$ | = | ஹன்னெரடு$^{3}$ | பன்னிரண்டு |
| ஹத்து | + | மூரு | = | ஹதி$^{3}$மூரு | பதின்மூன்று |
| ஹத்து | + | நால்கு | = | ஹதி$^{3}$நால்கு | பதினான்கு |
| ஹத்து | + | அய்து$^{3}$ | = | ஹதி$^{3}$னைது$^{3}$ | பதினைந்து |
| ஹத்து | + | ஆரு | = | ஹதி$^{3}$னாரு | பதினாறு |
| ஹத்து | + | ஏளு | = | ஹதி$^{3}$னேளு | பதினேழு |
| ஹத்து | + | எண்டு | = | ஹதி$^{3}$னெண்டு | பதினெட்டு |
| ஹத்து | + | ஒம்ப$^{3}$த்து | = | ஹத்தொம்ப$^{3}$த்து | பத்தொன்பது |
| ஹத்து | + | ஹத்து | = | இப்பத்து | இருபது. |

தமிழில் உள்ளதுபோலவே கன்னடத்திலும் எண்ணுப் பெயர்கள் அமைவதைக் கவனியுங்கள். இருபதிலிருந்து எண்ணுப் பெயர்கள் பத்தின் மடங்கு + அடிப்படை எண்ணுப் பெயர் என அமையும்.

எடுத்துக்காட்டாக,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இப்பத்து | + | ஒந்து$^{3}$ | = | இப்பத்தொந்து$^{3}$ | இருபத்தொன்று |
| இப்பத்து | + | எரடு$^{3}$ | = | இப்பத்தெரடு$^{3}$ | இருபத்திரண்டு. |

அடிப்படை எண்ணுப் பெயர்களுடன் 'ஹத்து' என்பதைச் சேர்த்துப் பத்தின் மடங்குகளுக்கான எண்ணுப் பெயர்கள் பெறப்படுகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூரு | × | ஹத்து | = | மூவத்து | முப்பது |
| நால்கு | × | ஹத்து | = | நலவத்து | நாற்பது |
| அய்து$^{3}$ | × | ஹத்து | = | அய்வத்து | ஐம்பது |
| ஆரு | × | ஹத்து | = | அரவத்து | அறுபது |
| ஏளு | × | ஹத்து | = | எப்பத்து | எழுபது |
| எண்டு | × | ஹத்து | = | எம்ப$^{3}$த்து | எண்பது |
| ஒம்ப$^{3}$த்து | × | ஹத்து | = | தொம்ப$^{3}$த்து | தொண்ணூறு. |

நூற்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கைகளையும் இவ்வாறே பெறலாம்.

| | |
|---|---|
| நூர ஒந்து$^{3}$ | நூற்றியொன்று |
| நூர ஹத்து | நூற்றுப் பத்து. |

'உடைய' என்னும் பொருளைத் தரும் வேற்றுமை உருபான 'அ' முதல் எண்ணிக்கையுடன் சேர்க்கப்படுகிறது. கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகளைக் காண்க.

| | |
|---|---|
| அய்து$^{3}$ நூர ஹத்து | ஐந்நூற்றுப் பத்து |
| ஒந்து$^{3}$ ஸாவிரத$^{3}$ எரடு$^{3}$ | ஓர் ஆயிரத்து இரண்டு. |



3.3 'பே$^{3}$கு' (வேண்டும்), 'பே$^{3}$ட$^{3}$' (வேண்டாம்) என்பவை இப்பாடத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| நனகெ$^{3}$ காபி$^{2}$ பே$^{3}$கு. | எனக்குக் காபி வேண்டும் |
| ரஜனிகெ$^{3}$ நீரு பே$^{3}$ட$^{3}$. | ரஜனிக்குத் தண்ணீர் வேண்டாம். |

3.4 'எஷ்$^{2}$டு' என்பது அளவை வினவும் பொருளில் அமைகிறது. தமிழின் 'எவ்வளவு', 'எத்தனை' என்னும் இரண்டையும் குறிக்கும்.

## 4. பயிற்சி

4.1. பொருத்தமான சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 நிம்ம அங்க$^{3}$டி$^{3}$யல்லி ஸவ்தேகாயி . . . . . . . . . . ?

4.1.2 அவளிகெ$^{3}$ இன்னேனு பே$^{3}$கு . . . . . . . . . . ?

4.1.3 ஸரோஜன வயசு . . . . . . . . . . ?

4.1.4 . . . . . . . . . . ஒந்து$^{3}$ க$^{3}$ண்டிகெ$^{3}$ ஐவத்து பைஸ.

4.2 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள தமிழ்ச் சொற்களுக்கு நிகரான கன்னடச் சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.2.1 நனகெ$^{3}$ ஒந்து$^{3}$ கிலோ . . . . . . . . . . பே$^{3}$கு. (கத்தரிக்காய்)

4.2.2 எல்லா ஸாமானிகூ$^{3}$ . . . . . . . . . . ஜாஸ்தி. (விலை)

4.2.3 . . . . . . . ஒந்த$^{3}$க்கெ ஒந்து$^{3}$ ரூபாயி அய்வத்து பைஸ. (முட்டை)

4.2.4 அவரிகெ$^{3}$ இட்$^{3}$லி ஸாம்ப$^{3}$ார் . . . . . . . . . . (வேண்டாம்)

4.3 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள சொற்களின் பொருத்தமான வடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.3.1 . . . . . . . . . . ஏனு பே$^{3}$கு? (நீவு)

4.3.2 தெ$^{3}$ாட்$^{3}$ட$^{3}$ . . . . . . . . . . எஷ்$^{2}$டு? (கும்ப$^{3}$ளகாயி)

4.3.3 . . . . . . . . . . ஆரு ஸ்டியாம்ப். (ஆரு பைஸ)

4.3.4 ஸவ்தேகாயி . . . . . . . . . . ? (இல்ல)

4.4 எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் மாற்று வடிவங்களை எழுதுக:

(எ – டு) பெ$^{3}$ண்டே$^{3}$காயி : பெ$^{3}$ண்டே$^{3}$காயிகெ$^{3}$

மாலினி

ரவி

நாதி$^3$னி

ஸீதெ

மனெ

அத்தெ

ஸவ்தெகாயி

4.4.2 (எ – டு) ப$^3$ாளே ஹண்ணு : ப$^3$ாளே ஹண்ணிகெ

கொத்தம்ப$^3$ரி ஸொப்பு

காலு

மக$^3$ளு

அவனு

அவளு

அவரு

4.4.3 (எ – டு) சிக்கது$^3$ : சிக்கத$^3$க்கெ

தெ$^3$ாட்$^3$ட$^3$து$^3$

ஒந்து$^3$

எரடு$^3$

ஆரு

அது$^3$

4.4.4 (எ – டு) நானு : நனகெ$^3$

நீனு

நீவு

4.4.5 (எ – டு) ராஜு : ராஜுவிகெ$^3$

ராமு

ஹஸு

கு$^3$ரு

ஸரயு

கரு



4.4.6 (எ – டு) கமல : கமலனிகெ$^3$

அஷோக

வினுத

மக$^3$

ப$^3$ாவ

4.5 கீழ்க்கண்டவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

எனக்குக் காபி வேண்டும்.

இந்த வீட்டுக்கு வாடகை எவ்வளவு?

அனிதாவுக்குக் கத்தரிக்காய் வேண்டாம்.

உனக்கு வேறென்ன வேண்டும்?

பெரிய பூசணிக்காய் என்ன விலை?

4.6 கீழ்க்கண்டவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

அய்து$^3$ ஜாஸ்தி

கடி$^3$மெ ஆமேலெ

4.7 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

நிமகெ$^3$, ஏனு பே$^3$கு?

ஸவிதன ஸீரெகெ$^3$ எஷ்$^2$டு ரூபாயி?

நிம்ம மக$^3$ளிகெ$^3$ ஹப்$^3$ப$^3$க்கெ ஹொஸ லங்க$^3$ பே$^3$ட$^3$வா?

நிமகெ$^3$ ஸம்ப$^3$ள எஷ்$^2$டு?

5. சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| ஆமேலெ | பிறகு |
| இன்னேனு | வேறென்ன |
| எஷ்$^2$டு | எவ்வளவு, எத்தனை |
| கடி$^3$மெ | குறைவு |
| க$^3$ண்டு | கொத்து |
| கொத்தம்ப$^3$ரி ஸொப்பு | கொத்துமல்லி தழை (இலை) |
| மொட்டெ | முட்டை |

| | |
|---|---|
| கும்ப$^3$ளகாயி | பூசணிக்காய் |
| ஜாஸ்தி | அதிகம் |
| டொமேடோ | தக்காளி |
| தரகாரி | காய்கறி |
| தாஜா மாலு | புதிய சரக்கு |
| ப$^3$த$^3$னெகாயி | கத்தரிக்காய் |
| பெ$^3$லெ | விலை |
| ஹப்$^3$ப$^3$ | பண்டிகை, திருவிழா |

**5.1. துணைச் சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| காலு | கால் |
| ப$^3$ாளெஹண்ணு | வாழைப்பழம் |
| பெ$^3$ண்டெ$^3$காயி | வெண்டைக்காய் |
| வயஸ்ஸு | வயது |
| ஸாமானு | சாமான் |
| ஸவ்தேகாயி | வெள்ளரிக்காய் |
| ஹுரளிகாயி | மொச்சைக்காய். |



## பாடம் 7

**1. உரையாடல்**

| | | |
|---|---|---|
| கமல: | ஈவத்து எஷ்$^2$டனே தாரீகு$^2$? | இன்று என்ன தேதி? |
| ஷீல: | ஈவத்து ஹன்னொன்த$^3$னே தாரீகு$^2$. | இன்று பதினொன்றாம் தேதி. |
| கமல: | நாளெ ஹன்னெரட$^3$னே தாரீகு$^2$. மங்க$^3$ளவார நமகெ$^3$ ரஜா. | நாளை பன்னிரண்டாம் தேதி. செவ்வாய்க்கிழமை எங்களுக்கு விடுமுறை. |
| ஷீல: | யாகெ? | ஏன்? |
| கமல: | நாளெ நம்ம காலேஜின வார்ஷி$^2$கோத்ஸவ. | நாளை எங்கள் கல்லூரி ஆண்டுவிழா. |
| ஷீலா: | முக்கிய அதிதி யாரு? | முக்கிய விருந்தினர் யார்? |
| கமல: | முக்கிய அதிதி Dr. சர்வஞ்ய. | முக்கிய விருந்தினர் Dr. சர்வஞ்ய. |
| ஷீல: | நிம்ம காலேஜு தெ$^3$ாட்$^3$ட$^3$ காலேஜா? | உங்கள் கல்லூரி பெரிய கல்லூரியா? |
| கமல: | ஹவ்து$^3$. தும்ப$^3$ தெ$^3$ாட்$^3$ட$^3$ காலேஜு. | ஆமாம். மிகவும் பெரிய கல்லூரி. |
| ஷீல: | வித்$^3$யார்தி$^2$க$^3$ள ஸங்க்$^2$யெ எஷ்$^2$டு? | மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? |
| கமல: | வித்$^3$யார்தி$^2$க$^3$ள ஸங்க்$^2$யெ ஒன்து$^3$ ஸாவிரத$^3$ இன்னூரு. | மாணவர்களின் எண்ணிக்கை ஓர் ஆயிரத்து இருநூறு. |
| ஷீல: | வித்$^3$யார்தி$^2$க$^3$ளு எஷ்$^2$டு ஜன? வித்$^3$யார்தி$^2$னியரு எஷ்$^2$டு ஜன? | மாணவர்கள் எத்தனை பேர்? மாணவிகள் எத்தனை பேர்? |
| கமல: | வித்$^3$யார்திக$^3$ளு எண்டுநூரு வித்$^3$யார்தி$^2$னியரு நானூரு. | மாணவர்கள் எண்ணூறு. மாணவியர் நானூறு. |
| ஷீல: | அத்$^4$யாபகரு எஷ்$^2$டு ஜன? | ஆசிரியர்கள் எத்தனை பேர்? |
| கமல: | நாவு அத்$^4$யாபகரு அரவத்து ஜன. | நாங்கள் ஆசிரியர்கள் அறுபது பேர். |
| ஷீல: | அத்$^4$யாபகியரு? | ஆசிரியைகள்? |
| கமல: | அவரு ஹத்து ஜன. | அவர்கள் பத்துப் பேர். |
| ஷீல: | நிம்ம காலேஜினல்லி எஷ்$^2$டு ரூம்க$^3$ளு இவெ? | உங்கள் கல்லூரியில் எத்தனை அறைகள் இருக்கின்றன? |
| கமல: | இப்பத்தைது$^3$ ரூம்க$^3$ளு இவெ. | இருபத்தைந்து அறைகள் இருக்கின்றன. |

### 1.1 உரையாடல்

| | |
|---|---|
| ரவி: நிமகெ$^{3}$ எஷ்$^{2}$டு ஜன மக்களு? | உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? |
| ரங்க: நால்கு ஜன. | நான்கு பேர். |
| ரவி: ஹெண்ணு மக்களு எஷ்$^{2}$டு ஜன? | பெண் குழந்தைகள் எத்தனை பேர்? |
| க$^{3}$ண்டு$^{3}$ மக்களு எஷ்$^{2}$டு ஜன? | ஆண் குழந்தைகள் எத்தனை பேர்? |
| ரங்க: க$^{3}$ண்டு$^{3}$ மக்களு மூவரு. | ஆண் குழந்தைகள் மூன்று பேர். |
| ஹெண்ணு மக$^{3}$ளு ஒப்ப$^{3}$ளு. | பெண் குழந்தை ஒருத்தி. |
| ரவ: க$^{3}$ண்டு$^{3}$ மக்களு எஷ்$^{2}$டனே க்ளாஸு? | ஆண் குழந்தைகள் எந்த வகுப்பு? |
| ரங்க: மொத$^{3}$லனெயவனு B.A. | முதலாமவன் B.A. முதல் ஆண்டு. |
| இப்பரு ஹைஸ்கூலு. மகளு ஹைஸ்கூலு கொனே வர்ஷ$^{2}$. | இருவர் உயர்நிலைப்பள்ளி. மகள் உயர் நிலைப்பள்ளியில் இறுதி ஆண்டு. |

### 2. மாதிரிப் பயிற்சி

| | |
|---|---|
| 2.1 ஈவத்து ஸோமவார. | இன்று திங்கட்கிழமை. |
| ஈவத்து இப்பத்தொந்த$^{3}$னெய தாரீகு$^{2}$. | இன்று இருபத்தொன்றாம் தேதி. |
| நாளெ மங்க$^{3}$ளவார. | நாளை செவ்வாய்க்கிழமை. |
| நாளெ இப்பத்தெரட$^{3}$னேய தாரீகு$^{2}$. | நாளை இருபத்திரண்டாம் தேதி. |
| நென்னெ ப$^{4}$ானுவார. | நேற்று ஞாயிற்றுக்கிழமை. |
| நாடி$^{3}$த்$^{3}$து$^{3}$ பு$^{3}$து$^{3}$வார. | நாளை மறுநாள் புதன்கிழமை. |
| நாடி$^{3}$த்$^{3}$து$^{3}$ இப்பத்துமூரனெய தாரீகு$^{2}$. மொன்னெ ஷனிவார. | நாளை மறுநாள் இருபத்து மூன்றாம் தேதி. முந்தாநாள் சனிக்கிழமை. |
| மொன்னெ ஹதி$^{2}$னெண்டனெய தாரீகு$^{2}$. ஆச்செ நாடி$^{3}$த்$^{3}$து$^{3}$ கு$^{3}$ருவார. | முந்தாநாள் பதினெட்டாம் தேதி. நாளை மறுநாளுக்கு மறுநாள் வியாழக்கிழமை. |
| ஆச்செ நாடி$^{3}$த்$^{3}$து$^{3}$ இப்பத்நால்கனெய தாரீகு$^{2}$. | நாளை மறுநாளுக்கு மறுநாள் இருபத்து நான்காம் தேதி. |
| ஆச்செ மொன்னெ ஸுக்ரவார. | முந்தாநாளுக்கு முதல்நாள் வெள்ளிக்கிழமை. |



| | |
|---|---|
| ஆச்செ மொன்னெ ஹதி$^{3}$னேளனெய தாரீகு$^{2}$. | முந்தாநாளுக்கு முதல்நாள் பதினேழாம் தேதி. |
| 2.2 ஸ்ரீராம தஸரத$^{2}$ன மொத$^{3}$லனெய மக$^{3}$. | ஸ்ரீராமன் தசரதனின் முதல் மகன் |
| லக்ஷ்மண மூரனெய மக$^{2}$. | லட்சுமணன் மூன்றாம் மகன். |
| ப$^{4}$ரத எரட$^{3}$னெய மக$^{3}$. | பரதன் இரண்டாம் மகன். |
| 2.3 ஈவத்து எஷ்$^{2}$டனெய தாரீகு$^{2}$? | இன்றைக்கு என்ன தேதி? |
| நிம்ம மகளு எஷ்$^{2}$டனெய க்ளாசு? | உங்கள் மகள் எந்த வகுப்பு? |
| ஸ்ரீராம தஸரத$^{3}$ன எஷ்$^{2}$டனெய மக$^{3}$? | ஸ்ரீராமன் தசரதனுக்கு எத்தனையாவது மகன்? |
| 2.4 அது$^{3}$ ஒந்து$^{3}$ புஸ்தக. | அது ஒரு புத்தகம். |
| அவு எரடு$^{3}$ புஸ்தகக$^{3}$ளு. | அவை இரண்டு புத்தகங்கள். |
| இவு நால்கு பென்னுக$^{3}$ளு. | இவை நான்கு பேனாக்கள். |
| ஈ அய்து$^{3}$ நாயிக$^{3}$ளு நம்மவு. | இந்த ஐந்து நாய்களும் எங்களுடையவை. |
| 2.5 அவனு ஒப்$^{3}$ப$^{3}$ ஹுடு$^{3}$க$^{3}$. | அவன் ஒரு பையன். |
| நாவு இப்$^{3}$ப$^{3}$ரு வித்$^{3}$யார்தி$^{2}$க$^{3}$ளு. | நாங்கள் இருவரும் மாணவர்கள். |
| நம்ம மனெயல்லி எரடு$^{3}$ பெ$^{3}$க்குக$^{3}$ளு இவெ. | எங்கள் வீட்டில் இரு பூனைகள் உள்ளன. |
| அவரு மூவரு கன்னட$^{3}$ வித்$^{3}$யார்தி$^{2}$னியரு. | அவர்கள் மூவர் கன்னட மாணவிகள். |
| பாண்ட$^{3}$வரு அய்வரு. | பாண்டவர்கள் ஐவர். |
| தி$^{3}$ரௌபதி$^{3}$ய க$^{3}$ண்ட$^{3}$ந்தி$^{3}$ரு அய்து$^{3}$ ஜன. | திரௌபதியின் கணவர்கள் ஐந்து பேர். |
| அவரு இப்$^{3}$ப$^{3}$ரு நம்ம ஆளுகளு. | அவர்கள் இருவர் எங்கள் வேலைக்காரர்கள். |
| 2.6 ஈக$^{3}$ ஹத்து க$^{3}$ண்டெ. | இப்போது பத்து மணி. |
| ஹன்னெரடு$^{3}$ க$^{3}$ண்டெகெ$^{3}$ ஹதி$^{3}$னைது$^{3}$ நிமிஷ இதெ$^{3}$. | பன்னிரண்டு மணிக்குப் பதினைந்து நிமிடங்கள் உள்ளன. |
| ஈக$^{3}$ எரடு$^{3}$வரெ க$^{3}$ண்டெ. | இப்போது இரண்டரை மணி. |
| ஹன்னொந்து$^{3}$ முக்காலு க$^{3}$ண்டெகெ$^{3}$ க்ளாஸு இதெ$^{3}$. | பதினொன்றே முக்கால் மணிக்கு வகுப்பு உள்ளது. |

| | |
|---|---|
| நினகெ$^3$ ஒம்ப$^3$த்து முக்காலு | உனக்கு ஒன்பதேமுக்கால் |
| க$^3$ண்டெகெ$^3$ காபி$^2$ பே$^3$கா? | மணிக்குக் காபி வேண்டுமா? |

## 3. குறிப்புகள்

3.1 அடிப்படை எண்ணுப் பெயர்களுடன் 'அனெய'/ 'அனே' சேர்த்து எண்ணுப் பெயரடைகள் பெறப்படுகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒந்து$^3$ | + அனெய | = | ஒந்த$^3$னெய | முதலாம் |
| ஹத்து | + அனெய | = | ஹத்தனெய | பத்தாம் |
| மூரு | + அனெய | = | மூரனெய | மூன்றாம் |

எஷ்$^2$டு என்பதும் 'அனெய' / 'அனே' ஏற்று அளவு பற்றிய வினாப்பொருளைக் குறிக்கும்.

எஷ்$^2$டு + அனெய = எஷ்$^2$டனெய எத்தனையாவது.

'அனே' என்பது 'அனெ'யின் பேச்சு வழக்கு.

3.2 இப்பாடத்தில் பன்மை விகுதிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. மூன்று பன்மை விகுதிகள் உள்ளன. அவை 'அன்தி$^3$ரு', 'அரு', 'க$^3$ளு'.

3.2.1 அகர ஈற்று உறவுப் பெயர்ச்சொற்கள் 'அன்தி$^3$ரு' விகுதி ஏற்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அண்ண | + அன்தி$^3$ரு | = | அண்ணன்தி$^3$ரு | அண்ணன்கள் |
| ப$^4$ாவ | + அன்தி$^3$ரு | = | ப$^4$ாவன்தி$^3$ரு | மச்சான்மார்கள் |
| அக்க | + அன்தி$^3$ரு | = | அக்கன்தி$^3$ரு | அக்காள்கள் |

3.2.2 உயர்திணைப் பெயர்ச்சொற்கள் 'அரு' விகுதி ஏற்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அத்$^4$யாபக | + அரு | = | அத்$^4$யாபகரு | ஆசிரியர்கள் |
| வித்$^3$யார்தி$^2$னி | + அரு | = | வித்$^3$யார்தி$^2$னியரு | மாணவிகள் |
| ஸொஸெ | + அரு | = | ஸொஸெயரு | மருமகள்கள் |

3.2.3 அஃறிணைப் பெயர்ச்சொற்கள் 'க$^3$ளு' விகுதி ஏற்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மர | + க$^3$ளு | = | மரக$^3$ளு | மரங்கள் |
| குர்சி | + க$^3$ளு | = | குர்சிக$^3$ளு | நாற்காலிகள் |
| தி$^3$ன | + க$^3$ளு | = | தி$^3$னக$^3$ளு | தினங்கள் |
| வர்ஷ$^2$ | + க$^3$ளு | = | வர்ஷ$^2$க$^3$ளு | வருடங்கள் |
| ஹஸு | + க$^3$ளு | = | ஹஸுக$^3$ளு | பசுக்கள் |

விதிவிலக்காக 'க$^3$ளு' விகுதி ஏற்கும் சில உயர்திணைப் பெயர்ச்சொற்களும் உள்ளன.



| | | | | |
|---|---|---|---|---|
| மந்த்ரி | + க$^3$ளு | = | மந்த்ரிக$^3$ளு | மந்திரிகள் |
| கு$^3$ரு | + க$^3$ளு | = | கு$^3$ருக$^3$ளு | ஆசிரியர்கள் |
| வித்$^3$யார்தி$^2$ | + க$^3$ளு | = | வித்$^3$யார்தி$^2$க$^3$ளு | மாணவர்கள் |

3.3. 'நாவு' (நாங்கள்) தன்மை பன்மை மாற்றுப் பெயர்ச்சொல்.

3.4 உயர்திணைப் பெயர்ச் சொற்களுக்கு முன்னால் வரும் எண்ணுப் பெயர்கள் உயர்திணைப் பண்பை ஏற்கின்றன.

| | |
|---|---|
| அது$^3$ ஒந்து$^3$ மர. | அது ஒரு மரம். |
| அவனு ஒப்$^3$ப$^3$ ஹுடு$^3$க$^3$. | அவன் ஒரு பையன். |

இதேபோல்,

| | | | |
|---|---|---|---|
| எரடு$^3$ | → | இப்$^3$ப$^3$ரு | இருவர் |
| மூரு | → | மூவரு | மூவர் |
| நால்கு | → | நால்வரு | நால்வர் |
| அய்து$^3$ | → | அய்வரு | ஐவர். |

'ஆரு' என்பதுடன் 'அரு' சேர்வதில்லை. ஆனால், ஆறிலிருந்து 'ஜன' என்பது இணைகிறது.

| | |
|---|---|
| ஆரு ஜன | ஆறு பேர் |
| ஹத்து ஜன | பத்து பேர் |
| நூரு ஜன | நூறு பேர் |

'எஷ்$^2$டு' என்பதுடனும் 'ஜன' இணையும்.

| | |
|---|---|
| அல்லி எஷ்$^2$டு ஜன இத$^3$ரெ? | அங்கு எத்தனை பேர் இருக்கிறார்கள்? |

3.5 ஆயிரத்துக்கு மேற்பட்ட எண்ணுப் பெயர்களைக் கவனியுங்கள்.

| | |
|---|---|
| ஒந்து$^3$ ஸாவிரத$^3$ நூர ஹத்து | ஓர் ஆயிரத்து நூற்று ஒன்று |

இங்கு 'ஸாவிர' என்பது 'அ' உருபை ஏற்கிறது. ஓர் எண்ணுப் பெயர் தொடர்ந்து வரும்போது, 'நூரு' என்பது 'நூர' என்றாகிறது.

| | |
|---|---|
| நூர எண்டு | நூற்று எட்டு |
| ஸாவிரத$^3$ ஒம்பைநூரு நலவத்தேளு | ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தேழு. |

4. பயிற்சி

41. பொருத்தமான சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 ஈவத்து . . . . . . . . . . . . . . தாரீகு$^2$?

4.1.2 ப$^4$ானுவார நமகெ$^3$ . . . . . . . . . . . . .

4.1.3 ரவிகெ$^3$ . . . . . . . . . . . . மக்களு?

4.1.4 ஸமாரம்ப$^4$த$^3$ . . . . . . . . . . . . . மனோஹர.

4.2 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள தமிழ்ச் சொற்களுக்கு நிகரான கன்னடச் சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.2.1 நனகெ$^3$ . . . . . . . . . . . . மக$^3$ளு. (ஒரு)

4.2.2 மாத$^3$விய . . . . . . . . . . . . மக$^3$ யாவ க்ளாசு? (முதல்)

4.2.3 சுரேஷன மனெயல்லி . . . . . . . . . . . . ரூமுக$^3$ளிவெ. (பதினைந்து)

4.2.4 ஷாலினிகெ$^3$ . . . . . . . . . . . . தங்கி$^3$யரு. (இரண்டு)

4.2.5 இது$^3$ . . . . . . . . . . . . மனெ. (எங்கள்)

4.3 எடுத்துக்காட்டில் உள்ளபடி மாற்று வடிவங்களை எழுதுக.

4.3.1 (எ–டு) ஒந்து$^3$ : ஒந்த$^3$னெய

எரடு$^3$

எஷ்$^2$டு

மொத$^3$லு

4.3.2 (எ–டு) வித்$^3$யார்தி$^2$ : வித்$^3$யார்தி$^2$க$^3$ளு

மந்த்ரி

ஆளு

ஆஸ்பத்ரெ

மர

4.3.3 (எ–டு) வித்$^3$யார்தி$^2$னி : வித்$^3$யார்தி$^2$னியரு

ஹ~டு$^3$கி$^3$

அத்தெ

தங்கி$^3$

நாதி$^3$னி

அத்$^4$யாபகி



4.3.4 (எ–டு) அத்$^4$யாபக : அத்$^4$யாபகரு

ஹ~டு$^3$க$^3$

கு$^3$மாஸ்தா

வைத்$^3$ய

வித்$^3$வாம்ஸ

4.4 கோடிட்ட சொற்களின் அடிப்படையில் கீழ்க்கண்டவற்றை வினா வாக்கியங்களாக மாற்றுக.

4.4.1 ஈவத்து கு$^3$ருவார.

4.4.2 நாளெ ஹத்தினே தாரீகு$^2$.

4.4.3 நனகெ$^3$ நால்கு ஜன மக்களு.

4.4.4 ரவிகெ$^3$ அய்து$^3$ ரூபாயி பே$^3$கு.

4.4.5 அவள ஹெஸரு லீலா.

4.4.6 அது$^3$ மாலதிய மனெ.

4.4.7 அவர மாத்ரு ப$^4$ாஷெ$^2$ தெலுகு$^3$ அல்ல.

4.5 கீழ்க்கண்டவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.5.1 இன்றைக்கு என்ன கிழமை?

4.5.2 என் மகளின் பிறந்தநாள் அக்டோபர் 10ஆம் தேதி.

4.5.3 எங்களுக்குப் பெங்களூரில் இரண்டு வீடுகள் உள்ளன.

4.5.4 உங்கள் வகுப்பின் மாணவர் எண்ணிக்கை எவ்வளவு?

4.5.5 உங்களுக்கு எத்தனை பெண்கள்?

4.6 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

4.6.1 நிம்ம மக$^3$ன/ மக$^3$ள பரீக்ஷெ$^2$ யாவாக$^3$?

4.6.2 நிமகெ$^3$ எஷ்$^2$டு ஜன தங்கி$^3$யரு / தம்மந்தி$^3$ரு?

4.6.3 நாளெ நிமகெ$^3$ ரஜானா?

4.6.4 நீவு ஒப்$^3$ப$^3$னே/ ஒப்$^3$ப$^3$ளே மக$^3$னா/ மக$^3$ளா?

5. சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| ஈவத்து | இன்று |
| க$^3$ண்டு$^3$ மக்களு | ஆண் குழந்தைகள் |

| | |
|---|---|
| ஜன்மதி$^3$ன | பிறந்தநாள் |
| தாரீகு$^2$ | தேதி |
| நாளெ | நாளை |
| மங்க$^3$ளவார | செவ்வாய்க்கிழமை |
| முக்கிய அதிதி$^2$ | முக்கிய விருந்தினர் |
| ரஜா | விடுமுறை |
| வார்ஷி$^2$கோத்ஸவ | ஆண்டுவிழா |
| சங்க்$^2$யெ | எண்ணிக்கை |
| ஹெண்ணுமக்களு | மகள்கள்/ பெண்கள் |

## 5.1. துணைச் சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| ஆளு | வேலைக்காரன் |
| க$^3$ண்டெ | மணி |
| கு$^3$ருவார | வியாழக்கிழமை |
| நிமிஷ$^2$ | நிமிடம் |
| பெ$^3$க்கு | பூனை |
| பு$^3$த$^4$வார | புதன்கிழமை |
| ப$^4$ாவ | ஒருவருடைய வாழ்க்கைத் துணைவரின் அண்ணன் |
| ப$^4$ானுவார | ஞாயிற்றுக்கிழமை |
| ஸோமவார | திங்கட்கிழமை |
| ஷனிவார | சனிக்கிழமை |
| ஷுக்ரவார | வெள்ளிக்கிழமை. |



# பாடம் 8

**1. உரையாடல்:**

| | |
|---|---|
| ப$^3$ட்டெ வியாபாரி: ஏனு பே$^3$கு ஸார்? | என்ன வேண்டும் சார்? |
| ரமேஷ்: நனகெ$^3$ ஷர்டிகெ$^3$ பேண்டிகெ$^3$ ப$^3$ட்டெ பே$^3$கு. | எனக்குச் சர்ட்டுக்கு, பேன்ட்டுக்குத் துணி வேண்டும். |
| ப$^3$. வி.: யாவ ப$^3$ட்டெ பே$^3$கு ஸார்? | என்ன துணி வேண்டும் சார்? |
| ரமேஷ்: ஷர்டிகெ$^3$ பாலியெஸ்டர், பேண்டிகெ டெரிவுல் பே$^3$கு. | சர்ட்டுக்குப் பாலியெஸ்டர், பேன்டுக்கு டெரிவுல் வேண்டும். |
| ப$^3$. வி.: ஷர்ட் ப$^3$ட்டெகெ$^3$ யாவ ப$^3$ண்ண பே$^3$கு ஸார்? | சர்ட் துணிக்கு எந்த வண்ணம் வேண்டும் சார்? |
| ரமேஷ்: யாவ ப$^3$ண்ண இதெ$^3$? | எந்த வண்ணம் இருக்கிறது? |
| ப$^3$. வி.: கெம்பு, பி$^3$ளி, நீலி, ஹளதி$^3$ எல்லா இதெ$^3$. | சிவப்பு, வெள்ளை, நீலம், மஞ்சள் எல்லாம் இருக்கிறது. |
| ரமேஷ்: கெம்பு பே$^3$ட$^3$. அது$^3$ நனகெ$^3$ இஷ்$^2$ட இல்லா. நீலி நனகெ$^3$ இஷ்$^2$ட. | சிவப்பு வேண்டாம். அது எனக்குப் பிடிக்காது. நீலம் எனக்குப் பிடிக்கும். |
| ப$^3$. வி.: எஷ்$^2$டு பே$^3$கு ஸார்? | எவ்வளவு வேண்டும் சார்? |
| ரமேஷ்: எரடு$^3$ மீடர் பே$^3$கு. | இரண்டு மீட்டர் வேண்டும். |
| ப$^3$. வி.: ஷர்டிகெ$^3$ எரடு$^3$ மீடர் ஸாலல்ல ஸார். | சர்ட்டுக்கு இரண்டு மீட்டர் போதாது சார். |
| ரமேஷ்: நனகெ$^3$ எரடு$^3$ மீடர் ஸாக்கு. | எனக்கு இரண்டு மீட்டர் போதும். |
| ப$^3$. வி.: பேண்டிகெ$^3$ யாவ ப$^3$ண்ண பே$^3$கு ஸார்? | பேன்ட்டுக்கு எந்த வண்ணம் வேண்டும் சார்? |
| ரமேஷ்: பேண்டிகெ$^3$ கப்பு பே$^3$கு. | பேன்டுக்குக் கறுப்பு வேண்டும். |
| ப$^3$. வி.: பி$^3$ளிது$^3$ பே$^3$ட$^3$வா ஸார்? ரேமாண்ட$^3$ஸ் இதெ$^3$. | வெள்ளை வேண்டாமா சார்? ரேமாண்ட்ஸ் இருக்கிறது. |
| ரமேஷ்: பே$^3$ட. கரீதே$^3$ பே$^3$கு. | வேண்டாம். கறுப்பே வேண்டும். |
| ப$^3$. வி.: ஸாரி ஸார். | சாரி சார். |
| ரமேஷ்: நிம்மல்லி ஸ்வெடர் இல்வா? | உங்களிடம் ஸ்வெட்டர் இல்லையா? |
| ப$^3$. வி.: இல்ல ஸார். நம்தே$^3$ இன்னொந்து$^3$ அங்க$^3$டி$^3$ இதெ$^3$. அல்லி ஸ்வெடர் இதெ$^3$. | இல்லை சார். எங்களுடையதே இன்னொரு கடை இருக்கிறது. அங்கே ஸ்வெட்டர் இருக்கிறது. |

| | |
|---|---|
| ரமேஷ்: நிம்ம அங்க$^3$டி$^3$ எல்லி இதெ$^3$? | உங்கள் கடை எங்கே இருக்கிறது? |
| ப$^3$. வி.: நிமகெ$^3$ வாஸவி க்ளோத் ஸென்டர் கெ$^3$ாத்தா ஸார்? | உங்களுக்கு வாசவி க்ளோத் சென்டர் தெரியுமா சார்? |
| ரமேஷ்: இல்ல கெ$^3$ாத்தில்லா. | இல்லை தெரியாது. |
| ப$^3$. வி.: ஸங்க$^3$ம் தியேடர் கெ$^3$ாத்தா? | சங்கம் தியேட்டர் தெரியுமா? |
| ரமேஷ்: ஹவ்து$^3$. கெ$^3$ாத்து. | ஆமாம். தெரியும். |
| ப$^3$. வி.: அத$^3$ர பக்கத$^3$ல்லி இதெ$^3$. | அதற்குப் பக்கத்தில் இருக்கிறது. |

**2. மாதிரிப் பயிற்சி**

| | |
|---|---|
| 2.1 ஆ பி$^3$ளி ஷர்ட் யாரது$^2$? | அந்த வெள்ளை சர்ட் யாருடையது? |
| ஈ ஹஸிரு லங்க$^3$ா நன்னது$^3$. | இந்தப் பச்சைப் பாவாடை என்னுடையது |
| ஈ கெம்பு பென்னின பெ$^3$லெ எஷ்$^2$டு? | இந்தச் சிவப்புப் பேனாவின் விலை எவ்வளவு? |
| நனகெ$^3$ கப்பு கர்சீப்$^2$ பே$^3$ட$^3$. | எனக்குக் கறுப்புக் கர்ச்சீப் வேண்டாம். |
| ராமனிகெ$^3$ நீலி ப$^3$ண்ண பே$^3$கு. | ராமனுக்கு நீல வண்ணம் வேண்டும். |
| ரஜனிகெ$^3$ ஹளதி$^3$ ஸீரெ இஷ்$^2$ட. | ரஜனிக்கு மஞ்சள் சீலை பிடிக்கும். |
| ஆ கோ$^3$டெ$^3$ய ப$^3$ண்ண பி$^3$ளி. | அந்தச் சுவற்றின் வண்ணம் வெள்ளை. |
| அவர காரின ப$^3$ண்ண தெளி நீலி. | அவரது காரின் வண்ணம் வெளிர் நீலம். |
| அவன ஸைகல் கடு$^3$ நீலிது$^3$. | அவனது சைக்கிள் கெட்டி நீலம். |
| 2.2 ரவிகெ$^3$ கதெ$^2$ புஸ்தக இஷ்$^2$ட. | ரவிக்குக் கதைப் புத்தகம் பிடிக்கும். |
| ரஜனிகெ$^3$ கதெ$^2$ புஸ்தக இஷ்$^2$ட இல்ல. | ரஜனிக்குக் கதைப் புத்தகம் பிடிக்காது. |
| அவளிகெ$^3$ சபாதி இஷ்$^2$ட இல்லா. | அவளுக்குச் சப்பாத்தி பிடிக்காது. |
| நனகெ$^3$ உப்பினகாயி இஷ்$^2$ட. | எனக்கு ஊறுகாய் பிடிக்கும். |
| 2.3 நிமகெ$^3$ லிடே$^3$ா டாக்கீஸ் கெ$^3$ாத்தா? | உங்களுக்கு லிடோ டாக்கீஸ் தெரியுமா? |



| | |
|---|---|
| ராமனிகெ$^3$ ராவண கெ$^3$ாத்தா? | ராமனுக்கு ராவணனைத் தெரியுமா? |
| லலிதளிகெ$^3$ ஹிந்தி$^3$ ஸினிமா இஷ்$^2$டானா? | லலிதாவுக்கு இந்தி சினிமா பிடிக்குமா? |
| இவரிகெ$^3$ கன்னட$^3$ ஸினிமா இஷ்$^2$ட இல்வா? | இவருக்குக் கன்னடச் சினிமா பிடிக்காதா? |
| அவளிகெ$^3$ ஹத்து ரூபாயி பே$^3$கா? | அவளுக்குப் பத்து ரூபாய் வேண்டுமா? |
| நிமகெ$^3$ காபி$^2$ பே$^3$ட$^3$வா? | உங்களுக்குக் காபி வேண்டாமா? |
| இவரிகெ$^3$ அர்த$^3$ா கப் காபி$^2$ ஸாகா? | இவருக்கு அரை கப் காபி போதுமா? |
| நாயிகெ$^3$ ஒந்து$^3$ கப் ஹாலு ஸாலல்வா? | நாயிக்கு ஒரு கப் பால் போதாதா? |
| 2.4 நனகெ$^3$ மாலினி கெ$^3$ாத்து. | எனக்கு மாலினியைத் தெரியும். |
| அவரிகெ$^3$ ரவீந்தி$^3$ர கலாக்ஷேத்திர கெ$^3$ாத்து. | அவருக்கு ரவீந்திர கலாட்ஷேத்திரம் தெரியும். |
| ஹுடு$^3$க$^3$ரிகெ$^3$ வித$^4$ானஸௌத$^4$த$^3$ தா$^3$ரி கெ$^3$ாத்து. | பையன்களுக்கு விதான சௌதாவுக்கு வழி தெரியும். |
| இவனிகெ$^3$ ஹிந்தி$^3$ கெ$^3$ாத்து. | இவனுக்கு இந்தி தெரியும். |
| மனோஹர்கெ$^3$ கன்னட$^3$ கெ$^3$ாத்தில்ல. | மனோகருக்குக் கன்னடம் தெரியாது. |
| நனகெ$^3$ பிரஜாவாணி ஸம்பாத$^3$கரு கெ$^3$ாத்தில்ல. | எனக்குப் பிரஜாவாணி ஆசிரியரைத் தெரியாது. |
| 2.5 பீமனிகெ$^3$ அய்து$^3$ தோ$^3$ஸெ ஸாகு. | பீமனுக்கு ஐந்து தோசைகள் போதும். |
| குபே$^3$ரப்பனிகெ$^3$ திங்க$^3$ளிகெ$^3$ ஹத்து ரூபாயி ஸாகு. | குபேரப்பனுக்கு மாதத்துக்குப் பத்து ரூபாய் போதும். |
| நனகெ$^3$ தி$^3$னக்கெ இப்பத்நால்கு க$^3$ண்டெ ஸாலல்ல. | எனக்கு தினத்துக்கு இருபத்து நான்கு மணி (நேரம்) போதவில்லை. |
| அவனிகெ$^3$ திங்களிகெ$^3$ அய்து$^3$ ஸாவிர ரூபாயி ஸம்ப$^3$ள சாலல்ல. | அவனுக்கு மாதத்திற்கு ஐந்தாயிரம் ரூபாய் சம்பளம் போதவில்லை. |
| 2.6 ஆ அங்க$^3$டி$^3$யல்லி அக்கி இதெ$^3$. | அந்தக் கடையில் அரிசி இருக்கிறது. |

| | |
|---|---|
| ஈ அங்க$^{3}$டி$^{3}$யல்லி புஸ்தக இல்ல. | இந்தக் கடையில் புத்தகம் இல்லை. |
| நன்ன ஹத்திர ஒள்ளெய பென்னு இதெ$^{3}$. | என்னிடம் நல்ல பேனா இருக்கிறது. |
| அவர மனெயல்லி க$^{3}$டி$^{3}$யார இல்ல. | அவர்கள் வீட்டில் கடிகாரம் இல்லை. |

### 3. குறிப்புகள்

3.1 அடிப்படை வண்ணங்களின் (நிறங்களின்) பெயர்கள் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| பி$^{3}$ளி | வெள்ளை |
| கப்பு/ கரி | கறுப்பு |
| கெம்பு | சிவப்பு |
| ஹஸிரு | பச்சை |
| ஹளதி$^{3}$ | மஞ்சள் |
| நீலி | நீலம். |

வண்ணத்தின் பெயருடன் 'அது$^{3}$' சேர்த்துப் பயனிலை வடிவம் பெறப்படுகிறது.

பி$^{3}$ளி + அது$^{3}$ = பி$^{3}$ளியது$^{3}$

கெம்பு + அது$^{3}$ = கெம்புது$^{3}$.

3.2

| | |
|---|---|
| பே$^{3}$கு | வேண்டும் |
| இஷ்$^{2}$ட | பிடிக்கும், பிடித்திருக்கிறது |
| ஸாகு | போதும் |
| கொ$^{3}$த்து | தெரியும் |

என்பவை குறிப்பு வினைமுற்றுகள். இவை காலம் காட்டுவதில்லை. வினைச் சொற்களைப்போலன்றி இவை எழுவாயின்றியும் அமையும்.

| | |
|---|---|
| பே$^{3}$ட$^{3}$ | வேண்டாம் |
| இஷ்$^{2}$ட இல்ல | பிடிக்காது, பிடிக்கவில்லை |
| ஸாலல்ல | போதாது, போதவில்லை |
| கொ$^{3}$த்தில்ல | தெரியாது |

என்பவை முறையே மேற்கண்ட குறிப்பு வினைமுற்றுகளின் எதிர்ச் சொற்கள். இவை கண்டிப்பாக எழுவாயுடன் சேர்ந்தே அமையும்.



| | |
|---|---|
| நனகெ$^{3}$ திண்டி$^{3}$ பே$^{3}$கு. | எனக்குப் பலகாரம் வேண்டும் |
| அவளிகெ$^{3}$ ஹத்து ரூபாயி ஸாலல்ல. | அவளுக்குப் பத்து ரூபாய் போதாது. |

3.3 'இல்ல' வினைச்சொல்லை எதிர்மறை ஆக்குகிறது. 'அல்ல' பெயர்ச்சொல்லை எதிர்மறை ஆக்குகிறது. இரண்டையும் ஒப்பிட்டு நோக்குக.

நின்ன ஹத்திர பென்னு இதெ$^{3}$யா?

இல்ல. நன்ன ஹத்திர பென்னு இல்ல.

அல்ல. அது$^{3}$ நன்ன பென்னு அல்ல.

அது$^{3}$ நன்ன தம்மன பென்னு.

### 4. பயிற்சி

4.1 பொருத்தமான சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 நனகெ$^{3}$ . . . . . . . . . . இஷ்$^{2}$ட.

4.1.2 நிமகெ$^{3}$ நன்ன தன்தெ$^{3}$ . . . . . . . . . . ?

4.1.3 அவளிகெ$^{3}$ ஸங்கீ$^{3}$த து$^{3}$ம்ப$^{3}$ . . . . . . . . . . .

4.1.4 நனகெ$^{3}$ நின்ன ஸஹவாஸ க$^{2}$ண்டி$^{3}$த . . . . . . . . . .

4.1.5 ராஜூவிகெ$^{3}$ ஈக$^{3}$ கதெ$^{2}$ புஸ்தக . . . . . . . . . . .

4.2 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள தமிழ்ச் சொற்களுக்கு நிகரான கன்னடச் சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.2.1 அது$^{3}$ . . . . . . . . . . ஸீரெ. (பச்சை)

4.2.2 நனகெ$^{3}$ நால்கு ஸாவிர ரூபாயி ஸம்ப$^{3}$ள . . . . . . . . . . (போதாது)

4.2.3 ஷாலினிய மனெ ஸங்க$^{3}$ம் டாக்கீஸ் . . . . . . . . . . இதெ$^{3}$. (பக்கத்தில்)

4.2.4 ஸுமனிகெ$^{3}$ ஊடக்கெ எரடு$^{3}$ சபாதி . . . . . . . . . . (வேண்டாம்)

4.3 எடுத்துக்காட்டில் உள்ளபடி மாற்று வடிவங்களை எழுதுக.

4.3 (எ-டு) கப்பு : கப்பது$^{3}$

ஹஸிரு

கெம்பு

நீலி

பி$^{3}$ளி

4.4 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள சொற்களின் பொருத்தமான வடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.4.1 ஆ லங்க$^{3}$ . . . . . . . . . . . (நீலி)

4.4.2 ரவிகெ$^{3}$ நம்ம டைரக்டர் . . . . . . . . . . ? (கெ$^{3}$ாத்தில்ல)

4.4.3 ரவிகெ$^{3}$ எரடே$^{3}$ எரடு$^{3}$ ஷ$^{2}$ர்டு . . . . . . . . . . (ஸாகு)

4.4.4 நிமகெ$^{3}$ ஸீரெ . . . . . . . . . . ? (பே$^{3}$ட$^{3}$)

4.5 கீழ்க்கண்டவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

யார

அவரதே$^{3}$

ஹளதி$^{3}$

ப$^{3}$ட்டெ

அங்க$^{3}$டி$^{3}$

4.6. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.6.1 எனக்கு நீலப் பேனா வேண்டாம்.

4.6.2 காலைப் பலகாரத்திற்கு உனக்குச் சப்பாத்தி வேண்டுமா?

4.6.3 எனக்கு அந்தக் கடும் சிவப்புத் துணி பிடிக்கவில்லை.

4.6.4 உனக்குத் திரு. ரங்கநாத்தைத் தெரியுமா?

4.6.5 எனக்கு இரண்டு பாக்கெட் பிஸ்கட் வேண்டும்.

4.7 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

4.7.1 நிமகெ$^{3}$ யாவ ப$^{3}$ண்ணத$^{3}$ ப$^{3}$ட்டெ இஷ்$^{2}$ட?

4.7.2 நிமகெ$^{3}$ திண்டிகெ$^{3}$ சபாதி இஷ்$^{2}$டான?

4.7.3 நிமகெ$^{3}$ ஊடக்கெ எஷ்$^{2}$டு சபாதி பே$^{3}$கு?

4.7.4 நிமகெ$^{3}$ கர்நாடகத$^{3}$ முக்ய மந்த்ரி கெ$^{3}$ாத்தா?

4.7.5 நிமகெ$^{3}$ கன்னட$^{3}$ ஸினிமா இஷ்$^{2}$டானோ ஹிந்தி ஸினிமா இஷ்$^{2}$டானோ?

## 5. சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| கப்பு/ கரி | கறுப்பு |
| கெம்பு | சிவப்பு |
| நீலி | நீலம் |
| ப$^{3}$ட்டெ | துணி |
| ப$^{3}$ண்ண | வண்ணம், நிறம் |
| பி$^{3}$ளி | வெள்ளை |
| ஹளதி$^{3}$ | மஞ்சள். |



### 5.1 துணைச் சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| அக்கி | அரிசி |
| உப்பினகாயி | ஊறுகாய் |
| ஊட | சாப்பாடு |
| கடு$^{3}$ நீலி | கடு நீலம் |
| க$^{3}$டி$^{3}$யார | கடிகாரம் |
| கே$^{3}$ாடெ | சுவர் |
| தெளு நீலி | வெளிர் நீலம் |
| த$^{3}$ாரி | பாதை, வழி |
| லங்க$^{3}$ | பாவாடை |
| ஸம்பாத$^{3}$க | (பத்திரிகை) ஆசிரியன் |
| ஸம்ப$^{3}$ள | சம்பளம் |
| ஸஹவாச | தொடர்பு |
| ஹாலு | பால். |

## பாடம் 9

### 1. உரையாடல்

| | |
|---|---|
| விஜய: ஸும லேடீ$^3$ஸ் ரூமினல்லி இத$^3$ளா? | சுமா பெண்கள் அறையில் இருக்கிறாளா? |
| ஷஷி: இல்ல. அவளு ரூமினல்லி இல்ல. | இல்லை. அவள் அறையில் இல்லை. |
| அவளிகெ$^3$ ஈக$^3$ க்ளாஸ் இதெ$^3$. | அவளுக்கு இப்போது வகுப்பு இருக்கிறது. |
| அவளு க்ளாஸினல்லி இத$^3$ளெ. | அவள் வகுப்பில் இருக்கிறாள். |
| விஜய: நினகெ$^2$ ஈக$^3$ க்ளாஸ் இல்வா? | உனக்கு இப்போது வகுப்பு இல்லையா? |
| ஷஷி: இல்ல. நனகெ$^3$ க்ளாஸ் இல்ல. நனகெ$^3$ மூரு க$^3$ண்டெகெ$^3$ க்ளாஸ் இதெ$^3$. | இல்லை. எனக்கு வகுப்பு இல்லை. எனக்கு மூன்று மணிக்கு வகுப்பு இருக்கிறது. |
| விஜய: நிம்ம ப்$^2$ரொபெ$^2$ஸர் ஊரினல்லி இத$^3$ரா? | உங்கள் பேராசிரியர் ஊரில் இருக்கிறாரா? |
| ஷஷி: இல்ல. அவரு ஊரினல்லி இல்ல | இல்லை. அவர் ஊரில் இல்லை. |
| விஜய: ஸும நால்கு க$^3$ண்டெகெ$^3$ ரூமினல்லி இர்தாளா? | சுமா நான்கு மணிக்கு அறையில் இருப்பாளா? |
| ஷஷி: இரல்ல. அவளு நால்கு க$^3$ண்டெகெ$^3$ லைப்$^3$ரரீலி இர்தாளெ. | இல்லை. அவள் நான்கு மணிக்கு நூலகத்தில் இருப்பாள். |
| விஜய: நீனூ நால்கு க$^3$ண்டெகெ$^3$ லைப்$^3$ரரீலி இர்தியா? | நீயும் நான்கு மணிக்கு நூலகத்தில் இருப்பாயா? |

### 1.1. உரையாடல்

| | |
|---|---|
| ராக$^3$வ: நமஸ்கார, சென்னாகி$^3$ இதீ$^3$ரா? | வணக்கம், நன்றாக இருக்கிறீர்களா? |
| ராவ்: சென்னாகி$^3$ இதீ$^3$னி. நிம்ம தந்தெ$^3$ இத$^3$ரா? | நன்றாக இருக்கிறேன். உங்கள் தந்தை இருக்கிறாரா? |
| ராக$^3$வ: இல்ல. அவரு மனெயல்லி இல்ல. அங்க$^3$டீ$^3$லி இத$^3$ரெ. | இல்ல. அவர் வீட்டில் இல்லை. கடையில் இருக்கிறார். |



| | |
|---|---|
| ராவ்: யாகெ? நிம்ம அண்ண ஊருனல்லி இல்வா? | ஏன்? உங்கள் அண்ணன் ஊரில் இல்லையா? |
| ராக$^3$வ: இப்$^3$ப$^3$ரூ அல்லே இத$^3$ரெ. | இருவரும் அங்கேயே இருக்கிறார்கள். |
| ராவ்: நிம்ம தந்தெ$^3$ மனெயல்லி யாவாக$^3$ இர்தாரெ? ஸாயங்கால இர்தாரா? | உங்கள் தந்தை எப்போது வீட்டில் இருப்பார்? மாலையில் இருப்பாரா? |
| ராக$^3$வ: இரல்ல. ஸாயங்கால தோட$^3$ல்லி இர்தாரெ. ராத்ரி மனெயல்லி இர்தாரெ. | இருக்கமாட்டார். மாலையில் தோட்டத்தில் இருப்பார். இரவில் வீட்டிலிருப்பார். |

### 2. மாதிரிப் பயிற்சி

| | |
|---|---|
| 2.1 நானு மைஸூரினல்லி இதீ$^3$னி. | நான் மைசூரில் இருக்கிறேன். |
| நானு ஈக$^3$ ஹோடெலினல்லி இதீ$^3$னி. | நான் இப்போது ஓட்டலில் இருக்கிறேன். |
| நாவு ஆபீ$^2$ஸினல்லி இதீ$^3$வி. | நாங்கள் அலுவலகத்தில் இருக்கிறோம். |
| நாவு பெ$^3$ங்க$^3$ளூரினல்லி வாஸ இதீ$^3$வி. | நாங்கள் பெங்களூரில் வசிக்கிறோம். |
| நீவு எல்லி இதீ$^3$ரி? | நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? |
| நீவு யாவ பீ$^3$தி$^3$யல்லி இதீ$^3$ரி? | நீங்கள் எந்தத் தெருவில் இருக்கிறீர்கள்? |
| அவனு ஹத்தினே க்ளாஸினல்லி இத$^3$னெ. | அவன் பத்தாம் வகுப்பில் இருக்கிறான். |
| மல்லிகார்ஜுன மனெய ஒளகெ$^3$ இத$^3$னெ. | மல்லிகார்ஜுனன் வீட்டின் உள்ளே இருக்கிறான். |
| அவளு ஹாஸ்டலினல்லி இத$^3$ளெ. | அவள் விடுதியில் இருக்கிறாள். |
| பத்$^3$மா பி$^3$யாங்கினல்லி இத$^3$ளெ. | பத்மா வங்கியில் இருக்கிறாள். |
| அவரு பக்கத$^3$ மனெயல்லி இத$^3$ரெ. | அவர்கள் பக்கத்து வீட்டில் இருக்கிறார்கள். |
| நன்ன தந்தெ$^3$ தாயி ஊரினல்லி இத$^3$ரெ. | என் தாய் தந்தையர் ஊரில் இருக்கிறார்கள். |
| புஸ்தக மேஜின மேலெ இதெ$^3$. | புத்தகம் மேஜையின் மீது இருக்கிறது. |

| | |
|---|---|
| ஹண்ணுகளு மரத$^3$ல்லி இவெ. | பழங்கள் மரத்தில் இருக்கின்றன. |
| 2.2 நானு ஸாயங்கால ஸிடியல்லி இர்தீனி. | நான் மாலையில் நகரத்தில் இருப்பேன். |
| நாவு நாளெ பெ$^3$ங்க$^3$ளூரினல்லி இர்தீவி. | நாங்கள் நாளை பெங்களூரில் இருப்போம். |
| நீனு ஈவத்து மத்$^4$யான்ஹ எல்லி இர்தீய? | நீ இன்று மதியம் எங்கே இருப்பாய்? |
| நீவு பெ$^3$ளக்$^3$கெ$^3$ எண்டு க$^3$ண்டெகெ$^3$ எல்லி இர்தீரி? | நீங்கள் காலை எட்டு மணிக்கு எங்கே இருப்பீர்கள்? |
| அவனு தி$^3$னா ஸன்ஜெ அய்து$^3$ க$^3$ண்டெகெ$^3$ ஆடத$^3$ மைத$^3$ானதல்லி இர்தானெ. | அவன் தினமும் மாலை ஐந்து மணிக்கு விளையாட்டு மைதானத்தில் இருப்பான். |
| அவளு ஹத்து க$^3$ண்டெகெ$^3$ காலேஜினல்லி இர்தாளெ. | அவள் பத்து மணிக்குக் கல்லூரியில் இருப்பாள். |
| ஹஸு மத்$^4$யான்ஹ தோட்டத$^3$ல்லி இரத்தெ. | பசு மதியம் தோட்டத்தில் இருக்கும். |
| காருக$^3$ளு மனெயல்லி இரத்வெ. | கார்கள் வீட்டில் இருக்கும். |
| 2.3 அவனு ஊரினல்லி இல்ல. | அவன் ஊரில் இல்லை. |
| ஆ காத$^3$ம்ப$^3$ரி லைப்$^3$ரரியல்லி இல்ல. | அந்த நாவல் நூலகத்தில் இல்லை. |
| 2.4 நானு நாளெ மனெயல்லி இருவதி$^3$ல்ல. | நான் நாளை வீட்டில் இருக்கமாட்டேன். |
| அவரு இஷ்$^2$டு ஹொத்தினல்லி அங்க$^3$டியல்லி இருவதில்ல. | அவர் இந்த நேரத்தில் கடையில் இருக்கமாட்டார். |

### 3. குறிப்புகள்

3.1 'இரு' என்னும் வினைச்சொல் இப்பாடத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 'இரு' தனிவினையாகவும் துணைவினையாகவும் செயல்படுகிறது. இவ்வினைச்சொல் 'இத்$^3$', 'இர்' என்பவற்றின் அடியாகப் பிறக்கிறது. 'இத்' உறுதிப்பாடு நிலையிலும் 'இர்' ஐயப்பாடு அல்லது எதிர்பார்ப்பு நிலையிலும் அமைகிறது.

நன்ன சினேஹித மனெயல்லி இத$^3$ானெ.

இந்த வாக்கியத்தில், சினேகிதன் வீட்டில் இருப்பான் என்பது உறுதிப்பொருளில் அமைகிறது.

நன்ன சினெஹிதெ மத்$^4$யான்ஹ மனெயல்லி இர்தாளெ.



இந்த வாக்கியத்தில், 'இர்தாளெ' என்பது ஐயப்பொருளிலும் எதிர்காலத்தைக் குறிப்பதாவும் செயல்படுகிறது. இவ்வினை எதிர்பார்ப்புப் பொருளிலும் அமையலாம். எடுத்துக்காட்டாகக் கீழ்க்கண்ட வாக்கியத்தைக் கவனியுங்கள்.

அவளு தி$^3$ன நால்கு க$^3$ண்டெகெ$^3$ லைப்$^3$ரரியல்லி இர்தாளெ.

3.1 'இத்' உறுதிப்பொருளில் அமையும்போது வினைவடிவத்தைத் தனியாகக் காட்டாமல், நேரடியாகப் பெயர்ச்செல்லுடன் இணையும்.

எடுத்துக்காட்டாக,

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நானு | + இத் | + ஈனி | | நாவு | + இத் | + ஈவி | |
| நீனு | + இத் | + ஈயெ | | நீவு | + இத் | + ஈரி | |
| அவனு | + இத் | + ஆனெ | | அவரு | + இத் | + ஆரெ | |
| அவளு | + இத் | + ஆளெ | | அவு | + இவ் | + வெ | |
| அது | + இதெ$^3$ | | | | | | |

3.1.2 ஆனால் 'இர்' இறந்த காலத்தைக் குறிக்காத 'த்' என்னும் உருபுடன் முதலில் சேர்ந்து, பின்னர் மாற்றுப் பெயர்ச்சொல்லோடு இணையும். இப்படிக் கீழ்க்கண்ட வடிவங்கள் பெறப்படுகின்றன:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நானு | + இர் | + த் | + ஈனி | நாவு | + இர் | + த் | + ஈவி |
| நீனு | + இர் | + த் | + ஈயெ | நீவு | + இர் | + த் | + ஈரி |
| அவனு | + இர் | + த் | + ஆனெ | அவரு | + இர் | + த் | + ஆரெ |
| அவளு | + இர் | + த் | + ஆளெ | அவு | + இரு | + த் | + வெ/ |
| | | | | | இரு | + த் | + ஆவெ |
| அது$^3$ | + இரு | + த்த் | + எ | | | | |

பால் வேறுபாடு காட்டாத அஃறிணை ஒருமைப் படர்க்கை மாற்றுப் பெயர்ச்சொல்லோடு 'இர்' இணையும்போது 'த்' இரட்டிப்பதைக் கவனியுங்கள்.

'இல்ல', 'இரல்ல' என்பவை முறையே 'இத்$^3$', 'இர்' என்பவற்றின் எதிர்மறைகள். இவ்வெதிர்மறைகள் பால், நபர், எண் வேறுபாடு கொள்வதில்லை.

### 4. பயிற்சி

4.1 பொருத்தமான சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 . . . . . . . . . அவனு அங்க$^3$டி$^3$யல்லி இத$^3$ானெ.

4.1.2 . . . . . . . . . நம்ம தந்தெ$^3$ மனெயல்லி இத$^3$ாரெ.

4.1.3 . . . . . . . . . . இஷ்$^2$டு ஹொத்தினல்லி அங்க$^3$டி$^3$யல்லி இர்தானெ.

4.1.4 நனெகெ$^3$ ஹத்து க$^3$ண்டெகெ$^3$ க்ளாசு . . . . . . . . . . . .

4.1.5 அவரு பி$^3$யாங்கினல்லி . . . . . . . . . . .

4.2 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள சொற்களின் பொருத்தமான வடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.2.1 நிம்ம அக்க மனெயல்லி . . . . . . . . . . . ? (இரு)

4.2.2 கமலன தம்ம ஊரினல்லி . . . . . . . . . . . ? (இரு)

4.2.3 நிம்ம நாயி ஸத$^3$ா தோட்டத$^3$ல்லி . . . . . . . . . . .? (இரல்ல)

4.2.4 ஆஸ்பத்ரெயல்லி ட$^3$ாக்டரு . . . . . . . . . . . ? (இல்ல)

4.3. பொருத்துக:

| | | |
|---|---|---|
| 1. | நீனு யாவாக$^3$ மனெயல்லி | இத$^3$ாரெ |
| 2. | ஸுமதி ஈக$^3$ ஆஸ்பத்ரெயல்லி | இத$^3$ானெ |
| 3. | அவரு ஹேகெ$^3$ | இர்தீய |
| 4. | புஸ்தக மேஜின மேலெ | இர்தீரோ |
| 5. | நீவு ஸாயங்கால அங்க$^3$டி$^3$யல்லி | இதெ$^3$ |
| 6. | அரவிந்த$^3$ன தம்ம சென்னையல்லி | இத$^3$ாளெ |

4.4 கீழ்க்கண்டவற்றை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுக.

4.4.1 கமல அமெரிக்காத$^3$ல்லி இத$^3$ாளெ.

4.4.2 நிம்ம அண்ண ஊரினல்லி இத$^3$ாரா?

4.4.3 நன்ன புஸ்தக நின்ன ஹத்திர இதெ$^3$.

4.4.4 ராமராயரு இஷ்$^2$டு ஹொத்தினல்லி க்ளப்$^3$பி$^3$னல்லி இர்தாரா?

4.5 கீழ்க்கண்ட சொற்களை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

| | |
|---|---|
| 1. பெ$^3$ளக்$^3$கெ$^3$ | 4. கெளக்$^3$கெ$^3$ |
| 2. ஸாயங்கால | 5. ஊரு |
| 3. தோட | 6. ஆட்டத$^3$ மைத$^3$ான. |

4.6 கீழ்க்கண்டவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.61. நீங்கள் எந்நேரம் வீட்டிலிருப்பீர்கள்?

4.6.2 இந்நேரம் சுமா அங்கே இருக்கமாட்டாள்.



4.6.3 இருபத்தினான்கு மணி நேரமும் அவர் கிளப்பில் இருப்பார்.

4.6.4 அவன் அங்கே இல்லை.

4.6.5 பத்து மணிக்கு நீ அங்கே இருப்பாயா?

4.7 கீழக்கண்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

4.7.1. நீவு எல்லி வாஸ இதீ$^3$ரி?

4.7.2 நீவு தி$^3$ன ஸாயங்கால மனெயல்லி இர்தீரா?

4.7.3. நினகெ$^3$ ஸ்வந்த மனெ இதெ$^3$யா?

4.7.4 நிம்ம மனெயல்லி எஷ்$^2$டு ஜன இத$^3$ாரெ?

4.7.5 நிம்ம ஊரு யாவ ராஜ்யத$^3$, யாவ ஜில்லெயல்லி இதெ$^3$?

**5. சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| தோட | தோட்டம் |
| ராத்ரி | இரவு |
| ஸாயங்கால | மாலை |

**5.1. துணைச் சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| ஒளக்$^3$கெ$^3$ | உள்ளெ |
| கரு | கன்று |
| கெளக்$^3$கெ$^3$ | கீழே |
| க$^3$ண்டெ | மணி |
| பீ$^3$தி$^3$ | வீதி |
| பெ$^3$ளக்$^3$கெ$^3$ | காலை |
| மத்$^4$யான | பிற்பகல் |
| மேலெ | மேலே |
| வாச | வாசம்/ வசித்தல் |
| ஹண்ணு | பழம் |
| ஹொரகெ$^3$ | வெளியே. |

## பாடம் 10

### 1. உரையாடல்

| | | |
|---|---|---|
| ராஜு: | ப$^3$ா ரவி, ஏனு ஸமாசார? | வா ரவி, என்ன சமாச்சாரம்? |
| ரவி: | ஏனு இல்ல ராஜு. நாவெல்லா முந்தி$^3$ன வார பிக்னிக் ஹோகே$^3$ாணவா? | ஒன்றும் இல்ல. நாமெல்லாம் அடுத்த வாரம் பிக்னிக் போகலாமா? |
| ராஜு: | ஆக$^3$லி. எல்லிகெ$^3$ ஹோகே$^3$ாண? | ஆகட்டும். எங்கே போகலாம்? |
| ரவி: | நந்தி$^3$ பெ$^3$ட்டக்கெ ஹோகே$^3$ாண. | நந்தி மலைக்குப் போகலாம். |
| ராஜு: | யாரு யாரு ப$^3$ர்தாரெ? | யார் யார் வருகிறார்கள்? |
| ரவி: | மோஹன், கே$^3$ாபால ப$^3$ர்தாரெ. | மோகன், கோபால் வருகிறார்கள். |
| ராஜு: | சுரேஷ் ப$^3$ரல்வா? | சுரேஷ் வரவில்லையா? |
| ரவி: | ப$^3$ரல்ல. அவனிகெ$^3$ த$^3$ாரவாட$^3$த$^3$ல்லி கெலஸ இதெ$^3$. நாளெ ஹோகு$^3$தானெ. ஹதி$^3$னைது$^3$ தி$^3$னத$^3$ மேலெ ப$^3$ர்தானெ. | வரவில்லை. அவனுக்குத் தார்வாடில் வேலை இருக்கிறது. நாளை போகிறான். பதினைந்து தினங்களுக்குப் பிறகு வருவான். |
| ராஜு: | மானோஹர? | மனோகர்? |
| ரவி: | அவனன்ன கேள்ளா? | அவனைக் கேட்கட்டுமா? |
| ராஜு: | கேளு. அவனூ ப$^3$ரலி. பிக்னிக்கிகெ$^3$ ஒள்ளளெ கம்பெனி இரலி. | கேள். அவனும் வரட்டும். பிக்னிக்குக்கு நல்ல கம்பெனி இருக்கட்டும். |
| ரவி: | கேள்தீனி. அவனு ப$^3$ர்தானெ. | கேட்கிறேன். அவன் வருவான். |
| ராஜு: | முந்தி$^3$ன ப$^4$ானுவார ஹோகே$^3$ாண. | அடுத்த ஞாயிற்றுக்கிழமை போகலாம். |
| ரவி: | எஷ்$^2$டு க$^3$ண்டெகெ$^3$ ஹொரடே$^3$ாண? | எத்தனை மணிக்குப் புறப்படலாம்? |
| ராஜு: | பெ$^3$ளக்$^3$கெ$^3$ எண்டு க$^3$ண்டெகெ$^3$ ஹொரடே$^3$ாண. | காலை எட்டு மணிக்குப் புறப்படலாம். |
| ரவி: | திண்டி$^3$ ஏனு தெ$^3$ாக$^3$ண்டு$^3$ ஹோகே$^3$ாண? | என்ன பலகாரம் எடுத்துப் போகலாம். |
| ராஜு: | ஏனாது$^3$ரு ஸரி. நீனு சிஹி திண்டி$^3$ தெ$^3$ாக$^3$ம்ப$^3$ா. | எதுவானாலும் சரி. நீ இனிப்புப் பலகாரம் எடுத்து வா. |



| | | |
|---|---|---|
| | மோஹன், கே$^3$ாபால புளியோக$^3$ரெ தர்லி. நானு ஹண்ணு தர்தீனி. | மோகன், கோபால் புளியோதரை கொண்டு வரட்டும். நான் பழம் கொண்டுவருகிறேன். |
| ரவி: | ஹேகெ$^3$ ஹோகே$^3$ாண? | எப்படிப் போகலாம்? |
| ராஜு: | பஸ்ஸினல்லி ஹோகே$^3$ாண. பஸ்ஸு தும்ப$^3$ா ஸிகு$^3$த்வெ. | பஸ்ஸில் போகலாம். நிறைய பஸ் கிடைக்கும். |
| ரவி: | நாவு எல்லிகெ$^3$ ப$^3$ரலி? பஸ் ஸ்டாண்ட் ஹத்திர ப$^3$ரோணவா? | நாங்கள் எங்கு வரட்டும்? பஸ் ஸ்டாண்ட் அருகில் வரலாமா? |
| ராஜு: | பஸ் ஸ்டாண்ட் ஹத்திர ப$^3$ன்னி. நானு அல்லிகெ$^3$ ப$^3$ர்தீனி. | பஸ் ஸ்டாண்டுக்கு அருகில் வாருங்கள். நானும் அங்கு வருகிறேன். |

### 2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | நீனு நாளெ நம்ம மனெகெ$^3$ ப$^3$ா. | நீ நாளை எங்கள் வீட்டுக்கு வா. |
| | நீனு காபி$^2$ குடி$^3$. | நீ காப்பி குடி. |
| | நீனு ஈ ப$^3$ாளெ ஹண்ணு தின்னு. | நீ இந்த வாழைப்பழம் சாப்பிடு. |
| | நீனு ஈக$^3$ காலேஜிகெ$^3$ ஹோகு$^3$. | நீ இப்போது கல்லூரிக்குப் போ. |
| 2.2 | நீவு நாளெ நம்ம மனெகெ$^3$ ப$^3$ன்னி. | நீங்கள் நாளை எங்கள் வீட்டுக்கு வாருங்கள். |
| | நீவு காபி$^2$ குடி$^3$யிரி. | நீங்கள் காப்பி குடியுங்கள். |
| | நீவு ஈ ப$^3$ாளெ ஹண்ணு தின்னி. | நீங்கள் இந்த வாழைப்பழம் சாப்பிடுங்கள். |
| | நீவு ஈக$^3$ காலேஜிகெ$^3$ ஹோகி$^3$. | நீங்கள் இப்போது கல்லூரிக்குச் செல்லுங்கள். |
| 2.3 | நானு நிம்ம மனெகெ$^3$ நாளெ ப$^3$ரலா? | நான் உங்கள் வீட்டுக்கு நாளை வரட்டுமா? |
| | நானு காபி$^2$ குடி$^3$யலா? | நான் காப்பி குடிக்கட்டுமா? |
| 2.4 | நாவு நிம்ம மனெகெ$^3$ ப$^3$ரோணவா? | நாங்கள் உங்கள் வீட்டுக்கு வரலாமா? |
| | நாவு ஊரிகெ$^3$ ஹோகே$^3$ாணவா? | நாங்கள் ஊருக்குப் போகலாமா? |

| | | |
|---|---|---|
| 2.5 | நாவு பெ$^3$ளக்$^3$கெ$^3$ சாமுண்டி$^3$ பெ$^3$ட்டக்கெ ஹோகோ$^3$ண. | நாம் காலையில் சாமுண்டி மலைக்குப் போகலாம். |
| | நாவு ஈக$^3$ காபி$^2$ குடி$^3$யோண. | நாம் இப்போது காப்பி குடிக்கலாம். |
| 2.6 | அவனு சென்னைகெ$^3$ ஹோக$^3$லி. | அவன் சென்னைக்குப் போகட்டும். |
| | ரமேஷ ஒளகெ$^3$ ப$^3$ரலி. | ரமேஷ் உள்ளே வரட்டும். |
| | கமல ஹாலு குடி$^3$யலி. | கமலா பால் குடிக்கட்டும். |
| | ஹஸு ஹுல்லு தின்னலி. | பசு புல் தின்னட்டும். |
| 2.7 | நானு சினிமாகெ$^3$ ப$^3$ர்தீனி. | நானி சினிமாவுக்கு வருகிறேன். |
| | நாவு தி$^3$னா ஜிலேபி$^3$ தின்திவி. | நாங்கள் தினமும் ஜிலேபி தின்கிறோம். |
| | நீனு பெ$^3$ளக்$^3$கெ$^3$ காபி$^2$ குடி$^3$தியா? | நீ காலையில் காப்பி குடிக்கிறாயா? |
| | நீவு ஸஞ்ஜெ திண்டி$^3$ தின்தீரா? | நீங்கள் மாலையில் பலகாரம் சாப்பிடுகிறீர்களா? |
| | மோஹன் ஈக$^3$ ப$^3$ர்தானெ. | மோகன் இப்போது வருவான். |
| | நன்ன ஹெண்ட$^3$தி அவள தாயிய மனெகெ$^3$ ஹோகு$^3$தாளெ. | என் மனைவி அவள் தாய் வீட்டுக்குப் போகிறாள். |
| | நன்ன மாவ நாளெ ப$^3$ர்தாரெ. | என் மாமா நாளை வருவார். |
| | மகு$^3$ ஹாலு குடி$^3$யுத்தெ. | குழந்தை பால் குடிக்கிறது. |
| | மக்களு ஹாலு குடி$^3$யுத்வெ. | குழந்தைகள் பால் குடிக்கின்றன. |

## 3. குறிப்புகள்

3.1 தனி வினைச்சொற்கள் இப்பாடத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. மூல வினைச்சொல்லே முன்னிலை ஒருமையில் ஏவல் தொனியில் பயன்படுத்தப் பட்டுள்ளது. கீழக்கண்டவற்றைக் கவனிக்க.

| | |
|---|---|
| நீனு ப$^3$ா. | நீ வா. |
| நீனு ஹோகு$^3$ | நீ போ. |

வினைச்சொல்லின் ஏவல் ஒருமை வடிவத்துடன் 'இரி' அல்லது 'இ' சேர்த்துப் பன்மை வடிவத்தைப் பெறலாம்.

'இ' அல்லது 'எ' விகுதி கொண்ட வினைச்சொற்களுடன் 'இரி' சேர்க்கப்படுகிறது.



குடி$^3$ + இரி = குடி$^3$யிரி (குடியுங்கள்)

ப$^3$ரெ + இரி = ப$^3$ரெயிரி (எழுதுங்கள்).

வினைச்சொல்லுடன் 'இ' இணையும் முறையைக் கவனியுங்கள்:

தின்னு + இ = தின்னி (சாப்பிடுங்கள்)

ஹோகு$^3$ + இ = ஹோகி$^3$ (செல்லுங்கள்)

ப$^3$ா + இ = ப$^3$ன்னி (வாருங்கள்).

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் உகர ஈறு மறைவதைக் கவனியுங்கள். 'ப$^3$ா' என்பது பன்மை ஏவல் வடிவில் 'ப$^3$ன்' எனத் திரிகிறது. 'தா' என்பதும் 'ப$^3$ா'வைப்போலவே செயல்படுகிறது. இந்த இரு வினைகளும் முறையே 'ப$^3$ர்', 'ப$^3$ண்' மற்றும் 'தர்', 'தன்' என்னும் பகுதிகளை உடையன. இனி வரும் பாடங்களில், இப்பகுதிகள் எவ்வாறு வினைச்சொல் உருவாக்கத்தில் பயன்படுகின்றன என்பதைக் கவனியுங்கள். இவ்வடிவங்கள் மரியாதையுடன் ஏவும் ஒருமை வடிவங்களிலும் பயன்படுகின்றன.

3.2 இசைவு தரும் வடிவங்கள் மூல வினைச்சொற்களுடன் 'அலி' என்பதை இணைத்துப் பெறப்படுகின்றன. இவ்வடிவங்கள் படர்க்கை எழுவாய்களுக்கு மட்டும் பொருந்தும். வினாப்பொருளில் அமையும் வினைச்சொல்லுடன் தன்மை ஒருமை எழுவாயைப் பயன்படுத்த இயலும். கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகளைக் கவனிக்க.

ஹோகு$^3$ + அலி = ஹோக$^3$லி

குடி$^3$ + அலி = குடி$^3$யலி.

| | |
|---|---|
| அவனு ஹோக$^3$லி | அவன் போகட்டும் |
| அவளு ஹோக$^3$லி | அவள் போகட்டும் |
| அவரு ஹோக$^3$லி | அவர்கள் போகட்டும் |
| அது ஹோக$^3$லி | அது போகட்டும் |
| அவு ஹோக$^3$லி | அவைகள் போகட்டும் |
| நானு எல்லிகெ$^3$ ஹோக$^3$லி? | நான் எங்கே போகட்டும்? |
| நானு ஏனு குடி$^3$யலி? | நான் என்ன குடிக்கட்டும்? |

மேற்கண்ட வாக்கியங்களில், தன்மை ஒருமை எழுவாய்கள் வினா வடிவங்களில் அமைவதைக் கவனியுங்கள். மேலும், வினா விகுதியான 'ஆ'வைப் பயன்படுத்தியும் வினாத் தொடர்களை அமைக்கலாம். அவ்வாறான வாக்கியங்களில், மூல வினைச்சொல்லுடன் 'அல்'ஐச் சேர்த்த பிறகு 'ஆ' இணைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| நானு ஊரிகெ$^3$ ஹோக$^3$லா? | நான் ஊருக்குப் போகட்டுமா? |
| நானு காபி$^2$ குடி$^3$யலா? | நானு காபி குடிக்கட்டுமா? |

3.3 தமிழின் '. . . (செய்ய)லாம்' போன்ற வடிவம் கன்னடத்தில் 'ஒண' என்பதை மூல வினைச்சொல்லுடன் இணைப்பதன் மூலம் பெறப்படுகிறது.

ஹோகு$^{3}$ + ஒண = ஹோகே$^{3}$ாண — போகலாம்

தின்னு + ஒண = தின்னோண — தின்னலாம்

குடி$^{3}$ + ஒண = குடி$^{3}$யோண — குடிக்கலாம்

தர + ஒண = தரோண — கொண்டுவரலாம்.

இந்த வடிவம் வினாப்பொருளில் அமையும்போது, வினா விகுதியான 'ஆ' இணைந்து, 'வ்' மிகும்.

ஹோகே$^{3}$ாண + ஆ = ஹோகே$^{3}$ாணவா? — போகலாமா?

ப$^{3}$ரோண + ஆ = ப$^{3}$ரோணவா? — வரலாமா?

3.4 மூல வினைச்சொற்களுடன் இறந்தகாலத்தைக் குறிக்காத 'த்' இணையும். கறாராகச் சொல்லப்போனால், கன்னடத்தில் நிகழ்கால வினைக் குறிப்பான் இல்லை. பழைய இலக்கண நூல்கள் 'த்'ஐ நிகழ்கால வினைக் குறிப்பானாகவும் 'வ்'ஐ எதிர்கால வினைக் குறிப்பானாகவும் சொல்கின்றன. ஆனால், தற்காலக் கன்னடப் பேச்சு வழக்கில், இவ்விரு காலங்களுக்கும் வேறுபாடு இல்லை. 'த்' இறந்தகாலத்தைக் குறிக்காத வினைக் குறிப்பான். எதிர்காலத்தைக் குறிக்கும் வடிவங்கள் 'த்' உடன் நேரத்தைக் குறிப்பிட்டுப் பெறப்படுகின்றன.

நானு காபி$^{2}$ குடீ$^{3}$தீனி. — நான் காபி குடிக்கிறேன்.

நானு நாளெ ஊரிகெ$^{3}$ ஹோகு$^{3}$தீனி. — நான் நாளை ஊருக்குப் போகிறேன்.

இறந்தகாலத்தைக் குறிக்காத வடிவம் கீழ்க்கண்டபடி அமைகிறது.

மூல வினை + த் + எழுவாய்க்குப் பொருத்தமான விகுதி.

ஹோகு$^{3}$ + த் + ஈனி = ஹோகு$^{3}$தீனி.

எழுவாய்க்கும் பயனிலைக்குமான பொருத்தப்பாடு அல்லது இசைவு கன்னடத்தில் கறாராகப் பின்பற்றப்படுகிறது.

கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகளைக் கவனியுங்கள்.

| | |
|---|---|
| நானு ஹோகு$^{3}$ + த் + ஈனி | நானு ஹோகு$^{3}$தீனி |
| நாவு ஹோகு$^{3}$ + த் + ஈவெ | நாவு ஹோகு$^{3}$தீவெ |
| நீனு ஹோகு$^{3}$ + த் + ஈயெ | நீனு ஹோகு$^{3}$தீயெ |
| நீவு ஹோகு$^{3}$ + த் + ஈரி | நீவு ஹோகு$^{3}$தீரி |
| அது ஹோகு + த் + அதெ | அது ஹோகு$^{3}$ததெ$^{3}$ |
| அவு ஹோகு$^{3}$ + த் + அவெ | அவு ஹோகு$^{3}$தவெ. |



3.5 மூல வினைச்சொல்லுடன் 'அல்ல' என்பதை இணைத்து இறந்தகாலம் அல்லாத வடிவத்தின் எதிர்மறை பெறப்படுகிறது.

தின்னு + அல்ல = தின்னல்ல — தின்னவில்லை

குடி$^{3}$ + அல்ல = குடி$^{3}$யல்ல — குடிக்கவில்லை.

எதிர்மறை வடிவத்தில் எண்ணிக்கை, பால் வேறுபாடு இல்லை.

3.6 செயப்படுபொருளைக் குறிக்கும் 'அன்னு/ அன்ன' இப்பாடத்தில் அறிமுகப் படுத்தப்படுகிறது. பால் வேறுபாடு காட்டாத பெயர்ச்சொற்களுடன் விருப்பத்திற்கேற்ப இதைப் பயன்படுத்தலாம் அல்லது விலக்கலாம். ஆனால், இது உயர்திணை, பன்மைப் பெயர்ச்சொற்களுடன் கட்டாயம் பயன் படுத்தப்பட வேண்டும்.

## 4. பயிற்சி

4.1 தகுந்த சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 . . . . . . . . . . . . ப$^{4}$ானுவார பெ$^{3}$ங்க$^{3}$ளூரிகெ$^{3}$ ஹோகே$^{3}$ாண.

4.1.2 நானு . . . . . . . . . . . . தரலி?

4.1.3 . . . . . . . . . . . . பஸ் ஸ்டாண்ட்$^{3}$ ஹத்திர ப$^{3}$ன்னி.

4.1.4 . . . . . . . . . . . . பெ$^{3}$ளக்$^{3}$கெ$^{3}$ காபி$^{2}$ குடீ$^{3}$தானெ.

4.15. ஸீதா நாளெ ஊரிகெ$^{3}$ . . . . . . . . . . . .

4.2 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள சொற்களின் பொருத்தமான வடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக:

4.2.1 ஐயோ, நானு ஏனு . . . . . . . . . . . . ? (மாடு$^{3}$)

4.2.2 பாப, அவனு மனெகெ$^{3}$ . . . . . . . . . . . . (ஹோகு$^{3}$)

4.2.3 நாவு ஊரிகெ$^{3}$ எஷ்$^{2}$டு க$^{3}$ண்டெகெ$^{3}$ . . . . . . . . . . . . ? (ஹொரடு$^{3}$)

4.2.4 ஸந்த்$^{4}$ய யாவாக$^{3}$ அமெரிகாகெ$^{3}$ . . . . . . . . . . . . ? (ஹோகு$^{3}$)

4.2.5 நீவு நாளெ நம்ம மனெகெ$^{3}$ . . . . . . . . . . . . (ப$^{3}$ா)

4.3 கீழக்கண்டவற்றுக்குப் பொருத்தமான வினா வாக்கியங்களை எழுதுக.

4.3.1 ஹவ்து$^{3}$, இது$^{3}$ புஸ்தக.

4.3.2 ஆக$^{3}$லி, ஹோகே$^{3}$ாண.

4.3.3 இல்ல. ராஜூ ப$^{3}$ரல்ல.

4.3.4 ஹவ்து$^3$. பஸ்ஸு எண்டு க$^3$ண்டெகெ$^3$ ஹொரடு$^3$தெ.

4.4 எடுத்துக்காட்டில் உள்ளபடி மாற்றுக.

4.4.1 (எ - டு) அவனு + அன்னு = அவனன்னு.

இவனு

அவளு

அது$^3$

காடு$^3$

பஸ்ஸு

4.4.2 (எ - டு) மர + அன்னு = மரவன்னு.

புஸ்தக

ஹண

தி$^3$ன

4.4.3 (எ - டு) மனெ + அன்னு = மனெயன்னு.

நாயி

கதெ$^2$

ஸீதெ

ரவி

4.5 கீழ்க்கண்ட வினைச்சொற்களை இறந்தகாலம் காட்டாத வினைக்குறிப்பானுடன் தன்மை, முன்னிலை, படர்க்கை நிலைகளில் பயன்படுத்தி எழுதுக.

ப$^3$ா

ஹொரடு$^3$

தின்னு

கேளு

குடி$^3$.

4.6 கீழ்க்கண்டவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.6.1 நான் ரேடியோவில் இசை கேட்கிறேன்.

4.6.2 யார் உன்னோடு வருகிறார்கள்?

4.6.3 நான் உனக்கு என்ன கொண்டுவர வேண்டும்?

4.6.4 அவன் சினிமாவுக்குப் போகட்டும்.

4.6.5 தயவுசெய்து, இந்தக் காபியைக் குடி.



4.6.6 நாம் இன்று மங்களூர் போகலாமா?

4.7 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

4.7.1 நீவு ஈவத்து ஸாயங்கால எல்லிகெ$^3$ ஹோகு$^3$தீரி?

4.7.2 நீவு யாவ கெலஸ மாட்$^3$தீரி?

4.7.3 நீவு ஈவத்து ஸன்ஜெ ஸினிமாகெ$^3$ ஹோகு$^3$தீரா?

4.7.4 ரஜா தி$^3$னத$^3$ல்லி நிம்ம மனெகெ$^3$ ஸ்னேஹிதரு ப$^3$ர்தாரா?

4.7.5 நீவு பெ$^3$ளக்$^3$கெ$^3$ எஷ்$^2$டு க$^3$ண்டெகெ$^3$ திண்டி$^3$ தின்தீரி?

## 5. சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| கேளு | கேள் |
| தகெ$^3$ாண்டு$^3$ ஹோகு$^3$ | எடுத்துப்போ |
| தகெ$^3$ாம்ப$^3$ா | கொண்டுவா |
| திண்டி$^3$ | பலகாரம், சிற்றுண்டி, தீனி |
| தரு | கொண்டுவா |
| நந்தி$^3$ பெ$^3$ட்ட | நந்தி மலை |
| புளியோக$^3$ரெ | புளியோதரை |
| ப$^3$ா | வா |
| முந்தி$^3$ன வார | அடுத்த வாரம் |
| ஸிகு$^3$ | கிடை, அகப்படு |
| ஸிஹி திண்டி$^3$ | இனிப்புப் பலகாரம் |
| ஹொரடு$^3$ | புறப்படு |
| ஹோகு$^3$ | போ, செல். |

## 5.1. துணைச் சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| ஈக$^3$ | இப்போது |
| குடி$^3$ | குடி, அருந்து |
| தின்னு | தின், சாப்பிடு |
| ஹுல்லு | புல். |

## பாடம் 11

### 1. உரையாடல்

| | | |
|---|---|---|
| ಮನೋಹರ್ : | ನಾನು ಧಾರವಾಡಕ್ಕೆ ಹೋಗಬೇಕು. ಬಸ್ ಪ್ರಯಾಣ ಒಳ್ಳೆಯದೋ ರೈಲ್ ಪ್ರಯಾಣ ಒಳ್ಳೆಯದೋ? | நான் தார்வாடுக்குப் போக வேண்டும். பஸ் பயணம் நல்லதா, ரயில் பயணம் நல்லதா? |
| ಮೂರ್ತಿ: | ಬಸ್ ಪ್ರಯಾಣಕ್ಕಿಂತ ರೈಲ್ ಪ್ರಯಾಣ ಒಳ್ಳೆಯದು. ಬಸ್ಸಿಗಿಂತ ರೈಲಿಗೆ ಛಾರ್ಜು ಕಡಿಮೆ. ಬಸ್ಸಿನಲ್ಲಿ ಹೋಗಬೇಡಿ. | பஸ் பயணத்தைவிட ரயில் பயணம் நல்லது. பஸ்ஸைவிட ரயில் கட்டணம் குறைவு. பஸ்ஸில் போகாதீர்கள். |
| ಮನೋಹರ್: | ರೈಲ್ ಯಾವ ಮಾರ್ಗ ಹೋಗುತ್ತೆ? | ரயில் எந்த வழியாகப் போகிறது? |
| ಮೂರ್ತಿ: | ಅರಸೀಕೆರೆ ಮಾರ್ಗ ಹೋಗುತ್ತೆ. | அரசிகெரெ வழியாகப் போகிறது. |
| ಮನೋಹರ್: | ಅದು ಒಂದೇ ಮಾರ್ಗಾನಾ? | அந்த ஒரு வழிதானா? |
| ಮೂರ್ತಿ: | ಗುಂತಕಲ್ ಮಾರ್ಗಾನೂ ಹೋಗಬಹುದು. | குண்டக்கல் வழியாகவும் போகலாம். |
| ಮನೋಹರ್: | ಯಾವುದು ಹತ್ತಿರ? | எது பக்கம்? |
| ಮೂರ್ತಿ: | ಗುಂತಕಲ್‌ಗಿಂತ ಅರಸೀಕರೆ ಮಾರ್ಗಾನೇ ಹತ್ತಿರ. | குண்டக்கல்லைவிட அரசிகெரெ வழிதான் பக்கம். |
| ಮನೋಹರ್: | ಹುಬ್ಬಳ್ಳಿ ಧಾರವಾಡ ಎರಡೂ ಹತ್ತಿರ ಇವೆಯಾ? | ஹுப்ளி, தார்வாட் இரண்டும் அருகில் இருக்கின்றனவா? |
| ಮೂರ್ತಿ: | ಹೌದು. ಅವೆರೆಡೂ ಅವಳಿ ನಗರಗಳು. | ஆமாம். அவையிரண்டும் இரட்டை நகரங்கள். |
| ಮನೋಹರ್: | ಹುಬ್ಬಳ್ಳಿ ದೊಡ್ಡದೋ ಧಾರವಾಡ ದೊಡ್ಡದೋ? | ஹுப்ளி பெரியதா, தார்வாட் பெரியதா? |
| ಮೂರ್ತಿ: | ಧಾರವಾಡಕ್ಕಿಂತ ಹುಬ್ಬಳ್ಳಿ ದೊಡ್ಡದು. | தார்வாடைவிட ஹுப்ளி பெரியது. |
| ಮನೋಹರ್: | ಯಾವುದು ಮೊದಲು ಸಿಗುತ್ತೆ? | எது முதலில் வரும்? |
| ಮೂರ್ತಿ: | ಹುಬ್ಬಳ್ಳಿ ಮೊದಲು ಸಿಗುತ್ತೆ. | ஹுப்ளி முதலில் வரும். |
| ಮನೋಹರ್: | ಕರ್ನಾಟಕ ಎಕ್ಸ್‌ಪ್ರೆಸ್ಸಿನಲ್ಲಿ ಬೇಗ ಹೋಗಬಹುದಾ? | கர்நாடகா எக்ஸ்பிரஸில் சீக்கிரம் போகலாமா? |
| ಮೂರ್ತಿ: | ಹೋಗಬಹುದು. ಅಲ್ಲಿ ಎಲ್ಲಿಗೆ ಹೋಗಬೇಕು? | போகலாம். அங்கு எங்கே போக வேண்டும். |



| | | |
|---|---|---|
| ಮನೋಹರ್: | ಯುನಿವರ್ಸಿಟಿಗೆ ಹೋಗಬೇಕು. ರೈಲ್ವೆ ಸ್ಟೇಷನಲ್ಲಿ ಆಟೋ ಸಿಗುತ್ತಾ? | யூனிவர்சிடிக்குப் போக வேண்டும். ரயில்வே ஸ்டேஷனில் ஆட்டோ கிடைக்குமா? |
| ಮೂರ್ತಿ: | ಸಿಗುತ್ವೆ. ಆದರೆ ಆಟೋದಲ್ಲಿ ಹೋಗಬೇಡಿ. ಬೇಕಾದಷ್ಟು ಬಸ್ ಸಿಗುತ್ವೆ. ಬಸ್ಸಿನಲ್ಲಿ ಹೋಗಿ. | கிடைக்கும். ஆனால் ஆட்டோவில் போகாதீர்கள். வேண்டியளவு பஸ் கிடைக்கும். பஸ்ஸில் செல்லுங்கள். |
| ಮನೋಹರ್: | ಮುಂದಿನ ಸೋಮವಾರಕ್ಕೆ ರೈಲಿನಲ್ಲಿ ಸೀಟ್ ಸಿಗಬಹುದಾ? | அடுத்தத் திங்கட்கிழமைக்கு ரயிலில் சீட் கிடைக்குமா? |
| ಮೂರ್ತಿ: | ಕಷ್ಟ. ಒಂದು ವಾರ ಮೊದಲೇ ರಿಸರ್ವ್ ಮಾಡಬೇಕು. ಇಷ್ಟು ತಡಮಾಡಬಾರದು. | கடினம். ஒரு வாரத்துக்கு முன்பே முன்பதிவு செய்ய வேண்டும். இவ்வளவு தாமதம் செய்யக்கூடாது. |

### 2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | ಬೆಂಗಳೂರಿಗಿಂತ ಮೈಸೂರು ಚಿಕ್ಕದು. | பெங்களூரைவிட மைசூர் சிறியது. |
| | ರಾಮನಿಗಿಂತ ರಾವಣ ಧೈರ್ಯಶಾಲಿ. | ராமனைவிட ராவணன் தைரியசாலி. |
| | ಶಾಲಿನಿಗಿಂತ ಮಾಲಿನಿ ಚಿಕ್ಕವಳು. | ஷாலினியைவிட மாலினி சின்னவள். |
| | ಅವನು ನನಗಿಂತ ಎತ್ತರ. | அவன் என்னைவிட உயரம். |
| | ಆ ಪಕ್ಷಕ್ಕಿಂತ ಈ ಪಕ್ಷ ಒಳ್ಳೆಯದು. | அந்தக் கட்சியைவிட இந்தக் கட்சி நல்லது. |
| | ಸೇವಂತಿಗೆ ಹೂಗಿಂತ ಗುಲಾಬಿ ಹೂ ಸುಂದರ. | செவ்வந்திப் பூவைவிட ரோஜாப் பூ அழகு. |
| | ರಂಭೆಗಿಂತ ಮೇನಕೆ ಬಹಳ ಸುಂದರಿ. | ரம்பாவைவிட மேனகை மிகவும் அழகி. |
| | ಬೆಂಗಳೂರಿಗಿಂತ ಮೈಸೂರು ಸುಂದರವಾದ ನಗರ. | பெங்களூரைவிட மைசூர் அழகான நகரம். |
| 2.2 | ನಾನು ಊರಿಗೆ ಹೋಗಬೇಕು. | நான் ஊருக்குப் போக வேண்டும். |
| | ನೀವು ನನಗೆ ಹತ್ತು ರೂಪಾಯಿ ಕೊಡಬೇಕು. | நீங்கள் எனக்குப் பத்து ரூபாய் கொடுக்க வேண்டும். |
| | ಪ್ರತಿದಿನಾ ಬೆಳಿಗ್ಗೆ ಪೇಪರ್ ಓದಬೇಕು. | ஒவ்வொரு நாளும் காலையில் பேப்பர் படிக்க வேண்டும். |
| | ಕರ್ನಾಟಕದಲ್ಲಿ ಎಲ್ಲರೂ ಕನ್ನಡ ಕಲಿಯಬೇಕು. | கர்நாடகத்தில் எல்லோரும் கன்னடம் கற்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2.3 | ನೀನು ಆ ಕೆಲಸ ಮಾಡಬೇಡ. | நீ அந்த வேலையைச் செய்ய வேண்டாம். |
| | ನೀವು ಹೆಚ್ಚು ಕಾಫಿ ಕುಡಿಯಬೇಡಿ. | நீங்கள் அதிகம் காபி குடிக்க வேண்டாம். |
| 2.4 | ನೀವು ಒಳಗೆ ಬರಬಹುದು. | நீங்கள் உள்ளே வரலாம். |
| | ಅವರು ನಾಳೆ ಮದ್ರಾಸಿಗೆ ಹೋಗಬಹುದು. | அவர் நாளை சென்னைக்குப் போகலாம். |
| 2.5 | ಧೂಮಪಾನ ಮಾಡಬಾರದು. | புகை பிடிக்கக்கூடாது. |
| | ನೀನು ಅವನನ್ನು ಬೈಯಕೂಡದು. | நீ அவனைத் திட்டக்கூடாது. |
| | ಮಕ್ಕಳು ದಿನಾ ಸಿನಿಮಾ ನೋಡಬಾರದು. | குழந்தைகள் தினமும் சினிமா பார்க்கக்கூடாது. |
| | ನೀನು ಆ ಹುಡುಗಿಯನ್ನು ನೋಡಕೂಡದು. | நீ அந்தப் பெண்ணைப் பார்க்கக்கூடாது. |

### 3. குறிப்புகள்

3.1 'இந்த' என்பது ஒப்புமை உருபு. இது இரண்டு நபர்களை அல்லது பொருள்களை ஒப்பிடப் பயன்படுகிறது. இது தமிழின் 'விட' என்பதற்கு நிகர். 'இந்த' என்பதைத் தொடர்ந்து தேவையான இடங்களில் 'ப$^3$ாள', 'தும்ப$^3$ா', 'தீர' முதலான உரிச்சொற்கள் வரலாம்.

நனகெ$^3$ கன்னட$^3$ ஸினிமாகி$^3$ந்த தமிளு ஸினிமா இஷ்$^2$ட.

பெ$^3$ங்க$^3$ளூரிகி$^3$ந்த கல்கத்தா தெ$^3$ாட்$^3$ட$^3$ நகர.

3.2 வினைச்சொற்களின் உடன்பாட்டு, எதிர்மறை வடிவங்கள் இப்பாடத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. தனி வினைகளோடு 'பே$^3$கு', 'பே$^3$ட$^3$' என்பவற்றைச் சேர்த்து உடன்பாட்டு, எதிர்மறை வடிவங்கள் பெறப்படுகின்றன. 'பே$^3$ட$^3$' முன்னிலை எழுவாயுடன் மட்டும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், 'பே$^3$கு' என்பதை மூவிட எழுவாய்களுடனும் பயன்படுத்தலாம்.

| | |
|---|---|
| நீனு ஈவத்து ஊரிகெ$^2$ ஹோக$^3$பே$^3$ட$^3$. | நீ இன்று ஊருக்குப் போக வேண்டாம். |
| நீவு நம்ம மனெகெ$^3$ ப$^3$ரபே$^3$டி$^3$. | நீங்கள் எங்கள் வீட்டுக்கு வர வேண்டாம். |
| நீவு ப$^3$ாள பே$^4$க$^3$ ஹோக$^3$பே$^3$கு. | நீங்கள் மிகவும் சீக்கிரமாகப் போக வேண்டும். |
| அவனு ஹத்து ரூபாயி கொட$^3$ பே$^3$கு. | அவன் பத்து ரூபாய் கொடுக்க வேண்டும். |



'பே$^3$ட$^3$' என்பது எதிர்மறை உருபாதலால், 'நீவு நம்ம மனெகெ$^3$ ப$^3$ரபே$^3$டி$^3$' என்பதைத் தமிழில் 'நீங்கள் எங்கள் வீட்டுக்கு வராதீர்கள்' எனவும் கொள்ளலாம்.

3.3 'ப$^3$ஹுது$^3$' என்பதைத் தனி வினைகளுடன் இணைப்பதன் மூலம் வினைச்சொற்களின் உடன்பாட்டு வடிவங்கள் பெறப்படுகின்றன. இவ்வித உடன்பாட்டு வடிவங்கள் எதிர்பார்ப்புத் தொனியையும் குறிக்கும்.

| | |
|---|---|
| நீனு நன்ன ஜொதெ ப$^3$ரப$^3$ஹுது$^3$. | நீ என்னோடு வரலாம். |
| நானு ஸன்ஜெ நினகெ$^3$ ஸிக$^3$ப$^3$ஹுது$^3$. | நான் மாலையில் உன்னைச் சந்திக்கலாம். |
| அவனு நாளெ ப$^3$ரப$^3$ஹுது$^3$. | அவன் நாளை வரலாம். |

3.4 'ப$^3$ாரது$^3$', 'கூட$^3$து$^3$' கன்னடத்தில் எதிர்மறை வடிவங்களை உருவாக்கும் உருபுகள். இவை தமிழின், 'கூடாது' என்பதற்குச் சமம். அழுத்தமான எதிர்மறையைக் குறிக்க 'கூட$^3$து$^3$' பயன்படுகிறது.

| | |
|---|---|
| அதிகாரிக$^3$ளு லஞ்ச தெக$^3$து$^3$கொள்ள கூட$^3$து$^3$. | அதிகாரிகள் லஞ்சம் பெற்றுக்கொள்ளக்கூடாது. |
| மக்களு சிகெ$^3$ரெட் ஸேத$^3$கூட$^3$து$^3$. | பிள்ளைகள் சிகெரட் பிடிக்கக்கூடாது. |

3.5 கன்னடத்தின் 'ஸிகு$^3$' என்பது தமிழின் 'கிடை', 'வரும்' போன்றவைகளுக்கு நிகர். இடத்திற்குத் தகுந்தாற்போல் பொருள்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக,

| | |
|---|---|
| யாவ ஊரு மொத$^3$லு ஸிகு$^3$த்தெ? | எந்த ஊர் முதலில் வரும்? |
| அவனு நின்னெ நினகெ$^3$ ஸிக்கனா? | அவன் நேற்று உனக்குக் கிடைத்தானா? |

### 4. பயிற்சி

4.1 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள தமிழ்ச் சொற்களுக்கு நிகரான கன்னட வார்த்தைகளால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 ಹೈದರಾಬಾದ್ ಸಿಕಂದರಾಬಾದ್ ಎರಡೂ _____________ ನಗರಗಳು. (இரட்டை)

4.1.2 ರೈಲು ಮದ್ರಾಸ್ _____________ ಹೋಗುತ್ತೆ. (வழியாக)

4.1.3 _____________ ಭಾನುವಾರ ನಾನು ಬೆಂಗಳೂರಿಗೆ ಹೋಗಬೇಕು. (நாளை)

4.1.4 ಎಕ್ಸ್‌ಪ್ರೆಸ್ ಬಸ್ಸಿನಲ್ಲಿ _____________ ಹೋಗಬಹುದು. (சீக்கிரம்)

4.2 ஒப்புமை உருபால் கீழ்க்கண்ட வாக்கியங்களை இணைக்க.

4.2.1 ಬೆಂಗಳೂರು ದೊಡ್ಡ ಪಟ್ಟಣ.
ಮೈಸೂರು ಚಿಕ್ಕ ಪಟ್ಟಣ.

4.2.2 ರಾಮನಿಗೆ ಹನ್ನೆರಡು ವರ್ಷ.
ಲಕ್ಷಣನಿಗೆ ಹತ್ತು ವರ್ಷ.

4.2.3 ಈ ಪುಸ್ತಕ ಒಳ್ಳೆಯದು.
ಆ ಪುಸ್ತಕ ಕೆಟ್ಟದು.

4.2.4 ಕಮಲ ಸುಂದರಿ.
ವಿಮಲ ತುಂಬಾ ಸುಂದರಿ.

4.3 கீழ்க்கண்ட வார்த்தைகளைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.
ಬೇಕಾದಷ್ಟು, ಬೇಗ, ಪ್ರಯಾಣ, ಮಾರ್ಗ, ಮೊದಲು, ಕಡಿಮೆ.

4.4 கீழ்க்கண்டவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.4.1 பெங்களூரைவிட மைசூர் சிறியது.

4.4.2 ரயில் பயணம் பஸ் பயணத்தைவிட வசதியானது.

4.4.3 அவள் என்னைவிட உயரம்.

4.4.4 நீ இப்போது போகலாம்.

4.4.5 தயவுசெய்து, என்னோடு பேச வேண்டாம்.

4.4.6 நான் அடுத்த வாரம் டெல்லிக்குப் போக வேண்டும்.

4.4.7 நீ புகை பிடிக்கக்கூடாது.

4.4.8 அவன் அந்த வேலையைச் செய்யக்கூடாது.

4.5 கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க.

4.5.1 ನೀವು ದಿನಾ ಹತ್ತು ಗಂಟೆಗೆ ಕೆಲಸಕ್ಕೆ ಹೋಗಬೇಕಾ?

4.5.2 ನಿಮ್ಮ ಮನೆಗಿಂತ ನಿಮ್ಮ ಪಕ್ಕದ ಮನೆ ಚೆನ್ನಾಗಿದೆಯಾ?

4.5.3 ನಿಮಗಿಂತ ನಿಮ್ಮ ತಮ್ಮ/ತಂಗೀನೇ ಎತ್ತರಾನಾ?

4.5.4 ನಿಮ್ಮ ಮನೆಯಲ್ಲಿ ಸಿಗರೇಟ್ ಸೇದಕೂಡದಾ?



## 5. சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| ಅವಳಿ ನಗರಗಳು | இரட்டை நகரங்கள் |
| ಚಾರ್ಜು | கட்டணம் |
| ತಡ | தாமதம் |
| ಪ್ರಯಾಣ | பயணம் |
| ಬೇಗ | சீக்கிரம் |
| ಮಾರ್ಗ | வழி |

## 5.1. துணைச் சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| ಎತ್ತರ | உயரம் |
| ಕಲಿ | கல், பயில் |
| ಗುಲಾಬಿ | ரோஜா |
| ಧೂಮಪಾನ | புகைத்தல் |
| ಧೈರ್ಯಶಾಲಿ | தைரியசாலி |
| ಪಕ್ಷ | கட்சி |
| ಬೈಯು | திட்டு |
| ಸುಂದರ | அழகு |
| ಸುಂದರಿ | அழகி |
| ಸೇವಂತಿಗೆ | செவ்வந்தி |
| ಹೂ | பூ, மலர். |

## பாடம் 12

### 1. உரையாடல்

| | | |
|---|---|---|
| ಸುರೇಶ್: | ಮನೋಹರ, ಕಣ್ಣನ್‌ಗೆ ಕನ್ನಡ ಪರೀಕ್ಷೆ ಯಾವಾಗ? | மனோகர், கண்ணனுக்குக் கன்னடத் தேர்வு எப்போது? |
| ರಮೇಶ್: | ಮುಂದಿನ ತಿಂಗಳು. | அடுத்த மாதம். |
| ಸುರೇಶ್: | ಈಸಾರಿನಾದ್ರೂ ಪಾಸ್ ಮಾಡ್ತಾರಾ? | இந்தமுறையாவது பாஸ் செய்வாரா? |
| ರಮೇಶ್: | ಏನ್‌ಮಾಡ್ತಾರೋ ಏನೋ ಗೊತ್ತಿಲ್ಲ. | என்ன செய்வாரோ என்னவோ தெரியவில்லை. |
| ಸುರೇಶ್: | ಅವರಿಗೆ ಮಾತಾಡೋದು, ಬರೆಯೋದು ಚೆನ್ನಾಗಿ ಬರುತ್ತಾ? | அவருக்கு நன்றாகப் பேச, எழுத வருமா? |
| ರಮೇಶ್: | ಮನೋಹರ್‌ಗೆ ಮಾತಾಡೋದಕ್ಕೆ ಚೆನ್ನಾಗಿ ಬರತ್ತೆ. ಬರೆಯೋದಕ್ಕೆ ಬರಲ್ಲ. | மனோகருக்கு நன்றாகப் பேச வருகிறது. எழுத வரவில்லை. |
| ಸುರೇಶ್: | ಅವನು ಕನ್ನಡ ಕಲಿಯೋದಕ್ಕೆ ಟ್ಯೂಷನ್‌ಗೆ ಹೋಗ್ತಾನೆ. | அவன் கன்னடம் கற்க டியூஷனுக்குப் போகிறான். |
| ರಮೇಶ್: | ಹೋಗ್ತಾನೆ ಅಷ್ಟೆ. | போகிறான், அவ்வளவுதான். |
| ಸುರೇಶ್: | ಕಣ್ಣನ್? | கண்ணன்? |
| ರಮೇಶ್: | ಅವನು ಬರೆಯಬಲ್ಲ, ಆದರೆ ಮಾತಾಡಲಾರ. | அவன் எழுதக்கூடியவன், ஆனால் பேசமாட்டான். |
| ಸುರೇಶ್: | ಒಬ್ಬ ಬರೆಯೋದನ್ನ ಅಭ್ಯಾಸ ಮಾಡಬೇಕು. | ஒருவன் எழுதுவதற்குப் பயிற்சி செய்ய வேண்டும். |
| | ಇನ್ನೊಬ್ಬ ಮಾತಾಡೋದನ್ನ ಅಭ್ಯಾಸ ಮಾಡಬೇಕು. | இன்னொருவன் பேசுவதற்குப் பயிற்சி செய்ய வேண்டும். |
| | ಅದು ಮಾಡೋದರಿಂದ ಪರೀಕ್ಷೆಯಲ್ಲಿ ಪಾಸಾಗಬಲ್ಲರು. | அதைச் செய்வதால் தேர்வில் பாஸாகக்கூடியவர்கள். |
| ರಮೇಶ್: | ಹೌದು. ಕಣ್ಣನ್ ಪಾಸಾಗೋದರಲ್ಲಿ ಅನುಮಾನ ಇಲ್ಲ. | ஆமாம். கண்ணன் பாஸாவதில் சந்தேகமில்லை. |
| | ಮನೋಹರ್‌ದೇ ಅನುಮಾನ. | மனோகருடையதுதான் சந்தேகம். |
| ಸುರೇಶ್: | ಯಾಕೆ? ಸರಿಯಾಗಿ ಪ್ರಯತ್ನ ಪಡಲ್ಲವಾ? | ஏன்? சரியாக முயற்சி செய்யவில்லையா? |
| ರಮೇಶ್: | ಪಡಲ್ಲ, ಅದೇ ತೊಂದರೆ. | செய்யவில்லை, அதுதான் தொல்லை. |
| ಸುರೇಶ್: | ಅವನಿಗೆ ಹೇಳಬೇಕು. | அவனுக்குச் சொல்ல வேண்டும். |
| ರಮೇಶ್: | ಅವೆಲ್ಲಾ ಹೇಳೋದಲ್ಲ. ಅವನಿಗೇ ಅರ್ಥ ಆಗಬೇಕು. | அவற்றையெல்லாம் சொல்ல வேண்டியதில்லை. அவனுக்கே புரிய வேண்டும். |



### 2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | ನನಗೆ ಕತೆ ಕೇಳೋದು ಇಷ್ಟ. | எனக்குக் கதை கேட்பதில் விருப்பம். |
| | ಹುಡುಗರಿಗೆ ಬುದ್ಧಿವಾದ ಹೇಳೋದು ಸುಲಭ. | பையன்களுக்கு அறிவுரை சொல்வது சுலபம். |
| | ಊಟದ ಮಧ್ಯೆ ನೀರು ಕುಡಿಯುವುದು ಅನಾರೋಗ್ಯ. | சாப்பாட்டுக்கு இடையில் தண்ணீர் குடிப்பது ஆரோக்கியமல்ல. |
| | ನೀನು ಬರೆಯೋದನ್ನ ನಾನು ನೋಡಬೇಕು. | நீ எழுதுவதை நான் பார்க்க வேண்டும். |
| | ಅವಳು ಮಾತಾಡೋದನ್ನ ಯಾರು ಕೇಳ್ತಾರೆ? | அவள் பேசுவதை யார் கேட்கிறார்கள்? |
| | ಕನ್ನಡ ಕಲಿಯೋದರಿಂದ ಲಾಭ ಇದೆ. | கன்னடம் கற்பதால் லாபம் இருக்கிறது. |
| | ಕೆಟ್ಟ ಸಿನಿಮಾ ನೋಡೋದರಿಂದ ತಲೆನೋವು ಬರುತ್ತೆ. | மோசமான சினிமா பார்ப்பதால் தலைவலி வரும். |
| | ಅವರು ಊಟ ಮಾಡೋದಕ್ಕೆ ಹೋಟೆಲಿಗೆ ಹೋಗ್ತಾರೆ. | அவர்கள் சாப்பாடு சாப்பிடுவதற்காக ஹோட்டலுக்குப் போகிறார்கள். |
| | ಅವಳು ಜಗಳ ಆಡುವುದಕ್ಕೆ ತಯಾರಿದ್ದಾಳೆ. | அவள் சண்டைபோடத் தயாராக இருக்கிறாள். |
| | ಬ್ಯಾಂಕಿಗೆ ಹೋಗುವುದರಲ್ಲಿ ತಡ ಆಗುತ್ತೆ. | வங்கிக்குச் செல்வதில் தாமதம் ஆகிறது. |
| | ಅವನು ದೆಹಲಿಯಿಂದ ಸ್ವೆಟರ್ ತರುವುದರಲ್ಲಿ ಅನುಮಾನ ಇಲ್ಲ. | அவன் டெல்லியிலிருந்து ஸ்வெட்டர் கொண்டுவருவதில் சந்தேகமில்லை. |
| | ಸುರೇಶ ಕನ್ನಡ ಮಾತಾನಾಡುವುದರ ಮುಂದೆ ಇವನೇನು? | சுரேஷ் கன்னடம் பேசுவதற்கு முன்னால் இவனென்ன? |
| | ಆ ನೀರು ಕುಡಿಯೋದಲ್ಲ. | அந்தத் தண்ணீர் குடிப்பதற்கல்ல. |
| | ನಿಮ್ಮಂಥವರು ಅಂಥ ಪುಸ್ತಕ ಓದೋದಲ್ಲ. | அப்படிப்பட்ட புத்தகம் உங்களைப் போன்றவர்கள் படிப்பதற்கானதல்ல. |
| | ಅವರು ಇಂಥ ಕೆಲಸ ಮಾಡೋದಲ್ಲ. | அவர் இப்படிப்பட்ட வேலை செய்பவரல்ல. |
| | ನಾನು ಒಂದು ಮೈಲಿ ಓಡಬಲ್ಲೆ. | நான் ஒரு மைல் ஓட முடியும். |
| | ನಾವು ಹಿಂದಿ ಚೆನ್ನಾಗಿ ಬರೆಯಬಲ್ಲೆವು. | நாங்கள் நன்றாக ஹிந்தி எழுத முடியும். |
| | ನೀನು ಹತ್ತು ಇಡ್ಲಿ ತಿನ್ನಬಲ್ಲೆಯಾ? | நீ பத்து இட்லி தின்ன முடியுமா? |

| | |
|---|---|
| ನೀವು ಬೆಳಿಗ್ಗೆ ಆರು ಗಂಟೆಗೆ ಬರಬಲ್ಲಿರಾ? | நீங்கள் காலையில் ஆறு மணிக்கு வர முடியுமா? |
| ರಮೇಶ್ ಚೆನ್ನಾಗಿ ಹಾಡಬಲ್ಲ. | ரமேஷ் நன்றாகப் பாடக்கூடியவன். |
| ಕಮಲ ಪರೀಕ್ಷೆಯಲ್ಲಿ ರ್‍ಯಾಂಕ್ ಬರಬಲ್ಲಳು. | கமலா தேர்வில் ராங்க் பெறக்கூடியவள். |
| ಅವರು ಚೆನ್ನಾಗಿ ಗಲಾಟೆ ಮಾಡಬಲ್ಲರು. | அவர்கள் நன்றாகக் கூச்சல் போடக்கூடியவர்கள். |
| ಈ ಸ್ಕೂಟರ್ ಒಳ್ಳೆ ಸರ್ವೀಸ್ ಕೊಡಬಲ್ಲುದು. | இந்த ஸ்கூட்டர் நல்ல சர்வீஸ் கொடுக்கக்கூடியது. |
| ಸೀಮೆ ಹಸುಗಳು ಹೆಚ್ಚು ಹಾಲು ಕೊಡಬಲ್ಲವು. | சீமைப் பசுக்கள் அதிகம் பால் தரக்கூடியவை. |
| ನಾನು ಹತ್ತು ಲಾಡು ತಿನ್ನಲಾರೆ. | நான் பத்து லட்டு தின்ன முடியாது. |
| ನೀನು ಅವರಿಗೆ ಸಾವಿರ ರೂಪಾಯಿ ಕೊಡಲಾರೆಯಾ? | நீ அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கமாட்டாயா? |
| ಆ ಪತ್ರಿಕೆ ತುಂಬಾ ದಿನ ಉಳಿಯಲಾರದು. | அந்தப் பத்திரிகை அதிக நாள் நீடித்திருக்காது. |
| ಅವನು ಕನ್ನಡ ಮಾತಾಡುವುದಕ್ಕೆ ತುಂಬಾ ಕಷ್ಟಪಡುತ್ತಾನೆ. | அவன் கன்னடம் பேசுவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறான். |
| ಬಡವರು ತುಂಬಾ ದುಃಖಪಡುತ್ತಾರೆ. | ஏழைகள் மிகவும் துக்கப்படுகிறார்கள். |
| ಶ್ರೀಮಂತರು ಬಹಳ ಸುಖಪಡುತ್ತಾರೆ. | செல்வந்தர்கள் மிகவும் சுகமாயிருக்கிறார்கள். |

## 3. குறிப்புகள்

3.1 கன்னட ‘ப$^{3}$ல்லெ’ தமிழின் ‘வல்ல’ என்பதற்கும் நிகர்.

‘ரமேஷ் ஒந்து$^{3}$ மைலி ஓட$^{3}$ ப$^{3}$ல்ல’ என்பதை ‘ரமேஷ் ஒரு மைல் ஓட வல்லவன்’ அல்லது ‘ரமேஷ் ஒரு மைல் ஓடக்கூடியவன்’ எனவும் கொள்ளலாம்.

3.2 மூல வினைச்சொற்களுடன் ‘உது$^{3}$’, ‘ஓது$^{3}$’ என்பவற்றைச் சேர்த்துத் தொழிற் பெயர்கள் பெறப்படுகின்றன. இவை தமிழின் ‘அல்’, ‘வது’ என்பவைகளுக்கு நிகர்.

| | |
|---|---|
| தின்னுவது$^{3}$/ தின்னோது$^{3}$ | தின்னுதல், தின்பது |
| மாடு$^{3}$வுது$^{3}$/ மாடே$^{3}$ாது$^{3}$ | செய்வது/ செய்தல் |

வினைச்சொற்களுடன் ‘உது$^{3}$/ ஓது$^{3}$’ இணைத்த பிறகு, வேற்றுமை உருபுகளைச் சேர்க்கலாம்.



| | |
|---|---|
| சென்னாகி$^{3}$ ஊட மாடு$^{3}$வத$^{3}$ன்னு கலி. | நன்றாகச் சாப்பிடுவதற்குக் கற்றுக்கொள். |
| ஜக$^{3}$ள மாடு$^{3}$வத$^{3}$ரிந்த$^{3}$ கெலஸ ஆகு$^{3}$த்தெ. | சண்டை போடுவதால் வேலை நடக்கும். |
| காபி$^{2}$ கு$^{3}$டி$^{3}$யது$^{3}$க்கெ ஹோட்டலிகெ$^{3}$ ஹோகு$^{3}$. | காபி குடிக்க ஹோட்டலுக்குப் போ. |
| ந்ருத்ய நோடு$^{3}$த$^{3}$ரல்லி நனகெ$^{3}$ ஆஸக்தி இல்ல. | நாட்டியம் பார்ப்பதில் எனக்கு ஆர்வம் இல்லை. |

தொழிற்பெயர்களின் உருவாக்கத்தில் நான்காம் வேற்றுமை, உருபான ‘கெ$^{3}$’ என்பதற்கு மாற்றாக ‘அலு’ பயன்படுகிறது.

| | |
|---|---|
| அவனு காபி$^{2}$ குடி$^{3}$யலு ஹோடலிகெ$^{3}$ ஹோகு$^{3}$தானெ. | அவன் காபி குடிக்க ஹோட்டலுக்குப் போகிறான். |

தொழிற்பெயருடன் ‘அல்ல’ என்பதைச் சேர்த்து எதிர்மறைத் தொழிற்பெயர் பெறப்படுகின்றது. மேலும், இது பயனிலையின் பகுதியாக மட்டுமே அமையும்.

| | |
|---|---|
| கேளோத$^{3}$ல்ல | கேட்கக்கூடாதது |
| மாடே$^{3}$ாத$^{3}$ல்ல | செய்யக்கூடாதது. |

தொழிற்பெயருடன் ஒப்புமை உருபான ‘இன்த’ சேரும்போது தமிழின் ‘விட’ என்னும் பொருளைத் தருகிறது.

| | |
|---|---|
| ஆ ஸினிமா நோடே$^{3}$ாது$^{3}$க்கின்த ஸும்மனிரோது$^{3}$ ஒள்ளெயது$^{3}$. | அந்தச் சினிமாவைப் பார்ப்பதைவிடச் சும்மா இருப்பது நல்லது. |

3.3 ‘ப$^{3}$ல்’, ‘ஆர்’ என்பவை முறையே தமிழின் முடியும் (இயலும்), முடியாத (இயலாத) என்னும் பொருளைத் தரும் உருபுகள். இவை வினையெச்சங்களுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| தின்ன + ப$^{3}$ல் + எ = தின்னப$^{3}$ல்லெ | தின்ன முடியும் |
| தின்ன + லார் + எ = தின்னலாரெ | தின்ன முடியாது. |

இவை தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் வரும்.

| | |
|---|---|
| நானு மாட$^{3}$ப$^{3}$ல்லெ | நான் செய்ய முடியும் |
| நானு மாட$^{3}$லாரெ | நான் செய்ய முடியாது |
| நீனு மாட$^{3}$ப$^{3}$ல்லெ | நீ செய்ய முடியும் |
| நீனு மாட$^{3}$லாரெ | நீ செய்ய முடியாது |
| அவனு மாட$^{3}$ப$^{3}$ல்ல | அவன் செய்ய முடியும் |
| அவனு மாட$^{3}$லார | அவன் செய்ய முடியாது. |

| | |
|---|---|
| அவளு மாட$^3$ப$^3$ல்லளு | அவள் செய்ய முடியும் |
| அவளு மாட$^3$ப$^3$ல்லாரளு | அவள் செய்ய முடியாதவள் |
| அது மாட$^3$ப$^3$ல்லது$^3$ | அது செய்ய முடியும் (அதனால் செய்ய முடியும்) |
| அது மாட$^3$ப$^3$ல்லாரது$^3$ | அது செய்ய முடியாதது (அதனால் செய்ய முடியாது). |

3.4 கன்னட 'இந்த$^3$' தமிழின் 'ஆல்', 'இருந்து' என்னும் இரண்டையும் குறிக்கும். கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனியுங்கள்.

| | |
|---|---|
| அவனு பென்னிந்த$^3$ ப$^3$ரீதானெ. | அவன் பேனாவால் எழுதுகிறான். |
| அவனு ஹாஸ்டலினிந்த$^3$ ப$^3$ர்தானெ. | அவன் ஹாஸ்டலிலிருந்து வருகிறான். |

3.5 கன்னட 'படு$^3$' தமிழின் 'படு$^3$'வுக்கு நிகர். கஷ்$^2$ட, ஸுக$^2$, ஸந்தோஷ$^2$ முதலான உணர்ச்சிகளைக் குறிக்கும் பெயர்ச்சொற்களுடன் இதை இணைத்து வினைத்தொடர்கள் பெறப்படுகின்றன.

கஷ்$^2$ட படு$^3$, ஸுக$^2$ படு$^3$, து$^3$க்க$^2$ படு$^2$.

**4. பயிற்சிகள்**

4.1 கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

4.1.1 ಮೈಸೂರಿಗೆ ____________ ಬಸ್ಸು ಸಿಗುತ್ತಾ?

4.1.2 ಅವನು ದಿನಾ ____________ ಮೈಸೂರಿಗೆ ಬರ್‍ತಾನೆ.

4.1.3 ಅವರ ಮನೆ ಇಲ್ಲಿಗೆ ಬಹಳ ____________

4.1.4 ಪರೀಕ್ಷೆಯಲ್ಲಿ ರ್‍ಯಾಂಕ್ ತೆಗೆದುಕೊಳ್ಳುವುದಕ್ಕೆ ____________ ಪಡಬೇಕು.

4.2 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள வார்த்தைகளின் பொருத்தமான வடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.2.1 ಅವಳು ____________ ಯಾರು ಕೇಳಬಹುದು? (ಹಾಡು).

4.2.2 ಅವರ ಮಾತು ____________ ಕಷ್ಟ (ಕೇಳು).

4.2.3 ಆ ಸಿನಿಮಾ ____________ ಹೋಗಬೇಕು. (ನೋಡು).

4.2.4 ಅವರ ಮಾತು ____________ (ಕೇಳು).

4.2.5 ಆ ನೀರು ____________ (ಕುಡಿ).



4.3 கீழ்க்கண்டவற்றை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுக.

4.3.1 ಅವರು ಆ ಕೆಲಸ ಮಾಡಬಲ್ಲರು.

4.3.2 ಆ ಪೆನ್ನು ಇರೋದು ಬರೆಯೋದಕ್ಕೆ.

4.3.3 ಅವಳು ಆ ಸಿನಿಮಾ ನೋಡಬಹುದು.

4.3.4 ಮಕ್ಕಳು ಸಿಗರೇಟ್ ಸೇದಬಹುದು.

4.3.5 ಆ ಹಣ್ಣು ತಿನ್ನೋದು.

4.4 கீழ்க்கண்டவற்றை இணைத்துச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

4.4.1 ಮರ + ಅನ್ನು = ____________
ಕಾರು + ಅನ್ನು = ____________
ನಾನು + ಅನ್ನು = ____________
ಅಧ್ಯಾಪಕರು + ಅನ್ನು = ____________

4.4.2 ಮನೆ + ಇಂದ = ____________
ಮರ + ಇಂದ = ____________
ಊರು + ಇಂದ = ____________
ಸ್ನೇಹಿತ + ಇಂದ = ____________

4.4.3 ಮೂರು + நான்காம் வேற்றுமை உருபு = ____________
ಅವನು + = ____________
ಪೆನ್ನು + = ____________

4.4.4 ಅದು + = ____________
ನಾಯಿ + = ____________

4.4.5 ಸಿಟಿ + ಅಲ್ಲಿ = ____________
ಕಥೆ + ಅಲ್ಲಿ = ____________
ಕಾಡು + ಅಲ್ಲಿ = ____________
ಇದು + ಅಲ್ಲಿ = ____________

4.5 கீழ்க்கண்டவற்றைத் தொழிற்பெயர்களாக மாற்றுக. எல்லாவகை உருபுகளையும் இணைத்துச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

ಮಾಡು, ಕೇಳು, ಸಿಗು, ಬರು.

4.6 கீழ்க்கண்டவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.6.1 சவிதா பத்து இட்டிலி சாப்பிட முடியும்.

4.6.2 உன்னை யார் இங்கு வரச் சொன்னது?

4.6.3 அவன் அந்த வேலையைச் செய்யமுடியாது.

4.6.4 நீ ஒரு பாடல் பாட முடியுமா?

4.6.5 யாரும் அப்படிப் பேசக்கூடாது.

4.7 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

4.7.1 ನೀವು ಕಾಫಿ ಕುಡಿಯುವುದನ್ನು ಬಿಡಲಾರಿರಾ?

4.7.2 ನಿಮಗೆ ಕನ್ನಡ ಬರೆಯುವುದಕ್ಕೆ/ಮಾತನಾಡುವುದಕ್ಕೆ ಬರುತ್ತಾ?

4.7.3 ನೀವು ಏನಾದರೂ ಒಳ್ಳೆಯ ಕೆಲಸ ಮಾಡಬಲ್ಲಿರಾ?

4.7.4 ನೀವು ದಿನಾ ಹತ್ತು ಮೈಲಿ ಓಡಬಲ್ಲಿರಾ?

## 5. சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| ಅರ್ಥ ಆಗು | புரிந்துகொள் |
| ಅನುಮಾನ | சந்தேகம், ஐயம் |
| ಈ ಸಾರಿ | இந்த முறை |
| ತೊಂದರೆ | தொல்லை |
| ಪ್ರಯತ್ನಪಡು | முயற்சி செய் |
| ಮಾತಾಡು | பேசு. |

## 5.1. துணைச் சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| ಅನಾರೋಗ್ಯ | ஆரோக்கியமற்ற, நோயுள்ள |
| ಉಳಿ | அப்படியேயிரு, இரு, தங்கு |
| ಊಟ | சாப்பாடு |
| ಓದು | படி |
| ಓಡು | ஓடு |
| ಕಷ್ಟಪಡು | கஷ்டப்படு |
| ಗಲಾಟೆ | கூச்சல் |
| ಜಗಳ | சண்டை |



| | |
|---|---|
| ತಲೆನೋವು | தலைவலி |
| ದುಃಖಪಡು | துக்கப்படு |
| ನೀರು | நீர் |
| ಪತ್ರಿಕೆ | பத்திரிகை |
| ಬುದ್ಧಿವಾದ | அறிவுரை |
| ಮಧ್ಯೆ | இடை, மத்தி |
| ಲಾಭ | லாபம் |
| ಸೀಮೆ ಹಸು | சீமைப் பசு |
| ಸುಖಪಡು | சுகப்படு, இன்புறு |
| ಸುಲಭ | சுலபம், எளிது |
| ಹಾಡು | பாடு (வி), பாட்டு (பெ) |
| ಹಾಲು | பால் |
| ಹೇಳು | சொல். |

## பாடம் 13

### 1. உரையாடல்

| | | |
|---|---|---|
| ಮನೋಹರ್: | ಮೈಸೂರು ದಸರಾ ಈಗಲೂ ಆಚರಣೆಯಲ್ಲಿ ಇದೆಯಾ? | மைசூர் தசரா இப்போதும் கொண்டாடப்படுகிறதா? |
| ರಮೇಶ್: | ಹೌದು. ಈಗ ನಾಡಹಬ್ಬವಾಗಿ ಆಚರಿಸುತ್ತಾರೆ. | ஆமாம். இப்போது மாநிலத் திருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள். |
| ಮನೋಹರ್: | ಯಾರು ಆಚರಿಸುತ್ತಾರೆ? | யார் கொண்டாடுகிறார்கள்? |
| ರಮೇಶ್: | ಕರ್ನಾಟಕ ಸರ್ಕಾರದವರು ತಾವೇ ಆಚರಿಸ್ತಾರೆ. | கர்நாடக அரசாங்கத்தினரே கொண்டாடுகிறார்கள். |
| ಮನೋಹರ್: | ಮೈಸೂರು ರಾಜರ ವಂಶದವರು ಆಚರಿಸಲ್ವಾ? | மைசூர் அரச வம்சத்தினர் கொண்டாடவில்லையா? |
| ರಮೇಶ್: | ಅವರು ತಮ್ಮ ಮನೆಯಲ್ಲಿ ಆಚರಿಸ್ತಾರೆ ಅಷ್ಟೆ. | அவர்கள் தங்கள் வீட்டிலேயே கொண்டாடுகிறார்கள் அவ்வளவே. |
| ಮನೋಹರ್: | ಸರ್ಕಾರದವರು ಎಷ್ಟು ದಿನ ಆಚರಿಸ್ತಾರೆ? | அரசாங்கத்தினர் எத்தனை நாட்கள் கொண்டாடுகிறார்கள்? |
| ರಮೇಶ್: | ಒಂಬತ್ತು ದಿನ ಆಚರಿಸ್ತಾರೆ. | ஒன்பது நாள்கள் கொண்டாடுகிறார்கள். |
| ಮನೋಹರ್: | ಒಂಬತ್ತು ದಿನ ಏನು ಮಾಡ್ತಾರೆ? | ஒன்பது நாள்கள் என்ன செய்கிறார்கள்? |
| ರಮೇಶ್: | ಅರಮನೆಯಲ್ಲಿ ದಿನಾ ಸಂಗೀತ ಕಛೇರಿ ಏರ್ಪಡಿಸ್ತಾರೆ. | அரண்மனையில் தினமும் கச்சேரி நடத்துகிறார்கள். |
| | ಈ ಕಛೇರಿಗೆ ಪ್ರಸಿದ್ಧ ಸಂಗೀತಗಾರರನ್ನು ಕರೆಸ್ತಾರೆ. | இந்தக் கச்சேரிக்குப் புகழ்பெற்ற இசைக் கலைஞர்களை அழைக்கிறார்கள். |
| | ದಸರಾ ಕ್ರೀಡೋತ್ಸವ ನಡೆಸ್ತಾರೆ. | தசரா விளையாட்டுப் போட்டிகள் நடத்துகிறார்கள். |
| ಮನೋಹರ್: | ವಸ್ತುಪ್ರದರ್ಶನಾನೂ ಇರುತ್ತಾ? | பொருட்காட்சியும் இருக்குமா? |
| ರಮೇಶ್: | ಹೌದು, ವಸ್ತುಪ್ರದರ್ಶನ ದಸರಾದ ಒಂದು ಮುಖ್ಯ ಆಕರ್ಷಣೆ. | ஆமாம், பொருட்காட்சி தசராவின் ஒரு முக்கிய அம்சம். |
| | ಮೊದಲನೇ ದಿನಾನೇ ಅದನ್ನ ಉದ್ಘಾಟಿಸ್ತಾರೆ. | முதல் நாளே அதைத் தொடங்கிவைப்பார்கள். |
| ಮನೋಹರ್: | ಅರಮನೆಗೆ ದೀಪಾಲಂಕಾರ ಇರುತ್ತಾ? | அரண்மனைக்கு விளக்கு அலங்காரம் இருக்குமா? |



| | | |
|---|---|---|
| ರಮೇಶ್: | ಇರುತ್ತೆ. ಅರಮನೆಯನ್ನು ವಿದ್ಯುದ್ದೀಪಗಳಿಂದ ಅಲಂಕರಿಸ್ತಾರೆ. | இருக்கும். அரண்மனையை மின்விளக்குகளால் அலங்கரிப்பார்கள். |
| | ನಗರದ ಮುಖ್ಯ ಬೀದಿಗಳನ್ನು ವಿದ್ಯುದ್ದೀಪಗಳಿಂದ ಅಲಂಕರಿಸ್ತಾರೆ. | நகரத்தின் முக்கிய வீதிகளை மின்விளக்குகளால் அலங்கரிப்பார்கள். |
| ಮನೋಹರ್: | ದಸರಾದ ಪ್ರಮುಖ ಆಕರ್ಷಣೆ ಯಾವುದು? | தசராவின் முக்கிய அம்சம் எது? |
| ರಮೇಶ್: | ಜಂಬೂಸವಾರಿ, ವಿಜಯದಶಮಿ ದಿನದ ಮೆರವಣಿಗೆ. | யானைச் சவாரி, விஜயதசமி நாளின் ஊர்வலம். |
| ಮನೋಹರ್: | ಅವತ್ತು ಏನು ಮಾಡ್ತಾರೆ? | அன்றைக்கு என்ன செய்வார்கள்? |
| ರಮೇಶ್: | ಅವತ್ತು ಭುವನೇಶ್ವರಿಯನ್ನ ಪೂಜಿಸ್ತಾರೆ. | அன்றைக்குப் புவனேஷ்வரியைப் பூஜிப்பார்கள். |
| | ಆಮೇಲೆ ಅದನ್ನ ಆನೆ ಮೇಲೆ ಮೆರವಣಿಗೆ ಮಾಡ್ತಾರೆ. | பிறகு அதை யானையின் மேல் ஊர்வலமாக எடுத்துச் செல்வார்கள். |
| | ಮೆರವಣಿಗೆಯಲ್ಲಿ ಬೇರೆ ಬೇರೆ ಜಿಲ್ಲೆಯ ವಸ್ತು ವಿಶೇಷಗಳು ಇರುತ್ವೆ. | ஊர்வலத்தில் வெவ்வேறு மாவட்டச் சிறப்பம்சங்களும் இருக்கும். |
| ಮನೋಹರ್: | ಮೆರವಣಿಗೆ ಎಲ್ಲಿಗೆ ಹೋಗುತ್ತೆ? | ஊர்வலம் எங்கே போகும்? |
| ರಮೇಶ್: | ಅದು ಬನ್ನಿಮಂಟಪಕ್ಕೆ ಹೋಗುತ್ತೆ. | அது வன்னிமண்டபத்துக்குப் போகும். |
| | ಅಲ್ಲಿ ಸಂಜೆ ಟಾರ್ಚ್ ಲೈಟ್ ಪೆರೇಡ್ ಇರುತ್ತೆ. | அங்கே மாலையில் தீப்பந்த ஊர்வலம் இருக்கும். |
| | ಅಲ್ಲಿ ವಿದ್ಯಾರ್ಥಿಗಳು, ಪೊಲೀಸಿನವರು, ಹೋಂಗಾರ್ಡ್‌ಗಳು ವಿವಿಧ ಮನರಂಜನೆ ನೀಡ್ತಾರೆ. | அங்கே மாணவர்கள், போலீஸ்காரர்கள், ஹோம்கார்டுகள் பலவித பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை வழங்குவார்கள். |
| ಮನೋಹರ್: | ನಾನೂ ಒಂದು ಸಾರಿ ನೋಡಬೇಕು. | நானும் ஒருமுறை பார்க்க வேண்டும். |

### 2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | ಕರ್ನಾಟಕದಲ್ಲಿ ಯುಗಾದಿ ಹಬ್ಬ ಆಚರಿಸ್ತಾರೆ. | கர்நாடகத்தில் யுகாதி பண்டிகை கொண்டாடுகிறார்கள். |
| | ವಿಧಾನಸೌಧದ ಮುಂದೆ ಅಂಬೇಡ್ಕರ್ ಪ್ರತಿಮೆ ಪ್ರತಿಷ್ಠಾಪಿಸ್ತಾರೆ. | விதான சௌதாவின் முன்பு அம்பேத்கர் சிலை நிர்மாணிக்கிறார்கள். |
| | ಅರಮನೆಯನ್ನು ವಿದ್ಯುದ್ದೀಪಗಳಿಂದ ಅಲಂಕರಿಸ್ತಾರೆ. | அரண்மனையை மின்விளக்குகளால் அலங்கரிக்கிறார்கள். |
| | ನಾನು ದಿನಾ ರಾತ್ರಿ ಕನವರಿಸ್ತೀನಿ. | நான் தினமும் இரவில் தூக்கத்தில் பேசுகிறேன். |

| | | |
|---|---|---|
| | ನಾವು ಇಂಗ್ಲೀಷಿನಿಂದ ಕನ್ನಡಕ್ಕೆ ಭಾಷಾಂತರಿಸ್ತೀವಿ. | நாங்கள் ஆங்கிலத்திலிருந்து கன்னடத்திற்கு மொழிபெயர்க்கிறோம். |
| | ಅವರು ರೇಡಿಯೋದಲ್ಲಿ ಇವತ್ತು ಸಿನಿಮಾ ನಟಿಯನ್ನು ಸಂದರ್ಶಿಸುತ್ತಾರೆ. | அவர் ரேடியோவில் இன்று சினிமா நடிகையைப் பேட்டி காண்கிறார். |
| 2.2 | ರಾಮರಾವ್ ಸಂಗೀತ ಕಲಿಸ್ತಾರೆ. | ராமாராவ் சங்கீதம் கற்பிக்கிறார். |
| | ತಾಯಿ ಮಗುವಿಗೆ ಹಾಲು ಕುಡಿಸ್ತಾಳೆ. | தாய் குழந்தைக்குப் பால் ஊட்டுகிறாள். |
| | ನಾವು ಅವನಿಂದ ಸತ್ಯ ಹೇಳಿಸ್ತೀವಿ. | நாங்கள் அவனை உண்மை சொல்லவைப்போம். |
| | ಅವರು ನಮಗೆ ಹೊಸ ಕಾರು ತೋರಿಸ್ತಾರೆ. | அவர் எங்களுக்குப் புதிய காரைக் காட்டுவார். |
| | ಅವರು ಗೂಂಡಾಗಳಿಂದ ನನ್ನನ್ನು ಹೊಡೆಸ್ತಾರೆ. | அவர் குண்டர்களைக் கொண்டு என்னை அடிக்கவைப்பார். |
| | ರಮಾ ತನ್ನ ತಂಗಿಯ ತಲೆ ಬಾಚಿಸ್ತಾಳೆ. | ரமா தன் தங்கையின் தலை வார வைப்பாள். |
| 2.3 | ತಾಯಿ ಮಗುವಿಗೆ ಸರೋಜನಿಯಿಂದ ಹಾಲು ಕುಡಿಸಿಸ್ತಾಳೆ. | தாய் குழந்தைக்குச் சரோஜினியைக் கொண்டு பால் குடிக்க வைக்கிறாள். |
| | ನಾನು ನನ್ನ ಸ್ನೇಹಿತನಿಗೆ ನನ್ನ ತಮ್ಮನಿಂದ ಬೆಂಗಳೂರು ತೋರಿಸಿಸ್ತೀನಿ. | நான் என் சினேகிதனுக்கு என் தம்பியின் மூலம் பெங்களூரை (சுற்றிக்) காட்டுவேன். |
| 2.4 | ತಾವು ಯಾರು? | தாங்கள் யார்? |
| | ತಮ್ಮ ಹೆಸರು ಏನು? | தங்கள் பெயர் என்ன? |
| 2.5 | ಅವನು ತನ್ನ ಕೆಲಸ ತಾನೇ ಮಾಡ್ತಾನೆ. | அவன் தன் வேலையைத் தானே செய்கிறான். |
| | ಸರ್ಕಾರದವರು ತಾವೇ ದಸರ ಆಚರಿಸ್ತಾರೆ. | அரசாங்கத்தினர் தாங்களே தசரா கொண்டாடுகிறார்கள். |
| 2.6 | ಕರ್ನಾಟಕದಲ್ಲಿ ಯುಗಾದಿ ಹಬ್ಬ ಆಚರಣೆ ಮಾಡ್ತಾರೆ. | கர்நாடகத்தில் யுகாதி பண்டிகை கொண்டாடுகிறார்கள். |
| | ಅವರು ದಿನಾ ದೇವರ ಪೂಜೆ ಮಾಡ್ತಾರೆ. | அவர் தினமும் கடவுளுக்குப் பூஜை செய்கிறார். |
| | ಕಮಲ ನನ್ನನ್ನು ಅನುಕರಣೆ ಮಾಡ್ತಾಳೆ. | கமலா என்னைப்போலச் செய்கிறாள். |



### 3. குறிப்புகள்

3.1 கன்னடத்தில் 'இஸு' (1) செய்வினை (2) செயப்பாட்டுவினை உருபாகச் செயல்படுகிறது. வேற்றுமொழிப் பெயர்ச்சொற்களுடன் சேரும்போது செய்வினை உருபாகவும் கன்னடப் பெயர்ச்சொற்களுடன் சேரும்போது செயப்பாட்டுவினை உருபாகவும் செயல்படுகிறது.

3.1.1 செய்வினை உருபின் செயல் பெயர்ச்சொல்லை வினைச்சொல்லாக்குதல். சமஸ்கிருத, உருதுப் பெயர்ச்சொற்களுடன், 'இஸு'வைச் சேர்த்து வினைச்சொற்களைப் பெறலாம். தற்போது, ஆங்கிலப் பெயர்ச்சொற்களுடனும் இது சேர்க்கப்படுகிறது.

சமஸ்கிருத பெயர்ச்சொற்களுடன் 'இஸு' சேர்க்கப்படும் எடுத்துக்காட்டுகள்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப்ரீதி | + | இஸு | = | ப்ரீதிஸு | காதலி |
| து$^3$க$^2$ | + | இஸு | = | து$^3$கி$^2$ஸு | துக்கப்படு |
| அன்வேஷ$^2$னெ | + | இஸு | = | அன்வேஷி$^2$ஸு | தேடு |
| ஆசரனெ | + | இஸு | = | ஆசரிஸு | கொண்டாடு |
| அலங்கார | + | இஸு | = | அலங்கரிஸு | அலங்கரி |
| ஷோஷ$^2$ணெ | + | இஸு | = | ஷோஷி$^2$ஸு | சாதகமாகப் பயன்படுத்து |
| ஏர்படு$^3$ | + | இஸு | = | ஏர்படி$^3$ஸு | ஏற்பாடுசெய். |

உருதுப் பெயர்ச்சொற்களின் அடியாகப் பிறந்த சொற்களுடன் 'இஸு' சேர்க்கப்படும் எடுத்துக்காட்டுகள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜமாவனெ | + | இஸு | = | ஜமாயிஸு | ஒன்றுசேர், திரட்டு |
| சுனாவனெ | + | இஸு | = | சுனாயிஸு | தேர்ந்தெடு. |

மேற்கண்ட பெயர்ச்சொற்களுடன் 'மாடு$^3$' சேர்த்து வினைத்தொடர்களைப் பெறலாம் என்பதையும் கவனியுங்கள்.

ப்ரீதி மாடு$^3$

அலங்கார மாடு$^3$

ஏற்பாடு மாடு$^3$

ஜமாவனெ மாடு$^3$

சுனாவனெ மாடு$^3$.

3.1.2 செயப்படுபொருள் குன்றிய வினைச்சொற்களுடனும் செயப்படுபொருள் குன்றா வினைச்சொற்களுடனும் 'இஸு' சேர்க்கப்பட்டுச் செயப்பாட்டுவினை உருபாகச் செயல்படுகிறது. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனிக்க.

| | |
|---|---|
| நானு அவனிந்த$^3$ ஆ கெலஸ மாடு$^3$ஸ்தீனி. | நான் அவனைக்கொண்டு அந்த வேலையைச் செய்யவைக்கிறேன். |

| | |
|---|---|
| அவளு அவனிந்த$^3$ காக$^3$த$^3$ ப$^3$ரெயிஸுதாளெ. | அவள் அவனைக்கொண்டு கடிதம் எழுதவைக்கிறாள். |

இந்த வாக்கியங்களில் செயப்படுபொருள் குன்றிய வினைச்சொற்களான 'மாடு$^3$', 'ப$^3$ரெ' என்பவற்றுடன் 'இஸு' சேர்க்கப்பட்டுள்ளது.

இனி கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனிக்க.

| | |
|---|---|
| நானு அவனன்னு ஓடி$^3$ஸ்தீனி. | நான் அவனை ஓடவைக்கிறேன். |
| அவளு மகு$^3$வன்னு மலகி$^3$ஸ்தாளெ. | அவள் குழந்தையைத் தூங்கவைக்கிறாள். |

இவற்றில் 'ஓடு$^3$', 'மலகு$^3$' இரண்டும் செயப்படுபொருள் குன்றிய வினைச்சொற்கள். செயப்படுபொருள் குன்றா வினைச்சொற்கள் சில 'இஸு'வை உள்ளடக்கியுள்ளன. அவையும் செயப்பாட்டுவினை உருபாக 'இஸு'வை ஏற்கும்.

| | |
|---|---|
| நானு அவரிகெ$^3$ கர்நாடக தோருஸ்தீனி. | நான் அவர்களுக்குக் கர்நாடகாவை (சுற்றிக்) காட்டுகிறேன். |
| நானு அவரிகெ$^3$ கர்நாடக தோருஸ்தீனி. | நான் அவர்களுக்கு (வேறொருவரைக் கொண்டு) கர்நாடகாவைக் (சுற்றிக்) காட்டுகிறேன். |

3.2 கன்னடத்தின் 'தானு', 'தாவு' இரண்டும் தன் நோக்கு மாற்றுப் பெயர்ச் சொற்கள். இவை முறையே தமிழின் 'தான்', 'தாங்கள்' என்பவற்றிற்கு நிகர். பொருளும் செயல்பாடும் அவற்றைப்போலவே. 'தாவு' தமிழின் 'தாம்' என்பதற்கும் நிகர்.

| | |
|---|---|
| அவனு தானே ப$^3$ட்டெ ஒகி$^3$தானெ. | அவன் தானே துணி துவைக்கிறான். |
| அவரு தாவே ப$^3$ட்டெ ஒகி$^3$தாரெ. | அவர் தாமே துணி துவைக்கிறார். |
| தாவு த$^3$யவிட்டு ப$^3$ரபேகு. | தாங்கள் தயவுசெய்து வரவேண்டும். |

## 4. பயிற்சி

4.1 கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

4.1.1 ದಸರಾದ ಪ್ರಮುಖ ಆಕರ್ಷಣೆ __________

4.1.2 ವಿಜಯದಶಮಿ ದಿನ ಭುವನೇಶ್ವರಿಯ _______ ಮಾಡ್ತಾರೆ.

4.1.3 ದಸರ ಸಮಯದಲ್ಲಿ _________ ಏರ್ಪಡಿಸ್ತಾರೆ.

4.1.4 ಈಗ ದಸರಾ _________ ಆಚರಿಸ್ತಾರೆ.

4.1.5 ಅರಮನೆಯನ್ನು __________ ಅಲಂಕರಿಸ್ತಾರೆ.



4.2 கீழ்க்கண்ட வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றுக.

4.2.1 ಅವನು ತೆಲುಗಿನಿಂದ ಕನ್ನಡಕ್ಕೆ ಭಾಷಾಂತರ ಮಾಡ್ತಾನೆ.

4.2.2 ಲೀಲಾ ದಿನಾ ದೇವರನ್ನು ಪೂಜೆ ಮಾಡ್ತಾಳೆ.

4.2.3 ಸುದರ್ಶನ ಅಮಿತಾಬ್ ಬಚ್ಚನ್‌ನನ್ನು ಅನುಕರಣೆ ಮಾಡ್ತಾನೆ.

4.2.4 ರವಿ ಮತ್ತು ಕಲಾ ಒಬ್ಬರನ್ನೊಬ್ಬರು ಪ್ರೀತಿ ಮಾಡ್ತಾರೆ.

4.2.5 ಅವನು ಚೆನ್ನಾಗಿ ದಬಾವಣೆ ಮಾಡ್ತಾನೆ.

4.3 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ள வினைச்சொற்களின் தக்க வடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.3.1 ತಾಯಿ ಮಗುವಿಗೆ ಹಾಲು __________ (ಕುಡಿ).

4.3.2 ಅಧ್ಯಾಪಕರು ವಿದ್ಯಾರ್ಥಿಗಳಿಗೆ ಕನ್ನಡ ________ (ಕಲಿ).

4.3.3 ಅವರು ಸಿಟಿಯಿಂದ ತರಕಾರಿ ____________ (ತರು).

4.3.4 ರಮೇಶ ನನಗೆ ಮೈಸೂರು __________ (ತೋರು).

4.3.5 ಅವರು ಅವನಿಂದ ಸತ್ಯ ___________ (ಹೇಳು).

4.5 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

4.5.1 ಈಗ ಮೈಸೂರು ದಸರಾ ಯಾರು ಆಚರಿಸ್ತಾರೆ? ಹೇಗೆ ಆಚರಿಸ್ತಾರೆ?

4.5.2 ದಸರಾ ಎಷ್ಟು ದಿನ ಆಚರಿಸ್ತಾರೆ?

4.5.3 ದಸರಾ ಸಮಯದಲ್ಲಿ ಏನು ಕಾರ್ಯಕ್ರಮ ಇರುತ್ತೆ?

4.5.4 ದಸರಾದ ಪ್ರಮುಖ ಆಕರ್ಷಣೆ ಏನು?

4.5.5 ಬನ್ನಿಮಂಟಪದಲ್ಲಿ ಏನು ಕಾರ್ಯಕ್ರಮ ಇರುತ್ತೆ?

## 5.1 சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| ಅರಮನೆ | அரண்மனை |
| ಆಚರಣೆ | கொண்டாட்டம் |
| ಆಕರ್ಷಣೆ | (கவர்ச்சியான) அம்சம் |
| ಉದ್ಘಾಟನೆ | தொடக்கம் |
| ಏರ್ಪಾಡು | ஏற்பாடு |
| ಕ್ರೀಡೋತ್ಸವ | விளையாட்டுவிழா |
| ಜಂಬೂಸವಾರಿ | யானைச் சவாரி |

| | |
|---|---|
| ದೀಪಾಲಂಕಾರ | தீப அலங்காரம், விளக்கு அலங்காரம் |
| ನಾಡಹಬ್ಬ | மாநிலத் திருவிழா |
| ಪೂಜಿಸು | வணங்கு |
| ಮನರಂಜನೆ | பொழுதுபோக்கு |
| ಮೆರವಣಿಗೆ | ஊர்வலம் |
| ರಾಜ | ராஜா, அரசன் |
| ವಂಶ | வம்சம் |
| ವಸ್ತುಪ್ರದರ್ಶನ | பொருட்காட்சி |
| ವಿದ್ಯುದ್ದೀಪ | மின்விளக்கு |
| ಸಂಗೀತಗಾರರು | இசைக்கலைஞர்கள், சங்கீதக்காரார்கள் |
| ಸಂಗೀತ ಕಛೇರಿ | இசைக் கச்சேரி. |

### 5.2. துணைச் சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| ಅನುಕರಣೆ | போலிசெய்தல் |
| ಕನವರಿಸು | தூக்கத்தில் பேசு |
| ಕಲಿಸು | கற்பி |
| ತಲೆಬಾಚು | தலை வாரு |
| ತೋರಿಸು | காட்டு |
| ಪ್ರತಿಮೆ | சிலை |
| ದಬಾವಣೆ | அதட்டுதல் |
| ಪ್ರತಿಷ್ಠಾಪನೆ | நிறுவு |
| ಭಾಷಾಂತರ | மொழிபெயர்ப்பு |
| ಸತ್ಯ | உண்மை |
| ಸಂದರ್ಶಿಸು | பேட்டி காண், நேர்காண் |
| ಹೊಡೆ | அடி. |



## பாடம் 14

### 1. உரையாடல்

| | | |
|---|---|---|
| ಮನೋಹರ್: | ಬೆಂಗಳೂರಿಗೆ ಯಾವಾಗ ಬಂದೆ? | பெங்களூருக்கு எப்போது வந்தாய்? |
| ಮಾಧು: | ನಿನ್ನೆ ಸಂಜೆ ಬಂದೆ. | நேற்று மாலை வந்தேன். |
| ಮನೋಹರ್: | ಎಷ್ಟು ಗಂಟೆಗೆ ಬಂದೆ? | எத்தனை மணிக்கு வந்தாய்? |
| ಮಾಧು: | ಸಂಜೆ ಏಳು ಗಂಟೆಗೆ ಬಂದೆ. | மாலை ஏழு மணிக்கு வந்தேன். |
| ಮನೋಹರ್: | ಯಾಕೆ ಅಷ್ಟು ತಡ? | ஏன் அவ்வளவு தாமதம்? |
| ಮಾಧು: | ಟ್ರೈನು ತಡವಾಗಿ ಬಂತು. | ரயில் தாமதமாக வந்தது. |
| ಮನೋಹರ್: | ನೀನೊಬ್ಬನೇ ಬಂದೆಯಾ? | நீ ஒருவனே வந்தாயா? |
| ಮಾಧು: | ಇಲ್ಲ, ನನ್ನ ಜೊತೆ ನನ್ನ ತಂಗಿ ಬಂದಳು. | இல்லை, என்னுடன் என் தங்கை வந்தாள். |
| ಮನೋಹರ್: | ನಿನ್ನ ತಮ್ಮ ಬರಲಿಲ್ವಾ? | உன் தம்பி வரவில்லையா? |
| ಮಾಧು: | ಬರಲಿಲ್ಲ. ಅವನು ನನ್ನ ಅಣ್ಣನ ಜೊತೆ ಮದ್ರಾಸಿಗೆ ಹೋದ. | வரவில்லை. அவன் என் அண்ணனோடு சென்னைக்குப் போனான். |
| ಮನೋಹರ್: | ನಿಮ್ಮ ತಾಯೀನೂ ಹೋದರಾ? | உங்கள் தாயாரும் போனார்களா? |
| ಮಾಧು : | ಇಲ್ಲ, ಅವರು ಹೋಗಲಿಲ್ಲ. ಅವರು ಮುಂದಿನ ವಾರ ಇಲ್ಲಿಗೆ ಬರ್ತಾರೆ. | இல்லை, அவர் போகவில்லை. அவர் அடுத்த வாரம் இங்கே வருவார். |
| ಮನೋಹರ್: | ಬಾ, ತಿಂಡಿ ತಿನ್ನು. | வா, (பலகாரம்) சிற்றுண்டி சாப்பிடு. |
| ಮಾಧು : | ಬೇಡ, ಆಗಲೇ ತಿಂಡಿ ತಿಂದೆ. | வேண்டாம், ஏற்கனவே பலகாரம் சாப்பிட்டேன். |
| ಮನೋಹರ್: | ಕಾಫಿನಾದರೂ ಕುಡಿ ಬಾ. | காபியாவது குடி, வா. |
| ಮಾಧು : | ಕಾಫಿನೂ ಕುಡಿದೆ. ಆದರೂ ಸ್ವಲ್ಪ ಕೊಡು. | காபியும் குடித்தேன். இருந்தாலும் கொஞ்சம் கொடு. |
| ಮನೋಹರ್: | ಈಗ ಗಂಟೆ ಎಷ್ಟು? | இப்போது மணி எத்தனை? |
| ಮಾಧು : | ಈಗ ಹನ್ನೊಂದು ಗಂಟೆ. | இப்போது பதினோரு மணி. |
| ಮನೋಹರ್: | ಯಾಕೆ ತಿಂಡಿ ಇಷ್ಟು ಲೇಟು? | ஏன் பலகாரம் இவ்வளவு லேட்டு? |
| ಮಾಧು : | ಇವತ್ತು ತಡವಾಗಿ ಎದ್ದೆ. ಭಾನುವಾರ ನೋಡು. | இன்று தாமதமாக எழுந்தேன். ஞாயிற்றுக்கிழமை பார். |
| ಮನೋಹರ್: | ಸರಿ, ಬೇಗ ತಿಂಡಿ ತಿನ್ನು. ರಮೇಶನ ಮನೆಗೆ ಹೋಗೋಣ. | சரி, சீக்கிரம் பலகாரம் சாப்பிடு. ரமேஷின் வீட்டுக்குப் போகலாம். |

### 1.1. உரையாடல்

| | | |
|---|---|---|
| ಸುರೇಶ್: | ನೀವು ಕನ್ನಡ ಎಲ್ಲಿ ಕಲಿತಿರಿ? | நீங்கள் எங்கே கன்னடம் கற்றீர்கள்? |
| ಮನೋಹರ್: | ಮೈಸೂರಿನಲ್ಲಿ ಕಲಿತೆ. | மைசூரில் கற்றேன். |
| ಸುರೇಶ್: | ಅಲ್ಲಿ ಎಲ್ಲಿ ಕಲಿತಿರಿ? | அங்கு எங்கே கற்றீர்கள்? |
| ಮನೋಹರ್: | ಅಲ್ಲಿ ದಕ್ಷಿಣ ಪ್ರಾಂತೀಯ ಭಾಷಾ ಕೇಂದ್ರದಲ್ಲಿ ಕಲಿತೆ. | அங்கே தென் பிராந்திய மொழிகளின் மையத்தில் கற்றேன். |
| ಸುರೇಶ್: | ಯಾವ ವರ್ಷ ಕಲಿತಿರಿ? | எந்த வருடம் கற்றீர்கள்? |
| ಮನೋಹರ್: | ಸಾವಿರದ ಒಂಬೈನೂರಾ ಎಂಬತ್ತರಲ್ಲಿ ಕಲಿತೆ. | ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் எண்பதில் கற்றேன். |

### 2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | ನಾನು ಬೆಳಿಗ್ಗೆ ಎಂಟು ಗಂಟೆಗೆ ಎದ್ದೆ. | நான் காலை எட்டு மணிக்கு எழுந்தேன். |
| | ನಾವು ಊರಿನಿಂದ ನಿನ್ನೆ ಬಂದೆವು. | நாங்கள் ஊரிலிருந்து நேற்று வந்தோம். |
| | ನೀನು ಕಾಫಿ ಕುಡಿದೆಯಾ? | நீ காபி குடித்தாயா? |
| | ನೀವು ಆ ಪುಸ್ತಕ ತಂದಿರಾ? | நீங்கள் அந்தப் புத்தகம் கொண்டுவந்தீர்களா? |
| | ರಾಜು ಮಗುವಿಗೆ ಹೊಡೆದ. | ராஜு குழந்தையை அடித்தான். |
| | ರಾಣಿ ಕಿಟಕಿ ತೆಗೆದಳು. | ராணி ஜன்னலைத் திறந்தாள். |
| | ಅವರು ನನ್ನನ್ನು ಕರೆದರು. | அவர்கள் என்னை அழைத்தார்கள். |
| | ಹಸು ಹುಲ್ಲು ತಿಂದಿತು. | பசு புல் தின்றது. |
| | ಕರುಗಳು ಹಾಲು ಕುಡಿದವು. | கன்றுகள் பால் குடித்தன. |
| 2.2 | ಬಿಹಾರದಲ್ಲಿ ಜಮೀನ್ದಾರರು ಕೂಲಿಯವರನ್ನು ಕೊಂದರು. | பீகாரில் ஜமீன்தார்கள் கூலிக்காரர்களைக் கொன்றார்கள். |
| | ಭಾರತ ಕ್ರಿಕೆಟ್ಟಿನಲ್ಲಿ ಗೆದ್ದಿತು. | இந்தியா கிரிகெட்டில் வென்றது. |
| | ಅಧ್ಯಾಪಕರು ವಿದ್ಯಾರ್ಥಿಗಳನ್ನು ಬೈದರು. | ஆசிரியர் மாணவர்களைத் திட்டினார். |
| | ಅವರು ಒಂದು ಪತ್ರ ಬರೆದರು. | அவர் ஒரு கடிதம் எழுதினார். |
| | ನಾನು ಮತ್ತು ರವಿ ಸಂಜೆ ಒಂದು ಮೈಲಿ ನಡೆದವು. | நானும் ரவியும் மாலையில் ஒரு மைல் நடந்தோம். |
| | ಕಳ್ಳರು ಅರಣ್ಯದಲ್ಲಿ ಮರ ಕಡಿದರು. | கள்ளர்கள் காட்டில் மரம் வெட்டினார்கள். |



| | | |
|---|---|---|
| | ಅವರು ಈ ಸಾರಿ ಹೆಚ್ಚು ಕಬ್ಬು ಬೆಳೆದರು. | அவர்கள் இம்முறை அதிகக் கரும்பு பயிரிட்டார்கள். |
| | ಹುಡುಗಿ ದಾರಿಯಲ್ಲಿ ಬಿದ್ದಳು. | சிறுமி வழியில் விழுந்தாள். |
| | ಅಗಸ ಬಟ್ಟೆ ಒಗೆದ. | வண்ணான் துணி துவைத்தான். |
| | ಚಳುವಳಿಕಾರರು ಕಾನೂನು ಮುರಿದರು. | போராட்டக்காரர்கள் சட்டத்தை மீறினார்கள். |
| | ಮಗು ಸಗಣಿ ತುಳಿಯಿತು. | குழந்தை சாணியை மிதித்தது. |
| | ನಾನು ಬಸ್ಸಿಗೆ ತುಂಬಾ ಹೊತ್ತು ಕಾದೆ. | நான் பஸ்ஸுக்கு நீண்ட நேரம் காத்திருந்தேன். |
| | ನಿನ್ನೆ ಅವರು ಬೆಂಗಳೂರಿನಲ್ಲಿ ಇದ್ದರು. | நேற்று அவர் பெங்களூரில் இருந்தார். |
| | ಅವಳು ತನ್ನ ಸೌಂದರ್ಯದಿಂದ ಅವನನ್ನು ಸೆಳೆದಳು. | அவள் தன் அழகால் அவனைக் கவர்ந்தாள். |
| 2.3 | ಶೀಲ ಆಟದಲ್ಲಿ ಸೋತಳು. | ஷீலா விளையாட்டில் தோற்றாள். |
| | ಗಾಂಧೀಜಿ ಚರಕದಿಂದ ನೂತರು. | காந்திஜி சர்க்காவால் நூற்றார். |
| | ಸರ್ಕಸ್ ದುರಂತದಲ್ಲಿ ನೂರಾರು ಜನ ಸತ್ತರು. | சர்க்கஸ் துயரச் சம்பவத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் இறந்தார்கள். |
| | ನೀವು ಹೇಗೆ ಈ ವಿಷಯವನ್ನು ಮರೆತಿರಿ? | நீங்கள் எப்படி இந்த விஷயத்தை மறந்தீர்கள்? |
| | ನೀವು ಎಲ್ಲಿ ಸಂಗೀತ ಕಲಿತಿರಿ? | நீங்கள் எங்கே சங்கீதம் கற்றீர்கள்? |
| | ಪದ್ಮ ಗಂಡು ಮಗು ಹೆತ್ತಳು. | பத்மா ஆண்குழந்தை பெற்றெடுத்தாள். |
| | ರೈತರು ಹೊಲ ಉತ್ತರು. | உழவர்கள் வயலை உழுதார்கள். |
| 2.4 | ಮಕ್ಕಳು ಜೋರಾಗಿ ಅತ್ತವು. | குழந்தைகள் பலமாக அழுதன. |
| | ಅವರು ನಿಧಾನವಾಗಿ ಕಾಫಿ ಕುಡಿದರು. | அவர்கள் நிதானமாகக் காபி குடித்தார்கள். |
| | ಅವಳು ಸ್ಕೂಟರಿನಲ್ಲಿ ವೇಗವಾಗಿ ಹೋದಳು. | அவள் ஸ்கூட்டரில் வேகமாகச் சென்றாள். |
| 2.5 | ಭಾರತ ಹಾಕಿಯಲ್ಲಿ ಪಾಕಿಸ್ತಾನದ ಮೇಲೆ ಗೆಲ್ಲಲಿಲ್ಲ. | பாரதம் ஹாக்கியில் பாகிஸ்தானை வெல்லவில்லை. |
| | ಬಸ್ಸು ನದಿಗೆ ಬೀಳಲಿಲ್ಲ. | பஸ் ஆற்றில் விழவில்லை. |

| | |
|---|---|
| ಪಕ್ಕದ ಮನೆಯವರು ಗುಲಾಬಿ ಹೂ ಕೀಳಲಿಲ್ಲ. | பக்கத்து வீட்டுக்காரர்கள் ரோஜாப்பூ பறிக்கவில்லை. |
| ನನ್ನ ತಂದೆ ನನಗೆ ಕಾಗದ ಬರೆಯಲಿಲ್ಲ. | என் தந்தை எனக்குக் கடிதம் எழுதவில்லை. |
| ಈ ದೇಶದಲ್ಲಿ ಹಸಿವಿನಿಂದ ಯಾರೂ ಸಾಯಲಿಲ್ಲ. | இந்த நாட்டில் பசியினால் யாரும் சாகவில்லை. |

### 3. குறிப்புகள்

இறந்த காலத்தைக் குறிக்கும் உருபுகள் இப்பாடத்தில் அறிமுகம் செய்யப் பட்டுள்ளன. இறந்த காலத்தைச் சுட்டும் பல உருபுகள் கன்னடத்தில் உள்ளன. அவற்றில் 'த்$^{3}$', 'த்' இப்பாடத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. எந்தெந்த வினைச்சொற்கள் 'த்$^{3}$', 'த்' உருபேற்கின்றன என்பதற்குத் தனிப்பட்ட விதியில்லை. இந்நூலைக் கற்பவர்களின் வசதிக்காக இவ்வுருபுகளை ஏற்கும் வினைச்சொற்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. இறந்தகாலத்தைக் குறிக்கும் வினைச்சொல்லின் வடிவம்

மூல வினைச்சொல் + இறந்தகால உருபு + எழுவாய்க்குத் தக்க விகுதி என அமையும்.

'தின்னு' என்னும் மூல வினைச்சொல்லுடன் இறந்தகாலம் சுட்டும் உருபு சேரும்போது, மூவிடங்களிலும் எழுவாய்க்கு ஏற்ப விகுதிகள் எவ்வாறு அமையும் என்பது காட்டப்பட்டுள்ளது.

| இடம் | ஒருமை | பன்மை |
|---|---|---|
| தன்மை | நானு தின்தெ$^{3}$. | நாவு தின்தெ$^{3}$வு. |
| முன்னிலை | நீனு தின்தெ$^{3}$. | நீவு தின்தி$^{3}$ரி. |
| படர்க்கை | அவனு தின்த$^{3}$னு | அவரு தின்த$^{3}$ரு. |
| | அவளு தின்த$^{3}$ளு. | அவு தின்த$^{3}$வு. |
| | அது தின்து. | |
| | அது தின்தி$^{3}$து. | |

படர்க்கை ஒருமை எழுவாய்க்கு 'து$^{3}$', 'இது$^{3}$' ஆகிய இரு விகுதிகள். 'து$^{3}$' நேரடியாக மூல வினைச்சொல்லோடு சேரும். 'இது$^{3}$' இறந்தகாலம் சுட்டும் உருபுடன் இணைந்து வினைச்சொல்லோடு சேரும்.

இறந்தகாலத்தைக் குறிக்க 'த்$^{3}$' உருபேற்கும் வினைச்சொற்களின் பட்டியல் கீழே.

| | | | |
|---|---|---|---|
| ಹೋಗು | போ | ಹೋದೆ | போனேன் |
| ತಿನ್ನು | தின் | ತಿಂದೆ | தின்றேன் |
| ಕುಡಿ | குடி | ಕುಡಿದೆ | குடித்தேன் |



| | | | |
|---|---|---|---|
| ಎಳೆ | இழு | ಎಳೆದೆ | இழுத்தேன் |
| ಕಳೆ | கழி, தொலை | ಕಳೆದೆ | கழித்தேன், தொலைத்தேன் |
| ತುಳಿ | மிதி | ತುಳಿದೆ | மிதித்தேன் |
| ಮುರಿ | முறி, மீறு | ಮುರಿದೆ | முறித்தேன், மீறினேன் |
| ಬೆಳೆ | வளர் | ಬೆಳೆದೆ | வளர்த்தேன் |
| ಒಗೆ | துவை | ಒಗೆದೆ | துவைத்தேன் |
| ಕಡಿ | வெட்டு | ಕಡಿದೆ | வெட்டினேன் |
| ನಡೆ | நட | ನಡೆದೆ | நடந்தேன் |
| ಬರೆ | எழுது | ಬರೆದೆ | எழுதினேன் |
| ಕೊಯ್ಯು | பறி, கொய் | ಕೊಯ್ದೆ | பறித்தேன், கொய்தேன் |
| ಕಾಯು | காத்திரு, காப்பாற்று | ಕಾಯ್ದೆ/ಕಾದೆ | காத்திருந்தேன், காப்பாற்றினேன் |
| ಬೀಳು | விழு | ಬಿದ್ದೆ | விழுந்தேன் |
| ಬಾ | வா | ಬಂದೆ | வந்தேன் |
| ತಾ | தா, கொடு | ತಂದೆ | தந்தேன், கொடுத்தேன் |
| ತೆಗೆ | திற, எடு | ತೆಗೆದೆ | திறந்தேன், எடுத்தேன் |
| ಕರೆ | அழை, கூப்பிடு | ಕರೆದೆ | அழைத்தேன், கூப்பிட்டேன் |
| ಕೊಲ್ಲು | கொல் | ಕೊಂದೆ | கொன்றேன் |
| ಏಳು | எழு | ಎದ್ದೆ | எழுந்தேன் |
| ಇರು | இரு | ಇದ್ದೆ | இருந்தேன் |
| ಗೆಲ್ಲು | வெல் | ಗೆದ್ದೆ | வென்றேன் |
| ಅನ್ನು | என்று சொல் | ಅಂದೆ | என்றேன் |
| ಹೊಡೆ | அடி | ಹೊಡೆದೆ | அடித்தேன் |
| ತೊಳೆ | கழுவு | ತೊಳೆದೆ | கழுவினேன். |

இறந்தகாலத்தைச் சுட்ட 'த்' உருபேற்கும் சில வினைச்சொற்களின் பட்டியல் கீழே:

| | | | |
|---|---|---|---|
| ಸೋಲು | தோல்வியடை | ಸೋತೆ | தோற்றேன் |
| ಕೀಳು | பறி, பிடுங்கு | ಕಿತ್ತೆ | பறித்தேன், பிடுங்கினேன் |
| ಕಲಿ | கல் | ಕಲಿತೆ | கற்றேன் |
| ಅಳು | அழு | ಅತ್ತೆ | அழுதேன் |
| ಸಾಯು | இற | ಸತ್ತೆ | இறந்தேன் |

| | | | |
|---|---|---|---|
| ಹೆರು | பெற்றெடு | ಹೆತ್ತೆ | பெற்றெடுத்தேன் |
| ಉಳು | உழு | ಉತ್ತೆ | உழுதேன் |
| ನೂಲು | நூல் | ನೂತೆ | நூற்றேன் |
| ಮರೆ | மற | ಮರೆತೆ | மறந்தேன். |

'த்$^3$' உருபு சேரும்போது சில வினைச்சொற்களில் ஏற்படும் மாற்றங்களைக் கவனிக்க:

கொல் + த்$^3$ + எ = கொன்தெ$^3$
ப$^3$ய்யு + த்$^3$ + எ = ப$^3$ய்தெ$^3$
எளு + த்$^3$ + எ = எத்$^3$தெ$^3$
கெ$^3$ல்லு + த்$^3$ + எ = கெ$^3$த்தெ$^3$
பீ$^3$ளு + த்$^3$ + எ = பி$^3$த்தெ$^3$
காயு + த்$^3$ + எ = காய்தெ$^3$ (காதெ$^3$)
இரு + த்$^3$ + எ = இத்$^3$தெ$^3$
ஹோகு$^3$ + த்$^3$ + எ = ஹோதெ$^3$.

'த்' உருபு சேரும்போது சில வினைச்சொற்களில் ஏற்படும் வேறுவகை மாற்றங்களைக் கவனிக்க:

கீளு + த் + எ = கித்தெ
ஸாயு + த் + எ = ஸத்தெ
ஸோலு + த் + எ = ஸோதெ
ஹெரு + த் + எ = ஹெத்தெ.

3.2 மூல வினைச்சொல்லோடு 'இல்ல' என்பதைச் சேர்த்து இறந்தகால எதிர்மறை பெறப்படுகிறது. மூல வினைச்சொல்லோடு 'இல்ல' சேரும்போது இடையில் 'அல்' தோன்றும்.

தின்னு + அல் + இல்ல = தின்னலில்ல.

இறந்தகால எதிர்மறையில் எழுவாய், பால் வேறுபாடு இல்லை.

3.3 'ஏ' அழுத்தத்தை அல்லது வலியுறுத்தலைக் குறிக்கும் விகுதி. கன்னட 'ஏ' தமிழ் 'ஏ'வுக்கு நிகர்.

| | |
|---|---|
| இதே$^3$ விடே$^3$ா டாக்கீஸ். | இதுவே விடோ தியேட்டர். |
| நானு ஆக$^3$லே திண்டி$^3$ தின்தெ$^3$. | நான் ஏற்கனவே சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டேன். |

3.4 பெயர்ச்சொற்கள் அல்லது பெயரடைகளுடன் 'ஆகி$^3$' என்பதைச் சேர்த்து வினையடைகளைப் பெறலாம். பண்பு அல்லது அளவையைக் குறிக்கும் பெயரடைகளுடன் 'ஆகி$^3$' சேரும்போது, அப்பெயரடைகளின் பயனிலை வடிவங்களுடன் இணையும்.



எடுத்துக்காட்டு: கெட்டத$^3$ாகி$^3$, ஹொஸத$^3$ாகி$^3$, தெ$^3$ாட்$^3$ட$^3$த$^3$ாகி$^3$.

ஏனைய பெயர்ச்சொற்கள், பெயரடைகளுடன் அவற்றின் மூல வடிவத்துடன் இணையும்.

எடுத்துக்காட்டு: தட$^3$வாகி$^3$, கெம்பாகி$^3$, சென்னாகி$^3$.

**4. பயிற்சி**

4.1 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள சொற்களின் சரியான இறந்தகால வடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 ಅವರು ನಿನ್ನೆ ಊರಿನಿಂದ __________ (ಬಾ).

4.1.2 ಶೈಲ ಪರೀಕ್ಷೆಯಲ್ಲಿ ಚೆನ್ನಾಗಿ ________ (ಬರೆ).

4.1.3 ಅವಳು ಒಂದು ಹೆಣ್ಣು ಮಗು _________ (ಹೆರು).

4.1.4 ಮಗು ರಾತ್ರಿ ಮೂರು ಗಂಟೆಗೆ _________ (ಏಳು).

4.1.5 ನಾನು ನಿನಗಾಗಿ ತುಂಬಾ ಹೊತ್ತು _________ (ಕಾಯು).

4.1.6 ಅವರು ಆಟದಲ್ಲಿ ____________ (ಸೋಲು).

4.1.7 ರೈಲು ಅಪಘಾತದಲ್ಲಿ ಐದು ಜನ ____________ (ಸಾಯು).

4.1.8 ನಾವು ನಿನ್ನೆ ಬೆಂಗಳೂರಿನಲ್ಲಿ ____________ (ಇರು).

4.2 கீழ்க்கண்ட வாக்கியங்களில் உள்ள வினைச்சொற்களை இறந்தகால வினைச் சொற்களாக மாற்றுக.

4.2.1 ಮಧು ಹಾಲು ಕುಡಿಯುತ್ತಾನೆ.

4.2.2 ಮಗು ದಾರಿಯಲ್ಲಿ ಬೀಳುತ್ತದೆ.

4.2.3 ಕಮಲ ಸಂಗೀತ ಕಲಿಯುತ್ತಾಳೆ.

4.2.4 ಅವಳು ಅವನನ್ನು ಮರೆಯುತ್ತಾಳೆ.

4.2.5 ರಾಮ ರಾವಣನನ್ನು ಕೊಲ್ಲುತ್ತಾನೆ.

4.3 கீழ்க்கண்ட வாக்கியங்களில் உள்ள வினைச்சொற்களை இறந்தகாலம் சுட்டாத வினைச்சொற்களாக மாற்றுக.

4.3.1 ಪದ್ಮ ಗಂಡು ಮಗು ಹೆತ್ತಳು.

4.3.2 ರೈತರು ಹೊಲ ಉತ್ತರು.

4.3.3 ರಾಣಿ ಕಿಟಕಿ ತೆಗೆದಳು.

4.3.4 ನೀವು ಆ ಪುಸ್ತಕ ತಂದಿರಾ?

4.3.5 ನಾನು ಬಟ್ಟೆ ಒಗೆದೆ.

4.4 கீழ்க்கண்டவற்றை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுக.

4.4.1 ನಾನು ಬೆಳಗ್ಗೆ ಆರು ಗಂಟೆಗೆ ಎದ್ದೆ.

4.4.2 ಏಳು ಗಂಟೆಗೆ ಕಾಫಿ ಕುಡಿದೆ.

4.4.3 ನಾವು ಕನ್ನಡ ಚೆನ್ನಾಗಿ ಮಾತಾಡೋದು ಕಲಿತೆವು.

4.4.4 ನಾನು ಈ ವಿಷಯ ಮರೆತೆ.

4.4.5 ತಂದೆ ನನ್ನನ್ನು ಬೈದರು.

4.5 கீழ்க்கண்டவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.5.1 நான் என் சினேகிதனுக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

45.2 நாங்கள் நேற்று மூன்று மைல்கள் நடந்தோம்.

4.5.3 அவள் அரைமணி நேரம் அழுதாள்.

4.5.4 அவர் மாரடைப்பால் இறந்தார்.

4.5.5 அவன் என்னை முட்டாள் என்று சொன்னான்.

**5.1 துணைச் சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| ಅರಣ್ಯ | ஆரண்யம், காடு |
| ಆಟ | விளையாட்டு |
| ಕಬ್ಬು | கரும்பு |
| ಕರು | கன்று |
| ಕಳ್ಳರು | கள்ளர்கள், திருடர்கள் |
| ಕಾಗದ | காகிதம், கடிதம் |
| ಕಾನೂನು | சட்டம் |
| ಕಿಟಕಿ | ஜன்னல், சாளரம் |
| ಕೂಲಿ | கூலிக்காரன் |
| ಚರಕ | சர்க்கா, இராட்டை |
| ಚಳುವಳಿಗಾರರು | போராளிகள், போராட்டக்காரர்கள் |
| ಜಮೀನ್ದಾರ | ஜமீன்தார் |
| ದುರಂತ | துயரம் |
| ನದಿ | நதி, ஆறு |
| ಪತ್ರ | கடிதம் |
| ರೈತರು | உழவர்கள், விவசாயிகள் |
| ವಿಷಯ | விஷயம், கருத்து |
| ಸಗಣಿ | சாணி |
| ಸೆಳೆ | கவர், இழு |
| ಸೌಂದರ್ಯ | அழகு |
| ಹಸಿವು | பசி |
| ಹುಲ್ಲು | புல் |
| ಹೊಲ | நிலம் (புஞ்சை). |



## பாடம் 15

### 1. உரையாடல்

| | | |
|---|---|---|
| ರಾಜು: | ನಿಮಗೆ ನಿನ್ನೆ ಮೋಹನ್ ಸಿಕ್ಕನಾ? | உங்களுக்கு நேற்று மோகன் கிடைத்தானா? |
| ರಾಮು: | ಇಲ್ಲ, ಸಿಗಲಿಲ್ಲ. ನಿನಗೆ ಸಿಕ್ಕನಾ? | இல்லை, கிடைக்கவில்லை. உனக்குக் கிடைத்தானா? |
| ರಾಜು: | ಹೌದು, ಸಿಟಿಯಲ್ಲಿ ಸಿಕ್ಕ. ನಿಮ್ಮನ್ನು ನೋಡೋಕೆ ಹೋಗ್ತೀನಿ ಅಂತ ಅಂದ. | ஆமாம், நகரத்தில் கிடைத்தான். உங்களைப் பார்க்கப் போகிறேன் என்றான். |
| ರಾಮು: | ಇಲ್ಲ ನಿನ್ನೆ ಬರಲಿಲ್ಲ. ಏನು ಸಮಾಚಾರ? | இல்லை நேற்று வரவில்லை. என்ன சமாச்சாரம்? |
| ರಾಜು: | ಅವನು ಕೆಲಸ ಬಿಟ್ಟನಂತೆ. | அவன் வேலையை விட்டுவிட்டானாம். |
| ರಾಮು: | ಯಾಕೆ? | ஏன்? |
| ರಾಜು: | ಅವರ ತಂದೆ ಊರಿನಲ್ಲಿ ಜಮೀನು ಕೊಂಡರಂತೆ ಅದಕ್ಕೆ. | அவன் தந்தை ஊரில் நிலம் வாங்கினாராம் அதனால். |
| ರಾಮು: | ಏನು ಜಮೀನು? | என்ன நிலம்? |
| ರಾಜು: | ತೆಂಗಿನ ತೋಟ. ಇವನು ಅದರ ಮೇಲ್ವಿಚಾರಣೆ ಮಾಡ್ತಾನಂತೆ. | தென்னந்தோப்பு. இவன் அதை மேற்பார்வை செய்வானாம். |
| ರಾಮು: | ಎಷ್ಟು ಎಕರೆ? | எத்தனை ஏக்கர்? |
| ರಾಜು: | ಹತ್ತು ಎಕರೆ. | பத்து ஏக்கர்? |
| ರಾಮು: | ಎಷ್ಟು ಕೊಟ್ಟರು? | எவ்வளவு கொடுத்தார்கள்? |
| ರಾಜು: | ಒಂದು ಲಕ್ಷ ಕೊಟ್ಟರು ಅಂದ. | ஒரு லட்சம் கொடுத்தார்களாம். |
| ರಾಮು: | ಪರವಾಗಿಲ್ಲ. ಕಡಿಮೆ ಬೆಲೇನೆ. | பரவாயில்லை. குறைந்த விலைதான். |

### 1.1. உரையாடல்

| | | |
|---|---|---|
| ಅರವಿಂದ: | ನಿನ್ನೆ ಬೆಳಿಗ್ಗೆ ಎಷ್ಟು ಗಂಟೆ ತನಕ ಆಟ ಆಡಿದಿರಿ? | நேற்று காலை எத்தனை மணி வரை விளையாடினீர்கள்? |
| ಮನೋಹರ್: | ಹತ್ತು ಗಂಟೆ ತನಕ ಆಡಿದೆವು. | பத்து மணி வரை விளையாடினோம். |
| ಅರವಿಂದ: | ಯಾರು ಗೆದ್ದರು? | யார் வென்றார்கள்? |
| ಮನೋಹರ್: | ಅವರು ಗೆದ್ದರು, ನಾವು ಸೋತೆವು. | அவர்கள் வென்றார்கள், நாங்கள் தோற்றோம். |

| | |
|---|---|
| ಅರವಿಂದ : ಆಮೇಲೆ ಏನು ಮಾಡಿದಿರಿ? | அதற்குப் பிறகு என்ன செய்தீர்கள்? |
| ಮನೋಹರ್: ಆ ಮೇಲೆ ಸ್ನಾನ ಮಾಡಿದೆ. | அதற்குப் பிறகு குளித்தேன். |
| ಸುಮಾರು ಒಂದು ಗಂಟೆಗೆ ಊಟ ಮಾಡಿದೆ. | சுமார் ஒரு மணிக்குச் சாப்பிட்டேன். |
| ಎರಡು ಗಂಟೆಯಿಂದ ನಾಲ್ಕು ಗಂಟೆವರೆಗೆ ನಿದ್ರೆ ಮಾಡಿದೆ. | இரண்டு மணி முதல் நான்கு மணி வரை தூங்கினேன். |
| ಅರವಿಂದ : ಸಿಟಿಗೆ ಹೋಗಲಿಲ್ಲವಾ? | நகரத்துக்குப் போகவில்லையா? |
| ಮನೋಹರ್: ಐದು ಗಂಟೆಗೆ ಹೋದೆ. | ஐந்து மணிக்குப் போனேன். |
| ಅರವಿಂದ : ಯಾರು ಯಾರು ಹೋದಿರಿ? | யார் யார் போனீர்கள்? |
| ಮನೋಹರ್: ನಾನು ರಮೇಶ ಹೋದೆವು. | நான், ரமேஷ் போனோம். |
| ಅರವಿಂದ : ಯಾವುದಾದರೂ ಸಿನಿಮಾ ನೋಡಿದಿರಾ? | ஏதாவது சினிமா பார்த்தீர்களா? |
| ಮನೋಹರ್: ಇಲ್ಲ. ಯಾವ ಸಿನಿಮಾನೂ ನೋಡಲಿಲ್ಲ. | இல்லை. எந்தச் சினிமாவும் பார்க்கவில்லை. |
| ಎಂಟು ಗಂಟೆವರೆಗೆ ಅಲ್ಲಿ ಇಲ್ಲಿ ಸುತ್ತಾಡಿದೆವು. | எட்டு மணி வரை அங்கே இங்கே சுற்றினோம். |
| ಕಾಮತ್‌ನಲ್ಲಿ ಕಾಫಿ ಕುಡಿದೆವು. | காமத்தில் காபி குடித்தோம். |
| ಒಂಭತ್ತು ಗಂಟೆಗೆ ವಾಪಸ್ ಬಂದೆವು. | ஒன்பது மணிக்குத் திரும்பி வந்தோம். |

## 2. மாதிரிப் பயிற்சி

| | |
|---|---|
| 2.1 ಮೋಹನಿಗೆ ಕೆಲಸ ಸಿಕ್ಕಿತು. | மோகனுக்கு வேலை கிடைத்தது. |
| ರಾಜು ನನಗೆ ದಾರಿಯಲ್ಲಿ ಸಿಕ್ಕ. | ராஜு எனக்கு வழியில் கிடைத்தான். |
| ಹುಡುಗರು ಕ್ಲಾಸಿನಲ್ಲಿ ನಕ್ಕರು. | மாணவர்கள் வகுப்பில் சிரித்தார்கள். |
| ಈ ತಿಂಗಳ ಸಂಬಳದಲ್ಲಿ ನೂರು ರೂಪಾಯಿ ಮಿಕ್ಕಿತು. | இந்த மாதச் சம்பளத்தில் நூறு ரூபாய் மீந்தது. |
| ಕಳ್ಳರು ಮನೆ ಹೊಕ್ಕರು. | கள்ளர்கள் வீட்டுக்குள் புகுந்தார்கள். |
| 2.2 ಕುಮಾರ ನನಗೆ ಹತ್ತು ರೂಪಾಯಿ ಕೊಟ್ಟ. | குமார் எனக்குப் பத்து ரூபாய் கொடுத்தான். |
| ಗುಂಡಾಗಳು ಪ್ರಜಾವಾಣಿ ಪತ್ರಿಕೆಯನ್ನು ಸುಟ್ಟರು. | குண்டர்கள் பிரஜா வாணி பத்திரிகையை எரித்தார்கள். |
| ಅವನು ಕೆಟ್ಟ ಹುಡುಗರ ಸಹವಾಸದಿಂದ ಕೆಟ್ಟ. | அவன் கெட்ட பையன்களின் சகவாசத்தால் கெட்டான். |
| ನಾನು ಬಾಡಿಗೆ ಮನೆಯನ್ನು ಬಿಟ್ಟೆ. | நான் வாடகை வீட்டைக் காலி செய்தேன். |
| ನೀವು ಹಣವನ್ನು ಬ್ಯಾಂಕಿನಲ್ಲಿ ಇಟ್ಟಿರಾ? | நீங்கள் பணத்தைப் பாங்கில் போட்டீர்களா? |



| | |
|---|---|
| ನನ್ನ ಸ್ನೇಹಿತೆ ಹೊಸ ಸೀರೆ ಉಟ್ಟಳು. | என் சினேகிதி புதுச் சேலை உடுத்தாள். |
| ಬಸ್ಸು ಹತ್ತು ಗಂಟೆಗೆ ಹೊರಟಿತು. | பஸ் பத்து மணிக்குப் புறப்பட்டது. |
| ನೀವು ಮನೆಯ ಮುಂದೆ ಎಷ್ಟು ತೆಂಗಿನ ಗಿಡ ನೆಟ್ಟಿರಿ? | நீங்கள் வீட்டின் முன்னால் எத்தனை தென்னங்கன்றுகள் நட்டீர்கள்? |
| ಮಾವಿನ ಹಣ್ಣು ಕೆಟ್ಟಿತು. | மாம்பழம் கெட்டுப்போயிருந்தது. |
| ಮಕ್ಕಳು ಹಬ್ಬದ ದಿನ ಹೊಸ ಬಟ್ಟೆ ತೊಟ್ಟರು. | குழந்தைகள் பண்டிகை தினம் புத்தாடை அணிந்தார்கள். |
| 2.3 ರಾಮರಾಯರು ಹೊಸ ಮನೆ ಕೊಂಡರು. | ராமராயர் புது வீடு வாங்கினார். |
| ಆಳುಗಳು ರಾಗಿ ಮುದ್ದೆ ಉಂಡರು. | வேலைக்காரர்கள் ராகிக் களி சாப்பிட்டார்கள். |
| ನಾನು ದಾರಿಯಲ್ಲಿ ಒಂದು ಹಾವು ಕಂಡೆ. | நான் வழியில் ஒரு பாம்பைக் கண்டேன். |
| 2.4 ಅವನು ಹೊಟ್ಟೆ ಹುಣ್ಣಾಗುವಂತೆ ನಗಲಿಲ್ಲ. | அவன் வயிறு புண்ணாகும்படி சிரிக்கவில்லை. |
| ಅವರು ನನಗೆ ಬಹುಮಾನ ಕೊಡಲಿಲ್ಲ. | அவர் எனக்குப் பரிசு கொடுக்கவில்லை. |
| ನಾವು ಸಮಯಕ್ಕೆ ಸರಿಯಾಗಿ ಹೊರಡಲಿಲ್ಲ. | நாங்கள் சரியான நேரத்திற்குப் புறப்படவில்லை. |
| ರಾಗಿಣಿ ಹೊಸ ಸೀರೆ ಕೊಳ್ಳಲಿಲ್ಲ. | ராகினி புதுச் சேலை வாங்கவில்லை. |
| ನನಗೆ ಸೂರ್ಯ ಗ್ರಹಣ ಕಾಣಲಿಲ್ಲ. | எனக்குச் சூரிய கிரகணம் தெரியவில்லை. |
| 2.5 ನಾನೇ ಅಡಿಗೆ ಮಾಡಿಕೊಳ್ತೀನಿ. | நானே சமையல் செய்துகொள்கிறேன். |
| ಅವನು ತನ್ನ ಬಟ್ಟೆ ತಾನೇ ಒಗೆದುಕೊಳ್ತಾನೆ. | அவன் தன் துணியைத் தானே துவைத்துக்கொள்கிறான். |
| ವಿಮಲ ತಲೆ ಬಾಚಿಕೊಳ್ತಾಳೆ. | விமலா தலை வாரிக்கொள்கிறாள். |
| ಅವರು ಸ್ನಾನ ಮಾಡಿಕೊಂಡರು. | அவர் குளித்தார். |
| ಅವನು ಆತ್ಮಹತ್ಯೆ ಮಾಡಿಕೊಂಡ. | அவன் தற்கொலை செய்துகொண்டான். |
| 2.6 ರಾಮು ನಾಳೆ ಬೆಂಗಳೂರಿಗೆ ಹೋಗ್ತೀನಿ ಅಂತ ಅಂದ. | ராமு 'நாளை பெங்களூருக்குப் போகிறேன்' என்று சொன்னான். |

| | | |
|---|---|---|
| | ಪರೀಕ್ಷೆ ಫೀಸು ಕಟ್ಟು ಅಂತ ನಮ್ಮ ತಂದೆ ಹಣ ಕೊಟ್ಟರು. | தேர்வுக்குக் கட்டணம் கட்டு என்று எங்கள் தந்தை பணம் கொடுத்தார். |
| | ಅವನಿಗೆ ಬೃಂದಾವನ ನೋಡಬೇಕು ಅಂತ ಆಸೆ. | அவனுக்குப் பிருந்தாவனம் பார்க்க வேண்டும் என்று ஆசை. |
| 2.7 | ಮುಖ್ಯಮಂತ್ರಿಗಳು ನಾಳೆ ದೆಹಲಿಗೆ ಹೋಗ್ತಾರಂತೆ. | முதலமைச்சர் நாளை டெல்லிக்குப் போகிறாராம். |
| | ವಿಧಾನಸೌಧದ ಸುತ್ತ ಬೇಲಿ ಹಾಕಿಸ್ತಾರಂತೆ. | விதான சௌதாவைச் சுற்றி வேலி போடுகிறார்களாம். |
| | ನಾಳೆ ನನ್ನ ಭಾವ ಊರಿಗೆ ಬರ್ತಾರಂತೆ. | நாளை என் மாமா ஊருக்கு வருகிறாராம். |
| 2.8 | ಮಹತ್ಮ ಗಾಂಧಿಯವರು ಭಾರತದ ಸ್ವಾತಂತ್ರ್ಯಕ್ಕೆ ಹೋರಾಡಿದರು. | மகாத்மா காந்தியவர்கள் இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் போராடினார். |
| | ಪುರಂದರದಾಸರು ಬಡವರಿಗೆ ಐಶ್ವರ್ಯ ದಾನ ಮಾಡಿದರು. | புரந்தரதாசர் ஏழைகளுக்குச் செல்வத்தைத் தானம் செய்தார். |
| | ಕತ್ತೆಗಳು ತುಂಬಾ ಜೋರಾಗಿ ಓಡಿದವು. | கழுதைகள் மிக வேகமாக ஓடின. |
| | ವಿಶ್ವೇಶ್ವರಯ್ಯ ಕೃಷ್ಣರಾಜಸಾಗರ ಕಟ್ಟಿಸಿದರು. | விஷ்வேஷ்வரய்யா கிருஷ்ணராஜசாகர் கட்டுவித்தார். |
| | ನಾನು ಕಿಟಕಿ ಮುಚ್ಚಿದೆ. | நான் ஜன்னலை மூடினேன். |
| | ಜನತಾ ಪಕ್ಷ ಹೊಸ ಸರ್ಕಾರ ರಚಿಸಿತು. | ஜனதா கட்சி புதிய அரசை அமைத்தது. |
| | ನೀವು ನಿನ್ನೆ ಎಷ್ಟು ಗಂಟೆಗೆ ಮಲಗಿದಿರಿ? | நீங்கள் நேற்று எத்தனை மணிக்குப் படுத்தீர்கள்? |
| | ನಿಮ್ಮ ಶರ್ಟು ಎಲ್ಲಿ ಹೊಲಿಸಿದಿರಿ? | உங்கள் சட்டையை எங்கே தைத்தீர்கள்? |
| | ನೀನು ನಿನ್ನೆ ಎಷ್ಟನೇ ಪಾಠ ಓದಿದೆ? | நீ நேற்று எத்தனையாவது பாடம் படித்தாய்? |
| | ಅವನು ನಿನ್ನೆ ಎಷ್ಟು ಸಿಗರೇಟ್ ಸೇದಿದ? | அவன் நேற்று எத்தனை சிகரெட்டுகள் குடித்தான். |
| | ನಾನು ಕಥೆ ಹೇಳಿದೆ, ಅವರು ಕೇಳಿದರು. | நான் கதை சொன்னேன், அவர்கள் கேட்டார்கள். |
| 2.9 | ಹುಡುಗರು ಹತ್ತನೇ ಪಾಠ ಓದಲಿಲ್ಲ. | பையன்கள் பத்தாம் பாடம் படிக்கவில்லை. |



| | |
|---|---|
| ಅವಳು ಅವನನ್ನು ನಂಬಲಿಲ್ಲ. | அவள் அவனை நம்பவில்லை. |
| ಪತ್ರಕರ್ತರು ಮುಖ್ಯಮಂತ್ರಿಗೆ ಪ್ರಶ್ನೆ ಕೇಳಲಿಲ್ಲ. | பத்திரிகையாளர்கள் முதலமைச்சரைக் கேள்வி கேட்கவில்லை. |
| ನಾವು ಇಲ್ಲಿ ಅಲ್ಲಿ ಸುತ್ತಾಡಲಿಲ್ಲ. | நாங்கள் அங்கே இங்கே சுற்றித்திரியவில்லை. |

## 3. குறிப்புகள்

இறந்தகாலத்தைக் குறிக்கும் உருபுகளான 'க்', 'ட்', 'ட்$^3$', மற்றும் 'இத்$^3$' ஆகியவை இங்கே அறிமுகம் செய்யப்படுகின்றன. முந்தைய பாடங்களில் அறிமுகமான உருபுகளைப்போலல்லாமல் இவை சில விதிகளுக்குட்பட்டவை.

3.1 மெய் + உயிர்க் குறில் + மெய் என்ற அசைத்தொடரில் தொடங்கி இரண்டாம் மெய் 'க்$^3$' எனக்கொண்ட வினைச்சொற்கள் இறந்தகாலம் காட்ட 'க்' உருபை ஏற்கும். இத்தகைய வினைச்சொற்களின் உகர ஈறு எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. எடுத்துக்காட்டாக,

ஸிகு$^3$ + க் + அ = ஸிக்க (கிடைத்தான்)

நகு$^3$ + க் + அ = நக்க (சிரித்தான்)

இங்கு 'க்' உருபு சேரும்போது, மூலவினைச்சொல்லின் மெய்யீறு உருபுடன் இணைந்து ககரம் இரட்டிக்கிறது.

3.2 மெய் + உயிர்க் குறில் + மெய் என்ற அசைத்தொடரில் தொடங்கி இரண்டாம் மெய் 'ட்$^3$' எனக்கொண்ட வினைகள் இறந்தகாலம் காட்ட 'ட்' உருபை ஏற்கும்.

பிடு$^3$ + ட் + எ = பிட்டெ (விட்டேன்)

இடு$^3$ + ட் + எ = இட்டெ (வைத்தேன்)

இங்கு 'ட்' உருபு சேரும்போது, மூலவினைச்சொல்லின் உகரஈறு கெட்டு உருபுடன் டகரமெய் இரட்டிக்கிறது.

ஹொரடு$^3$ என்னும் வினைச்சொல் இந்த அசைத்தொடரில் அமையாவிட்டாலும், இறந்தகாலம் காட்ட 'ட்' உருபை ஏற்கிறது. அதாவது,

நானு ஹொரடெ. நான் புறப்பட்டேன்.

3.3 இறந்தகாலம் காட்ட 'ட்$^3$' உருபை ஏற்கும் வினைச்சொற்கள் மூன்று மட்டுமே உள்ளன. அவை,

காணு + ட்$^3$ + எ = கண்டெ$^3$ (கண்டேன்)

உண்ணு + ட்$^3$ + எ = உண்டெ$^3$ (உண்டேன்)

கொள்ளு → கொண் + ட்$^3$ + எ = கொண்டெ (கொண்டேன்).

'கொள்ளு' என்பதில் ளகரம் ணகரமாகத் திரிவதைக் கவனிக்க.

'கொள்ளு' தனிவினையாக 'கொள்' எனப் பொருள்படும். இது துணைவினையாகவும் பயன்படுத்தப்படுகிறது. பொருளிலும் செயலிலும் தமிழின் 'கொள்' என்பதற்கு நிகர் கன்னடக் 'கொள்ளு'.

| | |
|---|---|
| அவனு ப$^{3}$ட்டெ ஒக$^{3}$து$^{3}$ கொள்தானெ | அவன் துணி துவைத்துக் கொள்கிறான். |
| அவளு அடி$^{3}$கெ$^{3}$ மாடி$^{3}$ கொள்தாளெ. | அவள் சமையல் செய்து கொள்கிறாள். |

3.4 இறந்தகாலம் காட்டும் உருபாக 'த்$^{3}$' ஏற்கும் வினைச்சொற்கள் மூன்று வகை.

3.4.1 மெய் + உயிர் நெடில் + மெய் அல்லது உயிர் நெடில் + மெய் என்ற அசைத்தொடரில் தொடங்கும் வினைச்சொற்கள்.

கேளு + த்$^{3}$ + எ = கேளிதெ$^{3}$

ஆடு$^{3}$ + த்$^{3}$ + எ = ஆடி$^{3}$தெ$^{3}$.

3.4.2 மெய் + உயிர்க் குறில் + மெய் + மெய் அசைத்தொடரில் தொடங்கும் வினைச்சொற்கள்

ஹத்து + த்$^{3}$ + எ = ஹத்திதெ$^{3}$

முச்சு + த்$^{3}$ + எ = முச்சிதெ$^{3}$

நம்பு$^{3}$ + த்$^{3}$ + எ = நம்பிதெ$^{3}$

3.4.3 பல அசைச்சொற்கள்.

இரண்டுக்கும் அதிகமான அசைகளைக்கொண்ட வினைச்சொற்களும் பிற வினைச் சொற்களும் இவ்வகையில் அடங்கும்.

தோரிஸு + த்$^{3}$ + எ = தோரிஸிதெ$^{3}$ (காட்டினேன்)

மலகு$^{3}$ + த்$^{3}$ + எ = மலகி$^{3}$தெ$^{3}$ (படுத்தேன்)

மாதாடு$^{3}$ + த்$^{3}$ + எ = மாதாடி$^{3}$தெ$^{3}$. (பேசினேன்)

இப்பாடத்தில் முன்பு சொன்ன இறந்தகாலம் காட்டும் மற்ற உருபுகளை ஏற்கும் வினைச்சொற்கள் இந்த விதிக்கு உட்படமாட்டா.

3.5 கன்னட 'அந்த' தமிழின் 'என்று' என்பதற்கு நிகர். இது அயற்கூற்று வாக்கியங்களில் பயன்படுகிறது.

| | |
|---|---|
| அவனு பெங்களூரிகெ$^{3}$ ஹோகு$^{3}$தீனி அந்த ஹேளித$^{3}$. | அவன் பெங்களூருக்குப் போகிறேன் என்று சொன்னான். |

'அந்த' அயற் கூற்றைத் தொடர்ந்து அமைவதைக் கவனியுங்கள்.

3.6 அன்தெ தமிழின் 'அப்படியாம்' என்பதில் உள்ள 'ஆம்' என்பதற்கு நிகர்.

| | |
|---|---|
| அபக$^{4}$தத$^{3}$ல்லி நூறு ஜன ஸத்தரன்தெ. | விபத்தில் நூறு பேர் இறந்தார்களாம். |
| அவரு நாளெ ப$^{3}$ர்தாரன்தெ. | அவர் நாளை வருகிறாராம். |



**4. பயிற்சி**

4.1. கீழ்க்கண்டவற்றில் இரண்டாம் வாக்கியத்தின் எழுவாய்க்குத் தக முதல் வாக்கியத்தை மாற்றிக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 ಕಳ್ಳರು ಬಾಳೆ ತೋಟವನ್ನು ಹೊಕ್ಕರು.

ಆನೆ ________________

4.1.2 ಶ್ರೀಮಂತರು ಬಡವರನ್ನು ಸುಟ್ಟರು.

ನಾವು ________________

4.1.3 ಅವನು ಮೇಜಿನ ಮೇಲೆ ಪುಸ್ತಕ ಇಟ್ಟ.

ಅವಳು ________________

4.1.4 ನಾನು ಬಟ್ಟೆ ಒಗೆದುಕೊಂಡೆ.

ಅವರು ________________

4.1.5 ಅವಳು ಹತ್ತು ಗಂಟೆಗೆ ಮಲಗಿದಳು

ನಾಯಿ ________________

4.1.6 ನಾವು ಪರೀಕ್ಷೆಗೆ ಫೀಸು ಕಟ್ಟಿದೆವು.

ನಾನು ________________

4.1.7 ಬೆಕ್ಕು ಹಾಲು ಕುಡಿಯಿತು.

ಬೆಕ್ಕುಗಳು ________________

4.2 கீழ்க்கண்டவற்றை இறந்தகாலம் சுட்டும் வினைச்சொற்களைக் கொண்ட வாக்கியங்களாக மாற்றுக.

4.2.1 ಮಗು ಅಳುತ್ತದೆ.

4.2.2 ಅವರು ಜೋರಾಗಿ ಮಾತಾಡುತ್ತಾರೆ.

4.2.3 ನಾಳೆ ರಾಜು ನನಗೆ ಸಿಕ್ಕುತ್ತಾನೆ.

4.2.4 ಅವನು ನಾಳೆ ಊರು ಬಿಡುತ್ತಾನೆ.

4.2.5 ಮದುವೆ ಮನೆಯಲ್ಲಿ ತುಂಬಾ ಸಾಮಾನು ಮಿಗುತ್ತದೆ.

4.3 கீழ்க்கண்டவற்றை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுக.

4.3.1 ನಿನ್ನೆ ಮಳೆ ಬಂತು.

4.3.2 ಅವರು ಮನೆ ಬಾಗಿಲು ಮುಚ್ಚಿದರು.

4.3.3 ಕೆಂಗಲ್ ಹನುಮಂತಯ್ಯ ವಿಧಾನಸೌಧ ಕಟ್ಟಿಸಿದರು.

4.3.4 ಅವನು ನಾಟಕ ನೋಡಿದನು.

4.3.5 ರಮೇಶ ಹೊಸ ಚಪ್ಪಲಿ ಕೊಂಡುಕೊಂಡ.

4.3.6 ನನಗೆ ನಮ್ಮ ತಂದೆ ಹಣ ಕೊಟ್ಟರು.

4.3.7 ಅವಳು ಸುಮ್ಮನೆ ನಕ್ಕಳು.

4.3.8 ಮೈಸೂರನ್ನು ತುಂಬಾ ಜನ ರಾಜರು ಆಳಿದರು.

4.4 கீழ்க்கண்டவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.4.1 வீட்டுக்கு எவ்வளவு முன்பணம் கொடுத்தாய்?

4.4.2 நான் பெங்களூரில் இரண்டு சட்டைகள் வாங்கினேன்.

4.4.3 கர்நாடகாவில் என்னென்ன இடங்களைப் பார்த்தாய்?

4.4.4 நாங்கள் ஆறு மணிவரை கைப்பந்து விளையாடினோம்.

4.4.5 அவள் ஒரு கதை சொன்னாள்.

4.5 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க.

4.5.1 ನೀವು ನೆನ್ನೆ ಯಾವ ಸಿನಿಮಾ ನೋಡಿದಿರಿ?

4.5.2 ನೀವು ಕರ್ನಾಟಕದಲ್ಲಿ ಯಾವ ಸ್ಥಳ ನೋಡಿದಿರಿ?

4.5.3 ವಿಧಾನಸೌಧ ಯಾರು ಕಟ್ಟಿಸಿದರು?

### 5.1 சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| ಜಮೀನು | நிலம் | ಸಿಗು | கிடை, அகப்படு |
| ಸುತ್ತಾಡು | சுற்றித்திரி | ಲಕ್ಷ | லட்சம். |

### 5.2 துணைச்சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| ಆತ್ಮಹತ್ಯೆ | தற்கொலை | ಇಡು | வை |
| ಉಡು | அணி, உடு | ಉಣ್ಣು | சாப்பிடு, உண் |
| ಐಶ್ವರ್ಯ | செல்வம் | ಕಟ್ಟಿಸು | கட்டு, கட்டவை |
| ಕತ್ತೆ | கழுதை | ಕಳ್ಳ | கள்ளன், திருடன் |
| ಕಿಟಕಿ | ஜன்னல், சாளரம் | ಕೆಡು | கெடு |
| ಗೂಂಡಾಗಳು | குண்டர்கள் | ತೊಡು | அணி, உடுத்து |
| ದಾನ | தானம் | ನೆಡು | நடு |
| ಪತ್ರಕರ್ತರು | பத்திரிகையாளர்கள் | ಬಹುಮಾನ | வெகுமானம் |
| ಬೇಲಿ | வேலி | ರಾಗಿ ಮುದ್ದೆ | ராகிக் களி உருண்டை |
| ಸರ್ಕಾರ | அரசாங்கம் | ಸಹವಾಸ | சகவாசம் |
| ಸ್ವಾತಂತ್ರ್ಯ | விடுதலை, சுதந்திரம் | ಸುಡು | சுடு, எரி |
| ಸೂರ್ಯಗ್ರಹಣ | சூரியக் கிரகணம் | ಹಾವು | பாம்பு |
| ಹುಣ್ಣು | புண் | ಹೊಟ್ಟೆ, | வயிறு. |



## பாடம் 16

### 1. உரையாடல்

| | |
|---|---|
| ಮನೋಹರ್: ನೀವು ಬೆಳಿಗ್ಗೆ ಎಷ್ಟು ಗಂಟೆಗೆ ಏಳ್ತೀರಿ? | நீங்கள் காலையில் எத்தனை மணிக்கு எழுந்திருப்பீர்கள்? |
| ಮೋಹನ್ : ಆರು ಗಂಟೆಗೆ ಏಳ್ತೀನಿ. | ஆறு மணிக்கு எழுவேன். |
| ಮನೋಹರ್: ಎದ್ದು ಏನು ಮಾಡ್ತೀರಿ? | எழுந்து என்ன செய்வீர்கள்? |
| ಮೋಹನ್ : ಎದ್ದು ವಾಕಿಂಗ್ ಹೋಗ್ತೀನಿ. | எழுந்து வாக்கிங் போவேன். |
| ವಾಕಿಂಗ್ ಹೋಗಿ ಬಂದು ಹಲ್ಲು ಉಜ್ಜ ಕೊಳ್ತೀನಿ. | வாக்கிங் போய் வந்து பல் துலக்கிக்கொள்வேன். |
| ಹಲ್ಲು ಉಜ್ಜಕೊಂಡು ಕಾಫಿ ಕುಡೀತೀನಿ. | பல் துலக்கிக்கொண்டு காபி குடிப்பேன். |
| ಮನೋಹರ್: ಹಲ್ಲು ಉಜ್ಜಕೊಳ್ಳದೆ ಕಾಫಿ ಕುಡಿಯಲ್ವಾ? | பல் துலக்கிக்கொள்ளாமல் காபி குடிப்பதில்லையா? |
| ಮೋಹನ್ : ಇಲ್ಲ, ನನಗೆ ಅಭ್ಯಾಸ ಇಲ್ಲ. | இல்லை, எனக்குப் பழக்கம் இல்லை. |
| ಕಾಫಿ ಕುಡಿದು ಪೇಪರ್ ಓದ್ತೀನಿ. | காபி குடித்துவிட்டுப் பேப்பர் படிப்பேன். |
| ಪೇಪರ್ ಓದಿ ಸ್ನಾನ ಮಾಡ್ತೀನಿ. | பேப்பர் படித்துவிட்டுக் குளிப்பேன். |
| ಮನೋಹರ್: ತಣ್ಣೀರಿನಲ್ಲಿ ಮಾಡ್ತೀರೋ ಬಿಸಿ ನೀರಿನಲ್ಲಿ ಮಾಡ್ತೀರೊ? | தண்ணீரில் குளிக்கிறீர்களா, வெந்நீரில் குளிக்கிறீர்களா? |
| ಮೋಹನ್ : ಬಿಸಿ ನೀರಿನಲ್ಲಿ ಮಾಡ್ತೀನಿ. | வெந்நீரில் குளிப்பேன். |
| ಆ ಮೇಲೆ ಊಟ ಮಾಡಿಕೊಂಡು ಆಫೀಸಿಗೆ ಹೊರಡ್ತೀನಿ. | அதன் பிறகு சாப்பாடு சாப்பிட்டுவிட்டு ஆபீஸுக்குப் போவேன். |
| ಮನೋಹರ್: ತಿಂಡಿ ತಿನ್ನದೆ? | பலகாரம் சாப்பிடாமலா? |
| ಮೋಹನ್ : ಹೌದು. ಮಧ್ಯಾಹ್ನ ಮನೆಗೆ ಹೋಗಲ್ಲ. | ஆமாம். மத்தியானம் வீட்டுக்குப் போவதில்லை. |
| ತಿಂಡಿ ತಗೊಂಡು ಹೋಗ್ತೀನಿ. | பலகாரம் எடுத்துக்கொண்டு போவேன். |
| ಮನೋಹರ್: ಆಫೀಸಿಗೆ ಹೇಗೆ ಹೋಗ್ತೀರಿ? | ஆபீஸுக்கு எப்படிப் போகிறீர்கள்? |
| ಮೋಹನ್ : ಬಸ್ಸು ಹಿಡಿದು ಹೋಗ್ತೀನಿ. | பஸ் பிடித்துப் போகிறேன். |
| ಕೆಲವೊಮ್ಮೆ ಬಸ್ಸು ಸಿಗದೆ ತೊಂದರೆ ಆಗುತ್ತೆ. | சிலசமயம் பஸ் கிடைக்காமல் தொந்தரவு ஏற்படுகிறது. |
| ಆಗ ಆಟೋದಲ್ಲಿ ಹೋಗ್ತೀನಿ. | அப்போது ஆட்டோவில் போவேன். |

| | |
|---|---|
| ಮನೋಹರ್: ಸಂಜೆ ಮನೆಗೆ ಬಂದು ಏನು ಮಾಡ್ತೀರಿ? | மாலையில் வீட்டுக்கு வந்து என்ன செய்வீர்கள்? |
| ಮೋಹನ್ : ಕಾಫಿ ಕುಡಿದು ಸ್ನೇಹಿತರ ಜೊತೆ ಹರಟೆ ಹೊಡೀತೀನಿ. | காபி குடித்துச் சினேகிதர்களுடன் அரட்டை அடிப்பேன். |
| ಹರಟೆ ಹೊಡೆದು ಬಿಟ್ಟು ಎಂಟು ಗಂಟೆ ತನಕ ಏನಾದ್ರು ಓದ್ತೀನಿ. | அரட்டை அடித்துவிட்டு எட்டு மணி வரை ஏதாவது படிப்பேன். |
| ಓದಿ ಊಟ ಮಾಡಿ ಮಲಗ್ತೀನಿ. | படித்துவிட்டுச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டுப் படுப்பேன். |

## 2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | ನಾನು ತಿಂಡಿ ತಿಂದು ಕಾಫಿ ಕುಡೀತೀನಿ. | நான் சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டுக் காபி குடிக்கிறேன். |
| | ನಮ್ಮ ತಂದೆ ಬೆಂಗಳೂರಿಗೆ ಬಂದು ದೆಹಲಿಗೆ ಹೋಗ್ತಾರೆ. | எங்கள் தந்தை பெங்களூருக்கு வந்து டெல்லிக்குப் போகிறார். |
| | ಮಳೆ ಬಂದು ಬೆಳೆ ಬೆಳೆಯಿತು. | மழை வந்து பயிர்கள் விளைந்தன. |
| | ಮಗು ಮಂಚದಿಂದ ಕೆಳಗೆ ಬಿದ್ದು ಹಲ್ಲು ಮುರಿದುಕೊಂಡಿತು. | குழந்தை கட்டிலிலிருந்து கீழே விழுந்து பல்லை உடைத்துக்கொண்டது. |
| | ಅವರು ಕನ್ನಡ ಕಲಿತು ಚೆನ್ನಾಗಿ ಮಾತಾಡ್ತಾರೆ. | அவர் கன்னடம் கற்று நன்றாகப் பேசுகிறார். |
| | ಭಾರತ ಕ್ರಿಕೆಟ್ಟಿನಲ್ಲಿ ಸೋತು ತಲೆತಗ್ಗಿಸಿತು. | இந்தியா கிரிக்கெட்டில் தோற்றுத் தலைகுனிந்தது. |
| | ರಮೇಶ ಕ್ಲಾಸಿನಲ್ಲಿ ನಕ್ಕು ಅಧ್ಯಾಪಕರಿಂದ ಬೈಸಿಕೊಂಡ. | ரமேஷ் வகுப்பில் சிரித்து ஆசிரியரிடம் திட்டுவாங்கினான். |
| | ಎತ್ತು ತೋಟಕ್ಕೆ ಹೊಕ್ಕು ಬಾಳೆ ಗಿಡ ತಿಂದಿತು. | எருது தோட்டத்தில் புகுந்து வாழைக் கன்றைத் தின்றது. |
| | ಅವನು ಸಾಲಕ್ಕೆ ಬಡ್ಡಿ ಕೊಟ್ಟು ಬಡವನಾದ. | அவன் கடனுக்கு வட்டி கொடுத்து ஏழையானான். |
| | ಅವಳು ಗಿಡ ನೆಟ್ಟುಬಿಟ್ಟು ನೀರು ಹಾಕಿದಳು. | அவள் செட்டி நட்டுவிட்டு நீர் ஊற்றினாள். |
| | ನಾನು ಸ್ನಾನ ಮಾಡಿಕೊಂಡು ದೇವರ ಪೂಜೆ ಮಾಡಿದೆ. | நான் குளித்துவிட்டுக் கடவுளுக்குப் பூஜைசெய்தேன். |
| | ಅವಳು ಹೊಸ ಸೀರೆ ಕೊಂಡು ಕೊಂಡು ಬಂದಳು. | அவள் புதுச் சேலை வாங்கிக்கொண்டு வந்தாள். |



| | | |
|---|---|---|
| 2.2. | ಅವರು ಸಿಟಿಗೆ ಹೋಗಿಬಿಟ್ಟು ಸಿನಿಮಾ ನೋಡಿಬಿಟ್ಟು ಬಂದರು. | அவர்கள் நகரத்துக்குப் போய்விட்டுச் சினிமா பார்த்துவிட்டு வந்தார்கள். |
| | ನಾವು ಬ್ಯಾಂಕಿಗೆ ಹಣ ಕಟ್ಟಿ ಬಂದೆವು. | நாங்கள் வங்கியில் பணம் கட்டிவிட்டு வந்தோம். |
| | ನೀನು ಸಿಗರೇಟ್ ಸೇದಿ ಕೆಮ್ತೀಯಾ? | நீ சிகரெட் குடித்துவிட்டு இருமுகிறாயா? |
| | ಇಂದಿರಾ ಗಾಂಧಿ ಭಾಷಣ ಕೇಳಿ ಜನ ನಕ್ಕರು. | இந்திராகாந்தியின் பேச்சைக் கேட்டு மக்கள் சிரித்தார்கள். |
| | ಅವಳು ಹತ್ತು ಗಂಟೆಗೆ ಮಲಗಿ ಹನ್ನೆರಡು ಗಂಟೆಗೆ ಎದ್ದಳು. | அவள் பத்து மணிக்குத் தூங்கிப் பன்னிரண்டு மணிக்கு எழுந்தாள். |
| 2.3 | ಅವರು ಬೆಂಗಳೂರಿಗೆ ಹೋಗಿ ವಿಧಾನ ಸೌಧ ನೋಡದೆ ಬಂದರು. | அவர்கள் பெங்களூருக்குப் போய் விதான சௌதாவைப் பார்க்காமல் வந்தார்கள். |
| | ದೇವರು ಅವರಿಗೆ ಒಳ್ಳೆಯದು ಮಾಡದೆ ಇರಲಿ. | கடவுள் அவர்களுக்கு நல்லது செய்யாதிருக்கட்டும். |
| | ನೀನು ಪಾಠ ಓದದೆ ಉತ್ತರ ಬರೆದೆಯಾ? | நீ பாடம் படிக்காமலேயே பதில் எழுதினாயா? |
| | ಅವನು ಹುಡುಗಿಯನ್ನು ನೋಡದೆ ಮದುವೆಗೆ ಒಪ್ಪಿಕೊಂಡ. | அவன் பெண்ணைப் பார்க்காமலே திருமணத்துக்கு ஒப்புக்கொண்டான். |
| 2.4 | ನಾನು ಕಾಫಿ ಕುಡಿಯದೆ ಆಫೀಸಿಗೆ ಹೊರಡಲಿಲ್ಲ. | நான் காபி குடிக்காமல் ஆபீஸுக்குப் புறப்படவில்லை. |
| | ನಾವು ಟಿಕೆಟ್ ತೆಗೆದುಕೊಳ್ಳದೆ ನಾಟಕ ನೋಡಲಿಲ್ಲ. | நாங்கள் டிக்கட் வாங்காமல் நாடகம் பார்க்கவில்லை. |
| | ಡಾಕ್ಟರ್ ಹಣ ತೆಗೆದುಕೊಳ್ಳದೆ ಔಷಧ ಕೊಡಲ್ಲ. | டாக்டர் பணம் வாங்கிக்கொள்ளாமல் மருந்து கொடுக்கமாட்டார். |

## 3. குறிப்புகள்

இப்பாடத்தில் வினையெச்சங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. ஒரு வினை முடிந்து இன்னொரு வினை நடக்கவிருப்பதைக் குறிப்பதே வினையெச்சங்களின் செயல்.

| | |
|---|---|
| நானு அவனன்னு நோடி$^{3}$ பெ$^{3}$ங்க$^{3}$ளூரிகெ$^{3}$ ஹோதெ$^{3}$. | நான் அவனைப் பார்த்து(விட்டு)ப் பெங்களூருக்குப் போனேன். |

இந்த வாக்கியத்தில் 'நோடி$^{3}$' என்பது வினையெச்சம். 'இ', 'உ' இரண்டும் கன்னடத்தில் வினையெச்ச ஈறுகள்.

'த்', 'த்$^3$', 'க்', 'ட்', 'ட்$^3$' என்பவற்றை இறந்தகாலம் காட்டும் உருபுகளாக ஏற்கும் வினைச்சொற்கள் 'உ'வை வினையெச்ச ஈற்றாகக் கொள்ளும். இவ்வினையெச்சம்

மூல வினைச்சொல் + இறந்தகாலம் காட்டும் உருபு + வினையெச்ச உருபு

என அமையும். எடுத்துக்காட்டாக,

தின்னு + த்$^3$ + உ = தின்து$^3$.

| | |
|---|---|
| ரமேஷ காலேஜிகெ$^3$ ப$^3$ந்து$^3$ ஸினிமாகெ$^3$ ஹோத$^3$. | ரமேஷ் கல்லூரிக்கு வந்து சினிமாவுக்குப் போனான். |
| இவளு கன்னட$^3$ கலிது ஹாடு$^3$ ஹாட்$^3$தாளெ. | இவள் கன்னடம் கற்றுப் பாட்டுப் பாடுகிறாள். |
| நானு ஹளெ மனெ பி$^3$ட்டு ஹொஸ மனெகெ$^3$ ப$^3$ன்தெ$^3$. | நான் பழைய வீட்டைவிட்டுப் புதிய வீட்டுக்கு வந்தேன். |
| அவனு த$^3$ாரியல்லி ஸிக்கி மாதாடி$^3$ஸித$^3$. | அவன் வழியில் சந்தித்துப் பேசினான். |
| ஒன்து$^3$ புஸ்தக கொண்டு$^3$ ப$^3$ன்தெ$^3$. | ஒரு புத்தகம் வாங்கி வந்தேன். |

இறந்தகாலம் காட்டும் உருபாக 'த்$^3$'ஐ ஏற்கும் வினைச்சொற்கள் 'இ'ஐ வினையெச்ச ஈற்றாகக் கொள்ளும். இவ்வினையெச்சங்களில், 'இ' நேரடியாக மூல வினைச்சொல்லுடன் சேருகிறது. எனவே, இவ்வினையெச்சம்

மூல வினைச்சொல் + இ

என அமையும். எடுத்துக்காட்டாக, ஓது$^3$ + இ = ஓதி$^3$.

| | |
|---|---|
| நானு பேப்பர் ஓதி$^3$ ஸ்நான மாடி$^3$தெ$^3$. | நான் பேப்பர் படித்து(விட்டு)க் குளித்தேன். |
| அவனன்னு நம்பி$^3$ நானு ஹாளாதெ$^3$. | அவனை நம்பி நான் பாழானேன். |
| மகு$^3$ நித்$^3$தெ$^3$ மாடி$^3$ எத்$^3$தி$^3$து. | குழந்தை தூங்கி எழுந்தது. |
| அவனு ஊரிகெ$^3$ ஹோகி$^3$ ஈவத்து ப$^3$ன்த$^3$. | அவன் ஊருக்குப் போய்விட்டு இன்று வந்தான். |

'ஹோகு$^3$', 'ஆகு$^3$' என்னும் வினைச்சொற்கள் இறந்தகாலம் காட்டும் உருபாக 'த்'ஐ ஏற்றாலும், இவை இகரத்தை வினையெச்ச ஈற்றாகக் கொள்ளும். இவையிரண்டும் விதிவிலக்குகள்.

3.2 எதிர்மறையைக் குறிக்கும் வினையெச்ச ஈறு 'அதெ$^3$'. இது மூல வினைச் சொல்லோடு சேரும்.



| | |
|---|---|
| நானு ஸினிமா நோட$^3$தெ$^3$ ப$^3$ன்தெ$^3$. | நான் சினிமா பார்க்காமல் வந்தேன். |
| அவனு நன்ன மாது கேளதெ$^3$ ஹோத$^3$. | அவன் என் பேச்சைக் கேட்காமல் போனான். |
| அவளு ப$^3$ஸ் சார்ஜ் கொட$^3$தெ$^3$ ப்ரயாண மாடி$^3$த$^3$ளு. | அவள் பஸ் கட்டணம் கொடுக்காமல் பயணம் செய்தாள் |

இரட்டை எதிர்மறைகளைப் பயன்படுத்தினால், நேர்மறைப் பொருள் கிடைக்கும்.

| | |
|---|---|
| ஸீத ஹல்லு உஜ்ஜதெ$^3$ காபி$^2$ குடி$^3$யல. | சீதா பல் துலக்காமல் காபி குடிப்பதில்லை. |
| நானு காக$^3$த$^3$ ப$^3$ரெயதெ$^3$ ஊரிகெ$^3$ ஹோக$^3$லில்ல. | நான் கடிதம் எழுதாமல் ஊருக்குப் போகவில்லை. |

3.3 'பி$^3$டு' என்னும் வினைச்சொல்லின் எச்சவடிவம் பிற வினைச்சொற்களின் எச்சங்களுடன் பயன்படுத்தப்படுகிறது. அழுத்தத்தைக் குறிக்க அல்லது சிறப்பான காரணம் இன்றியும் இது பயன்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| அவனு திண்டி$^3$ தின்து$^3$ பி$^3$ட்டு ப$^3$ன்த$^3$. | அவன் சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு வந்தான். |
| நானு ஸிடிகெ$^3$ ஹோகி$^3$ பி$^3$ட்டு ப$^3$ரலில்ல. | நான் சிடிக்குப் போய்விட்டு வரவில்லை. |

கன்னட 'பி$^3$டு' தமிழின் 'விடு' என்பதற்கு நிகர். பொதுவாகத் தமிழில், 'அவன் சாப்பிட்டு வந்தான்' என்று எழுதுவதைவிட 'அவன் சாப்பிட்டுவிட்டு வந்தான்' என்று எழுதுவதே பெருவழக்கு. ஆனால், கன்னடத்தில் 'பி$^3$டு'வை விலக்கி எழுதுவது பெருவழக்கு.

## 4. பயிற்சி

4.1 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள வினைச்சொற்களின் எச்சவடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 ಅವನು ತಿಂಡಿ __________ ಕಾಫಿ ಕುಡಿದ. (ತಿನ್ನು)

4.1.2 ಅವರು ಇವತ್ತು ಊರಿನಿಂದ __________ ನಾಳೆ ಬರ್ತಾರೆ. (ಹೊರಡು)

4.1.3 ಆ ಹುಡುಗ ಮನೆ ____________ ಹೋದ. (ಬಿಡು)

4.1.4 ಅವರು ಕನ್ನಡ ______________ ಮಾತಾಡಿದರು. (ಕಲಿ)

4.1.5 ಅವಳು ಆ ಪುಸ್ತಕ ________ ಅತ್ತಳು. (ಓದು)

4.1.6 ಜನತಾಪಕ್ಷ ಚುನಾವಣೆಯಲ್ಲಿ -------------- ಅಧಿಕಾರಕ್ಕೆ ಬಂತು. (ಗೆಲ್ಲು)

4.1.7 ರಾಮು ರಾವಣನನ್ನು ---------------- ಜೈಲಿಗೆ ಹೋದ. (ಕೊಲ್ಲು)

4.1.8 ಅವಳು ಅವನನ್ನು ------------ ಕೆಟ್ಟಳು. (ನಂಬು)

**4.2 வினையெச்ச வடிவங்களைப் பயன்படுத்திக் கீழ்க்கண்ட வாக்கியங்களை இணைக்க.**

4.2.1 ಹುಡುಗರು ದುಡ್ಡು ಕೊಟ್ಟರು.
ಹುಡುಗರು ಸರ್ಕಸ್ ನೋಡಿದರು.

4.2.2 ಮಂತ್ರಿಗಳು ಮೈಸೂರಿಗೆ ಬಂದರು.
ಅವರು ಭಾಷಣ ಮಾಡಿದರು.

4.2.3 ಅವಳು ಹಾಡುತ್ತಾ ಇದ್ದಳು.
ಅವಳು ಕಾಲೇಜಿಗೆ ಹೋದಳು.

4.2.4 ನಾನು ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದ್ದೆ.
ನಾನು ಎಂ.ಎ. ಓದಿದೆ.

4.2.5 ನಾನು ಸಿಗರೇಟ್ ಸೇದ್ತೀನಿ.
ನಾನು ಸಂತೋಷ ಪಡ್ತೀನಿ.

**4.3 கீழ்க்கண்டவற்றைச் சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.**

4.3.1 ನೀ ಬಂದು ನಿಂತು ನೀ ನಕ್ಕಾಗ ನಾ ಸೋತೆ.

4.3.2 ಹಾಸಿಗೆಯಿಂದ ಎದ್ದು ಹಲ್ಲು ಉಜ್ಜಿ ಕಾಫಿ ಕುಡಿದು ಪೇಪರ್ ಓದ್ತಾರೆ.

4.3.3 ಆ ಸಿನಿಮಾ ನೋಡಿ ತಲೆನೋವು ಬಂದು ಡಾಕ್ಟರ್ ಹತ್ತಿರ ಹೋಗಿ ಔಷಧಿ ತಗೊಂಡು ಕುಡಿದೆ.

**4.4 கீழ்க்கண்டவற்றைத் தன் நோக்கு வினைகளைக் கொண்ட வாக்கியங்களாக மாற்றுக.**

4.4.1 ಅವನು ಬೆಳಿಗ್ಗೆ ಹಲ್ಲು ಉಜ್ತಾನೆ.

4.4.2 ಅವರು ಸಂಜೆ ಕೈಕಾಲು ಮುಖ ತೊಳಿತಾರೆ.

4.4.3 ಅವಳು ತಲೆ ಬಾಚ್ತಾಳೆ.

4.4.4 ರಾಮು ಬಟ್ಟೆ ಒಗಿತಾನೆ.

4.4.5 ಕಮಲ ಪಾಠ ಬರೀತಾಳೆ.

**4.5 எதிர்மறை வினையெச்சங்களைப் பயன்படுத்திக் கீழ்க்கண்டவற்றை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுக.**

4.5.1 ನಾನು ಸಿನಿಮಾ ನೋಡಿ ಬಂದೆ.



4.5.2 ಕಾಗದ ಬರೆದು ಒಂದು ತಿಂಗಳಾಯಿತು.

4.5.3 ರೈಲಿನಲ್ಲಿ ಟಿಕೆಟ್ ಸಿಕ್ಕಿ ಪ್ರಯಾಣ ಮಾಡಿದೆ.

4.5.4 ಅವಳು ತಲೆ ಬಾಚಿಕೊಂಡು ಬಂದಳು.

4.5.5 ಎಲ್ಲರೂ ಅವನನ್ನು ನಂಬಿ ಕೆಟ್ಟರು.

4.5.6 ಅವಳಿಗೆ ಮದುವೆಯಾಗಿ ಹುಚ್ಚು ಹಿಡಿಯಿತು.

4.5.7 ಅವನು ಚೆನ್ನಾಗಿ ಓದಿ ಪಾಸಾದ.

**4.6 கீழ்க்கண்டவற்றை இரட்டை எதிர்மறைகளைக் கொண்ட வாக்கியங்களாக மாற்றுக.**

4.6.1 ಅವರು ಸಂಬಳ ತೆಗೆದುಕೊಂಡು ಮನೆಗೆ ಹೋದರು.

4.6.2 ಅವಳು ಊಟಮಾಡಿ ನಿದ್ರೆ ಮಾಡಿದಳು.

4.6.3 ಮಕ್ಕಳೂ ಆಟ ಆಡಿ ನೀರು ಕುಡಿದರು.

4.6.4 ನಾಯಿ ಬೊಗಳಿ ಕಚ್ಚಿತು.

4.6.5 ಅವನಿಗೆ ಮದುವೆಯಾಗಿ ಹುಚ್ಚು ಬಿಟ್ಟಿತು.

**4.7 கீழ்க்கண்டவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.**

4.7.1 அவன் தானே சமைத்துக்கொள்கிறான்.

4.7.2 மழையில்லாமல் குடிநீர் இல்லை.

4.7.3 அந்தப் படத்தைப் பார்த்ததால் எனக்குத் தலைவலி வந்தது.

4.7.4 நூறு ரூபாய் கொடுத்து நான் ஒரு புத்தகம் வாங்கினேன்.

4.7.5 வாடகை கொடுக்காமல் அவன் அந்த வீட்டில் தங்கியிருக்கிறான்.

**4.8 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க.**

4.8.1 ನೀವು ಸ್ನಾನ ಮಾಡದೆ ಆಫೀಸಿಗೆ ಹೋಗ್ತೀರಾ?

4.8.2 ನೀವು ವರ್ತಮಾನ ಪತ್ರಿಕೆ ಓದದೆ ಇರ್ತೀರಾ?

4.8.3 ನೀವು ಸಂಜೆ ವಾಕಿಂಗ್ ಹೋಗ್ತೀರಾ?

4.8.4 ನೀವು ಹಾಡು ಹಾಡ್ತಾ ಸ್ನಾನ ಮಾಡ್ತೀರಾ?

4.8.5 ನೀವೇ ಅಡಿಗೆ ಮಾಡಿಕೊಳ್ತೀರಾ? ನಿಮ್ಮ ಬಟ್ಟೆ ನೀವೇ ಒಗೆದುಕೊಳ್ತೀರಾ?

**5.1 சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| ಅಭ್ಯಾಸ | பழக்கம், பயிற்சி |
| ಕೆಲವೊಮ್ಮೆ | சிலசமயம் |

15

| | |
|---|---|
| ತಣ್ಣೀರು | குளிர்ந்த நீர் |
| ಬಿಸಿ ನೀರು | வெந்நீர், சுடுநீர் |
| ಸ್ನಾನಮಾಡು | குளி |
| ಹರಟೆ ಹೊಡಿ | அரட்டை அடி |
| ಹಲ್ಲು | பல் |
| ಹಲ್ಲು ಉಜ್ಜು | பல் துலக்கு, பல் விளக்கு |

**5.2 துணைச் சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| ಎತ್ತು | எருது (பெ), தூக்கு (வி) |
| ಔಷಧ | மருந்து |
| ಕಚ್ಚು | கடி |
| ಕಾಲು | கால் |
| ಕೆಮ್ಮು | இருமு |
| ಕೈ | கை |
| ಗಿಡ | செடி |
| ತಲೆ | தலை |
| ತಲೆತಗ್ಗಿಸು | தலைகுனி |
| ದುಡ್ಡು | பணம் |
| ದೇವರು | கடவுள் |
| ಪೂಜೆ | பூஜை |
| ಬಡ್ಡಿ | வட்டி |
| ಬೆಳೆ | பயிர் (பெ), வளர் (வி) |
| ಬಾಳೆಗಿಡ | வாழைக்கன்று |
| ಬೊಗಳು | குரை |
| ಭಾಷಣ | பேச்சு, உரை |
| ಮಳೆ | மழை |
| ಮಂಚ | கட்டில் |
| ಮುಖ | முகம் |
| ಸಾಲ | கடன் |
| ಹಣ ಕಟ್ಟು | பணம் செலுத்து |
| ಹುಚ್ಚು | பைத்தியம். |



# பாடம் 17

## 1. உரையாடல்

| | |
|---|---|
| ಕೃಷ್ಣ: ರಾಜಶೇಖರ ಈಗ ಎಲ್ಲಿ ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದಾನೆ? | ராஜசேகர் இப்போது எங்கே வேலை செய்துகொண்டிருக்கிறான்? |
| ರಂಗ: ಈಗ ಪ್ರಜಾವಾಣಿಯಲ್ಲಿ ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದಾನೆ. | இப்போது பிரஜாவாணியில் வேலை செய்துகொண்டிருக்கிறான். |
| ಕೃಷ್ಣ: ಅಲ್ಲಿ ಏನು ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದಾನೆ? | அங்கே என்ன வேலை செய்துகொண்டிருக்கிறான்? |
| ರಂಗ: ರಿಪೋರ್ಟರ್ ಆಗಿ ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದಾನೆ. | ரிப்போர்ட்டராக வேலை செய்துகொண்டிருக்கிறான். |
| ಕೃಷ್ಣ: ಎಲ್ಲಿ? ಬೆಂಗಳೂರಿನಲ್ಲೇ ಮಾಡ್ತಾ ಇದಾನಾ? | எங்கே? பெங்களூரிலேயே வேலை செய்துகொண்டிருக்கிறானா? |
| ರಂಗ: ಇಲ್ಲ ಬೆಂಗಳೂರಿನಲ್ಲಿ ಮಾಡ್ತಾ ಇಲ್ಲ. ಹುಬ್ಬಳ್ಳಿಯಲ್ಲಿ ಮಾಡ್ತಾ ಇದಾನೆ. | இல்லை பெங்களூரில் வேலை செய்துகொண்டில்லை. ஹுப்ளியில் செய்துகொண்டிருக்கிறான். |
| ಕೃಷ್ಣ: ಮೊದಲು ಎಲ್ಲಿ ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದ್ದ. | முதலில் எங்கே வேலை செய்துகொண்டிருந்தான்? |
| ರಂಗ: ಮೈಸೂರಿನಲ್ಲಿ ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದ್ದ. | மைசூரில் வேலை செய்துகொண்டிருந்தான். |
| ಕೃಷ್ಣ: ಅಲ್ಲಿ ಯಾವುದಾದರೂ ಕಾಲೇಜಿನಲ್ಲಿ ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದ್ದನಾ? | அங்கே ஏதாவது கல்லூரியில் வேலை செய்துகொண்டிருந்தானா? |
| ರಂಗ: ಕಾಲೇಜಿನಲ್ಲಿ ಮಾಡ್ತಾ ಇರಲಿಲ್ಲ. | கல்லூரியில் வேலை செய்துகொண்டிருக்கவில்லை. |
| ಯಾವುದೋ ಪ್ರೈವೇಟ್ ಕಂಪೆನಿಯಲ್ಲಿ ಮಾಡ್ತಾ ಇದ್ದ. | ஏதோ பிரைவேட் கம்பெனியில் (வேலை) செய்துகொண்டிருந்தான். |
| ಕೃಷ್ಣ: ಆಗಲೇ ಅವನು ಕಥೆ, ಕವನ ಬರೀತಾ ಇದ್ದನಾ? | அப்போதே அவன் கதை, கவிதை எழுதிக்கொண்டிருந்தானா? |
| ರಂಗ: ಹೌದು, ಬರೀತಾ ಇದ್ದ. | ஆமாம், எழுதிக்கொண்டிருந்தான். |
| ಕೃಷ್ಣ: ಅವನ ತಮ್ಮ ಒಬ್ಬ ಇಂಜನಿಯರಿಂಗ್ ಓದ್ತಾ ಇದ್ದನಾ? | அவன் தம்பி ஒருவன் இன்ஜினியரிங் படித்துக்கொண்டிருந்தானா? |
| ರಂಗ: ಹೌದು, ಓದ್ತಾ ಇದ್ದ. | ஆமாம், படித்துக்கொண்டிருந்தான். |
| ಕೃಷ್ಣ: ಈಗ ಎಲ್ಲಿ ಇದಾನೆ? | இப்போது எங்கே இருக்கிறான்? |

| | |
|---|---|
| ರಂಗ: ಈಗ ಬೆಂಗಳೂರಿನಲ್ಲಿ ಇನ್‌ಫೋಸಿಸ್‌ನಲ್ಲಿ ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದಾನೆ. | இப்போது பெங்களூரில் இன்ஃபோஸிஸில் வேலை செய்துகொண்டிருக்கிறான். |
| ಕೃಷ್ಣ: ರಾಜಶೇಖರ ಈಗಲೂ ತುಂಬಾ ಕಥೆ, ಕವನ ಬರೀತಾ ಇರ್‍ತಾನಾ? | ராஜசேகர் இப்போதும் நிறைய கதை, கவிதை எழுதிக்கொண்டிருக்கிறானா? |
| ರಂಗ: ತುಂಬಾ ಬರೀತಾ ಇರಲ್ಲ. ಆಗಾಗ್ಗೆ ಬರೀತಾ ಇರ್‍ತಾನೆ. | நிறைய எழுதவில்லை. அவ்வப்போது எழுதிக்கொண்டிருக்கிறான். |
| ಕೃಷ್ಣ: ನಿನ್ನ ನೋಡೋದಕ್ಕೆ ಬರ್‍ತಾ ಇರ್‍ತಾನಾ? | உன்னைப் பார்க்க வந்து கொண்டிருக்கிறானா? |
| ರಂಗ: ಮೊದಲು ತುಂಬಾ ಬರ್‍ತಾ ಇದ್ದ. | முன்பு அடிக்கடி வந்துகொண்டிருந்தான். |
| ಈಗ ಒಂದೊಂದು ಸಾರಿ ಬರ್‍ತಾ ಇರ್‍ತಾನೆ. | இப்போது எப்போதாவது ஒருமுறை வந்துகொண்டிருக்கிறான். |

## 2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | ಮೈಸೂರನ್ನು ಒಡೆಯರ ವಂಶದವರು ಆಳುತ್ತಾ ಇದ್ದರು. | மைசூரை உடையார் வம்சத்தினர் ஆண்டுகொண்டிருந்தார்கள். |
| | ಮೈಸೂರಿನಲ್ಲಿ ಹಿಂದೆ ಮಹಿಷಾಸುರ ಎಂಬ ರಾಕ್ಷಸ ವಾಸ ಮಾಡ್ತಾ ಇದ್ದ. | மைசூரில் முன்பு மஹிஷாசுரன் என்னும் ராட்சசன் வாழ்ந்து கொண்டிருந்தான். |
| | ಶಾಂತಲೆ ಅದ್ಭುತವಾಗಿ ನಾಟ್ಯ ಮಾಡ್ತಾ ಇದ್ದಳು. | சாந்தலை அற்புதமாக நாட்டியம் ஆடிக்கொண்டிருந்தாள். |
| | ನಾನು ತಿಪಟೂರಿನಲ್ಲಿ ಹೈಸ್ಕೂಲು ಓದ್ತಾ ಇದ್ದೆ. | நான் திப்டூரில் உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்தேன். |
| | ನಿನ್ನೆ ರೇಡಿಯೋದಲ್ಲಿ ಚಿಟ್ಟಿಬಾಬು ವೀಣೆ ಬರ್‍ತಾ ಇತ್ತು. | நேற்று வானொலியில் சிட்டிபாபுவின் வீணை இசை வந்துகொண்டிருந்தது. |
| | ನೀವು ಮೊದಲು ಎಲ್ಲಿ ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದ್ದೀರಿ? | நீங்கள் முதலில் எங்கே வேலை செய்துகொண்டிருந்தீர்கள்? |
| | ಅವರಿಬ್ಬರೂ ಸುಮ್ಮನೆ ನಗ್ತಾ ಇದ್ದರು. | அவர்கள் இருவரும் வெறுமனே சிரித்துக்கொண்டிருந்தார்கள். |
| | ಹರಿಶ್ಚಂದ್ರ ಯಾವಾಗಲೂ ಸತ್ಯ ಹೇಳುತ್ತಾ ಇದ್ದ. | அரிச்சந்திரன் எப்போதும் உண்மை பேசிக்கொண்டிருந்தான். |
| 2.2 | ಮಕ್ಕಳು ಆಟ ಆಡ್ತಾ ಇದಾರೆ. | குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். |



| | | |
|---|---|---|
| | ಶೀಲ ಕಾದಂಬರಿ ಓದ್ತಾ ಇದಾಳೆ. | ஷீலா நாவல் படித்துக் கொண்டிருக்கிறாள். |
| | ರೈಲುಗಳು ಸಮಯಕ್ಕೆ ಸರಿಯಾಗಿ ಓಡ್ತಾ ಇವೆ. | ரயில்கள் நேரத்துக்குச் சரியாக ஓடிக்கொண்டிருக்கின்றன. |
| | ಅವಳು ನನ್ನ ತಪಸ್ಸನ್ನು ಕೆಡಿಸ್ತಾ ಇದಾಳೆ. | அவள் என் தவத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாள். |
| | ಸೊಸೈಟಿಯಲ್ಲಿ ಸಕ್ಕರೆ ಕೊಡ್ತಾ ಇದಾರೆ. | சொஸைடியில் சர்க்கரை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். |
| | ಮಂತ್ರಿಗಳು ಭಾಷಣ ಮಾಡ್ತಾ ಇದಾರೆ. | மந்திரி அவர்கள் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். |
| 2.3 | ಅವನು ದಿನಾ ಆ ಹೋಟೆಲಿಗೆ ಬರ್‍ತಾ ಇರ್‍ತಾನೆ. | அவன் தினமும் அந்த ஓட்டலுக்கு வந்துகொண்டிருக்கிறான். |
| | ಶ್ಯಾಮಲ ಪ್ರತಿದಿನಾ ಸಂಜೆ ಐದು ಗಂಟೆಗೆ ಹಾಡು ಹಾಡ್ತಾ ಇರ್‍ತಾಳೆ. | சியாமளா தினமும் மாலை ஐந்து மணிக்குப் பாட்டுப் பாடிக் கொண்டிருப்பாள். |
| | ಆ ಹುಡುಗರು ತುಂಬಾ ಗಲಾಟೆ ಮಾಡ್ತಾ ಇರ್‍ತಾರೆ. | அந்தப் பையன்கள் அதிகமாகக் கூச்சல் போட்டுக்கொண்டிருப்பார்கள். |
| | ಅವರು ಯಾವಾಗಲು ಇನ್ನೊಬ್ಬರನ್ನು ಬಯ್ತಾ ಇರ್‍ತಾರೆ. | அவர் எப்போதும் யாராவதொருவரைத் திட்டிக்கொண்டிருப்பார். |
| 2.4 | ರವಿ ಮಂಗಳೂರಿನಲ್ಲಿ ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇರಲಿಲ್ಲ. | ரவி மங்களூரில் வேலை செய்து கொண்டிருக்கவில்லை. |
| | ಅಶೋಕ ಬೇರೆ ರಾಜರ ಹಾಗೆ ಯುದ್ಧ ಮಾಡ್ತಾ ಇರಲಿಲ್ಲ. | அசோகர் மற்ற அரசர்களைப்போலப் போர் செய்துகொண்டிருக்கவில்லை. |
| | ಅವರು ಹೋಟೆಲಿನಲ್ಲಿ ಕಾಫಿ ಕುಡಿಯುತ್ತಾ ಇರಲಿಲ್ಲ. | அவர் ஓட்டலில் காபி குடித்துக்கொண்டிருக்கவில்லை. |
| 2.5 | ರವಿ ನಿದ್ರೆ ಮಾಡ್ತಾ ಇಲ್ಲ. | ரவி தூங்கிக்கொண்டில்லை. |
| | ಅವನು ನಾಳೆ ಬೆಂಗಳೂರಿಗೆ ಹೋಗ್ತಾ ಇಲ್ಲ. | அவன் நாளை பெங்களூருக்குப் போகவில்லை. |
| | ಅವರು ನನಗೆ ಸಂಬಳ ಕೊಡ್ತಾ ಇಲ್ಲ. | அவர் எனக்குச் சம்பளம் கொடுப்பதில்லை. |
| | ಇಲ್ಲಿಗೆ ಹೆಚ್ಚು ಬಸ್ಸುಗಳು ಬರ್‍ತಾ ಇಲ್ಲ. | இங்கே அதிகம் பஸ்கள் வருவதில்லை. |

| | | |
|---|---|---|
| 2.6 | ಆ ಬೆಕ್ಕು ದಿನಾ ನಮ್ಮ ಮನೆಗೆ ಬರ್‍ತಾ ಇರಲ್ಲ. | அந்தப் பூனை தினமும் எங்கள் வீட்டுக்கு வந்துகொண்டில்லை. |
| | ಅವರು ದಿನಾ ಕ್ಲಬ್ಬಿಗೆ ಹೋಗ್ತಾ ಇರಲ್ಲ. | அவர் தினமும் கிளப்புக்குப் போய்க்கொண்டில்லை. |
| | ಅವಳು ಬೆಳಗಿನ ಹೊತ್ತು ಓದ್ತಾ ಇರಲ್ಲ. | அவள் காலை நேரம் படித்துக்கொண்டில்லை. |
| | ರಾಜೇಶ ನಮ್ಮ ಮನೆಗೆ ಹೆಚ್ಚು ಬರ್‍ತಾ ಇರಲ್ಲ. | ரமேஷ் எங்கள் வீட்டுக்கு அதிகம் வந்துகொண்டில்லை. |

### 3. குறிப்புகள்

3.1 தொடர்வினை வடிங்கள் இப்பாடத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. வினைச்சொல்லுடன் 'தா (உத்தா)' சேர்த்துத் தொடர்வினை வடிவங்கள் பெறப்படுகின்றன.

| | |
|---|---|
| மாடு$^3$ + தா (உத்தா) = | மாட்$^3$தா (மாடு$^3$த்தா) |
| தின்னு + தா (உத்தா) = | தின்தா (தின்னுத்தா) |

இத்தொடர்வினை வடிங்களைத் தொடர்ந்து 'இரு' என்னும் வினைச்சொல்லின் வினைமுற்று வடிவம் அமையும்.

3.2 'இரு'வின் வினைமுற்று வடிவத்தைத் தொடர்வினைகளுடன் சேர்த்து நிகழ்காலத் தொடர்வினை வடிங்கள் பெறப்படுகின்றன.

| | |
|---|---|
| மாட்$^3$தா இதீ$^3$னி | செய்துகொண்டிருக்கிறேன். |
| தின்தா இத$^3$ாளெ | தின்றுகொண்டிருக்கிறாள். |

3.3 'இரு'வின் இறந்தகால வடிவத்தைத் தொடர்வினைகளுடன் சேர்த்து இறந்தகாலத் தொடர்வினை வடிங்கள் பெறப்படுகின்றன.

| | |
|---|---|
| மாட்$^3$தா இத்$^3$த$^3$ா | செய்துகொண்டிருந்தான். |
| தின்தா இத்$^3$த$^3$ா | தின்றுகொண்டிருந்தான். |

3.4

| | |
|---|---|
| மாட்$^3$தா இர்தீனி | செய்துகொண்டிருப்பேன். |
| தின்தா இர்தீனி | தின்றுகொண்டிருப்பேன். |

3.5 தொடர்வினைகளுடன் 'இல்ல', 'இரலில்ல' என்பவைகளைச் சேர்க்க எதிர்மறைத் தொடர்வினைகள் கிடைக்கும்.

| | |
|---|---|
| மாட்$^3$தா இல்ல | செய்துகொண்டில்லை |
| தின்தா இல்ல | தின்றுகொண்டில்லை |
| மாட்$^3$தா இரலில்ல | செய்துகொண்டிருக்கவில்லை |
| தின்தா இரலில்ல | தின்றுகொண்டிருக்கவில்லை |
| மாட்$^3$தா இரல்ல | செய்துகொண்டிருக்கப்போவதில்லை |
| தின்தா இரல்ல | தின்றுகொண்டிருக்கப்போவதில்லை. |



### 4. பயிற்சி

4.1 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள வினைச்சொற்களின் பொருத்தமான தொடர்வினை வடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 ನಾನು ಹತ್ತು ವರ್ಷಗಳ ಹಿಂದೆ ತುಮಕೂರಿನಲ್ಲಿ -------- (ಓದು).

4.1.2 ಅವನು ಈಗ ಬೆಂಗಳೂರಿನಲ್ಲಿ ಕೆಲಸ -------- (ಮಾಡು).

4.1.3 ನಮ್ಮ ತಂದೆ ಈಗ ನಿದ್ರೆ ---------- (ಮಾಡು).

4.1.4 ಅವರು ದಿನಾ ನಮ್ಮ ಮನೆಗೆ ---------- (ಬರು).

4.1.5 ಚಿಕ್ಕದೇವರಾಜ ಮೈಸೂರನ್ನು ----------- (ಆಳು).

4.1.6 ಅವಳು ದಿನಾ ಸಂಜೆ ಹಾಡು ------------- (ಹಾಡು).

4.1.7 ಮಹಿಷಾಸುರ ಪ್ರಜೆಗಳಿಗೆ ತೊಂದರೆ ----------- (ಕೊಡು).

4.1.8 ಶೀಲ ಈಗ ಪುಸ್ತಕ ----------- (ಓದು).

4.1.9 ಅವರು ತಿಂಡಿ ------------ (ತಿನ್ನು).

4.1.10 ಅವನು ದಿನಾ ಅವಳನ್ನು ನೋಡುವುದಕ್ಕೆ ------------ (ಬರು).

4.2 கீழ்க்கண்டவற்றை நிகழ்காலத் தொடர்வினை வாக்கியங்களாக மாற்றுக.

4.2.1 ಮಕ್ಕಳು ರಸ್ತೆಯಲ್ಲಿ ಆಟ ಆಡ್ತಾ ಇದ್ದವು.

4.2.2 ನನ್ನ ಕಥೆ ಆ ಪತ್ರಿಕೆಯಲ್ಲಿ ಬರ್‍ತಾ ಇತ್ತು.

4.2.3 ಹುಡುಗರು ತರಗತಿಯಲ್ಲಿ ಸುಮ್ಮನೆ ನಗ್ತಾ ಇದ್ದರು.

4.2.4 ರಾಕ್ಷಸರು ಋಷಿಗಳಿಗೆ ತೊಂದರೆ ಕೊಡ್ತಾ ಇದ್ದರು.

4.2.5 ರಂಭೆ, ಊರ್ವಶಿಯರು ಋಷಿಗಳ ತಪಸ್ಸು ಕೆಡಿಸ್ತಾ ಇದ್ದರು.

4.3 கீழ்க்கண்டவற்றை இறந்தகாலத் தொடர்வினை வாக்கியங்களாக மாற்றுக.

4.3.1 ಆ ಹೆಂಗಸರು ಜಗಳ ಆಡ್ತಾ ಇದಾರೆ.

4.3.2 ಕರ್ನಾಟಕದಲ್ಲಿ ಹುಡುಗಿಯರೆಲ್ಲಾ ಕರಾಟೆ ಕಲಿಯುತ್ತಾ ಇದಾರೆ.

4.3.3 ಬಡವರು ಹಸಿವಿನಿಂದ ಸಾಯ್ತಾ ಇದಾರೆ.

4.3.4 ಇಲ್ಲಿ ತರಕಾರಿ ಕಡಿಮೆ ಬೆಲೆಗೆ ಸಿಗ್ತಾ ಇದೆ.

4.3.5 ಅವಳು ಅಂಗಡಿಯಿಂದ ಸಾಮಾನು ತರ್‍ತಾ ಇದಾಳೆ.

4.4 கீழ்க்கண்டவற்றை வழமைத் தொடர்வினை வாக்கியங்களாக மாற்றுக.

4.4.1 ಅವನು ದಿನಾ ಇಲ್ಲಿಗೆ ಬರ್‍ತಾನೆ.

4.4.2 ಮಗು ಸುಮ್ಮನೆ ಅಳ್ತಾ ಇದೆ.

4.4.3 ರೈತರು ಚಳುವಳಿ ಮಾಡ್ತಾ ಇದಾರೆ.

4.4.4 ಇಲ್ಲಿ ಸ್ವಲ್ಪ ಸ್ವಲ್ಪ ಮಳೆ ಬರ್‍ತಾ ಇದೆ.

4.4.5 ಇಲ್ಲಿ ಬಸ್ಸುಗಳು ತುಂಬಾ ಓಡಾಡ್ತಾ ಇವೆ.

4.5 கீழ்க்கண்டவற்றை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுக.

4.5.1 ನಾನು ಬೆಂಗಳೂರಿನಲ್ಲಿ ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದ್ದೆ.

4.5.2 ಅವರು ನಿದ್ರೆ ಮಾಡ್ತಾ ಇದಾರೆ.

4.5.3 ಅವರು ಮೊದಲು ಬಾಡಿಗೆ ಮನೆಯಲ್ಲಿ ವಾಸ ಮಾಡ್ತಾ ಇದ್ದರು.

4.5.4 ನಮಗೆ ಆಗಾಗ್ಗೆ ಹೊಟ್ಟೆ ನೋವು ಬರ್ತಾ ಇರುತ್ತೆ.

4.5.5 ಶೀಲ ಗಂಡನ ಜೊತೆ ಜಗಳ ಆಡ್ತಾ ಇದ್ದಳು.

4.6 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க.

4.6.1 ನೀವು ಒಂದು ವರ್ಷದ ಹಿಂದೆ ಎಲ್ಲಿ ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದ್ದಿರಿ? ಈಗ ಎಲ್ಲಿ ಮಾಡ್ತಾ ಇದ್ದೀರಿ?

4.6.2 ನೀವು ಕಾಲೇಜು ಎಲ್ಲಿ ಓದ್ತಾ ಇದ್ದಿರಿ?

4.6.3 ನೀವು ಆಫೀಸಿಗೆ/ಕಾಲೇಜಿಗೆ ಹೇಗೆ ಹೋಗ್ತಾ ಇರ್ತೀರಿ?

4.6.4 ನಿಮಗೆ ಇಲ್ಲಿಗೆ ಬರುವುದಕ್ಕೆ ಮುಂಚೆ ಕನ್ನಡ ಬರ್ತಾ ಇರಲಿಲ್ಲವಾ?

4.6.5 ನೀವು ದೆಹಲಿಗೆ ಆಗಾಗ್ಗೆ ಹೋಗ್ತಾ ಇರ್ತೀರಾ?

**5.1 சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| ಆಗಾಗ್ಗೆ | அவ்வப்போது |
| ಒಂದೊಂದು ಸಾರಿ | ஒவ்வொரு சமயம் |
| ಕೆಲಸ ಮಾಡು | வேலை செய் |

**5.2 துணைச் சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| ಅದ್ಭುತವಾಗಿ | அற்புதமாக |
| ಋಷಿ | முனிவர், ரிஷி |
| ಕೆಡಿಸು | கெடு |
| ತಪಸ್ಸು | தவம் |
| ನಾಟ್ಯವಾಡು | நாட்டியமாடு |
| ಬೆಕ್ಕು | பூனை |
| ಭಾಷಣ | உரை, பேச்சு |
| ಯುದ್ಧ | போர் |
| ರಾಕ್ಷಸ | அரக்கன், ராட்சசன் |
| ವಂಶ | வம்சம் |
| ಸಕ್ಕರೆ | சர்க்கரை |
| ಸತ್ಯ | உண்மை. |



# பாடம் 18

## 1. உரையாடல்

| | | |
|---|---|---|
| ಮೂರ್ತಿ: | ಹಲೋ, ಯಾರು ಮಾತಾಡೋದು? | ஹலோ, யார் பேசுவது? |
| ನಾಗರಾಜ: | ನಾನು, ನಾಗರಾಜ ಮಾತಾಡೋದು. | நான், நாகராஜ் பேசுகிறேன். |
| ಮೂರ್ತಿ: | ಏನು ಸಮಾಚಾರ? | என்ன சமாச்சாரம்? |
| ನಾಗರಾಜ: | ಮದರಾಸಿನಿಂದ ನಮ್ಮ ಅಣ್ಣ ಬಂದಿದ್ದಾನೆ. | சென்னையிலிருந்து என் அண்ணன் வந்திருக்கிறான். |
| ಮೂರ್ತಿ: | ಯಾವಾಗ ಬಂದ? | எப்போது வந்தான்? |
| ನಾಗರಾಜ: | ನಾನು ಆಫೀಸಿಗೆ ಹೋಗಿದ್ದೆ. ಮನೆಗೆ ಬರುವುದರೊಳಗೆ ಬಂದಿದ್ದ. | நான் ஆபீஸுக்குப் போயிருந்தேன். வீட்டுக்கு வருவதற்குள் வந்திருந்தான். |
| ಮೂರ್ತಿ: | ಮನೆಯಲ್ಲಿ ಇದಾನಾ? | வீட்டில் இருக்கிறானா? |
| ನಾಗರಾಜ: | ಇಲ್ಲ, ಹೊರಗೆ ಹೋಗಿದಾನೆ. | இல்லை, வெளியே போயிருக்கிறான். |
| ಮೂತಿ: | ನಿಮ್ಮ ಅತ್ತಿಗೇನೂ ಬಂದಿದಾರಾ? | உங்கள் அண்ணியும் வந்திருக்கிறாரா? |
| ನಾಗರಾಜ: | ಇಲ್ಲ, ಅತ್ತಿಗೆ ಬಂದಿಲ್ಲ. ಜೊತೆಯಲ್ಲಿ ಇಬ್ಬರು ಸ್ನೇಹಿತರು ಬಂದಿದಾರೆ. | இல்லை, அண்ணி வரவில்லை. உடன் இரு சினேகிதர்கள் வந்திருக்கிறார்கள். |
| ಮೂರ್ತಿ: | ಏನಾದರೂ ಕೆಲಸದ ಮೇಲೆ ಬಂದಿದಾನಾ? | ஏதேனும் வேலையாக வந்திருக்கிறானா? |
| ನಾಗರಾಜ: | ಹೌದು. | ஆமாம். |
| ಮೂರ್ತಿ: | ಇವತ್ತು ಸಂಜೆ ಮನೆಯಲ್ಲಿ ಸಿಕ್ತಾನಾ? | இன்று மாலை வீட்டில் இருப்பானா? |
| ನಾಗರಾಜ: | ಇಲ್ಲ. ಸಂಜೆ ಸಿಟಿಗೆ ಹೋಗಿರ್ತಾನೆ. ನಾಳೆ ಬೆಳಿಗ್ಗೆ ಎಲ್ಲೂ ಹೋಗಿರಲ್ಲ, ಬನ್ನಿ. | இல்லை. மாலை சிடிக்கு(நகரத்துக்குப்) போயிருப்பான். நாளைக் காலை எங்கும் போகயிருக்கமாட்டான், வாருங்கள். |
| ಮೂರ್ತಿ: | ಎಷ್ಟು ದಿನ ಇರ್ತಾನೆ. | எத்தனை நாள் இருப்பான்? |
| ನಾಗರಾಜ: | ಒಂದು ವಾರ ಇರ್ತಾನೆ. ಭಾನುವಾರ ಹಳೆಬೀಡು, ಬೇಲೂರಿಗೆ ಹೋಗ್ತಾರೆ. | ஒரு வாரம் இருப்பான். ஞாயிற்றுக்கிழமை ஹளபேடு, பேலூருக்குப் போவார்கள். |
| ಮೂರ್ತಿ: | ಯಾಕೆ? ಅವನು ನೋಡಿಲ್ವಾ? | ஏன்? அவன் பார்த்ததில்லையா? |
| ನಾಗರಾಜ: | ಅವನು ನೋಡಿಲ್ಲ. ಒಂದು ವರ್ಷದ ಹಿಂದೆ ಮನೆಯವರು ಎಲ್ಲಾ ಹೋಗಿದ್ದೆವು. | அவன் பார்த்ததில்லை. ஒரு வருடத்துக்கு முன்னால் வீட்டிலெல்லோரும் போயிருந்தோம். |

| | | |
|---|---|---|
| | ಅವನು ಮಾತ್ರ ಬಂದಿರಲಿಲ್ಲ. ಮನೆಯಲ್ಲಿ ಉಳಕೊಂಡಿದ್ದ. | அவன் மட்டும் வீட்டிலேயே தங்கிவிட்டிருந்தான். |
| | ಈಗ ಅವನ ಸ್ನೇಹಿತರು ಬಂದಿದಾರೆ. ಅವರು ನೋಡಬೇಕಂತೆ. | இப்போது அவன் சினேகிதர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் பார்க்க வேண்டுமாம். |
| ಮೂರ್ತಿ: | ನಾಳೆ ಬೆಳಿಗ್ಯೆ ಬರ್ತೀನಿ ಅಂತ ಅವನಿಗೆ ಹೇಳು. | நாளை காலை வருகிறேனென்று அவனிடம் சொல். |

## 2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | ಸಾರ್ ನಿಮಗೆ ಫೋನ್ ಬಂದಿದೆ. | சார், உங்களுக்குப் போன் வந்திருக்கிறது. |
| | ಡಾಕ್ಟರನ್ನು ನೋಡೋಕೆ ರೋಗಿಗಳು ಬಂದಿದಾರೆ. | டாக்டரைப் பார்க்க நோயாளிகள் வந்திருக்கிறார்கள். |
| | ಸೀತಾ ತರಕಾರಿ ತರೋಕೆ ಸಿಟಿಗೆ ಹೋಗಿದಾಳೆ. | சீதா காய்கறி வாங்கிவர நகரத்துக்குப் போயிருக்கிறாள். |
| | ಮಗು ನಾಲ್ಕಾಣೆ ನುಂಗಿದೆ. | குழந்தை நாலணா நாணயத்தை விழுங்கியிருக்கிறது. |
| | ಅವರು ಹೊಸ ಮನೆ ಕಟ್ಟಿಸಿದ್ದಾರೆ. | அவர் புது வீடு கட்டியிருக்கிறார். |
| | ನಾನು ಹೊಸ ಕಾರು ಕೊಂಡುಕೊಂಡಿದೀನಿ. | நான் புது கார் வாங்கியிருக்கிறேன். |
| | ಆ ಹುಡುಗ ಒಳ್ಳೆಯ ಪ್ರಬಂಧ ಬರೆದಿದಾನೆ. | அந்தப் பையன் நல்ல கட்டுரை எழுதியிருக்கிறான். |
| | ನಮ್ಮ ತಂದೆ ಒಳಗೆ ಮಲಗಿದಾರೆ. | என் தந்தை உள்ளே தூங்கிக் கொண்டிருக்கிறார். |
| | ನಿಮ್ಮ ತಮ್ಮನಿಗೆ ಕೆಲಸ ಸಿಕ್ಕಿದೆಯಾ? | உன் தம்பிக்கு வேலை கிடைத்திருக்கிறதா? |
| 2.2 | ನಾನು ಕಳೆದ ವರ್ಷ ದೆಹಲಿಗೆ ಹೋಗಿದ್ದೆ. | நான் கடந்த வருடம் டெல்லிக்குப் போயிருந்தேன். |
| | ಅವರು ಮೊನ್ನೆ ಚಾಮುಂಡಿ ಬೆಟ್ಟಕ್ಕೆ ಹೋಗಿದ್ದರು. | அவர் நேற்று சாமுண்டி மலைக்குப் போயிருந்தார். |
| | ನಾವು ಹತ್ತು ವರ್ಷದ ಹಿಂದೆ 'ನಾಂದಿ' ಸಿನಿಮಾ ನೋಡಿದ್ದೆವು. | நாங்கள் பத்து வருடத்துக்கு முன்னால் 'நாந்தி' சினிமா பார்த்திருந்தோம். |
| | ರಮೇಶ ನನಗೆ ಕಾಗದ ಬರೆದಿದ್ದ. | ரமேஷ் எனக்குக் கடிதம் எழுதியிருந்தான். |
| | ನೀವು ಕರ್ನಾಟಕದ ಪ್ರವಾಸ ಹೋಗಿದ್ದಿರಾ? | நீங்கள் கர்நாடகாவில் சுற்றுலா போயிருக்கிறீர்களா? |



| | | |
|---|---|---|
| | ರಾಜು ಬಾಂಬೆಯಿಂದ ನಿನಗೆ ಸ್ವೆಟರ್ ತಂದಿದ್ದನಾ? | ராஜு பம்பாயிலிருந்து எனக்கு ஸ்வெட்டர் கொண்டுவந்திருக்கிறானா? |
| | ನಿನ್ನೆ ಪೇಪರ್‌ನಲ್ಲಿ ಗಾಂಧೀಜಿ ಫೋಟೋ ಬಂದಿತ್ತು. | நேற்று பத்திரிகையில் காந்திஜியின் புகைப்படம் வந்திருந்தது. |
| 2.3 | ಅವರು ನಾಳೆ ಸಾಯಂಕಾಲ ಇಷ್ಟುಹೊತ್ತಿಗೆ ಬಂದಿರ್ತಾರೆ. | அவர்கள் நாளை மாலை இந்நேரம் வந்திருப்பார்கள். |
| | ಸುರೇಶ ಖಂಡಿತ ರಮೇಶನಿಗೆ ನೂರು ರೂಪಾಯಿ ಕೊಟ್ಟಿರ್ತಾನೆ. | சுரேஷ் கண்டிப்பாக ரமேஷுக்கு நூறு ரூபாய் கொடுத்திருப்பான். |
| | ನೀವು ನಾಳೆ ಎಂಟುಗಂಟೆಗೆ ಮದ್ರಾಸ್ ತಲುಪಿರ್ತೀರಾ? | நீங்கள் நாளை எட்டுமணிக்குச் சென்னையை அடைந்திருப்பீர்களா? |
| | ರಾಜು ಪರೀಕ್ಷೆಗೆ ಎಲ್ಲಾ ಪಾಠಗಳನ್ನು ಓದಿರ್ತಾನೆ. | ராஜு தேர்வுக்கு எல்லாப் பாடங்களையும் படித்திருப்பான். |
| 2.4 | ನಿಮಗೆ ಯಾವುದೂ ಕಾಗದ ಬಂದಿಲ್ಲ. | உங்களுக்கு எந்தக் கடிதமும் வந்திருக்கவில்லை. |
| | ಅವರನ್ನು ನೋಡುವುದಕ್ಕೆ ಯಾರೂ ಬಂದಿಲ್ಲ. | அவரைப் பார்க்க யாரும் வந்திருக்கவில்லை. |
| | ನನ್ನ ತಮ್ಮ ಸಿಟಿಗೆ ಹೋಗಿಲ್ಲ. | என் தம்பி நகரத்துக்குப் போயிருக்கவில்லை. |
| | ಆಟ ಆಡೋಕೆ ಹೋಗಿದಾನೆ. | விளையாடப் போயிருக்கிறான். |
| | ಬ್ಯಾಂಕಿನವರು ನಮಗೆ ಇನ್ನೂ ಸಾಲ ಕೊಟ್ಟಿಲ್ಲ. | வங்கி எங்களுக்கு இன்னமும் கடன் கொடுக்கவில்லை. |
| 2.5 | ನಾವು ಮೊನ್ನೆ ಚಾಮುಂಡಿ ಬೆಟ್ಟಕ್ಕೆ ಹೋಗಿರಲಿಲ್ಲ. | நாங்கள் முந்தாநாள் சாமுண்டி மலைக்குப் போயிருக்கவில்லை. |
| | ಆ ನಾಯಿ ಇನ್ನೂ ಸತ್ತಿರಲಿಲ್ಲ. | அந்த நாய் இன்னும் செத்திருக்கவில்லை. |
| | ಧಾರವಾಡದಲ್ಲಿ ಬೇಂದ್ರೆಯವರು ಸಿಕ್ಕರಲಿಲ್ಲ. | தார்வாடில் பேந்த்ரே கிடைத்திருக்க வில்லை (கிடைக்கவில்லை). |
| | ಅವನು ಅಧಿಕಾರಗಳಿಗೆ ಲಂಚ ಕೊಟ್ಟಿರಲಿಲ್ಲ. | அவன் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்திருக்கவில்லை. |
| 2.6 | ರಮೇಶ ಇಷ್ಟು ಬೇಗ ಮನೆಗೆ ಬಂದಿರಲ್ಲ. | ரமேஷ் இவ்வளவு சீக்கிரம் வீட்டுக்கு வந்திருக்கமாட்டான். |
| | ಅವರು ಹತ್ತನೇ ತಾರೀಕು ಊರಿಗೆ ತಲುಪಿರಲ್ಲ. | அவர் பத்தாம் தேதி ஊரை அடைந்திருக்கமாட்டார். |

| | |
|---|---|
| ಧರ್ಮರಾಯನಂಥವನು ಸುಳ್ಳು ಹೇಳಿರಲ್ಲ. | தருமனைப் போன்றவன் பொய் சொல்லியிருக்கமாட்டான். |
| ಕೃಷ್ಣನಂಥವನು ಮೋಸ ಮಾಡಿರಲ್ಲ. | கிருஷ்ணனைப் போன்றவன் மோசம் செய்திருக்கமாட்டான். |
| ಈ ದೇಶದಲ್ಲಿ ತುಂಬಾ ಜನ ಬಡವರು ಊಟ ಮಾಡಿರಲ್ಲ. | இந்தத் தேசத்தில் நிறைய ஏழை மக்கள் சாப்பிட்டிருக்கமாட்டார்கள். |

### 3. குறிப்புகள்

3.1 முக்காலங்களுக்குமான முழுநிறை வினை வடிவங்களும் அவற்றின் எதிர்மறைகளும் இப்பாடத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இது

வினையெச்சம் + தேவையான காலத்தைக்காட்டும் 'இரு' என்னும் வினைச் சொல்லின் வடிவம்
என அமையும்.

3.1 நிகழ்கால முழுநிறை வினை வடிவம்:

ப$^{3}$ன்து$^{3}$ + இத$^{3}$ாரெ = ப$^{3}$ன்தி$^{3}$த$^{3}$ாரெ — வந்திருக்கிறார்கள்

நோடி$^{3}$ + இத$^{3}$ானெ = ரோடி$^{3}$த$^{3}$ானெ — பார்த்திருக்கிறான்.

3.2 இறந்தகால முழுநிறை வினை வடிவம்:

ப$^{3}$ன்து$^{3}$ + இத்$^{3}$த$^{3}$ = ப$^{3}$ன்தி$^{3}$த்$^{3}$த$^{3}$ — வந்திருந்தான்

நோடி$^{3}$ + இத்$^{3}$த$^{3}$ = நோடி$^{3}$த்$^{3}$த$^{3}$ — பார்த்திருந்தான்

3.3 எதிர்கால முழுநிறை வினை வடிவம்:

ப$^{3}$ன்து$^{3}$ + இர்தானெ = ப$^{3}$ன்தி$^{3}$ர்தானெ — வந்திருப்பான்

நோடி$^{3}$ + இர்தானெ = நோடி$^{3}$ர்தானெ — பார்த்திருப்பான்

3.4 'இரு'வின் எதிர்மறையை அவ்வக்கால வினையெச்சங்களுடன் சேர்ப்பதால் முக்காலங்களுக்குமான முழுநிறை வினைகளின் எதிர்மறைகள் கிடைக்கின்றன.

ப$^{3}$ன்து$^{3}$ + இல்ல = ப$^{3}$ன்தி$^{3}$ல்ல — வந்திருக்கவில்லை

நோடு$^{3}$ + இல்ல = நோடி$^{3}$ல்ல — பார்த்திருக்கவில்லை

ப$^{3}$ன்து$^{3}$ + இரலில்ல = ப$^{3}$ன்தி$^{3}$ரலில்ல — வந்திருக்கவில்லை

நோடி$^{3}$ + இரலில்ல = நோடி$^{3}$ரலில்ல — பார்த்திருக்கவில்லை

அவனு ப$^{3}$ன்து$^{3}$ + இரல்ல. — அவன் வந்திருக்கமாட்டான்

அவளு நோடி$^{3}$ + இரல்ல. — அவள் பார்த்திருக்கமாட்டாள்.

3.5 கன்னடத்தில் முழுநிறை வினையின் இறந்தகால, நிகழ்கால எதிர்மறை வடிவங்களுக்கு இடையே துல்லியமான வேறுபாடு உள்ளதைக் கவனிக்க.



எடுத்துக்காட்டாக, ப$^{3}$ன்தி$^{3}$ல்ல, ப$^{3}$ன்தி$^{3}$ரலில்ல என்பவைகளை நோக்குக. ஆனால், தமிழில் எழுதும்போது இவைகளுக்கு இடையில் வேறுபாடு இல்லை. எனவே, தமிழில் இடத்தைக் கருத்தில் கொண்டு காலத்தை அறிய வேண்டும்.

### 4. பயிற்சி

4.1 கீழ்க்கண்டவற்றில் அடைப்புகுறிகளுக்குள் உள்ள வினைச்சொற்களின் முழுநிறை வடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 ಇಂದಿರಾಗಾಂಧಿ ಹೋದ ವಾರ ಮೈಸೂರಿಗೆ -------- (ಬರು).

4.1.2 ನಿನ್ನೆ ರಾತ್ರಿ ನನಗೆ ಒಂದು ಕನಸು --------- (ಬೀಳು).

4.1.3 ಲೀಲಾ ಬೆಂಗಳೂರಿಗೆ ---------- (ಹೋಗು).

4.1.4 ಅವರು ಸಂಜೆ ಐದು ಗಂಟೆಗೆ ಮನೆಗೆ ---------- (ಬರು).

4.1.5 ನನ್ನ ಸ್ನೇಹಿತ ನಿನ್ನೆ ಸಂಜೆ ದಾರಿಯಲ್ಲಿ ---------- (ಸಿಕ್ಕು).

4.2. கீழ்க்கண்டவற்றை இறந்கால முழுநிறை வினை வாக்கியங்களாக மாற்றுக.

4.2.1 ಸಾರ್, ನಿಮಗೆ ಫೋನ್ ಬಂದಿದೆ.

4.2.2 ಅವನು ಒಳ್ಳೆಯ ಕಥೆ ಬರೆದಿದ್ದಾನೆ.

4.2.3 ಅವರು ಚಾಮುಂಡಿ ಬೆಟ್ಟಕ್ಕೆ ಹೋಗಿದ್ದಾರೆ.

4.2.4 ಬೆಂಗಳೂರು ಕರಗ ವೈಭವದಿಂದ ಆಚರಿಸಿದ್ದಾರೆ.

4.2.5 ಅವನು ಒಂದು ಹೊಸ ವಾಚು ಕೊಂಡಿದ್ದಾನೆ.

4.3. கீழ்க்கண்டவற்றை நிகழ்கால முழுநிறை வினை வாக்கியங்களாக மாற்றுக.

4.3.1 ಮಂತ್ರಿಗಳು ನಮ್ಮ ಸ್ಕೂಲಿಗೆ ಬರ್ತಾರೆ.

4.3.2 ಇವತ್ತು ಪರೀಕ್ಷಾ ಫಲಿತಾಂಶ ಬರುತ್ತದೆ.

4.3.3 ಅವನು ಆ ಸಿನಿಮಾ ನೋಡುತ್ತಾನೆ.

4.3.4 ನೀವು ಯಾವ ಕಥೆ ಓದ್ತೀರಿ?

4.3.5 ಅವರು ಕಾಗದ ಬರೆಯುತ್ತಾರೆ.

4.4 கீழ்க்கண்டவற்றை எதிர்கால முழுநிறை வினை வாக்கியங்களாக மாற்றுக.

4.4.1 ರಾಮು ಸಂಜೆ ಐದು ಗಂಟೆಗೆ ಬರುತ್ತಾನೆ.

4.4.2 ಅವನು ಊಟ ಮಾಡುತ್ತಾನೆ.

4.4.3 ಬೆಂಗಳೂರಿನಲ್ಲಿ ಮಳೆ ಬರುತ್ತೆ.

4.5 கீழ்க்கண்டவற்றை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுக.

4.5.1 ಬಾದಾಮಿಗೆ ಚೀನಾ ದೇಶದ ಪ್ರವಾಸಿ ಹ್ಯುಯನ್‌ತ್ಸಾಂಗ್ ಬಂದಿದ್ದ.

4.5.2 ಕೇತಮಲ್ಲ ಹಳೆಬೀಡಿನ ದೇವಸ್ಥಾನ ಕಟ್ಟಿಸಿದ್ದ.

4.5.3 ಅವರು ಕಾರಿನಲ್ಲಿ ಬಂದಿದ್ದಾರೆ.

4.5.4 ಅವರು ರಾಜಕುಮಾರ್ ಹಾಡು ಕೇಳಲು ಹೋಗಿದ್ದಾರೆ.

4.5.5 ನಾಗರಾಜ ಮನೆಗೆ ಬಂದಿರ್ರಾನೆ.

4.5.6 ಅವರು ಕರ್ನಾಟಕ ಪ್ರವಾಸ ಹೋಗಿದ್ದರು.

4.5.7 ನಾನು ಬಿಜಾಪುರ ನೋಡಿದ್ದೇನೆ.

4.5.8 ರವಿ ಮನೆಯಲ್ಲಿ ಮಲಗಿರ್ರಾನೆ.

4.6 கீழ்க்கண்டவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

4.6.1 தார்வாடில் உனக்கு ரமேஷ் கிடைத்தானா?

4.6.2 பல்வேறு மாநிலங்களிலிருந்தும் கன்னடம் கற்க ஆசிரியர்கள் வந்திருக்கிறார்கள்.

4.6.3 பையன்கள் கிரிக்கெட் போட்டியைப் பார்க்கப் போயிருக்கிறார்கள்.

4.6.4 அவன் அவலுவலக வேலையாகப் போயிருந்தான்.

4.6.5 இந்நேரம் அவன் வீட்டுக்கு வந்திருப்பான்.

4.7 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க.

4.7.1 ನಿಮ್ಮ ತಂದೆ ತಾಯಿ ಊರಿಂದ ಬಂದಿದ್ದಾರಾ?

4.7.2 ನೀವು ಹೋದ ವರ್ಷ ಬೀದರ್‌ಗೆ ಹೋಗಿದ್ದಿರಾ?

4.7.3 ನಿಮ್ಮ ಸ್ನೇಹಿತ ನಿಮ್ಮ ಮನೆಗೆ ಬಂದಿದ್ದರಾ?

4.7.4 ನೀವು ಜೋಗ್ ಜಲಪಾತ ನೋಡಿದ್ದೀರಾ?

4.7.5 ನೀವು ಯಾವುದಾದರೂ ಕನ್ನಡ ಪುಸ್ತಕ ಓದಿದ್ದೀರಾ?

**5.1. சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| ಅತ್ತಿಗೆ | அண்ணி |
| ಉಳಿದುಕೊಳ್ಳು | தங்கியிரு. |

**5.2. துணைச் சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| ಅಧಿಕಾರಿ | அதிகாரி |
| ನಾಲ್ಕಾಣೆ | நாலணா |
| ನುಂಗು | விழுங்கு |
| ಪ್ರಬಂಧ | கட்டுரை |
| ಪ್ರವಾಸ | பயணம், சுற்றுலா |
| ಮೋಸ | மோசம் |
| ರೋಗಿ | நோயாளி |
| ಲಂಚ | லஞ்சம் |
| ಸಾಲ | கடன் |
| ಸುಳ್ಳು | பொய். |



# பாடம் 19

**1. விவரணை**

ಹಳೆಬೀಡು, ಬೇಲೂರು ಕರ್ನಾಟಕದ ಪ್ರಸಿದ್ಧ ವಾಸ್ತು ಶಿಲ್ಪ ಕೇಂದ್ರಗಳು. ಅಲ್ಲಿ ಹೊಯ್ಸಳರು ಕಟ್ಟಿಸಿದ ಜಗತ್ಪ್ರಸಿದ್ಧ ದೇವಸ್ಥಾನಗಳಿವೆ. ಈ ಎರಡೂ ಸ್ಥಳಗಳೂ ಈಗಿನ ಹಾಸನ ಜಿಲ್ಲೆಯಲ್ಲಿವೆ. ಬೆಂಗಳೂರಿನಿಂದ ಹಳೆಬೀಡಿಗೆ ಸುಮಾರು ೨೫೦ ಕಿಲೋಮೀಟರ್ ಆಗುತ್ತದೆ. ಹಳೆಬೀಡಿನಿಂದ ಬೇಲೂರಿಗೆ ೧೫ ಕಿಲೋಮೀಟರ್.

ஹளெபீடு, பேலூர் இரண்டும் கர்நாடகத்தின் புகழ்பெற்ற கட்டடக் கலை மையங்கள். அங்கே ஹொய்சளர்கள் கட்டிய உலகப் புகழ் பெற்ற கோவில்கள் உள்ளன. இந்த இரண்டு இடங்களும் இப்போதைய ஹாசன் மாவட்டத்தில் உள்ளன. பெங்களூரிலிருந்து ஹளெபீடுக்குச் சுமார் 250 கிலோமீட்டர் இருக்கும். ஹளெபீடிலிருந்து பேலூருக்கு 15 கிலோமீட்டர்.

ಹಳೆಬೀಡಿನಲ್ಲಿರುವ ದೇವಸ್ಥಾನದ ಹೆಸರು ಹೊಯ್ಸಳೇಶ್ವರ ದೇವಸ್ಥಾನ. ಬೇಲೂರಿನಲ್ಲಿರುವ ದೇವಸ್ಥಾನದ ಹೆಸರು ಚೆನ್ನಕೇಶವ ದೇವಾಲಯ. ಬೇಲೂರುದೇವಸ್ಥಾನವನ್ನು ಕಟ್ಟಿಸಿದ ರಾಜನ ಹೆಸರು ಹೊಯ್ಸಳ ವಿಷ್ಣುವರ್ಧನ. ಇವನು ರಾಜ್ಯಭಾರ ಮಾಡುತ್ತಾ ಇದ್ದ ಕಾಲದಲ್ಲಿ ಕರ್ನಾಟಕ ಶಿಲ್ಪಕಲೆಯಲ್ಲಿ ಸುವರ್ಣಯುಗವನ್ನು ಕಂಡಿತ್ತು. ಇವನ ಹೆಂಡತಿ ಶಾಂತಲಾ 'ನಾಟ್ಯರಾಣಿ' ಎಂಬ ಬಿರುದು ಪಡೆದವಳು. ಇವಳು ನಾಟ್ಯಕಲೆಗೆ ಸಲ್ಲಿಸಿದ ಕಾಣಿಕೆ ಅಪಾರ. ಹಳೆಬೀಡು ದೇವಸ್ಥಾನ ಕಟ್ಟಿಸಿದವನು ಕೇತಮಲ್ಲ. ಅವನು ವಿಷ್ಣುವರ್ಧನನ ದಂಡನಾಯಕ ಆಗಿದ್ದ.

ஹளெபேடிலுள்ள கோவிலின் பெயர் ஹொய்ஸளேசுவரர் கோவில். பேலூரிலுள்ள கோவிலின் பெயர் சென்னகேசவர் கோவில். பேலூர் கோவிலைக் கட்டிய அரசனின் பெயர் ஹொய்ஸள விஷ்ணுவர்த்தன். இவன் ஆட்சிபுரிந்துகொண்டிருந்த காலத்தில் கர்நாடகம் கட்டடக்கலையில் பொற் காலத்தைக் கண்டது. இவன் மனைவி சாந்தலா 'நாட்டியராணி' என்னும் பட்டம் பெற்றவள். இவள் நாட்டியக்கலைக்குச் செலுத்திய பங்களிப்பு அபாரம். ஹளெபீடு கோவிலைக் கட்டியவன் கேதமல்லன். அவன் விஷ்ணுவர்த்தனின் தளபதியாக இருந்தான்.

ಹಿಂದೆ ಹಳೆಬೀಡಿಗೆ ಇದ್ದ ಹೆಸರು ದ್ವಾರಸಮುದ್ರ ಅಂತ. ಹೊಯ್ಸಳರ ರಾಜಧಾನಿಯಾಗಿದ್ದ ದ್ವಾರಸಮುದ್ರ ಮೊಗಲರ ಆಕ್ರಮಣದಿಂದ ಹಾಳಾಯಿತು. ಹಾಳಾದ ಊರಿಗೆ ಹಳೆಬೀಡು ಅಂತ ಹೆಸರು ಬಂತು. ವೇಲಾಪುರ ಎಂದು ಪುರಾಣಗಳಲ್ಲಿ ಪ್ರಸಿದ್ಧವಾದ ಪ್ರದೇಶ ಈಗ ಬೇಲೂರು ಎಂದಾಗಿದೆ.

ஹளெபீடுக்கு முன்பிருந்த பெயர் துவாரசமுத்திரம் என்பது. ஹொய்சளர் களின் தலைநகராயிருந்த துவாரசமுத்திரம் மொகலாயர்களின் படையெடுப்பால் பாழாயிற்று. பாழான ஊருக்கு ஹளெபீடு என்று பெயர் வந்தது. வேலாபுரம் என்று புராணங்களில் பிரசித்தமான பிரதேசம் இப்போது பேலூர் என்றாகியுள்ளது.

ಆಗಾಗ್ಗೆ ದಾಳಿ ಮಾಡ್ತಾ ಇದ್ದ ಮೊಗಲರಿಂದ ಜನರು ಇಡೀ ದೇವಸ್ಥಾನವನ್ನು ಮರಳಿನಿಂದ ಮುಚ್ಚಿ ರಕ್ಷಿಸಿದರು. ಹಾಗೆ ಉಳಿದ ದೇವಸ್ಥಾನಗಳೇ ಇಂದು ಕಲೆಯನ್ನು ಮೆರೆಯುತ್ತಾ ನಿಂತಿವೆ.

கோவில்கள் முழுவதையும் மணலில் மூடி அவ்வப்போது தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த மொகலாயர்களிடமிருந்து மக்கள் காப்பாற்றினார்கள். அப்படிக் காப்பாற்றப்பட்ட கோவில்கள்தான்

இன்று கலையைப் பறைசாற்றிக் கொண்டுள்ளன.

ಈ ದೇವಸ್ಥಾನಗಳನ್ನು ನಿರ್ಮಿಸಿದ ಶಿಲ್ಪಿಗಳ ಹೆಸರು ಜಕ್ಕಣ ಮತ್ತು ಡಂಕಣ ಅಂತ ಜನ ಹೇಳುತ್ತಾರೆ. ಆದರೆ ದೇವಸ್ಥಾನದ ಕಟ್ಟಡದಲ್ಲಿ ಮಲ್ಲಿತಮ್ಮ ಎಂಬ ಹೆಸರೂ ಇದೆ.

இந்தக் கோவில்களை நிர்மாணித்த சிற்பிகளின் பெயர்கள் ஜக்கண மற்றும் டங்கண என்று மக்கள் கூறுகிறார்கள். ஆனால் கோவில் கட்டடத்தில் மல்லிதம்ம என்னும் பெயரும் உள்ளது.

ಈ ದೇವಸ್ಥಾನಗಳ ಸೌಂದರ್ಯ ನೋಡಿಯೇ ಅನುಭವಿಸಬೇಕು. ಶಿಲ್ಪಿಗಳು ಮಾಡಿರುವ ಕುಸುರಿ ಕೆಲಸ ಅದ್ಭುತವಾಗಿದೆ. ಅಷ್ಟು ಸೂಕ್ಷ್ಮವಾದ ಕುಸುರಿ ಕೆಲಸ ಮಾಡುವುದಕ್ಕೆ ಬಳಪದ ಕಲ್ಲು ಉಪಯೋಗಿಸಿದ್ದಾರೆ. ದೇವಸ್ಥಾನದ ಹೊರಗೋಡೆಯಲ್ಲಿರುವ ರಾಮಾಯಣ ಮಹಾಭಾರತದ ದೃಶ್ಯಗಳು, ಶಾಂತಲಾ ನಾಟ್ಯ ಮಾಡ್ತಾ ಇದ್ದ ವೃತ್ತಾಕಾರದ ಕಲ್ಲು, ವಿವಿಧ ಭಂಗಿಯಲ್ಲಿ ನಾಟ್ಯ ಮಾಡ್ತಾ ಇರುವ ಶಿಲಾಬಾಲಿಕೆಯರು, ನಯವಾಗಿ ಕೆತ್ತಿದ ಬಸವ ಇವೆಲ್ಲ ಶಿಲ್ಪಿಗಳು ನಮಗೆ ನೀಡಿದ ಕಾಣಿಕೆ.

இந்தக் கோவில்களின் அழகைப் பார்த்துத்தான் அனுபவிக்க வேண்டும். சிற்பிகள் செய்துள்ள அலங்கார வேலைப்பாடு அற்புதமாக உள்ளது. அவ்வளவு நுணுக்கமான அலங்கார வேலைப்பாட்டைச் செய்வதற்கு மாவுக் கல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். கோவிலின் வெளிச் சுவரில் உள்ள ராமாயண, மகாபாரதக் காட்சிகள், சாந்தலா நடனமாடிக்கொண்டிருந்த வட்டக்கல், வெவ்வேறு முத்திரைகளில் நாட்டியமாடிக்கொண்டிருக்கும் பெண் சிலைகள், நயமாகச் செதுக்கிய நந்தி இவையெல்லாம் சிற்பிகள் நமக்களித்த கொடைகள்.

ಈ ದೇವಸ್ಥಾನಗಳನ್ನು ಕರ್ನಾಟಕ ಶೈಲಿಯಲ್ಲಿ ಕಟ್ಟಿದ್ದಾರೆ. ಇದು ದ್ರಾವಿಡ ಹಾಗೂ ಉತ್ತರದ ನಾಗರ ಶೈಲಿಯ ಸಂಗಮ. ನಕ್ಷತ್ರಾಕಾರದ ಜಗಲಿಯ ಮೇಲೆ ಅತಿ ಎತ್ತರವೂ ಅಲ್ಲದ ಅತಿ ಚಿಕ್ಕದೂ ಅಲ್ಲದ ದೇವಸ್ಥಾನ ಇದೆ.

இந்தக் கோவில்களைக் கர்நாடக பாணியில் கட்டியிருக்கிறார்கள். இது திராவிட மற்றும் வடக்கு நாகர் பாணிகளின் சங்கமம். நட்சத்திர வடிவிலான திண்ணையின் மேல் மிகப் பெரியதும் அல்லாத மிகச் சிறியதும் அல்லாத கோவில் உள்ளது.

ಈ ಎರಡೂ ದೇವಸ್ಥಾನಗಳಲ್ಲಿ ಅದಕ್ಕಿಂತ ಇದು, ಇದಕ್ಕಿಂತ ಅದು ಶ್ರೇಷ್ಠ ಅನ್ನುವ ಹಾಗೇ ಇಲ್ಲ. ಅವುಗಳನ್ನು ನೋಡಿ ಆನಂದಿಸಬೇಕು. ಯಾವುದು ಶ್ರೇಷ್ಠ ಎಂದು ನಿರ್ಣಯಿಸುವುದಕ್ಕೆ ಹೋಗಬಾರದು. ಅವುಗಳನ್ನು ನೋಡದ ವ್ಯಕ್ತಿ ನತದೃಷ್ಟ.

இந்த இரண்டு கோவில்களில் அதைவிட இது, இதைவிட அது சிறப்பானது என்று சொல்லவே முடியாது. அவைகளைப் பார்த்து ஆனந்தமடைய வேண்டும். எது சிறந்தது என்று தீர்மானிக்கப் போகக் கூடாது. அவைகளைப் பார்க்காத ஆள் துரதிருஷ்டசாலி.

ಈ ದೇವಸ್ಥಾನಗಳನ್ನು ನೋಡಲು ಅಲ್ಲಿಗೆ ದಿನಾ ಬರುವವರು ನೂರಾರು ಜನ. ಕರ್ನಾಟಕದಲ್ಲಿ ಈ ದೇವಸ್ಥಾನಗಳನ್ನು ನೋಡದವರು ಅಪರೂಪ. ಒಮ್ಮೆ ಬಂದವರಿಗೆ ಮತ್ತೆ ಬರಬೇಕು ಎನ್ನುವಂತಾಗುತ್ತದೆ. ಒಂದು ಸಾರಿ ನೋಡಿದವರಿಗೆ ಮತ್ತೆ ಮತ್ತೆ ನೋಡಿದರೂ ಬೇಸರವಾಗುವುದಿಲ್ಲ. ಬೆಂಗಳೂರಿನಿಂದ ಬರುವವರಿಗೆ ಈಗ ಹೆಚ್ಚಿನ ಬಸ್ ಸೌಕರ್ಯ ಇದೆ. ಈಗ ಅಲ್ಲಿಗೆ ಬರುವವರ ಸಂಖ್ಯೆ ಜಾಸ್ತಿ ಇರುವುದರಿಂದ ಪ್ರವಾಸಿಗರಿಗೆ ಎಲ್ಲಾ ಅನುಕೂಲಗಳನ್ನು ಕಲ್ಪಿಸಲಾಗಿದೆ.

இந்தக் கோவில்களைப் பார்க்க அங்கே தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் வருகிறார்கள். கர்நாடகத்தில் இந்தக் கோவில்களைப் பார்க்காதவர்கள் அபூர்வம். ஒருமுறை வந்தவர்களுக்கு மீண்டும் வரவேண்டும் எனத் தோன்றும். ஒருமுறை பார்த்தவர்களுக்கு மீண்டும் மீண்டும் பார்த்தாலும் சலிக்காது. பெங்களூரிலிருந்து வருகிறவர்களுக்கு இப்போது அதிக பஸ் வசதி உள்ளது. இப்போது அங்கே வருகிறவர்களின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதால் பயணிகளுக்கு எல்லா வசதிகளும் வழங்கப் படுகின்றன.

## 2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | ನಾವು ನೋಡಲು ಹೋಗ್ತಾ ಇರುವ ಸ್ಥಳಗಳು ಹಳೆಬೀಡು, ಬೇಲೂರು. | நாம் பார்க்கப்போய்க்கொண்டிருக்கும் இடங்கள் ஹளெபீடு, பேலூர். |
| | ಅವರು ತರಿಸ್ತಾ ಇರುವ ಪೇಪರ್ ಪ್ರಜಾವಾಣಿ. | அவர்கள் தருவித்துக்கொண்டிருக்கும் பேப்பர் பிரஜாவாணி. |
| | ಅವಳು ಓದುತ್ತಾ ಇರುವ ಪುಸ್ತಕ ಮರಳಿಮಣ್ಣಿಗೆ. | அவள் படித்துக்கொண்டிருக்கும் புத்தகம் மரளிமண்ணிகெ. |
| 2.2 | ಬೇಲೂರಿನಲ್ಲಿರುವ ದೇವಸ್ಥಾನದ ಹೆಸರು ಚೆನ್ನ ಕೇಶವ ದೇವಾಲಯ. | பேலூரிலிருக்கும் கோவிலின் பெயர் சென்ன கேசவர் கோவில். |
| | ನಾವು ಇವತ್ತು ನೋಡುವ ಸಿನಿಮಾ ಚೋಮನದುಡಿ. | நாங்கள் இன்று பார்க்கப்போகிற சினிமா சோமனதுடி. |
| | ಅವರು ಕೇಳುವ ಪ್ರಶ್ನೆ ಸರಿಯಲ್ಲ. | அவள் கேட்கும் கேள்வி சரியில்லை. |
| 2.3 | ನೀವು ನೋಡಿದ ಸಿನಿಮಾ ಯಾವುದು? | நீங்கள் பார்த்த சினிமா எது? |
| | ನಿನ್ನೆ ಮಾಡಿದ ಪಾಠ ಓದಿ. | நேற்று நடத்தின பாடத்தைப் படி. |
| | ಅವರು ಕೊಟ್ಟ ಹಣ ಏನು ಮಾಡಿದೆ? | அவன் கொடுத்த பணத்தை என்ன செய்தாய்? |
| 2.4 | ಇದು ಶಾಂತಲ ನಾಟ್ಯಮಾಡ್ತಾ ಇದ್ದ ಜಾಗ. | இது சாந்தலா நாட்டியமாடிக் கொண்டிருந்த இடம். |
| | ಅವಳು ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದ್ದ ಕಾಲೇಜು ಮಹಾರಾಜ ಕಾಲೇಜು. | அவள் வேலை செய்துகொண்டிருந்த கல்லூரி மகாராஜா கல்லூரி. |
| | ನಾವು ವಾಸ ಮಾಡ್ತಾ ಇದ್ದ ಊರು ತಿಪಟೂರು. | நாங்கள் வசித்துக்கொண்டிருந்த ஊர் திப்டூர். |

| | | |
|---|---|---|
| 2.5 | ಹೊಯ್ಸಳರ ರಾಜಧಾನಿಯಾಗಿದ್ದ ದ್ವಾರಸಮುದ್ರ ಹಾಳಾಯಿತು. | ஹொய்சளர்களின் தலைநகராயிருந்த துவாரசமுத்திரம் பாழாயிற்று. |
| | ನಿಮ್ಮ ಮನೆಗೆ ಬಂದಿದ್ದ ಹುಡುಗಿ ಯಾರು? | உங்கள் வீட்டுக்கு வந்திருந்த பெண் யார்? |
| | ನೀವು ಕಳುಹಿಸಿದ್ದ ಹಣ ಎಷ್ಟು? | நீங்கள் அனுப்பியிருந்த பணம் எவ்வளவு? |
| 2.6 | ಆಡು ಮುಟ್ಟದ ಸೊಪ್ಪಿಲ್ಲ. | ஆடு தின்னாாத தழையில்லை. |
| | ಅವನಿಗೆ ಗೊತ್ತಿಲ್ಲದ ವಿಷಯವಿಲ್ಲ. | அவனுக்குத் தெரியாத விஷயமில்லை. |
| | ಅವಳು ನೋಡದ ಸಿನಿಮಾ ಇಲ್ಲ. | அவள் பார்க்காத சினிமா இல்லை. |
| | ಪುಟ್ಟಪ್ಪನವರು ಬರೆಯದ ಸಾಹಿತ್ಯ ಪ್ರಕಾರ ಇಲ್ಲ. | புட்டப்பா அவர்கள் எழுதாத இலக்கிய வகை இல்லை. |
| 2.7 | ನಿಮ್ಮಲ್ಲಿ ಅರಮನೆಯನ್ನು ನೋಡದವರು ಯಾರು? | உங்களில் அரண்மனையைப் பார்க்காதவர்கள் யார்? |
| | ಇವತ್ತು ಹೋಂ ವರ್ಕ್ಸ್ ಬರೆಯದವರು ಯಾರು? | இன்று வீட்டுப்பாடம் எழுதாதவர்கள் யார்? |
| | ನಿಮ್ಮಲ್ಲಿ ನಾಳೆ ಟೂರ್ ಹೋಗದವರು ಯಾರು? | உங்களில் நாளை சுற்றுலா போகாதவர்கள் யார்? |
| 2.8 | ನಮ್ಮ ಆಫೀಸಿನಲ್ಲಿ ಕನ್ನಡ ಬರದವರು ಹತ್ತು ಜನ ಇದ್ದಾರೆ. | எங்கள் அலுவலகத்தில் கன்னடம் தெரியாதவர்கள் பத்துப் பேர் இருக்கிறார்கள். |
| | ನಮ್ಮ ಮನೆಯಲ್ಲಿ ಓದದವಳು ನನ್ನ ತಂಗಿ ಒಬ್ಬಳೆ. | எங்கள் வீட்டில் படிக்காதவள் என் தங்கை ஒருத்தியே. |
| | ನಮ್ಮ ಮಂತ್ರಿಮಂಡಲದಲ್ಲಿ ಕನ್ನಡ ಬರೆಯೋಕೆ ಬರದವರು ಇಬ್ಬರು ಇದ್ದಾರೆ. | எங்கள் அமைச்சரவையில் கன்னடம் எழுதத் தெரியாதவர்கள் இரண்டு பேர் இருக்கிறார்கள். |
| 2.9 | ಅದು ನೀನು ಮಾಡದ ಕೆಲಸ ಅಲ್ಲ. | அது நீ செய்யாத வேலை அல்ல. |
| | ಇದು ಅವನು ಕೇಳದ ವಿಷಯ ಅಲ್ಲ. | இது அவன் கேட்காத விஷயம் அல்ல. |
| | ಅದು ಕೆಲಸಕ್ಕೆ ಬಾರದ ಪೆನ್ನು. | அது வேலைக்கு ஆகாத பேனா. |
| | ಅದು ವಾಸಕ್ಕೆ ಯೋಗ್ಯವಲ್ಲದ ಮನೆ. | அது வசிக்கத் தகுதியில்லாத வீடு. |
| | ಅವರು ಅದಕ್ಕೆಲ್ಲ ಹಿಂಜರಿಯದ ವ್ಯಕ್ತಿ ಅಲ್ಲ. | அவர் அதற்கெல்லாம் பின்வாங்கும் ஆளல்ல. |



| | | |
|---|---|---|
| 2.11 | ಹೇಳದ ಹೊರತು ಇವನು ಏನೂ ಮಾಡೋದಿಲ್ಲ. | சொன்னால் ஒழிய இவன் எதையும் செய்யமாட்டான். |
| | ನೀವು ಕರೆಯದ ಹೊರತು ಅವನು ಬರುವುದಿಲ್ಲ. | நீங்கள் அழைத்தால் ஒழிய அவள் வரமாட்டாள். |
| | ನೀವು ಓದದ ಹೊರತು ಪರೀಕ್ಷೆಯಲ್ಲಿ ಪಾಸಾಗುವುದಿಲ್ಲ. | நீங்கள் படித்தால் ஒழியத் தேர்வில் தேர்ச்சி பெறமாட்டீர்கள். |
| 2.12 | ಬಟ್ಟೆ ಒಗೆಯುವವನು ಅಗಸ. | துணி துவைக்கிறவன் வண்ணான். |
| | ಪಾಠ ಮಾಡುವವನು ಅಧ್ಯಾಪಕ. | பாடம் நடத்துகிறவன் ஆசிரியன். |
| | ಮರ ಕೆಲಸ ಮಾಡುವವನು ಬಡಗಿ. | மர வேலை செய்கிறவன் ஆசாரி. |
| | ಚಪ್ಪಲಿ ಹೊಲಿಯುವವನು ಚಮ್ಮಾರ. | செருப்புத் தைக்கிறவன் சக்கிலி. |
| | ಬಟ್ಟೆ ಹೊಲಿಯುವವನು ದರ್ಜಿ. | துணி தைக்கிறவன் தையல்காரன். |
| | ಮಡಕೆ ಮಾಡುವವನು ಕುಂಬಾರ. | பானை செய்கிறவன் குயவன். |
| | ಪದ್ಯ ಬರೆಯುವವನು ಕವಿ. | கவிதை எழுதுகிறவன் கவிஞன். |
| 2.13 | ನಡೆಯುವವನು ಎಡವುತ್ತಾನೆ. | நடக்கிறவன் தடுமாறுகிறான். |
| | ಕನ್ನಡ ಮಾತನಾಡುವವರ ಸ್ನೇಹ ಬಿಡಬೇಡಿ. | கன்னடம் பேசுகிறவர்களின் நட்பை விடாதே. |
| | ನಮ್ಮ ಹಾಸ್ಟೆಲಿನಲ್ಲಿ ಕಸಗುಡಿಸುವವಳು ಇದ್ದಾಳೆ. | எங்கள் விடுதியில் குப்பை கூட்டுகிறவள் இருக்கிறாள். |
| 2.14 | ನಿಮ್ಮಲ್ಲಿ ಕನ್ನಡ ಕಲಿಯುತ್ತಾ ಇರುವವರು ಎಷ್ಟು ಜನ? | உங்களில் கன்னடம் கற்றுக் கொண்டிருக்கிறவர்கள் எத்தனை பேர்? |
| | ನಮ್ಮ ಮನೆಯಲ್ಲಿ ಸಂಗೀತ ಕಲಿಯುತ್ತಾ ಇರುವವಳು ಕಮಲ. | எங்கள் வீட்டில் சங்கீதம் கற்றுக்கொண்டிருப்பவள் கமலா. |
| | ಜೋರಾಗಿ ಓದುತ್ತಾ ಇರುವವನು ನನ್ನ ಮಗ. | சத்தமாகப் படித்துக்கொண்டிருப்பவன் என் மகன். |
| 2.15 | ನಿಮಗೆ ಮನೆ ಬಾಡಿಗೆ ಕೊಟ್ಟವರು ಯಾರು? | உங்களுக்கு வீட்டு வாடகை கொடுத்தவர் யார்? |
| | ನನಗೆ ಪತ್ರ ಬರೆದವನು ಆ ಹುಡುಗ. | எனக்குக் கடிதம் எழுதியவன் அந்தப் பையன். |
| | ನಿನ್ನೆ ಸಂಜೆ ಹಾಡು ಹಾಡಿದವಳು ನನ್ನ ತಂಗಿ. | நேற்று மாலை பாட்டுப் பாடியவள் என் தங்கை. |

| | |
|---|---|
| 2.16 ನನ್ನ ಮಾತಿಗೆ ನಗ್ತಾ ಇದ್ದವನು ನನ್ನ ರೂಮ್‌ಮೇಟ್. | என் பேச்சுக்குச் சிரித்துக் கொண்டிருந்தவன் என் ரூம்மேட். |
| ನಮಗೆ ಓದೋಕೆ ಹಣ ಕೊಡ್ತಾ ಇದ್ದವರು ನಮ್ಮ ಚಿಕ್ಕಪ್ಪ. | நாங்கள் படிப்பதற்குப் பணம் கொடுத்துக்கொண்டிருந்தவர் எங்கள் சித்தப்பா. |

## 3. குறிப்புகள்

### 3.1 பெயரெச்சம்:

கன்னடத்தில் பெயரெச்ச உருபு 'அ'. பெயரெச்சத்தின் வடிவம் அது சுட்டும் காலத்தைப் பொருத்து அமையும். பெயரெச்சம் என்றதும் அது பெயர்ச்சொல் என்று கருதக்கூடாது. பெயரெச்சங்களும் வினைச்சொற்களே.

### 3.1.1 இறந்தகாலம் சுட்டாத பெயரெச்சம்:

இதன் வடிவம்

மூல வினைச்சொல் + பெயரெச்ச உருபு

என அமையும்.

ஹோகு$^3$ + அ = ஹோகு$^3$வ
ப$^3$ரெ + அ = ப$^3$ரெயுவ
குடி$^3$ + அ = குடி$^3$யுவ.

| | |
|---|---|
| அவனு ஹோகு$^3$வ ஸ்தள கெம்மண்கு$^3$ண்டி$^3$. | அவன் போகும் இடம் கெம்மண்குண்டி. |
| அவளு ப$^3$ரெயுவ கதெ$^2$ ஸண்ணது$^3$. | அவள் எழுதும் கதை சிறியது. |
| அவரு குடி$^3$யுவ காபி$^2$ ப்$^3$ரு காபி$^2$. | அவர்கள் குடிக்கும் காபி ப்ரு காபி. |

இகர, உகர, எகர ஈற்று வினைச்சொற்களுடன் பெயரெச்ச உருபு சேரும்போது, இடையில் 'வ்', அல்லது 'யுவ்' தோன்றுவதைக் கவனிக்க.

### 3.1.2 இறந்தகாலம் சுட்டும் பெயரெச்சம்:

இதன் வடிவத்தைப் புரிந்துகொள்ள வினையடி என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். 'தின்தெ$^3$' என்பது இறந்தகாலம் சுட்டும் வினைச்சொல். 'தின்த்$^3$' என்பது 'தின்தெ$^3$' என்பதன் வினையடி. போலவே, 'கலித்', 'கொட்', 'நக்' என்பவை முறையே 'கலித', 'கொட்ட', 'நக்க' என்பவற்றின் வினையடிகள். இதைப் போலவே வினையெச்ச அடி, தொடர்வினையடி ஆகியவற்றையும் புரிந்துகொள்ளலாம்.

இப்பெயரெச்சத்தின் வடிவம்

இறந்தகால வினையடி + அ

என அமையும்.

தின்த்$^3$ + அ = தின்த$^3$
கலித் + அ = கலித



கொட் + அ = கொட்ட
நக் + அ = நக்க
கொண்ட்$^3$ + அ = கொண்ட$^3$
நோடி$^3$த்$^3$ + அ = நோடி$^3$த$^3$.

| | |
|---|---|
| நாவு தின்த$^3$ ஜாமூனு சென்னாகி$^3$த்து. | நாங்கள் தின்ற ஜாமூன் நன்றாயிருந்தது. |
| நானு ஹைஸ்கூலினல்லி கலித இங்கிலீஷ் மரெது ஹோதெ$^3$. | நான் உயர்நிலைப்பள்ளியில் கற்ற ஆங்கிலத்ததை மறந்துபோனேன். |
| நீனு கொட்ட ஹண க$^2$ர்சாயிது. | நீ கொடுத்த பணம் செலவாயிற்று. |
| நன்னன்னு நோடி$^3$ நக்க ஹுடு$^3$க$^3$ இவனு. | என்னைப் பார்த்துச் சிரித்த பையன் இவன். |
| நீவு ஹோஸத$^3$ாகி$^3$ கொண்ட$^3$ காரு ஹேகி$^3$தெ$^3$. | நீங்கள் புதிதாக வாங்கிய கார் எப்படியிருக்கிறது? |
| நாவு நோடி$^3$த$^3$ ஸினிமா சென்னாகித்து. | நாங்கள் பார்த்த சினிமா நன்றாயிருந்தது. |

### 3.1.3 முழுநிறை வினைப் பெயரெச்சம்:

#### 3.1.3.1 நிகழ்கால முழுநிறை வினை:

இதன் வடிவம்

வினையெச்ச அடி + இரு + அ

என அமையும்.

நோடி$^3$ + இரு + அ = நோடி$^3$ருவ.
ப$^3$ன்து$^3$ + இரு + அ = ப$^3$ன்தி$^3$ருவ.

| | |
|---|---|
| நிம்ம மக$^3$ளிகெ$^3$ நோடி$^3$ருவ ஹுடு$^3$க$^3$னிகெ$^3$ ஏனு கெலஸ. | உங்கள் மகளுக்குப் பார்த்திருக்கும் பையனுக்கு என்ன வேலை. |
| அஸ்ஸாமினிந்த$^3$ ப$^3$ந்தி$^3$ருவ ஐ.ஏ.ஏஸ். அதி$^4$காரி இவரே. | அஸ்ஸாமிலிருந்து வந்துள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரி இவர்தான். |

#### 3.1.3.2 இறந்தகால முழுநிறை வினை

இதன் வடிவம்

வினையெச்ச அடி + இத்$^3$ + அ

என அமையும்.

கொட்டு + இத்$^3$ + அ = கொட்டித்$^3$த$^3$
ப$^3$ன்து$^3$ + இத்$^3$ + அ = ப$^3$ன்தி$^3$த்$^3$த$^3$

| | |
|---|---|
| நானு நினகெ$^3$ கொட்டித்$^3$த$^3$ பென்னு எல்லி? | நான் உனக்குக் கொடுத்திருந்த பேனா எங்கே? |
| ருஷ்யஷிருங்க$^3$ மைஸூரிகெ$^3$ ப$^3$ந்தி$^3$த்$^3$த$^3$ வர்ஷ$^2$ மளெ சென்னாகி$^3$ ப$^3$ந்தி$^3$த்து. | ரிஷ்யசிருங்கன் மைசூருக்கு வந்திருந்த ஆண்டு மழை நன்றாக வந்திருந்தது. |

3.1.4 தொடர்வினைப் பெயரெச்சம்:

3.1.4.1 நிகழ்காலத் தொடர்வினை:

இதன் வடிவம்

தொடர்வினையடி + இரு + அ

என அமையும்.

மாடு$^3$த்தா + இரு + அ = மாடு$^3$த்தா இருவ.

ஓது$^3$த்தா + இரு + அ = ஓது$^3$த்தா இருவ.

| | |
|---|---|
| அல்லி கெலஸ மாடு$^3$த்தா இருவ ஹுடு$^3$க$^3$ நன்ன தம்ம. | அங்கே வேலை செய்து கொண்டிருக்கும் பையன் என் தம்பி. |
| அவனு ஓது$^3$த்தா இருவ புஸ்தக ஸம்ஸ்கார. | அவன் படித்துக்கொண்டிருக்கும் புத்தகம் சம்ஸ்கார. |

3.1.4.2 இறந்தகாலத் தொடர்வினை:

இதன் வடிவம்

தொடர்வினையடி + இத்$^3$ + அ

என அமையும்.

ஒகு$^3$த்தா + இத்$^3$ + அ = ஒகு$^3$த்தா இத்$^3$த$^3$.

ப$^3$ரெயுத்தா + இத்$^3$ + அ = ப$^3$ரெயுத்தா இத்$^3$த$^3$.

| | |
|---|---|
| நானு ஹோகு$^3$த்தா இத்$^3$த$^3$ ப$^3$ஸ் நதி$^3$கெ$^3$ பி$^3$த்து. | நான் போய்க்கொண்டிருந்த பஸ் ஆற்றில் விழுந்தது. |
| அவனு ப$^3$ரெயுத்தா இத்$^3$த$^3$ காத$^3$ம்ப$^3$ரி முகி$^3$தி$^3$ல்லா. | அவன் எழுதிக்கொண்டிருந்த நாவல் முடியவில்லை. |

பெயரெச்சம் எப்போதும் பெயர்ச்சொல்லைத் தொடர்ந்தே அமைவதைக் கவனிக்க.

3.2 எதிர்மறைப் பெயரெச்சம்:

எதிர்மறைப் பெயரெச்சத்தைச் சுட்டும் உருபு 'அத$^3$'. மூல வினைச்சொல்லுடன் 'அத$^3$'வைச் சேர்த்து எதிர்மறைப் பெயரெச்சம் பெறப்படுகிறது. முழுநிறை வினை தவிர மற்ற எல்லா வினைகளுக்கும் இவ்வடிவம் பொருந்தும்.



நோடு$^3$ + அத$^3$ = நோட$^3$த$^3$.

| | |
|---|---|
| நானு நோட$^3$த$^3$ ஸினிமா அதொ$^3$ன்தெ$^3$. | நான் பார்க்காத சினிமா அதொன்றுதான். |

இறந்தகால முழுநிறைப் பெயரெச்சத்தின் எதிர்மறை வடிவம்

எதிர்மறை வினையெச்ச அடி + இத்$^3$ + அ

என அமையும்.

மாட$^3$தெ$^3$ + இத்$^3$ + அ = மாட$^3$தெ$^3$ இத்$^3$த$^3$.

ஹேளதெ$^3$ + இத்$^3$ + அ = ஹேளதெ$^3$ இத்$^3$த$^3$.

| | |
|---|---|
| அவனு மாட$^3$தெ$^3$ இத்$^3$த$^3$ கெலஸ நானு மாடி$^3$தெ$^3$. | அவன் செய்யாதிருந்த வேலையை நான் செய்தேன். |
| காங்க்$^3$ரெஸ் ஹேளதெ$^3$ இத்$^3$த$^3$ ஸத்தயவன்னு கம்யூனிஷ்$^2$டரு ஹேளித$^3$ரு. | காங்கிரஸ் சொல்லாதிருந்த உண்மையைக் கம்யூனிஸ்ட்டுகள் சொன்னார்கள். |

நிகழ்கால முழுநிறைப் பெயரெச்சத்தின் எதிர்மறை வடிவம்

எதிர்மறை வினையெச்ச அடி + இரு + அ

என அமையும்.

நோட$^3$தெ$^3$ + இரு + அ = நோட$^3$தெ$^3$ இருவ.

கொட$^3$தெ$^3$ + இரு + அ = கொட$^3$தெ$^3$ இருவ.

| | |
|---|---|
| அத்$^4$யாபகரு நோட$^3$தெ$^3$ இருவ புஸ்தகவன்னு வித்$^3$யார்த்தி$^2$க$^3$ளு நோட$^3$பா$^3$ரது$^3$. | ஆசிரியர் பார்க்கமலே இருக்கும் புத்தகத்தை மாணவர்கள் பார்க்கக்கூடாது. |
| அவரு கொட$^3$தே$^3$ இருவ புஸ்தகவன்னு நானு நிமகெ$^3$ ஹேகெ$^3$ கொட$^3$லி? | அவர் கொடுக்காமலே இருக்கிற புத்தகத்தை நான் உங்களுக்கு எப்படிக் கொடுக்க? |

3.3. வினையாலணையும் பெயர்கள்:

பெயரெச்சங்களுடன் உயர்திணைப் படர்க்கை மாற்றுப் பெயர்ச்சொற்களைச் சேர்த்து வினையாலணையும் பெயர்கள் பெறப்படுகின்றன. இவை பெயர்ச்சொற்கள் என்றாலும் இவை சார்ந்துள்ள வினைச்சொற்கள் காலம் காட்டுவதால், வினையாலணையும் பெயர்கள் கால அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன.

3.3.1 இறந்தகாலம் சுட்டாத வினையாலணையும் பெயர்:

ப$^3$ருவ + அவனு = ப$^3$ருவவனு

தருவ + அவளு = தருவவளு

கொடு$^3$வ + அவரு = கொடு$^3$வவரு.

| | |
|---|---|
| ஈவத்து நம்ம மனெகெ$^3$ ப$^3$ருவவனு நன்ன ஸினேஹித. | இன்று எங்கள் வீட்டுக்கு வருகிறவன் என் சினேகிதன். |
| நனெகெ$^3$ ஹப்$^3$ப$^3$க்கெ ஷ$^2$ர்ட் தருவவளு நன்ன அக்க. | எனக்குப் பண்டிகைக்குச் சட்டை கொண்டுவருகிறவள் என் அக்கா. |
| ஸமாரம்ப$^4$த$^3$ல்லி ஸர்டிபி$^2$கேட் கொடு$^3$வவரு மந்த்ரிக$^3$ளு. | விழாவில் சான்றிதழ் கொடுப்பவர் மந்திரியவர்கள். |

3.3.1 இறந்தகால வினையாலணையும் பெயர்:

| | |
|---|---|
| க$^3$ாந்தி$^4$யன்னு கொன்த$^3$வனு கோ$^3$ட்$^3$ஸெ. | காந்தியைக் கொன்றவன் கோட்சே. |
| ஹலவாரு ஜனரன்னு கொன்த$^3$வளு பூலன் தே$^3$வி. | ஏராளமான மக்களைக் கொன்றவள் பூலன் தேவி. |
| நிமகெ$^3$ ஈ புஸ்தக கொட்டவரு யாரு? | உங்களுக்கு இந்தப் புத்தகத்தைக் கொடுத்தவர் யார்? |

3.3.3 முழுநிறை வினையாலணையும் பெயர்:

3.3.3.1 நிகழ்கால முழுநிறை வினை:

| | |
|---|---|
| நம்ம மனெயல்லி தாஜ்மஹல் நோடி$^3$ருவவனு நானொப்$^3$ப$^3$னெ. | எங்கள் வீட்டில் தாஜ்மகால் பார்த்திருக்கிறவன் நானொருவனே. |
| ஈ ஸ்கூலினல்லி பாஸாகி$^3$ருவவளு கமல ஒப்$^3$ப$^3$ளெ. | இந்தப் பள்ளியில் தேர்ச்சி பெற்றிருக்கிறவள் கமலா ஒருத்தியே. |
| நிம்மல்லி பட்டத$^3$கல்லு நோடி$^3$த$^3$வரு யாரு? | உங்களில் 'பட்டதகல்' பார்த்தவர் யார்? |

3.3.3.2 இறந்தகால முழுநிறை வினை:

| | |
|---|---|
| ஈ புஸ்தக தன்தி$^3$த்$^3$த$^3$வனு ராஜு. | இந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்திருந்தவன் ராஜு. |
| நனகெ$^3$ காக$^3$த$^3$ ப$^3$ரெதி$^3$த்$^3$த$^3$வளு ஸுத$^4$. | எனக்குக் கடிதம் எழுதியிருந்தவள் சுதா. |
| கேரளதி$^3$ன்த$^3$ ப$^3$ன்தி$^3$த்$^3$த$^3$வரு எல்லி? | கேரளாவிலிருந்து வந்திருந்தவர் எங்கே? |



3.3.4 தொடர் வினையாலணையும் பெயர்:

3.3.4.1 நிகழ்காலத் தொடர் வினையாலணையும் பெயர்:

| | |
|---|---|
| அல்லி ஓது$^3$த்தா இருவவனு ரங்க$^3$. | அங்கே படித்துக்கொண்டிருப்பவன் ரங்கன். |
| ஆ கெலஸ மாடு$^3$த்தா இருவவளு வனஜ. | அந்த வேலையைச் செய்துகொண்டிருப்பவள் வனஜா. |
| அல்லி ஹோகு$^3$தா இருவவரு ஸைனிகரு. | அங்கே போய்க்கொண்டிருப்பவர்கள் போர்வீரர்கள். |

3.3.4.2 இறந்தகாலத் தொடர் வினையாலணையும் பெயர்:

| | |
|---|---|
| நின்னெ நின்ன ஜொதெ ப$^3$ருதா இத்$^3$த$^3$வனு யாரு? | நேற்று உன்னோடு வந்துகொண்டிருந்தவன் யார்? |
| அவன ஜொதெ ஹாடு$^3$த்தா இத்$^3$த$^3$வளு யாரு? | அவனோடு பாடிக்கொண்டிருந்தவள் யார்? |
| த$^3$ாரியல்லி க$^3$லாடெ மாடு$^3$த்தா இத்$^3$த$^3$வரு சளுவளிக$^3$ாரரு. | வழியில் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தவர்கள் போராட்டக்காரர்கள். |

3.4 எதிர்மறைப் பெயரெச்சங்களுடன் உயர்திணைப் படர்க்கை மாற்றுப் பெயர்ச்சொற்களைச் சேர்த்து எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் பெறப்படுகின்றன.

நோட$^3$த$^3$ + அவனு = நோட$^3$த$^3$வனு

நோட$^3$த$^3$ + அவளு = நோட$^3$த$^3$வளு

நோட$^3$த$^3$ + அவரு = நோட$^3$த$^3$வரு

| | |
|---|---|
| நிம்மல்லி 'ஷங்கர் குரு' ஸினிமா நோட$^3$த$^3$வரு யாரு? | உங்களில் 'சங்கர் குரு' சினிமா பார்க்காதவர்கள் யார்? |

**4. பயிற்சிகள்**

4.1 கீழக்கண்ட வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள வினை வகைகளைக் கொண்ட வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

4.1.1 ಅವರು ಬರೆದಿರುವ ಕಥೆ ಚೆನ್ನಾಗಿದೆ. *(இறந்தகால முழுநிறை வினை)*

4.1.2 ಬೇಲೂರು ದೇವಸ್ಥಾನವನ್ನು ಕಟ್ಟಿಸಿದ ರಾಜ ವಿಷ್ಣುವರ್ಧನ. *(நிகழ்கால முழுநிறை வினை)*

4.1.3 ಅವನು ಹೇಳ್ತಾ ಇರುವ ವಿಷಯ ನಿಜ ಅಲ್ಲ. *(இறந்தகால வினை)*

4.1.4 ಆಂಧ್ರಪ್ರದೇಶದಿಂದ ಬಂದಿದ್ದ ವಿದ್ಯಾರ್ಥಿಗಳು ಎಲ್ಲಿದ್ದಾರೆ. *(நிகழ்கால முழுநிறை வினை)*

4.1.5 ನೀವು ನೋಡುವ ಸಿನಿಮಾ ಚೆನ್ನಾಗಿದೆಯಾ? *(இறந்தகால வினை)*

4.1.6 ಹೊರಗಡೆ ಮಾತನಾಡುತ್ತಿರುವವರು ಯಾರು? *(இறந்தகால முழுநிறை வினை)*

4.1.7 ನಮ್ಮ ಮನೆಗೆ ಬಂದವನು ಆ ಹುಡುಗ. *(இறந்தகாலம் சுட்டாத வினை)*

4.1.8 ಆ ಹುಡುಗಿಯನ್ನು ನೋಡುವವರು ಬಹಳ ಜನ. *(இறந்தகால வினை)*

*4.2 கீழ்க்கண்ட வாக்கியங்களை இணைக்க.*

4.2.1 ಅವರು ಪಾಠ ಮಾಡುತ್ತಾರೆ.
ಅವರು ಅಧ್ಯಾಪಕರು.

4.2.2 ಇವನು ಚಪ್ಪಲಿ ಹೊಲಿಯುತ್ತಾನೆ.
ಇವನು ಚಮ್ಮಾರ.

4.2.3 ಅವನು ಕಬ್ಬಿಣದ ಕೆಲಸ ಮಾಡುತ್ತಾನೆ.
ಅವನು ಕಮ್ಮಾರ.

4.2.3 ಅವನು ಬಟ್ಟೆ ಒಗೆಯುವುದಿಲ್ಲ.
ಅವನು ಅಗಸನಲ್ಲ.

4.2.4 ಅವನು ಕವಿತೆ ಬರೆಯುವುದಿಲ್ಲ.
ಅವನು ಕವಿಯಲ್ಲ.

4.2.5 ಅವಳು ಬ್ಯಾಂಕಿನಲ್ಲಿ ಕೆಲಸ ಮಾಡ್ತಾ ಇದಾಳೆ.
ಅವಳು ನಮ್ಮ ಮನೆಯ ಪಕ್ಕದಲ್ಲಿ ಇದಾಳೆ.

4.2.6 ಅವರು ಔಷಧಿ ಕೊಡ್ತಾರೆ.
ಅವರು ವೈದ್ಯರು.

*4.3 கீழ்க்கண்டவற்றில் உள்ள பெயரெச்சங்களை எதிர்மறைகளாக மாற்றுக.*

4.3.1 ನೀವು ಓದಿದ ಪುಸ್ತಕ ಯಾವುದು?

4.3.2 ಅವರು ಮಾಡುವ ಕೆಲಸ ಯಾವುದು?

4.3.3 ಅವನು ಹೇಳುವ ವಿಷಯಗಳು ಅನೇಕ ಇವೆ.

4.3.4 ನನಗೆ ಓದಿದ ಹುಡುಗಿ ಇಷ್ಟ.

*4.4 கீழ்க்கண்டவற்றை இரட்டை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுக*

4.4.1 ಆಡು ಮುಟ್ಟುವ ಸೊಪ್ಪು ಇದೆ.

4.4.2 ಕರ್ನಾಟಕದಲ್ಲಿ ಕನ್ನಡ ಮಾತನಾಡುವವರು ಇದಾರೆ.



4.4.3 ಹಳೆಬೀಡು ದೇವಸ್ಥಾನ ನೋಡುವವರು ಇದಾರೆ.

*4.5.1 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க*

4.5.2 ಹಳೆಬೀಡು, ಬೇಲೂರು ಯಾವ ಜಿಲ್ಲೆಯಲ್ಲಿವೆ?

4.5.3 ಹಳೆಬೀಡಿನಿಂದ ಬೇಲುರಿಗೆ ಎಷ್ಟು ದೂರ?

4.5.4 ಹಳೆಬೀಡು ಮತ್ತು ಬೇಲೂರಿನಲ್ಲಿರುವ ದೇವಸ್ಥಾನಗಳ ಹೆಸರು ಏನು? ಅವುಗಳನ್ನು ಕಟ್ಟಿಸಿದವರು ಯಾರು?

4.5.5 ಜನರು ಯಾರಿಂದ, ಹೇಗೆ ದೇವಸ್ಥಾನಗಳನ್ನು ರಕ್ಷಿಸಿದರು?

4.5.6 ದೇವಸ್ಥಾನಗಳನ್ನು ನಿರ್ಮಿಸಿದ ಶಿಲ್ಪಿಗಳು ಯಾರು?

4.5.7 ಶಾಂತಲಾಗೆ ಇದ್ದ ಬಿರುದು ಏನು?

4.5.8 ಯಾರ ಕಾಲದಲ್ಲಿ ಕರ್ನಾಟಕ ಶಿಲ್ಪಕಲೆಯಲ್ಲಿ ಸುವರ್ಣಯುಗವನ್ನು ಕಂಡಿತ್ತು?

4.5.9 ಹಳೆಬೀಡು ಮತ್ತು ಬೇಲೂರಿಗೆ ಹಿಂದೆ ಇದ್ದ ಹೆಸರೇನು?

4.5.10 ದೇವಸ್ಥಾನ ಕಟ್ಟುವುದಕ್ಕೆ ಎಂಥ ಕಲ್ಲು ಬಳಸಿದ್ದಾರೆ?

4.5.11 ಶಿಲ್ಪಿಗಳು ಬಿಟ್ಟು ಹೋಗಿರುವ ಕಾಣಿಕೆ ಏನು?

4.5.12 ವಾಸ್ತು ಶಿಲ್ಪದಲ್ಲಿ ಕರ್ನಾಟಕ ಶೈಲಿ ಎಂದರೇನು?

## 5. சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| ಅನುಭವ | அனுபவம் | ಅಪರೂಪ | அபூர்வம் |
| ಅಪಾರ | அபாரம் | ಆಕ್ರಮಣ | படையெடுப்பு |
| ಆನಂದಿಸು | ஆனந்தப்படு | ಕಟ್ಟು | கட்டு |
| ಕಾಣಿಕೆ | கொடை, காணிக்கை | | |
| ಕುಸುರಿ ಕೆಲಸ | அலங்கார வேலைப்பாடு | | |
| ಕೇಂದ್ರ | மையம் | ಜಗತ್ಪ್ರಸಿದ್ಧ | உலகப் புகழ்பெற்ற |
| ಜಗಲಿ | திண்ணை | ದಂಡನಾಯಕ | தளபதி |
| ದಾಳಿಮಾಡು | தாக்கு | ದೃಶ್ಯ | காட்சி |
| ದೇವಸ್ಥಾನ | கோவில் | ನತದೃಷ್ಟ | துரதிருஷ்டசாலி |
| ನಯ | நயம் | ನಕ್ಷತ್ರಾಕಾರ | நட்சத்திர வடிவ |
| ನಾಟ್ಯಕಲೆ | நாட்டியக்கலை | ನಿರ್ಣಯಿಸು | நிர்ணயி |
| ಪಡೆ | பெறு | ಬಸವ | நந்தி |

| | | | |
|---|---|---|---|
| ಬಳಪದ ಕಲ್ಲು | மாவுக்கல் | ಬಿರುದು | பட்டம், விருது |
| ಬೇಸರ | சலிப்பு | ಮರಳು | மணல் |
| ಮೆರೆ | பறைசாற்று | ರಾಜ್ಯಭಾರ ಮಾಡು | ஆட்சிபுரி |
| ವಾಸ್ತುಶಿಲ್ಪ | கட்டடக்கலை | ವಿವಿಧ ಭಂಗಿ | வெவ்வேறு நிலை |
| ವೃತ್ತಾಕಾರ | வட்டவடிவ | ಸಂಗಮ | சங்கமம் |
| ಸಲ್ಲಿಸು | செலுத்து | ಸುಮಾರು | சுமார், ஏறத்தாள |
| ಸುವರ್ಣಯುಗ | பொற்காலம் | ಸೌಕರ್ಯ | சௌகரியம் |
| ಶಿಲ್ಪಿ | சிற்பி | ಶಿಲ್ಪಕಲೆ | சிற்பக்கலை |
| ಶಿಲಾಬಾಲಿಕೆ | பெண்சிலை | ಶ್ರೇಷ್ಠ | மேலான |
| ಶೈಲಿ | பாணி | ಹಾಳಾಗು | பாழாகு. |

**5. துணைச் சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| ಅಗಸ | வண்ணான் |
| ಎಡವು | தடுக்கிவிழு |
| ಕಸ ಗುಡಿಸು | குப்பை கூட்டு |
| ಕುಂಬಾರ | குயவன் |
| ಚಮ್ಮಾರ | சக்கிலி |
| ದರ್ಜಿ | தையல்காரன் |
| ನಡೆ | நட |
| ಬಡಗಿ | (மர) ஆசாரி |
| ಮಡಿಕೆ | பானை |
| ಮಂತ್ರಿ ಮಂಡಲ | அமைச்சரவை |
| ಯೋಗ್ಯ | தகுதி |
| ಸಾಹಿತ್ಯ ಪ್ರಕಾರ | இலக்கிய வடிவம் |
| ಹಿಂಜರಿ | பின்வாங்கு. |
| ಆಡು | ஆடு. |



## பாடம் 20

**1. உரையாடல்**

| | | |
|---|---|---|
| ಕಮಲ: | ಈಗ ಹೋದರೆ ಬೆಂಗಳೂರಿಗೆ ಬಸ್ಸು ಸಿಗುತ್ತಾ? | இப்போது போனால் பெங்களூருக்குப் பஸ் கிடைக்குமா? |
| ಶೀಲ: | ತಕ್ಷಣ ಹೋದರೆ ಸಿಗುತ್ತೆ. | உடனடியாகப் போனால் கிடைக்கும். |
| ಕಮಲ: | ತಕ್ಷಣ ಹೊಗದೆ ಇದ್ದರೆ ಸಿಗಲ್ಲವಾ? | உடனடியாகப் போகாவிட்டால் கிடைக்காதா? |
| ಶೀಲ: | ಇಲ್ಲ, ತಕ್ಷಣ ಹೋಗದೆ ಇದ್ದರೆ ಸಿಗಲ್ಲ. | இல்லை, உடனடியாகப் போகாவிட்டால் கிடைக்காது. |
| ಕಮಲ: | ಮುಂದಿನ ಬಸ್ಸು ಎಷ್ಟು ಗಂಟೆಗೆ ಇದೆ? | அடுத்த பஸ் எத்தனை மணிக்கு இருக்கிறது? |
| ಶೀಲ: | ಮುಂದಿನ ಬಸ್ಸು ಹನ್ನೆರಡು ಗಂಟೆಗೆ ಇದೆ. | அடுத்த பஸ் பன்னிரண்டு மணிக்கு இருக்கிறது. |
| ಕಮಲ: | ಅದಕ್ಕೆ ಹೋದರೆ ಲೇಟಾಗುತ್ತೆ. | அதில் போனால் தாமதமாகும். |
| ಶೀಲ: | ತುಂಬಾ ಅರ್ಜೆಂಟ್ ಕೆಲಸ ಇದೆಯಾ? | மிகவும் அவசரமான வேலை இருக்கிறதா? |
| ಕಮಲ: | ಹೌದು. ನನ್ನ ಸ್ನೇಹಿತೆ ಕಾಯ್ತಾ ಇರ್ತಾಳೆ. | ஆமாம். என் சினேகிதி காத்துக் கொண்டிருப்பாள். |
| ಶೀಲ: | ಈ ಬಸ್ಸು ಸಿಗದೆ ಇದ್ದರೆ ಟ್ರೈನಿಗೆ ಹೋಗಿ. | இந்தப் பஸ் கிடைக்காவிட்டால் ரயிலில் செல்லுங்கள். |
| ಕಮಲ: | ಟ್ರೈನು ಎಷ್ಟು ಗಂಟೆಗೆ ಇದೆ? | ரயில் எத்தனை மணிக்கு இருக்கிறது? |
| ಶೀಲ: | ಹನ್ನೊಂದು ಗಂಟೆಗೆ ಇದೆ. | பதினோரு மணிக்கு இருக்கிறது. |
| ಕಮಲ: | ತುಂಬಾ ಲೇಟಾಗುತ್ತೆ. ನಾನು ಬೇಗ ಹೋಗದೆ ಇದ್ದರೆ ನನ್ನ ಸ್ನೇಹಿತೆ ಸಿಗಲ್ಲ. | மிகவும் தாமதமாகும். நான் சீக்கிரம் போகாவிட்டால் என் சினேகிதி கிடைக்கமாட்டாள். |
| ಶೀಲ: | ಬೆಂಗಳೂರಿಗೆ ಹೋದರೆ ಇವತ್ತೇ ವಾಪಸ್ ಬರ್ತೀರಾ? | பெங்களூருக்குப் போனால் இன்றே திரும்பி வருவீர்களா? |
| ಕಮಲ: | ಕೆಲಸ ಆದರೆ ಬರ್ತೀನಿ. ಆಗದೆ ಇದ್ದರೆ ನಾಳೆ ಸಂಜೆ ಬರ್ತೀನಿ. | வேலை முடிந்தால் வருவேன். முடியாவிட்டால் நாளை மாலை வருவேன். |
| ಶೀಲ: | ನಾಳೆ ಬರ್ತಾ ಇದ್ದರೆ ನನಗೊಂದು ಸಹಾಯ ಮಾಡ್ತೀರಾ? | நாளை வருவதாயிருந்தால் எனக்கொரு உதவி செய்வீர்களா? |
| ಕಮಲ: | ಏನು? | என்ன? |

| | | |
|---|---|---|
| ಶೀಲ: | ನನಗೊಂದು ಪುಸ್ತಕ ಬೇಕು? | எனக்கொரு புத்தகம் வேண்டும். |
| ಕಮಲ: | ಯಾವುದು? | எது? |
| ಶೀಲ: | ರಾಮಾಯಣದರ್ಶನಂ. | ராமாயணதர்சனம். |
| ಕಮಲ: | ಎಲ್ಲಿ ಸಿಗುತ್ತೆ? | எங்கே கிடைக்கும்? |
| ಶೀಲ: | ಕನ್ನಡ ಪುಸ್ತಕ ಪ್ರಾಧಿಕಾರಕ್ಕೆ ಹೋದರೆ ಸಿಗುತ್ತೆ. | கன்னடப் புத்தக ஆணையத்திற்குப் போனால் கிடைக்கும். |
| ಕಮಲ: | ಅಲ್ಲಿ ಸಿಕ್ಕಿದರೆ ತರ್ತೀನಿ. | அங்கே கிடைத்தால் கொண்டுவருகிறேன். |
| | ಸಿಗದೆ ಇದ್ದರೆ ಏನು ಮಾಡಲಿ? | கிடைக்காவிட்டால் என்ன செய்யட்டும். |
| ಶೀಲ: | ಸಿಗದೆ ಇದ್ದರೆ ಬೇಡ. | கிடைக்காவிட்டால் வேண்டாம். |

## 2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | ಅವನು ಬಸ್ ಸಿಕ್ಕಿದರೆ ಬೃಂದಾವನಕ್ಕೆ ಬರ್ತಾನೆ. | பஸ் கிடைத்தால் அவன் பிருந்தாவனத்துக்கு வருவான். |
| | ನೀನು ದುಡ್ಡು ಕೊಟ್ಟರೆ ನಾನು ಸಿನಿಮಾಕ್ಕೆ ಹೋಗ್ತೀನಿ. | நீ பணம் கொடுத்தால் நான் சினிமாவுக்குப் போவேன். |
| | ನಾನು ಫಸ್ಟ್ ಕ್ಲಾಸಿನಲ್ಲಿ ಪಾಸಾದರೆ ಎಂ.ಎಸ್.ಸಿ.ಗೆ ಸೇರ್ತೀನಿ. | நான் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றால் எம்.எஸ்.ஸியில் சேருவேன். |
| 2.2 | ರಾಜು ಬಂದಿದ್ದರೆ ಕರಿ. | ராஜு வந்திருந்தால் கூப்பிடு. |
| | ನೀವು ಕನ್ನಡ ಕಲಿತಿದ್ದರೆ ಕನ್ನಡದಲ್ಲೇ ಮಾತಾಡಿ. | நீங்கள் கன்னடம் கற்றிருந்தால் கன்னடத்திலேயே பேசுங்கள். |
| | ನೀವು ಪಾಠ ಬರೆದಿದ್ದರೆ ಹೋಗಬಹುದು. | நீங்கள் பாடம் எழுதியிருந்தால் போகலாம். |
| 2.3 | ನೀವು ಬೆಂಗಳೂರಿಗೆ ಹೋಗ್ತಾ ಇದ್ದರೆ ಹೇಳಿ. | நீங்கள் பெங்களூருக்குப் போவதாயிருந்தால் சொல்லுங்கள். |
| | ನೀನು ಕಾಗದ ಬರೀತಾ ಕೂತರೆ ಲೇಟಾಗುತ್ತೆ. | நீ கடிதம் எழுதிக்கொண்டு உட்கார்ந்தால் தாமதமாகும். |
| | ಅವರು ಪಾಠ ಮಾಡ್ತಾ ಇದ್ದರೆ ನಿದ್ರೆ ಬರುತ್ತೆ. | அவர் பாடம் நடத்திக் கொண்டிருந்தால் தூக்கம் வருகிறது. |
| 2.4 | ಹಾಲು ಕುಡಿಸಿದರೆ ಮಗು ಅಳಲ್ಲ. | பாலூட்டினால் குழந்தை அழாது. |



| | | |
|---|---|---|
| | ಈಗ ಇರುವ ಮನೆ ಬಿಟ್ಟರೆ ಅಂಥ ಮನೆ ಸಿಕ್ಕಲ್ಲ. | இப்போதிருக்கிற வீட்டை விட்டால் அப்படிப்பட்ட வீடு கிடைக்காது. |
| | ನಾವೇ ಅಡಿಗೆ ಮಾಡಿಕೊಂಡರೆ ಹೆಚ್ಚು ಖರ್ಚು ಬರಲ್ಲ. | நாமே சமைத்துக்கொண்டால் அதிகச் செலவாகாது. |
| 2.5 | ಮನೆಯಿದ ಕಾಗದ ಬಂದರೆ ಊರಿಗೆ ಹೋಗ್ತೀಯಾ? | வீட்டிலிருந்து கடிதம் வந்தால் ஊருக்குப் போவாயா? |
| | ಬೆಳಿಗ್ಗೆ ಹೊರಟರೆ ನಿಮ್ಮ ಊರಿಗೆ ಎಷ್ಟು ಗಂಟೆಗೆ ಸೇರ್ತೀರಿ? | காலையில் புறப்பட்டால் உங்கள் ஊருக்கு எத்தனை மணிக்குப் போய்ச் சேர்வீர்கள்? |
| | ನಾನು ಬೆಂಗಳೂರಿಗೆ ಬಂದರೆ ನಿಮ್ಮನ್ನು ಎಲ್ಲಿ ನೋಡಲಿ? | நான் பெங்களூருக்கு வந்தால் உங்களை எங்கே பார்க்கட்டும்? |
| 2.6 | ನಾನು ಸಾಯ್ತೀನಿ ಅಂದರೆ ಬೇಡ ಅಂತಾರೆ. | நான் சாகிறேன் என்றால் வேண்டாமென்கிறார்கள். |
| | ನಿನಗೆ ಕೆಲಸ ಸಿಗಲಿಲ್ಲ ಅಂದರೆ ಏನ್ಮಾಡ್ತೀಯ? | உனக்கு வேலை கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வாய்? |
| 2.7 | ನಾನು ಅಲ್ಲಿಗೆ ಹೋಗದೆ ಇದ್ದರೆ ಚೆನ್ನಾಗಿರಲ್ಲ. | நான் அங்கே போகாமலிருந்தால் நன்றாக இருக்காது. |
| | ನೀವು ಬರದೆ ಇದ್ದರೆ ಅವರೂ ಬರಲ್ಲ. | நீங்கள் வராதிருந்தால் அவரும் வரமாட்டார். |
| | ಟಿಕೆಟ್ ಸಿಗದೆ ಇದ್ದರೆ ನಾವು ಸಿನಿಮಾಕ್ಕೆ ಹೋಗಲ್ಲ. | டிக்கட் கிடைக்காவிட்டால் நாங்கள் சினிமாவுக்குப் போகமாட்டோம். |
| 2.8 | ನಿಮಗೆ ತೊಂದರೆ ಆಗದೆ ಇದ್ದಲ್ಲಿ ದಯವಿಟ್ಟು ಬನ್ನಿ. | உங்களுக்குத் தொல்லை இல்லையென்றால் தயவுசெய்து வாருங்கள். |
| | ಮನೆಯಲ್ಲಿ ಲೇಟಾಗದೆ ಇದ್ದರೆ ಸಿಟಿಗೆ ಹೋಗಬಹುದು. | வீட்டில் தாமதமாகாவிட்டால் நகரத்துக்குப் போகலாம். |
| | ಅವನಿಗೆ ಕೆಲಸ ಸಿಕ್ಕದೆ ಇದ್ದರೆ ವ್ಯಾಪಾರ ಮಾಡಲಿ. | அவனுக்கு வேலை கிடைக்காவிட்டால் வியாபாரம் செய்யட்டும். |
| | ನಮಗೆ ಬಸ್ಸು ಸಿಕ್ಕದೆ ಇದ್ದರೆ ಆಟೋದಲ್ಲಿ ಹೋಗೋಣ. | நமக்குப் பஸ் கிடைக்காவிட்டால் ஆட்டோவில் போகலாம். |
| 2.9 | ನನ್ನ ಸ್ನೇಹಿತರು ಮನೆಗೆ ಬರದೆ ಇದ್ದರೆ ನಾನು ಸಿಟಿಗೆ ಬರ್ತೀನಿ. | என் சினேகிதர்கள் வீட்டுக்கு வராதிருந்தால் நான் நகரத்துக்கு வருகிறேன். |

ಅವರ ಹೆಂಡತಿ ಊರಿಗೆ ಹೋಗದೆ ಇದ್ದರೆ. ಅವರು ನಮ್ಮ ಜೊತೆ ಬರ್ತಾರೆ.
அவர் மனைவி ஊருக்குப் போகாதிருந்தால் அவர் நம்மோடு வருவார்.

ನಾವು ರಾಮನ ಮನೆಗೆ ಬೇಗ ಹೊರಡದಿದ್ದರೆ ಅವನೇ ಇಲ್ಲಿಗೆ ಬರ್ತಾನೆ.
நாங்கள் ராமனின் வீட்டிற்குச் சீக்கிரம் புறப்படாதிருந்தால் அவனே இங்கே வருவான்.

2.10 ಅವನು ಏನೂ ಮಾಡ್ತಾ ಇಲ್ಲದೆ ಇದ್ದರೆ ಮಲಗಿಕೊಳ್ಳೋಕೆ ಹೇಳು.
அவன் எதுவும் செய்துகொண்டிராதிருந்தால் படுத்துக்கொள்ளச் சொல்.

ಸುರೇಶ ಊರಿಗೆ ಹೋಗ್ತಾ ಇಲ್ಲದೆ ಇದ್ದರೆ, ನಾನು ಹೋಗ್ತೀನಿ.
சுரேஷ் ஊருக்குப் போகாதிருந்தால், நான் போவேன்.

## 3. குறிப்புகள்

எளிய நிபந்தனை வடிவங்கள் இப்பாடத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. ‘அரெ’ நிபந்தனையைச் சுட்டும் உருபு. நிபந்தனை உருபு வெவ்வேறு வினைகளுடன் சேர்க்கப்படுகிறது. ‘இரு’வின் நிபந்தனை வடிவம் ‘இத்$^3$த்$^3$ரெ’

3.1 இறந்தகாலம் அல்லாத வினை:

இதன் வடிவம்

இறந்தகால வினையடி + அரெ

என அமையும்.

ப$^3$ந்த$^3$ + அரெ = ப$^3$ந்த$^3$ரெ.

நக்க + அரெ = நக்கரெ.

கமல ப$^3$ந்த$^3$ரெ கரி.
கமலா வந்தால் கூப்பிடு.

நன்ன நோடி$^3$ நக்கரெ நின்ன ஹல்லு முரீதினி.
என்னைப் பார்த்துச் சிரித்தால் உன் பல்லை உடைப்பேன்.

3.2 தொடர்வினை:

இதன் வடிவம்

தொடர் வினையடி + ‘இரு’வின் நிபந்தனை வடிவம்

என அமையும்.

ப$^3$ர்தா + இத்$^3$த்$^3$ரெ = ப$^3$ர்தா இத்$^3$த்$^3$ரெ.

அவனு ப$^3$ர்தா இத்$^3$த்$^3$ரெ கரி.
அவன் வந்துகொண்டிருந்தால் கூப்பிடு.

அவளு நக்தா இத்$^3$த்$^3$ரெ அளு ப$^3$ருத்தெ.
அவள் சிரித்துக்கொண்டிருந்தால் அழுகை வருகிறது.



3.3 முழுநிறைவினை:

இதன் வடிவம்

வினையெச்ச அடி + ‘இரு’வின் நிபந்தனை வடிவம்

என அமையும்.

ப$^3$ந்து + இத்$^3$த்$^3$ரெ = ப$^3$ந்தி$^3$த்$^3$த்$^3$ரெ.

நினகெ$^3$ லாட்டரி ப$^3$ந்தி$^3$த்$^3$ரெ நனகெ$^3$ ஸ்வீட் கொ$^3$டி$^3$ஸ$^{ஓ}$.
உனக்கு லாட்டரி விழுந்திருந்தால் எனக்கு இனிப்பு வாங்கித்தா.

மேலே சொன்ன நிபந்தனை வடிவங்கள் இறந்தகாலம் காட்டாத நிகழ்ச்சிகளைச் சுட்டுகின்றன என்பதைக் கவனிக்க.

3.4 எதிர்மறை வினையெச்சத்துடன் ‘இத்$^3$த்$^3$ரெ’ என்பதைச் சேர்த்து எளிய எதிர்மறை நிபந்தனை வடிவம் பெறப்படுகிறது.

ஓத$^3$தெ$^3$ + இத்$^3$த்$^3$ரெ = ஓத$^3$தெ$^3$ இத்$^3$த்$^3$ரெ.

நீனு சென்னாகி$^3$ ஓத$^3$தெ$^3$ இத்$^3$த்$^3$ரெ பே$^2$லாக்$^3$தியெ.
நீ நன்றாகப் படிக்காதிருந்தால் தோல்வியடைவாய்.

அவரு ப$^3$ரதெ$^3$ இத்$^3$த்$^3$ரெ நானு ஹோக$^3$ல்ல.
அவர் வராதிருந்தால் நான் போகமாட்டேன்.

3.5 ஈறுகெட்ட தொடர்வினையுடன் ‘இல்லதெ$^3$ இத்$^3$த்$^3$ரெ’ அல்லது ‘இரதெ$^3$ இத்$^3$த்$^3$ரெ’ சேர்த்து, எதிர்மறைத் தொடர் நிபந்தனை வடிவம் பெறப்படுகிறது.

அவனு ஓது$^3$த்தா இல்லதெ$^3$ இத்$^3$த்$^3$ரெ ப$^3$ரோகெ ஹேளு.
அவன் படித்துக்கொண்டிராதிருந்தால் வரச் சொல்.

## 4. பயிற்சிகள்

4.1 கீழ்க்கண்டவற்றில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள வினைச்சொற்களின் நிபந்தனை வடிவங்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

4.1.1 ನೀನು ----- ನಾನು ಪುಸ್ತಕ ಕೊಡ್ತೀನಿ (ಬಾ).

4.1.2 ರಾಜು ಔಷಧಿ ---- ಜ್ವರ ಕಡಿಮೆಯಾಗುತ್ತೆ (ಕುಡಿ)

4.1.3 ಊರಿಗೆ ಕಾಗದ ----- ಹಣ ಕಳಿಸ್ತಾರೆ (ಬರೆ).

4.1.4 ಸಿ'ನಿಮಾ ---- ತಲೆನೋವು ಬರುತ್ತೆ (ನೋಡು).

4.1.5 ಹುಡುಗರು ಆಟ ---- ಅಧ್ಯಾಪಕರು ಬಯ್ತಾರೆ (ಆಡು).

4.2 நிபந்தனை வடிவங்களைப் பயன்படுத்திக் கீழ்க்கண்ட வாக்கியங்களை இணைக்க.

4.2.1 ಇವತ್ತು ಮಳೆ ಬರುತ್ತೆ.
ಬಿಸಿಲು ಕಡಿಮೆಯಾಗುತ್ತೆ.

4.2.2 ನಾಯಿ ಬೊಗಳ್ತಾ ಇದೆ.
ಇಲ್ಲಿಗೆ ಕಳ್ಳರು ಬರುವುದಿಲ್ಲ.

4.2.3 ಅವರು ಪುಸ್ತಕ ತಂದಿದ್ದಾರೆ.
ನಾನು ಅವರಿಗೆ ಹಣ ಕೊಡಬೇಕು.

4.2.4 ಮಧ್ಯಾಹ್ನ ಊಟ ಮಾಡ್ತೀನಿ.
ಚೆನ್ನಾಗಿ ನಿದ್ರೆ ಬರುತ್ತೆ.

4.2.5 ಅವರು ದುಡ್ಡು ಕೊಡ್ತಾರೆ.
ನಾನು ಬೆಂಗಳೂರಿಗೆ ಹೋಗ್ತೀನಿ.

*4.3 கீழ்க்கண்டவற்றிலுள்ள நிபந்தனைகளை எதிர்மறை நிபந்தனைகளாக மாற்றுக.*

4.3.1 ಕೆಟ್ಟ ಕೆಲಸ ಮಾಡಿದರೆ ಬಯ್ತಾರೆ.

4.3.2 ನಾನು ಹೋದರೆ ಅವರು ಬರ್ತಾರೆ.

4.3.3 ಭಾಗ್ಯ ಆ ಪುಸ್ತಕ ಓದಿದರೆ ಒಳ್ಳೆಯದು.

4.3.4 ಅಧ್ಯಾಪಕರು ಪ್ರಶ್ನೆ ಕೇಳಿದರೆ ಬೇಜಾರು.

*4.4 கீழ்க்கண்ட வாக்கியங்களை இரட்டை எதிர்மறைகளைக் கொண்டவையாக மாற்றுக.*

4.4.1 ಮಗು ಎದ್ದರೆ ಹಾಲು ಕುಡಿಯುತ್ತೆ.

4.4.2 ನೀವು ಸಿಹಿ ತಿಂಡಿ ಕೊಟ್ಟರೆ ಬರ್ತೀನಿ.

4.4.3 ಅವರು ಬಂದಿದ್ದರೆ ಕರೀತೀನಿ.

4.4.4 ಕಷ್ಟಪಟ್ಟರೆ ಸುಖ ಇದೆ.

4.4.5 ಕೈ ಕೆಸರಾದರೆ ಬಾಯಿ ಮೊಸರಾಗುತ್ತೆ.

*4.5 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க.*

4.5.1 ನಿಮಗೆ ತಲೆನೋವು ಬಂದರೆ ಏನು ಮಾಡ್ತೀರಿ?

4.5.2 ನಿಮಗೆ ಊರಿನಿಂದ ಕಾಗದ ಬರದೆ ಇದ್ದರೆ ಬೇಜಾರಾಗುತ್ತಾ?

4.5.3 ನೀವು ಆಫೀಸಿಗೆ ಲೇಟಾಗಿ ಹೋದರೆ ನಿಮ್ಮ ಆಫೀಸರ್ ಬಯ್ತಾರಾ?

4.5.4 ನಿಮಗೆ ಆಫೀಸಿಗೆ ಹೋಗೋಕೆ ಬಸ್ ಸಿಗದೆ ಇದ್ದರೆ ಏನು ಮಾಡ್ತೀರಿ?

4.5.5 ನಿಮಗೆ ಲಾಟರಿಯಲ್ಲಿ ಒಂದು ಲಕ್ಷ ರೂಪಾಯಿ ಬಂದರೆ ಏನು ಮಾಡ್ತೀರಿ?



## பாடம் 21

### 1. உரையாடல்

| | | |
|---|---|---|
| ಆನಂದ: | ನೀವು ಬೇಗ ಬಂದಿದ್ದರೆ ಎಂಟು ಗಂಟೆಗೆ ರೈಲು ಸಿಗ್ತಾ ಇತ್ತು. | நீங்கள் சீக்கிரம் வந்திருந்தால் எட்டு மணிக்கு ரயில் கிடைத்திருக்கும். |
| ರಾಮು: | ರೈಲು ಹೋಗಿಬಿಡ್ತಾ? | ரயில் போய்விட்டதா? |
| ಆನಂದ: | ಈಗ ತಾನೆ ಹೋಯ್ತು. ಈ ರೈಲಿಗೆ ಹೋಗಿದ್ದರೆ ಹನ್ನೊಂದುಗಂಟೆಗೆ ಬೆಂಗಳೂರು ತಲುಪ್ತಾ ಇದ್ದೆವು. | இப்போதுதான் போயிற்று. இந்த ரயிலில் போயிருந்தால் பதினோரு மணிக்குப் பெங்களூர் சேர்ந்திருப்போம். |
| ರಾಮು: | ಮುಂದಿನ ಟ್ರೈನು ಎಷ್ಟು ಗಂಟೆಗೆ? | அடுத்த டிரெயின் எத்தனை மணிக்கு? |
| ಆನಂದ: | ಹತ್ತೂವರೆ ಗಂಟೆಗೆ. ಅದಕ್ಕೆ ಹೋದರೆ ಒಂದೂವರೆಗೆ ತಲುಪ್ತೀವಿ. ಹೋದರೂ ಉಪಯೋಗ ಇಲ್ಲ. | பத்தரை மணிக்கு. அதில் போனால் ஒன்றரை மணிக்குச் சேர்வோம். போனாலும் பயனில்லை. |
| ರಾಮು: | ಹೌದು. ಇದಕ್ಕೆ ಹೋಗಿದ್ದರೆ ಹನ್ನೊಂದು ಗಂಟೆಗೆ ವಿಧಾನಸೌಧಕ್ಕೆ ಹೋಗ್ತಾ ಇದ್ದೆವು. | ஆமாம். இதில் போயிருந்தால் பதினொரு மணிக்கு விதானசௌதாவுக்குப் போயிருப்போம். |
| ಆನಂದ: | ಹನ್ನೆರಡುಗಂಟೆಗೆ ವಿದ್ಯಾ ಮಂತ್ರಿಗಳು ಸಿಕ್ತಾ ಇದ್ದರು. | பன்னிரண்டு மணிக்குக் கல்வி அமைச்சர் கிடைத்திருப்பார். |
| ರಾಮು: | ಅವರು ಸಿಕ್ಕಿದ್ದರೆ ಅವರ ಜೊತೆ ವಿವರವಾಗಿ ಮಾತಾಡಬಹುದಿತ್ತು. | அவர் கிடைத்திருந்தால் அவரோடு விரிவாகப் பேசியிருக்கலாம். |
| ಆನಂದ: | ಅವರ ಜೊತೆ ವಿವರವಾಗಿ ಮಾತಾಡಿದ್ದರೆ ಅವರು ನಮ್ಮ ಸಮಾರಂಭಕ್ಕೆ ಬರೋಕೆ ಒಪ್ತಾ ಇದ್ದರು. | அவரோடு விரிவாகப் பேசியிருந்தால் அவர் நம் விழாவுக்கு வர ஒப்புக்கொண்டிருப்பார். |
| ರಾಮು: | ಅವರು ಒಪ್ಪಿದ್ದರೆ ಬೇರೆ ಯಾರನ್ನಾದರೂ ಅಧ್ಯಕ್ಷತೆಗೆ ಕೇಳಬಹುದಿತ್ತು. ಒಪ್ಪದೆ ಇದ್ದಿದ್ದರೆ ಬೇರೆ ಮಂತ್ರಿಗಳನ್ನ ನೋಡಬಹುದಿತ್ತು. | அவர் ஒப்புக்கொண்டிருந்தால் அவரையே தலைமைவகிக்கக் கேட்டிருக்கலாம். அவர் ஒப்புக் கொள்ளாமல் இருந்திருந்தால் வேறு அமைச்சர்களைப் பார்த்திருக்கலாம். |
| ಆನಂದ: | ಆ ಮೇಲೆ ಅಲ್ಲಿಂದ ರವಿಯ ಮನೆಗೆ ಹೋಗಬಹುದಿತ್ತು. ರವಿಗೆ ಕಾಗದಾನೂ ಬರೆದಿದ್ದೀವಿ. | அதன் பிறகு அங்கிருந்து ரவியின் வீட்டிற்குப் போயிருக்கலாம். ரவிக்குக் கடிதமும் எழுதியிருக்கிறோம். |
| ರಾಮು: | ಅವರ ಮನೆಯಲ್ಲಿ ಆರಾಮವಾಗಿ ಕುಳಿತು ಊಟನಾದರೂ ಮಾಡಬಹುದಿತ್ತು. | அவர்கள் வீட்டில் ஓய்வாக உட்கார்ந்து சாப்பாடாவது சாப்பிட்டிருக்கலாம். |

| | | |
|---|---|---|
| ಆನಂದ: | ಅವನ ಮನೆಯಲ್ಲೇ ಸಂಜೆ ತನಕ ಇದ್ದು ಸಂಜೆ ಹೊರಡಬಹುದಿತ್ತು. | அவன் வீட்டிலேயே மாலை வரை இருந்து மாலையில் புறப்பட்டிருக்கலாம். |
| ರಾಮು: | ಸಂಜೆ ಆರು ಗಂಟೆ ರೈಲಿಗೆ ಹೊರಟಿದ್ದರೆ ಒಂಭತ್ತು ಗಂಟೆಗೆ ವಾಪಸ್ ಬರ್ತಾ ಇದ್ದೆವು. | மாலை ஆறு மணி ரயிலுக்குப் புறப்பட்டிருந்தால் ஒன்பது மணிக்குத் திரும்பி வந்திருப்போம். |
| ಆನಂದ: | ರವಿಗೆ ಕಾಗದ ಬರೆಯದೆ ಇದ್ದಿದ್ದರೆ ನಾನು ಬೇಸರ ಮಾಡಿಕೊಳ್ತಾ ಇರಲಿಲ್ಲ. ಅವನು ಕಾಯ್ತಾ ಇರ್ತಾನೆ. | ரவிக்குக் கடிதம் எழுதாமல் இருந்திருந்தால் நான் வருத்தப் படமாட்டேன். அவன் காத்துக்கொண்டிருப்பான். |
| ರಾಮು: | ಯಾವುದಾದರೂ ಬಸ್ಸು ಸಿಗಬಹುದಾ, ಬಸ್ ಸ್ಟ್ಯಾಂಡಿಗೆ ಹೋದರೆ? | ஏதாவது பஸ் கிடைக்குமா, பஸ் ஸ்டாண்டுக்குப் போனால்? |
| ಆನಂದ: | ಬಸ್ ಸ್ಟ್ಯಾಂಡಿಗೆ ಹೋದರೂ ಈಗ ಬಸ್ ಸಿಗಲ್ಲ. ಬಸ್ ಸಿಕ್ಕಿದರೂ ಸೀಟು ಸಿಗಲ್ಲ. ಆದ್ದರಿಂದ ಹೋಗೋದು ಉಪಯೋಗ ಇಲ್ಲ. | பஸ் ஸ்டாண்டுக்குப் போனாலும் இப்போது பஸ் கிடைக்காது. பஸ் கிடைத்தாலும் சீட் கிடைக்காது. அதனால் போவது பயன் இல்லை. |

## 2. மாதிரிப் பயிற்சி

| | | |
|---|---|---|
| 2.1 | ನೀನು ಐದು ನಿಮಿಷ ಬೇಗ ಬಂದಿದ್ದರೆ ಎಂಟುಗಂಟೆ ಬಸ್ಸಿಗೆ ಹೋಗಬಹುದಿತ್ತು. | நீ ஐந்து நிமிடம் சீக்கிரம் (முன்னதாக) வந்திருந்தால் எட்டு மணி பஸ்ஸுக்குப் போயிருக்கலாம். |
| | ನಾವು ಏಳು ಗಂಟೆ ಬಸ್ಸಿಗೆ ಹೋಗಿದ್ದರೆ ಒಂದೇ ದಿನದಲ್ಲಿ ವಾಪಸ್ ಬರಬಹುದಿತ್ತು. | நாம் ஏழு மணி பஸ்ஸுக்குப் போயிருந்தால் ஒரே நாளில் திரும்பி வந்திருக்கலாம். |
| 2.2 | ಒಂದು ಆಟೋನಾದರೂ ಸಿಕ್ಕಿದ್ದರೆ ಬೇಗ ಬರ್ತಾ ಇದ್ದೆ. | ஓர் ஆட்டோவாவது கிடைத்திருந்தால் சீக்கிரம் வந்திருப்பேன். |
| | ಅವನು ಪರೀಕ್ಷೆಯಲ್ಲಿ ಚೆನ್ನಾಗಿ ಬರೆದಿದ್ದರೆ ಪಾಸಾಗ್ತಾ ಇದ್ದ. | அவன் தேர்வை நன்றாக எழுதியிருந்தால் தேர்ச்சி பெற்றிருப்பான். |
| | ಅವಳು ಚೆನ್ನಾಗಿ ಊಟ ಮಾಡಿದ್ದರೆ ಇನ್ನೂ ದಪ್ಪ ಆಗ್ತಾ ಇದ್ದಳು. | அவள் நன்றாகச் சாப்பிட்டிருந்தால் இன்னும் தடித்திருப்பாள். |
| | ನಿನ್ನೇನೆ ಬುಕ್ ಮಾಡಿಸಿದ್ದರೆ ಟಿಕೆಟ್ ಸಿಗ್ತಾ ಇತ್ತು. | நேற்றே பதிவு செய்திருந்தால் டிக்கெட் கிடைத்திருக்கும். |



| | | |
|---|---|---|
| 2.3 | ಅವನು ಬೇರೆ ದಿನ ತಡವಾಗಿ ಬಂದಿದ್ದರೆ ನನಗೆ ಸಿಟ್ಟು ಬರ್ತಾ ಇರಲಿಲ್ಲ. | அவன் வேறொரு நாள் தாமதமாக வந்திருந்தால் எனக்குக் கோபம் வந்திருக்காது. |
| | ಅವನು ಅವಳನ್ನು ಮದುವೆ ಆಗಿದ್ದರೆ ಹುಚ್ಚನಾಗ್ತಾ ಇರಲಿಲ್ಲ | அவன் அவளைத் திருமணம் செய்துகொண்டிருந்தால் பைத்தியமாகியிருக்கமாட்டான். |
| 2.4 | ನಾವು ಕಾಗದ ಬರೆಯದೆ ಇದ್ದಿದ್ದರೆ ಹೋಗದೆ ಇರಬಹುದಿತ್ತು. | நாங்கள் கடிதம் எழுதாமல் இருந்திருந்தால் போகாமல் இருத்திருக்கலாம். |
| | ಅವಳು ಅವನನ್ನು ಮದುವೆಯಾಗದೆ ಇದ್ದಿದ್ದರೆ ಸುಖವಾಗಿ ಇರಬಹುದಿತ್ತು. | அவள் அவனைத் திருமணம் செய்துகொள்ளாமல் இருந்திருந்தால் சுகமாக இருந்திருக்கலாம். |
| | ನಾನು ಊರಿಗೆ ಹೋಗದೆ ಇದ್ದಿದ್ದರೆ ನಿಮ್ಮ ಮನೆಗೆ ಬರಬಹುದಿತ್ತು. | நான் ஊருக்குப் போகாமல் இருந்திருந்தால் உங்கள் வீட்டுக்கு வந்திருக்கலாம். |
| 2.5 | ನಾನು ಈ ಪುಸ್ತಕ ಕೊಡದೆ ಇದ್ದಿದ್ದರೆ ಅವನು ಅದನ್ನು ಓದ್ತಾ ಇರಲಿಲ್ಲ. | நான் இந்தப் புத்தகத்தைக் கொடுக்காமல் இருந்திருந்தால் அவன் அதைப் படித்திருக்கமாட்டான். |
| | ನೀವು ಸಮಯಕ್ಕೆ ಸರಿಯಾಗಿ ಬರದೆ ಇದ್ದಿದ್ದರೆ ಆ ಕೆಲಸ ಆಗ್ತಾ ಇರಲಿಲ್ಲ. | நீங்கள் நேரத்திற்குச் சரியாக வராமல் இருந்திருந்தால் அந்த வேலை நடந்திருக்காது. |
| 2.6 | ನಾನು ಮನೆಗೆ ಬಂದಿದ್ದರೆ ನೀವು ಸ್ವೀಟ್ಸ್ ಕೊಡಿಸಬೇಕಾಗಿತ್ತು. | நான் வீட்டிற்கு வந்திருந்தால் நீங்கள் ஸ்வீட்ஸ் வாங்கித்தர வேண்டியிருந்திருக்கும். |
| | ಅವರು ನಮ್ಮ ಮನೆಗೆ ಬಂದಿದ್ದರೆ ಕಾಫಿ ಕೊಡ ಬೇಕಾಗ್ತಿತ್ತು. | அவர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தால் காபி கொடுக்க வேண்டியிருந்திருக்கும். |
| 2.7 | ನೀವು ಚೆನ್ನಾಗಿ ಓದದೆ ಇದ್ದರೆ ಪರೀಕ್ಷೆಗೆ ಹೋಗಬಾರದಾಗಿತ್ತು. | நீங்கள் நன்றாகப் படிக்காதிருந்தால் தேர்வுக்குச் சென்றிருக்கக்கூடாது. |
| | ನಿಮಗೆ ಅಭಿನಯ ಬರದೆ ಇದ್ದರೆ ನಾಟಕದಲ್ಲಿ ಪಾತ್ರ ಮಾಡಬಾರದಾಗಿತ್ತು. | உங்களுக்கு நடிப்பு வராதிருந்தால் நாடகத்தில் பாத்திர மேற்றிருக்கக்கூடாது. |

| | |
|---|---|
| ನೀವು ತಪ್ಪು ಮಾಡದೆ ಇದ್ದರೆ ಒಪ್ಪಿಕೊಳ್ಳಬಾರದಿತ್ತು. | நீங்கள் தவறு செய்யாதிருந்தால் ஒப்புக்கொண்டிருக்கக்கூடாது. |

| | | |
|---|---|---|
| 2.8 | ಈಗ ಬಸ್ ಸ್ಟ್ಯಾಂಡಿಗೆ ಹೊದರೂ ಬಸ್ ಸಿಗಲ್ಲ. | இப்போது பஸ் ஸ்டாண்டுக்குப் போனாலும் பஸ் கிடைக்காது. |
| | ಅವನು ಕನ್ನಡ ಕಲಿತಿದ್ದರೂ ಮಾತಾಡೋಕೆ ಬರಲ್ಲ. | அவன் கன்னடம் கற்றிருந்தாலும் பேச வராது. |
| | ರಮೇಶ ದಿನಾ ಆ ಹುಡುಗೀನ ನೋಡ್ತಾ ಇದ್ದರೂ ಅವಳನ್ನು ಮಾತಾಡಿಸಿಲ್ಲ. | ரமேஷ் தினமும் அந்தப் பெண்ணைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் அவளோடு பேசவில்லை. |
| | ರಾಜ್ಯಪಾಲರು ನಾಳೆ ಬೆಂಗಳೂರಿಗೆ ಬಂದರೂ ಯಾರನ್ನು ನೋಡಲ್ಲ. | ஆளுநர் நாளை பெங்களூருக்கு வந்தாலும் யாரையும் பார்க்கமாட்டார். |
| | ಲೀಲಾ ನಾಳೆ ದೆಹಲಿಗೆ ಹೋದರೂ ಹೋಗಬಹುದು. | லீலா நாளை டெல்லிக்குப் போனாலும் போகலாம். |

## 3. குறிப்புகள்

3.1 நிறைவடையாத நிபந்தனை வடிவங்கள் இப்பாடத்தில் அறிமுகம் செய்யப் பட்டுள்ளன. இவ்வகை வாக்கியங்கள் நிபந்தனைத் தொடர், முதன்மைத் தொடர் என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டவை. நிபந்தனைத் தொடர் இறந்தகால முழுநிறை வினையைக் கொண்டிருக்கும். முதன்மைத் தொடர் துணை வினை அல்லது வினைமுற்றைக் கொண்டிருக்கும். இவ்வினைமுற்று எப்போதும் தொடர்வினையாக இருக்கும். இது கன்னட வாக்கிய அமைப்பில் சரி. ஆனால், தமிழில் மொழிபெயர்த்து எழுதும்போது முதன்மைத்தொடர் தொடர்வினையைக் கொண்டிருக்காது.

| | |
|---|---|
| நீனு புஸ்தக கொட்டித்$^3$த$^3$ரெ ஓத்$^3$த$^3$ா இத்தெ. | நீ புத்தகம் கொடுத்திருந்தால் படித்திருப்பேன். |

முதன்மைத் தொடர் துணை வினையைக் கொண்டிருந்தால், அதைத் தொடர்ந்து ‘இத்$^3$து$^3$’ வரும்.

| | |
|---|---|
